கழக வெளியீடு-கதுய

ஓம்

புகழேந்தி

ஒரு

செந்தமிழ் நாடகம்

ஆசிரியர் :

தமிழ்ப்புலவர் அ. நடராச பிள்ளை.

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி & சென்னை.

யுவ-கார்த்திகை

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.,
TINNEVELLY & MADRAS
DEC. 1935

THE PROGRESSIVE PRINTERS, MADRAS.



தமிழ்ப்புலவர்
அ. நடராசபிள்ளை

முகவுரை

அமிழ்தினுமினிய நந்தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என முப்பெரும்பிரிவுகளைக் கொண்டதாகும். அப்பிரிவுகளுள், இயற்றமிழானது பொதுவாக மக்களிடை வழங்கும் உலகவழக்குச் சொற்களும், அறிவாளிகள் மேற்கொண் டொழுகும் செய்யுள்வழக்குச் சொற்களுமாம். அவ்விரு வழக்கினைத் தழுவியே சங்க நூல்களும், பிற சான்றோர் நூல்களும், தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களும் எழலாயின. இசைத்தமிழானது மக்கள் மகிழ்ச்சிமிக்க காலத்தே செவிகட் கினிமையாய்ப் பாடிக் கொண்டாடுதற்குரிய வகையாகும்.

இனி, நாடகத்தமிழானது முற்கூறிய இருவகைத்தமிழும் விரவப் பெற்று, முன்னிகழ்ந்த செய்தியொன்றினைத் தெளிவாகக் காண்பார்க்கு விளக்கிச்செல்லும் முறையில் அமைந்த நூற்களைக் கொண்டதாகும். இது மேற்கண்ட இருவகைத்தமிழினும் பெரிதும் ஏற்றமுடைத்து! என்னை? இயற்றமிழ் மனமொன்றற்கும், இசைத்தமிழ் மனம் செவி என்ற இரண்டற்குமட்டுமே உணவாய் இன்பந்தர வல்லனவாக, நாடகத்தமிழ் மனம், செவி, கண் என்ற மூன்றற்கும் உகந்த நல்லுணவாய் இன்பம் அளிக்க வல்லதாகலின். மேலும், இந்நாடகம் காண்பார்க்கு உள்ளக்கிளர்ச்சியினையும், உடற்கிளர்ச்சியினையும் உண்டாக்குவதோடு ஆடுவோர்க்கும் உள்ளக்கிளர்ச்சி உடனல முதலியவற்றைக் கொடுக்குமென்பது உடற்கூற்றினை யுணர்ந்தார் துணிபாம். ஆகலின், இந்நாடகத்தமிழ் அக்காலத் தமிழ்மக்களாற் கண்ணெனப் போற்றப் பெறுவதாயிற்று.

நாடகமாவது தம்மாற் காணப்பட்டோ, கேட்கப்பட்டோ வமைந்த வரலாற்றினை எடுத்துக்கொண்டு இனிதாகப் பாடியாடிக் காட்டுவதாம். இஃது அக்காலத்துக் குதித்து ஆடிப்பாடி விளக்கப் பட்டதாகலின், கூத்து எனவும் பெயர்பெற்றது. இந்நாடகம் மக்களுக்கு இன்றியமையாத உடற்பயிற்சியினைக் கொடுக்கும் பந்தாட்டம் முதலியனபோற் பயன்றருமொன்றாகலின், இதற்கு ஆட்டம் என மற்றொருபெயரும் வழங்கலாயிற்று. இத்துணைச் சிறப்புவாய்ந்த நாடகத்தமிழும், இதற்குக் கண்போன்ற இசைத்தமிழும் பண்டைத் தமிழ்மக்களாற் பெரிதும் போற்றப்பட்டுப் பல நூல்களைக்கொண்டு திகழ்ந்தன என்பது சிலப்பதிகாரமாகிய இயற்றமிழ் நூலிற் காணப்

படும் சில பகுதிகளாலும், அவற்றின் உரைகளாலும் நன்கு தெளியலாம்.

இடையே கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் தமிழ்நாடு புகுந்த சமண, புத்த சமயப்போக்குகளால் இசைத்தமிழும், நாடகத்தமிழும் தமிழ்மக்களால் ஒதுக்கப்பட் டொழிந்தன. அதனால், தமிழ்மக்கள் இசையின் அருமையினையும், நாடக ஏற்றத்தினையு முணரா ஏழைகள் என்ற இழிப்புரைக்கு இலக்காயினர்.

அவ்விழிப்புரையினை எடுத்தொழிப்பான்வேண்டிச் சற்றேறக் குறைய நாற்பதாண்டுகட்கு முன் உயர் திருவாளர், ராய்பகதூர். P. சுந்தரம் பிள்ளையவர்கள், எம். ஏ. 'மனோன்மணீயம்' என்ற அரிய நாடகநூலை இயற்றி வெளியிட்டார்கள். அது தமிழ்மக்களின் தலைமணியாய்ச் சிறந்து விளங்காநின்றது. அதனைப் பின்பற்றிச் சிலர் சில நாடகநூற்களை வெளியிட்டனராயினும், அவை தமிழ் மக்கட்கு நாடக இலக்கியங்களாகப் பயன் பெறுவாய்நின்றன.

நாடகத்தமிழாற் பல்வகையானும் சிறப்புற்றிருந்த நந்தமிழ்த் தாய் நாடகவிலக்கியங்கட்கு எடுத்துக்காட்டாக மனோன்மணிய மொன்றனையே கொண்டு எளிமையுற்றுக் காணப்படுவது தமிழ் மகனாகிய எவனுக்கும் இழிவன்றோ? ஆகலின், அறிவிலும் ஆண்டிலும் எளியேனாகிய யான் அம்மனோன்மணிய நாடகநூற் போக்கினை மேற்கொண்டு மற்றொரு நாடகநூல் இயற்ற முன்வந்தனன். தமிழன்னையின் சிறப்புகளையும், தமிழ்ப் புலவர்களின் மாண்பினையும், தமிழ்மொழியின் தன்மையினையும் பல்லாற்றான் விளக்கவேண்டித் தமிழ்ப்புலவர்களிற் றனிச் சிறப்புற்ற புகழேந்தியின் வரலாறு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்நாடகம் மனோன்மணிய நாடகநூற் போக்கின்படி செய்யப் பட்டிருத்தலின், இதனுள் அடங்கிய வரலாறு ஆங்காங்கு நடர் தேறும் மொழியாடல்களாலும், அவாய்நிலை முதலிய குறிப்புக் களாலும் அறிந்துகொள்ளவேண்டியநிலையில் அமைக்கப்பட்டுளது. ஆகலின், வரலாற்றுச்சுருக்கம் ஒன்று இதன்கண் சேர்க்கப் பட்டுளது. கற்பார்க்குப் பொருளும், கருத்தும் புலப்படுவான் வேண்டி இறுதியில் அரும்பொருள் விளக்கமும் அமைக்கப்பட்டுளது.

வயிற்றுப் பிழைப்பாகிய தொழிலிடையிலும், பிணி கவலை முதலிய தொல்லைகளின் நடுவிலும் என்னை இப்பணியிற் றூண்டி விட்ட திருவருளை மனமார வழுத்துகின்றனன். இதனை வெளியிட முன்வந்து உதவிய தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார்க்கு எனது நன்றி என்றும் உரியதாகுக.

ஆக்கியோன்

பொருளடக்கம்

வரலாற்றுச் சுருக்கம்

தமிழ்நாடுகளில், தொண்டைநாடு சான்றோர்கள் பலரையும் பெற்றெடுத்த தனிச்சிறப்புடையது. அதன்கண், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில், பொற்களத்தூர் என்ற பதியினில், வேளாளமரபினிலே புகழேந்தி என்ற பெரியாரொருவர் தோன்றினர். அவர் இளமையிலேயே, சென்ற பிறவிகளிற் கற்ற கல்வியின்பயனாய்த் தமிழ் கற்பிக்கப்படுபவர்களில், ஊக்கமிக்கவராய்க் காணப்பட்டார். பின்பு, அவர் தமிழ்க்கலையிற் சிறந்த செல்வராய் விளங்கினர். அவர்க்குத் தமிழன்னைபாற் பேரன்பு மிகுந்து காணப்பட்டது. அதனால், அவர் தமிழன்னையின் பிறப்பிடமாகிய பாண்டிநா டடைந்து, பாண்டியன் அரண்மனைப்புலவராய் விளங்கினர்.

அக்காலத்தே பாண்டிநாட்டின்கண் அரசனாய் விளங்கியவன் பராக்கிரம பாண்டியனாவன். அவன் புகழேந்தியார் தம் புலமையை வியந்து, அவரைத் தனது கண்மணிபோற் போற்றினான். அவரும் அவனுக்கு உற்றுழித்துணையாய்ப் பல அரசியல் அலுவல்களை முடித்துக்கொடுத்துச் சிறந்த அமைச்சராய் விளங்கினர். அவர் ஒருசமயம் இலங்கையரசனாகிய பராக்கிரமபாகு என்பானிடம் தூதுசென்று, அவனுதவியால் பாண்டியநாடு சோழர்கள்பாற் சேராமற் காப்பாற்றினர்.

பராக்கிரமபாண்டியனுக்குக் கற்பகவல்லி என்றொரு மகளிருந்தாள். அவளுக்குச் சேந்தாமரையாள், வெண்டாமரையாள் என்றிரு பாங்கிகள் இருந்தனர். அம் மூவர்க்கும் இளம்பருவத்தில் பாண்டியன் விருப்பப்படி, புகழேந்தியால் தமிழ் கற்பிக்கப்பட்டது. அம்மூவரும் மங்கைப்பருவ முற்றனர். பராக்கிரமன் தன்மகட்கு மணமுடிக்க வேண்டியவனாய்ப் பல நாட்டு மன்னர்களின் திருவுருவப்படங்களை வரவழைத்துத் தன்மகள்பால் அனுப்பினான். அவள், அவ்வுருவங்களில், சோணாட்டு மன்னனாகிய குமாரகுலோத்துங்கனின் வடிவத்தைக் கண்டு காதல்கொண்டாள். ஆயினும்,

நாண மிகுதியால் அதனை வெளியிட அவள் பின் வாங்கினுள். இதனையறிந்த அவள் உயிர்ப்பாங்கியாகிய வெண்டாமரையாள் கூனி என்ற கிழவியைச் சோணுட்டுக்குத் தூதாக எவர்க்குந் தெரியாமல் அனுப்பினுள். அவள் கற்பகவல்லியின் திருவுரு வப்படத்தோடு சோணுடு சென்று, குலோத்துங்கனுக்குக் கற்பகவல்லியின் காதலையும் பேரழகையுந் தெரிவித்தாள்.

விக்கிரமசோழன் மகனுகிய குமாரகுலோத்துங்கன் தன்தந்தையின் அவைக்களப் புலவராகிய ஒட்டக்கூத்தப் புலவர்பால் தமிழறிவுபெற்றுப் புவிக்கும், கவிக்கும் அரச னுய்ப் பொருந்தினுன். பராக்கிரமன்மகளாகிய கற்பகவல்லி யின் கட்டழகும், கல்விச்சிறப்பும் அவனுல், முன்பே அறியப் பட்டிருந்தன. கூனியின் வாய்மொழியால், கற்பகவல்லியின் காதலையுணர்ந்த குலோத்துங்கன் தன் ஆசிரியராகிய ஒட்டக் கூத்தரை மணம்பேசி வரும்படி பாண்டியநாட்டிற்கு அனுப் பினுன். பாண்டியன்அவையில், ஒட்டக்கூத்தர்க்கும், புக ழேந்திக்கும் வீருப்பான மொழியாடல் நேர்ந்தது. அதில், ஒட்டக்கூத்தர் சிறிது தோல்வியுற்றுர். பாண்டியன் இடை யிற் புகுந்து அவ்விருவரையும் தணிவித்தான். பின்பு, கற்பக வல்லிக்கும் குலோத்துங்கனுக்கும் மணம் உறுதி செய்யப்பட் டது. ஒட்டக்கூத்தர் மணவோலை பெற்றுச்சென்றுர். மண வோலைகண்டு மகிழ்ந்த குலோத்துங்கன் ஒட்டக்கூத்தரைச் சோணுட்டுக்கு அரசப்பிரதிநிதியாய் அமைத்துவிட்டுப் பரி வாரங்களுடன் பாண்டியநாடு சேர்ந்தான். பராக்கிரமன் தன் மகளாகிய கற்பகவல்லிக்கும், குலோத்துங்கனுக்கும் மிகச் சிறப்புடன் மணஞ்செய்வித்தான். அந்த மணத்தினை யடுத்து, கற்பகவல்லியின் பாங்கியாகிய செந்தாமரையாட்கும், பாண்டி யன் அரண்மனை விகடனுகிய வெல்வாயனுக்கும் திருமணஞ் சிறப்பாக நடந்தது. பாண்டியன் தன்மகளாகிய கற்பகவல் லிக்குச் சீதனமாகப் பொருள்கள் பலவற்றைச் சோணுட்டுக்கு அனுப்புவித்தான். அவற்றுடன் கற்பகவல்லிக்கு நல்லறிவு புகட்டவேண்டிப் புகழேந்தியாரும் சோணுட்டுக்கு அனுப்பப் பட்டார். பாண்டிநாட்டில் குலோத்துங்கனுக்கு ஆறுதிங் கள் முடிய மணவிருந்துகள் பல பற்பலவிடங்களில் நடத்தப் பட்டன.

சீதனப்பொருள்களோடு புகழேந்தியார் சோணுடு சேர்ந்தார். அங்கு, அரசப்பிரதிநிதியாயிருந்த ஒட்டக்கூத்தர் பழம்பகை காரணமாக அவரைச் சிறையிட்டார். பாண்டிநாட்டிலிருந்து புகழேந்தியாரை அழைத்துவந்த சோணுட்டரண்மனையமைச்சன் மணிவண்ணன் உதவியால், அவர் சிறைச்சாலையில் துன்பம் யாதுமின்றியிருந்தார். அங்கு ஒட்டக்கூத்தரால் சிறையுற்றிருந்த அம்பட்டன்முதலிய எழுவர்க்கும் அவர் தமிழறிவு கொளுத்தி அவர்களைச் சிறந்த தமிழ்ப்புலவராக்கினுர்.

குலோத்துங்கன் பாண்டிநாட்டில் ஆறுதிங்கள்வரை மணவிருந்துண்டு மகிழ்ந்து சோணுடு திரும்பினுன். அவனோடு மணமகளாகிய கற்பகவல்லியும், அவள் உயிர்ப்பாங்கியாகிய வெண்டாமரையாளும் புறப்பட்டு வந்துசேர்ந்தனர். அன்று, சோணுட்டின் தலைநகராகிய உறையூரில் குலோத்துங்கன் யானைமீதேறி ஊர்வலம்வந்தான். புகழேந்தி தன்னுடைய மாணவர்களோடு சிறைக்கூடத்தின் மேற்றளத்திலிருந்து ஊர்வலக்காட்சியைக் கண்டு நின்றுர். அப்பொழுது புகழேந்தியாரைக்கண்ட குலோத்துங்கன் பக்கலில் வந்துகொண்டிருந்த ஒட்டக்கூத்தர்பால் வினவிய வினவொன்றுல், ஒட்டக்கூத்தர்க்கும், புகழேந்தியார்க்கும் மொழியாடல் ஒன்று நேர்ந்தது. அதிலும் புகழேந்தி வெற்றியுற்றுர். முன்னிகழ்ச்சிகளில் எதனையும் அறியப்பெறுத குலோத்துங்கன் அவர்கள் சினத்தைத் தணிவித்து மேலே சென்றுன். அவன் அன்று நிகழ்த்திய அரசவையில் மணிவண்ணன்முதலியோரின் வாய்மொழிகளாற் சிறையிடப்பட்ட அம்பட்டன்முதலிய எழுவரும் அழைக்கப்பட்டனர். ஒட்டக்கூத்தர் அவர்களை வீறுப்பான சில வினக்களால் மிரட்டினுர். அவர்கள் அவர் வினக்களுக்கு அஞ்சாது தக்கவிடைகள் பகர்ந்து அவரை அவமானப்படுத்தினுர்கள்.

கல்வி கற்குங்காலத்திலேயே புகழேந்தியார்பாற் காதல் கொண்டிருந்த வெண்டாமரையாள் அவரை மணக்கவேண்டியே கற்பகவல்லியைத் தொடர்ந்து சோணுட்டுக்கு வந்திருந்தாள். அவள் வந்ததுமுதல் புகழேந்தியாரின் செய்தியொன்றுந் தெரியாது வருந்தினுள். அதனுல், அவள் கற்பக

வல்லியைத் தூண்டிவிட்டுப் புகழேந்தியாரின்நிலையை அறியலானாள். கற்பகவல்லி மணிவண்ணனால், புகழேந்தியின் சிறையிருக்கை யறிந்து சினந்தாள். அவள் சிறைக்குக் காரணமான ஒட்டக்கூத்தரை அவமானப்படுத்தவும், புகழேந்தியாரைச் சிறைமீட்டவும் விரும்பினாள். அதற்குதவியாக மணிவண்ணன் வெண்டாமரைமுதலியோர் நின்றனர். கற்பகவல்லி அன்றிரவு படுக்கையறையினை யடைத்து ஊடல்செய்து ஒட்டக்கூத்தரை அவமானப் படுத்தினாள். புகழேந்தியார் சிறைவீடு பெற்றார். வெண்டாமரையாள் பேரிற் சிலநாளாக ஆசை கொண்டுதிரியும் மணிவண்ணன் அவள் புகழேந்தியார்பாற் காதல் கொண்டுளதை யறிந்து, வஞ்சக மொழிகளால் புகழேந்தியாரை அச்சுறுத்தி அரண்மனையைவிட்டு அகற்றினான். புகழேந்தியார் மறைவால் வெண்டாமரை மெலியலானாள்.

மணிவண்ணன்பால் நெடுநாளாய்க் காதல்கொண்டொழுகிக் கற்பிழந்துநின்ற சேங்கமலம் என்ற சோணாட்டரண்மனைப் பணிப்பெண் வெண்டாமரைக் குதவியாய்நின்று மணிவண்ணன் வஞ்சனைகளை எடுத்து விளம்பினாள். வெண்டாமரையாள் செங்கமலத்தின் உதவியால் உழுவலன் எனப் பெயர்கொண்ட ஆண்வடிவங்கொண்டு, புகழேந்தியாரைத் தேடிப்புறப்பட்டாள். அரண்மனைவிட் டகன்ற புகழேந்தியார் நடுக்காட்டில் வேட்டையாடவந்திருந்த மள்ளுவநாட்டு மன்னன் சந்திரன்சுவர்க்கியாற் போற்றப்பெற்று, முரணை நகரில் அவனுடைய அவைக்களப்புலவராய் விளங்கினார்.

உழுவலன் வடிவுகொண்டுசென்ற வெண்டாமரையாள் புகழேந்தியாரை முரணைநகர்க்கடுத்த காட்டில் கண்டு, அவரால் முரணைநகர்க் கழைத்துப்போகப்பட்டாள். அங்கு அவள் அவர்க்கு இதமுறநடந்து இயற்றமிழ் மாணவனாகச் சின்னாள் இருந்துவந்தாள். அக்காலத்தே சந்திரன்சுவர்க்கியின் வேண்டுகோளின்வண்ணம் புகழேந்தியாரால் நளவெண்பா என்ற நூல் இயற்றப்பட்டது.

கற்பகவல்லி உறையூரில் புலவரையும் உயிர்ப்பாங்கியையுமிழந்து துன்புற்றுக்கொண்டிருந்தாள். அவளுக்கு முரணை நகரிலிருந்து வெண்டாமரையாளால் எழுதப்பட்ட திருபம்

ஒன்று வந்துசேர்ந்தது. அதனால், மணிவண்ணன் வஞ்சகச் செயல்கள் அரசனுக்கும் அரசிக்கும் புலனாயின. ஆகவே குலோத்துங்கன் புகழேந்தியாரையும் மள்ளுவநாட்டுமன்னன் முதலிய பல அரசர்களையும் வரவழைத்து நளவெண்பா நூலைத் தனது அவையில் அரங்கேற்றுவித்தான். வெண்டாமரையாளும், புகழேந்தியாரும் ஒருவரை ஒருவர் அறிந்து மணந்துகொண்டனர்.

காட்சியிற் கழறிய பொருள்கள்

அங்.—கா.

1\. 1. ஒட்டக்கூத்தர் மணம் பேசிவரல், புகழேந்திக்கும் ஒட்டக் கூத்தர்க்கும் வீரூப்பான மொழியாடல்.
   2. அம்மனை யாட்டம்.
   3. பந்தாட்டம், குறிகூறல், சோதிடநூலின் றன்மை.
   4. கைக்கிளை, தமிழ்மொழியாராய்ச்சி, தடாதகை திருமணம்.

2\. 1. காலைக்காட்சி, ஞாயிறு மதிகளின் போக்குகள்.
   2. ஒட்டக்கூத்தர் கொலுநடத்தல், போலிப்புலவர்கள் சிறைப்படல்.
   3. சிறையில் புகழேந்தியும், போலிப்புல்வர்களும் உரை யாடல்.
   4. மணிவண்ணனும், புகழேந்தியும் உரையாடல்.
   5. புகழேந்தி போலிப்புலவர்களுக்குப் புகட்டிய ஒருநாட் பாடம், யாப்பியல் - செய்யுள் இயற்றும்வழி, மொழிச் சிறப்பு,அகப்பொருட் சிறப்பு, கந்தழியின் சிறப்பு.

3\. 1. உறையூர்த் தெருவின் சிறப்பு, குலோத்துங்கன் உலா, யாழ்ப்பாணர் வாழ்த்து, புகழேந்திக்கும் கூத்தர்க்கும் சொற்போர்.
   2. குலோத்துங்கன் கொலுநடத்தல், போலிப்புலவர் பாப் புலிகளாகப் பாய்தல்.
   3. கற்பகவல்லி கூத்தரை அவமானப்படுத்த மேற்கொண்ட ஏற்பாடுகள்.
   4. கற்பகவல்லி ஊடல், கூத்தர் அவமானப்படல், புகழேந்தி சிறைவீடு, ஊசல்வரி.
   5. ஞாயிற்றின் தோற்றச் சிறப்பு, வெண்டாமரை செங்க மலம் இருவரின் மொழியாடல், மணிவண்ணன் காமமும் மறுதளிப்பும், செங்கமலத்தின் திக்கற்றநிலை.

4\. 1. புகழேந்தியின் தனிமை, உலகப்போக்கின் கொடுமை, புகழேந்தி சந்திரன்சுவர்க்கியினை எதிர்ப்பட்டுச்சார்தல்.
   2. வெண்டாமரை தன் காதற்றுயரினைச் செங்கமலத்தி னிடம் விரித்துக் கூறல். வெண்டாமரை சோழன் அரண்மனைவிட்டு வெளியேற முடிவுகட்டல்.

3. சந்திரன்சுவர்க்கி கொலுநடத்தல், செந்தமிழ்ச்செல்வியின் சிறப்பு, நளவெண்பா இயற்றும் ஏற்பாடு.
4. வைகறைச் சிறப்பு, புகழேந்தி உழுவலனை எதிர்ப்படல், உழுவலன் வரலாறு.
5. கற்பகவல்லியும் செங்கமலமும் உரையாடல், கற்பகவல்லி வெண்டாமரையின் வெளியேற்றத்தின் உண்மை யுணர்ந்து அவளைத் தேடிக்கொணர விரும்பல்.

5. 1. உழுவலனும் புகழேந்தியும் உரையாடல், உழுவலன் சோணாட்டுக்கு நிருபம் அனுப்பத் தீர்மானித்தல்.
2. கற்பகவல்லி வெண்டாமரையாளை எண்ணித் துன்புறல், குலோத்துங்கன் உழுவலன் நிருபத்தைக் கொண்டு வந்து கற்பகவல்லியிடஞ் சேர்த்தல், கற்பகவல்லி மகிழ்ச்சியுறல்.
3. நளவெண்பாவின் சொற்பொழிவு, கூத்தரும் புகழேந்தியும் நண்புற்று மகிழல்.
4. புகழேந்தியும் உழுவலனும் உரையாடல். உழுவலனே வெண்டாமரையாதல், புகழேந்தியும் வெண்டாமரையும் மணம்புணர்ந் தின்புறல்.

நடர்களின் விளக்கம்

பராக்கிரம பாண்டியன்:	பாண்டி நாட்டு மன்னன்.
குலோத்துங்கன் :	சோணாட்டு மன்னன்.
சந்திரன் சுவர்க்கி :	மள்ளுவநாட்டுச் சிற்றரசன்.
புகழேந்தி :	பாண்டியனரண்மனைப் புலவர்.
ஒட்டக்கூத்தர் :	சோழனரண்மனைப் புலவர்.
கம்பர் :	சோணாட்டுப் புலவர்.
வெல்வாயன் :	பாண்டியனரண்மனை விகடன்
நகைமொழிநாவலன் :	சோழனரண்மனை விகடன்.
மகிழ்மொழிவலவன் :	சுவர்க்கியரண்மனை விகடன்.
வேலையர் :	சோணாட்டமைச்சர்.
மணிவண்ணன் :	சோழனரண்மனை யமைச்சன்.
நற்சொல் நாவலன் :	மள்ளுவநாட் டமைச்சன்.
மாயவன் :	மள்ளுவநாட்டுப் படைத்தலைவன்.
வீரத்தேவன் :	சோழனரண்மனைச் சேவகன்.
மூக்கன் :	சோழனரண்மனை அந்தப்புரஏவலன்.
நல்லமுத்து :	சோணாட்டொற்றர் தலைவன்.
அறப்பெருஞ் செல்வன் :	சோணாட்டுச்சிறைக்காவலர் தலைவன்.
ஆறுமுகவேளான் :	சோணாட்டுக் குயவன்.
பெருமாள்பிள்ளை :	சோணாட்டு வேளாளன்.
அங்கணாசாரி :	சோணாட்டுத் தட்டான்.
வெள்ளையணாசாரி :	சோணாட்டுத் தச்சன்.
கருப்பணாசாரி :	சோணாட்டுக் கொல்லன்.
கண்ணன் :	சோணாட்டு நாவிதன்.
நல்லான் :	சோணாட்டு வண்ணான்.
கற்பகவல்லி :	பராக்கிரமன் மகள்.
வெண்டாமரை :	கற்பகவல்லியின் உயிர்ப்பாங்கி.
செந்தாமரை :	கற்பகவல்லியின் தோழி.
செங்கமலம் :	சோழனரண்மனைப் பணிப்பெண்.
உழுவலன் .	வெண்டாமரையின் வேற்று வடிவம்.

தோழிகள், குறத்தி, படைத்தலைவர், படைவீரர், அமைச்சர், யாழ்ப்பாணர் முதலியோர்.

நிகழ்விடம் : கொற்கை, உறையூர், முரணை.

ஓம்
கடவுள் துணை.

புகழேந்தி

(ஒரு செந்தமிழ் நாடகம்)

பாயிரம்

ஆசிரிய வணக்கம்

(நேரிசை வெண்பா)

தமிழை முழுதுணர்ந்து தந்தகந்த சாமி
அமிழ்தே ! உனைப்பணிய வல்லற்—றிமிரம்
கடிந்தோடச் செய்வினைகள் காட்சியுறச் செய்வாய் ;
படிந்தென்றன் நெஞ்சகத்தின் பால்.

தமிழ்த்தாய் வணக்கம்

(நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா)

(இது நான்கடித் தரவு)

எழிலாரும் பாரதமா இளங்கொடியின் றிகழ்முகமாம்
பொழிலாருந் தெக்கணத்திற் பொலிந்திடுமைம் மொழிகளுமே
புலனாரு மைம்பொறியாம் ; புகன்றவற்றுள் கண்களைப்போல்
வலனாரு மெண்ணெழுத்தாய் வதிந்திடுமென் றமிழ்த்தாயே !

(இவை மூன்றுந் தாழிசைகள்)

திருக்குறளின் கருத்தினையே தெரிந்தவர்கள் தமிழ்மொழியில்
விருத்திமறை யிலையெனவே விளம்பிடமுன் வருவாரோ ? (க)

அகப்பொருளும் புறப்பொருளு மமைந்ததோ ரிலக்கணத்தைச்
சகத்தினிலே யெம்மொழியுந் தான்காணு இதுவியப்பே ! (உ)

இலக்கியங்க ளின்பழமை யெழிலாதி குறையாமல்
விலக்கியதோல் காப்பியத்தின் வீறென்னுல் விளம்பவற்றே?(௩)

(தனிச்சொல்)

எனவாங்கு,

(ஆசிரியச் சுரிதகம்)

நிற்புகழ்ந் தேத்து நெறியுடைச் சிறியேன்
பற்பல ருனக்குப் பழந்தொண்டு பூண்டே
ஆராய்ச்சி செய்ய வறிந்தவென் னுசை
பேராசை யாகப் பிடர்பிடித் துந்த
ரு. அடியேன் கடமையா யமைத்தவிந் நாடகம்
படியினின் மிகவும் பருப்பொருட் டாயினும்
பைந்தமிழ்ப் பாவாய் ! பார்த்தருள்
மைந்தனின் தேட்டென மனத்திடைக் கொண்டே.

அவையஞ்சின நேஞ்சோடு கிளத்தல்

(நேரிசை வெண்பா)

புகழேந்தி நாடகத்திற் புக்கிருத்த லானீ
இகழேந்து மென்றிரங்காய் நெஞ்சே!—அகழேந்து
நீர்க்கடலை யூர்க்குருவி நீதமுற வேவென்ற
தார்க்குந் தெரிந்தல்ல வா ?

பாயிரம் முற்றும்

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம் : பாண்டியன் கொலு மண்டபம்.

காலம் : முற்பகல்.

நடர் : பராக்கிரம பாண்டியன், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், வெல்வாயன் முதலோர்.

(பாண்டியன் முதலியோர் கொலுவிருக்க)

(நிலைமண்டில ஆசிரியப்பா)

ஒட்டக்கூத்தர் :

ஏர்மிகும் பராக்ரம வியலார் வேந்தே!
பார்மிசை நின்னவை பல்குக வூழி!
வந்தவென் வினையினைச் சிந்தையிற் சேர்த்துக்
கடைக்கணித் திடுக! அடுத்திட மணமே.

பராக்கிரம பாண்டியன் :

மணமா! யாததது? வந்ததென்? புகல்வீர்!

கூத்தர் :

குணமாம் வையைக் குளிர்புனற் றுறைவ!
குவலய நனிபுகழ் குலோத்துங்க வள்ளலின்
தமப்பனா ரிறந்திடு சமயம் புகன்ற
மணச்செய்தியொன் றினை வழுத்தவு மன்ன! நின்
காட்சியைக் காணவு மாட்சியாய் வந்தனன்.

பாண்டியன் :

ஓகோ! ஆயின், ஒன்றினை முடித்தீர்;
மற்றொன் றினைநீர் வகுத்திட லாமே.

கூத்தர் :

அரசர் பெரும! அவரெம தரசனை
நோக்கியே, 'நமது நூல்புரை கதிரவன்
குலத்தினை மதிதன் குலத்தினிற் கிழமையாய்ச்
சேர்த்திடு முறையினைச் செல்வ! நீ கைவிடேல்!'
என்றறைந் தேகினர்; ஆகலின், வென்றிசேர்
மன்னவர் பெரும! நின் மகளாங் கற்பக
வல்லியை யெங்கள் மன்னவர் பெருந்தகை
புல்லியே வாழப் புகன்றேன் றிருமணம்.

பாண்டியன் : மாப்பெரும் புலவர் மதித்திடு மணியே!
(புன்னகையுடன்) பாண்டவர் மரபாம் பாண்டிமா குலத்திற்
காண்டகு கன்னிநங் கற்பக வல்லியைத்
தீண்டிடச் சோழன் சிறப்புக ளென்னே ?

வெல்வாயன் :
சிறப்புக ளென்ன சோழநன் னாட்டில் ?
வரப்புகள் மிகுதி ; மகிதல மறியும் !

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

கூத்தர் :
கோரத்துக்கொப்போ கனவட்டம் அம்மானே !
கூறுவதுங் காவிரிக்கு வையையோ ? அம்மானே !
ஆருக்கு வேம்புநிக ராகுமோ ? அம்மானே !
ஆதித்த னுக்குநிக ரம்புலியோ ? அம்மானே !
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ ? அம்மானே !
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ? அம்மானே!
ஊருக்கு றந்தைநிகர் கொற்கையோ ? அம்மானே !
ஒக்குமோ? சோணாட்டைப் பாண்டிநா டம்மானே !

(நிலைமண்டிலத் தொடர்ச்சி)

வெல்வா : போட்டார் ! நல்ல போடுநங் கூத்தர் !
சோழ னிவருங் கோரம், பாண்டியன்
கனவட் டத்தினைக் காட்டினு மிகுமாம் !
காவிரி வையையைக் காட்டினுஞ் சிறப்பாம் !
ஆத்தி மாலையைக் காட்டினுஞ் செழியன்
வேப்ப மாலை மிகுதியுங் கசப்பாம் !
கதிரவன் எதிரிற் கவின்மதி வெளுக்குமாம் !
புலிதனில் வீரன் புகழ்குலோத் துங்கனும் !
காட்டுப் புலிக்குக் கடல்மீ னஞ்சுமாம் !
கொற்கைக் குறையூர் குணத்தின் மிக்கதாம் !
பாண்டிமா நாடு பழஞ்சோ ணாட்டை
வேண்டுமாம் பல்வளம் ! வெகுகளி !
இவையெலாம்
சிறப்பெனும் வரப்பு, நீர் தேக்கிடும் வரப்பே !

புகழேந்தி: ஒட்டக் கூத்தரா முயர்கவிப் புலவீர்!

(எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

ஒருமுனிவ னேரியிலோ? உரைதெளித்த தம்மானே!
　ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ? அம்மானே!
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ? அம்மானே!
　சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ? அம்மானே!
கரையெதிரே டேறியது காவிரியோ? அம்மானே!
　கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ? அம்மானே!
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ? அம்மானே!
　பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே; அம்மானே!

(நிலமண்டிலத் தொடர்ச்சி)

வேல்வா :　கொடுத்தார் புலவர் குடையுங் கொடையே!
　　விடுத்தார் நல்ல விளக்கமாம் விடையே.

கூத்தர் :　ஆமாம் புலவீர்! அழகமர் பாண்டியன்
　　வெற்றியை விளக்க மற்றினி யில்லையே!
　　நற்றவத் துங்கனே,

(நேரிசை வெண்பா)

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகிற் கிடான்கவசம்—துன்றும்

....(கண்மூடிச் சிந்திக்க)

(நிலமண்டிலத் தொடர்ச்சி)

வேல்வா :　　　நன்றுய்ப் பாயலில்
　　தூங்கும், கனவிற் றோன்றும் யாவும்.

(நேரிசையின் தொடர்ச்சி)

புகழேந்தி :

வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று.

(கூத்தர் முகஞ் சுளிக்க)

(நிலமண்டிலத் தொடர்ச்சி)

வெல்வா : அப்படி! அப்படி! அதுதான் சரியே!
இப்புவி யதனி லியல்புடைப் பெரியோர்,
'அவன்கை கொண்டே யவன்கண் குத்தல்,'
என்பதிதுவே! இதுவே! சரி! சரி!

பாண்டியன் : போதும், போதும், புகழ்வெல் வாயா!
போதும் விகடம். புலவீர்! உமது
போருங் கண்டோம், புகழ்ந்தோம் நும்மை.
வாரும் நமது மணவினை யதுதான்
சேரும் வகையைச் சிந்தனை செய்வோம்.
கூத்தப் புலவீர்! கொண்டநுங் கருத்தைக்
கேட்டே மகிழ்ந்தேம். கேடில் வாழைப்
பழமது நழுவிப் பாலில் விழுந்த
தன்மையாய்க் கொண்டோம். தமது விருப்பப்
படியே மாமண வோலையைப் பழைய
அரண்மனைக் கணியா ரமைத்துக் கொடுப்பர்.
வாங்கியே சென்றுநும் மன்னரை விரைவிற்
பாங்காய்ப் புறப்படப் பகருவீர்.

கூத்தர் : பாண்டியர்
பெரும! அங்ஙனமே பிழையறச் செய்வல்.
வருகின் றேனின் மலரடி வாழ்கவே!

(போக)

(கொலுக்கலைந்து காட்சி முடிகிறது)

முதலங்கம்

இரண்டாங் காட்சி

இடம்: பாண்டியன் அரண்மனையில் அந்தப்புரம்.
காலம்: பிற்பகல்.
நடர்: கற்பகவல்லி, செந்தாமரை, வெண்டாமரை.
(கற்பகவல்லி தோழிகளோடு அம்மனையாட)

(இவையாறுங் கலித்தாழிசைகள்)

செந்தாமரை :
வெள்ளப் பெருக்குமிகு மேலான காவிரிக்கே
உள்ளப் பெருக்குவையை யொவ்வாதா மம்மானை;

கற்பகவல்லி :
உள்ளப் பெருக்குவையை யொவ்வாதே யாமாகில்,
பிள்ளையின் கையேட்டாற் பிறங்கியதே னம்மானை?

வெண்டாமரை :
பிறங்கியது சிவன்முடியிற் பிறந்ததா லம்மானை.

செந்தா : ஆருக்கு வேம்புநிக ராகுமோ? என்றொருவர்
ஊருக்குள் வந்தின் றுரைத்தார்கா ணம்மானை;

கற்பக : ஊருக்குள் வந்தின் றுரைத்தாரே யானாலும்,
பேருக்கு மாலையன்றிப் பேயோட்டா வம்மானை;

வெண்டா : பேயோட்டா வென்றூர் பெரும்புலவ ரம்மானை.

செந்தா : ஆதித்த னுக்குநிக ரம்புலியோ? என்றொருவர்
வாதித்து நம்மவையில் வழக்குரைத்தா ரம்மானை;

கற்பக : வாதித்து நம்மவையில் வழக்குரைத்தா ரானாலும்,
ஆதிசிவன் றன்முடியி லமர்ந்ததுகா ணம்மானை;

வெண்டா : அமர்ந்ததென்றூர், புகழேந்தி யாம்புலவ ரம்மானை.

செந்தா : புலிக்கொடியின் மீன்கொடியும் புல்லிதென் றின்றொருவர்
வலித்துரைத்தார் நம்மவையின் மாயமோ? அம்மானை;

கற்பக: வலித்துரைத்தார் நம்மவையின் மாயமா யானாலும்,
புலியுருவோ? திருநெடுமால் புரிந்தெடுத்த தம்மானை;

வேண்டா: புரிந்ததுவும் மீனெனவே புகல்வீர்கா
ணம்மானை.

சேந்தா: ஊருக்கு றந்தைநிகர் கொற்கையோ? என்றொருவர்
போருக்கு நம்மவையிற் புகுந்தார்கா ணம்மானை;

கற்பக: போருக்கு நம்மவையிற் புகுந்தாரே யாமாகில்,
ஊருக்குள் திருவிளையாட் டுறந்தையிலோ? அம்மானை;

வேண்டா: உறந்தையன்று, மதுரையென வுரைப்பீர்கா
ணம்மானை.

சேந்தா: வீரர்க்குள் வீரனொரு மீனவனோ? என்றொருவர்
மாறர்க்குத் தீங்குரைக்க வந்தார்கா ணம்மானை;

கற்பக: மாறர்க்குத் தீங்குரைக்க வந்தாரே யானாலும்,
மாறனையே பெரும்பரவை வழிபட்ட தம்மானை;

வேண்டா: வழிபட்ட தல்லாமன் மணங்கொண்டா
ரம்மானை.

(நேரிசை யாசிரியப்பா)

கற்பக: ஏதடி? வேண்டா மரையே! அம்மனைப்
(வெட்கத்தடன்) போதும் விடாயோ புகலுங் கேலி?

வேண்டா: கேலியன் றம்ம! கிளர்பூ ரிப்பால்
வேலியா மடக்கம் விண்டது தாயே!
குலோத்துங்க வள்ளல் கொள்கையிற் பெரியர்;
வலோத்துங்க வீரர்; வண்மையிற் புயலே;
ஆட்சியில் வலியர்; ஆயினும், கூத்தர்
சூழ்ச்சியில் லாமற் றுரும்பும் பிறழா.

சேந்தா: கூத்தர்தா னென்ன குறைபா டுடையர்?
சாத்திரங் கண்டார், தவப்பெரு மதியர்,
கவிக்களி றுகைக்குங் கவிராட் சதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவரு மாவர்.

வேண்டா: ஆயின், முன் சினத்தர், அளவில் பதற்றம்,
கூறிய தொன்றையே கொள்வர் பெரிதாய்.
இன்றுமன் னவையின் மன்றலை வேட்டுச்
சோழ வரசர் தொல்புகழ் கூறப்
பாண்டியர் குலத்தினைப் பழித்தனர், பலபடி.

கற்பக : பழித்தன ரல்லர் ; பாவாய்! புலவரின்
மொழித்திற மதுவே. அன்றியு மொன்றினைத்
தாழ்த்தலே மற்றதின் வாழ்த்தலா மென்பது
புலவரிற் சிலர்கொள் போக்காம். விடு, விடு.
செந்தா மரையாந் தெரியிழாய்! நீ போய்ப்
பந்தா டுதற்குப் பாங்கிகள் தம்மை
யுய்யா னத்தி லொருங்குட னழைத்துவை!
வந்தோ மிருவரும்.

செந்தா : வழுத்திய படியே
சென்றனன். (செல்ல)

வேண்டா : கொன்றையைத் திருமுடி யணிந்தோன்
மன்றினிற் பணிபயன் வாய்த்தது நமக்கே.

கற்பக : ஆமாம், தோழி! அடியேன் வேண்டுகோள்
வாமமா நற்கிழி வந்தது முதலா
வென்ப தறிகுவை. இன்றது முடிந்தது,
மன்பதை யாவும் வகுத்தவ னருளால்.
ஆயினும், இருபுற வகனமர் காதல்
வாய்த்ததோ? எனவே வருமோ ரையம்.

வேண்டா: பூரணச் சந்திரன் பொலிவாற் பொங்கிய
பாரணி பாண்டியர் குலமாம் பயோததி
வந்திடு கற்பக வல்லியாந் திருவே!
உந்திடு காத லின்றியே யெவரும்
வந்திடல் மணத்தினைக் கொண்டிட லென்பது
நெருப்பின்றி யேபுகை நின்றிட லொக்கும்.
ஆகலின், இருபுற வகனமர் காதலிற்
பாகின் மொழிசேர் பாவாய்! ஐயுறேல்!

கற்பக:
கண்டெனு மொழிசேர் வெண்டா மரையே!
வண்டமிழ்க் கூத்தர் வழுத்திய தென்கொல்?
'தந்தையார் முன்னர்ச் சாற்றிய மாற்றமே,
வந்திடச் செய்ததிம் மனத்தினைப் பேசிட',
என்றன ரன்றோ? இதற்கு ளயர்த்தனை?

வெண்டா:
அன்றெம் பொற்கொடீ! அயர்த்தன னல்லேன்.
ஆயினும், மனத்தினை யறைவோர் பலவித
வாயில்கள் கூறன் மகிதலத் தியல்பே.
அன்றியும், முன்னு மனுப்பிய கூனி,
தென்றமிழ்ச் செல்வி! நின் சித்திரங் காட்டிக்
காதலுங் கூறிய பின்னரே யன்றோ?
ஓதற் கெழுந்தன ரொழுங்காய்க் கூத்தர்.
ஆதலிற் காதலி லணங்கே! ஐயுறல்.

கற்பக:
வெண்டா மரைவாழ் வண்டமிழ் வாணியைக்
கண்டா லொத்த காரிகாய்! உரைத்தன
அனைத்துஞ் சரியே. அம்பிகா பதியின்
மனக்கருத் தினைநாம் மன்றலிற் காண்குவம்.
செந்தா மரையாள் தென்றலஞ் சோலை
வந்துமே யிருப்பள் வா! வா!
செந்தளிர்க் கைகளாற் பந்தினை யுந்தவே.

(செல்ல)

(காட்சி முடிகிறது)

——

முதலங்கம்

மூன்றாங் காட்சி

இடம்: பாண்டியன் அரண்மனைப் பூஞ்சோலை.

காலம்: மாலை.

நடர்: கற்பகவல்லி, செந்தாமரை, வெண்டாமரை, தோழிகள், குறத்தி.

(கற்பகவல்லி தோழிகளோடு பந்தாட)

(கந்துகவரி-இவை மூன்றும் கலித்தாழிசைகள்)

கற்பக:

சந்தமார்ந்த தோளிரண்டுந் தாவியாட வாண்முகம்
அந்தமார்ந்த முத்தின்வேர்வை யளித்திடவே
சோமன்வாழ்
சுந்தரம்மாம் வழுதிவாழ்கத் தொடர்ந்துபந் தடித்துமே;
சொக்கலிங்கம் வாழ்க! என்று தோழிபந்
தடித்துமே. (க)

செந்தா:

கொந்திலங்கு பூங்குழற் குழன்றசைய மேகலை
கந்திலங்கு செங்கரங்கள் கன்றுமென்றே யார்த்திட
சந்திரன்கு லத்துமாறன் றழைகளென் றடித்துமே;
தாவிலாரம் பூண்டமார்பன் றழைக்கப்பந்
தடித்துமே. (உ)

வெண்டா:

பந்துகையிற் பூமியிற் படிந்ததில்லை வானிலே
வந்ததில்லை யென்னவே மாதர்யாருங் கூறிடச்
சொந்தமான வளவன்வாழ்கச்சொல்லிப்பந் தடித்துமே;
சூரியன்றன் மரபுவாழ்கத் தோழிபந்
தடித்துமே. (ங)

(குறத்தி தோன்ற)

(குறம்-அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

குறத்தி :

பாரினி னடப்பன நடந்தன பார்த்துமே
கைக்குறி சொல்லிடும்
நேரியில் வாழ்ந்திடு குறத்திநான் நேரிழை
மார்களே யுங்களில்
ஆருடைக் கையினைக் காட்டினு மாவன
வகத்தியங் கூறுவேன்
வாருடை நேருடை மங்கைகாள்! வழங்கிய
வொருகலை வழங்குமே. (க)

(நிலைமண்டில வாசிரியப்பா)

வேண்டா : ஒ! கோ! மலைக்குற வுத்தமி யோநீ?
மாகா திபற்கு வாய்த்தநல் லமுதாங்
கற்பக வல்லியின் காந்தளங் கையினை
அற்புளத் தோடே யாடியிற் பார்த்துப்
5. பிற்பக னிகழ்வன பேணி யுரைப்பிற்
கற்பகஞ் சார்ந்த காகமே போலப்
பொற்பகம் பெறுவாய், புகரினை நிகர்த்தோய்!

(குறத்தி கற்பகவல்லியி னிடக்கையிணைப் பார்த்து)

(குறம்-அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்)

குறத்தி :

கையினி லிரேகைசி வந்துமே
காணுதற் கற்பமாய்ச் சிறுத்துமே,
செய்யினிற் கண்டிடு தாமரை
சேர்ந்துமே, புத்தியா மிரேகையும்,
துய்யதோர் பெருவிர லிறையினிற்
றொடுத்ததோர் சங்கிலி ரேகையும்,
ஐயெனச் சுட்டிய விரலடி
யழகிய விறைபல வாயுமே. (உ)

கானலான் மங்கைமீர்! பொற்றொடி
கருதிய செல்வமு மாயுளும்,

மாணுடை லட்சுமி வாசமும்,
வாணியி னேசமும், யாவருந்
தாணிழற் சேர்ந்திடு போகமுந்
தளர்தலில் வெற்றியுங் கொண்டுளாள்;
மாணிழை காதலிற் கதித்துளாள்
வடதிசைக் கொண்கனே வாய்ப்பனே. (௩.)

காலமி ரண்டுநான் கூறினேன்,
கதிர்மதி தப்பினு மென்குறி
பாலினு மெய்யினை மானவே
பலித்திடு நிச்சயம்; பழையதோர்
சேலையுங் கஞ்சியுங் கொடுத்திடுந்
தேடுவ னென்மகன் விரைவினில்
ஓலையும் மட்டையுங் கொண்டுபோ
யுதவிடல் வேண்டுவன் றிறத்தினே. (௪)

(நிலமண்டிலத் தொடர்ச்சி)

வேண்டா. கைக்குறி யுணர்த்திய காரிகாய்! உனக்கு
மைக்குறிக் கண்ணி மகிழ்ந்துமே கொடுத்த
மாலையை வாங்கி வாழ்த்தியே செல்வாய்!

(முத்துமாலை யொன்றைக் கொடுக்க)

குறத்தி: மாலையாய்ச் சுரும்பினம் வந்துமே சுழலும்
நாறிருங் கூந்த னங்காய்! குடரிற்
பசியால் வாட்டமும், பழையதோர் கந்தைத்
துணியால் வாடைத் தொல்லையு மடையும்
எனக்கேன் முத்தா லியன்றவிம் மாலை?
மனக்குரக் கினைவீண் வாதையிற் படுத்தவோ?
ஊனு முடையு முண்ணவும் பூணவுங்
காணுதல் போல, காட்சியி லெப்பொருள்
மாணுறக் கண்டனை? வழுத்துவாய் சிறிதே!

கற்பக: அறிவினு மாண்டினும் பெரியோய்! கூறிய
அனைத்துஞ் சரியே. அவ்வணஞ் செய்வோம்.

(செந்தாமரையை நோக்கி)

செந்தா மரைவாழ் திருவே யனையாய்!
நந்தா விக்குறி நங்கையை யழைத்துச்
சென்றுநல் லூணுஞ் சிறந்தவோ ராடையும்
கன்றினைக் கற்றா கரவா தூட்டன்
மானக் கொடுத்து மகிழ்ந்திடச் செய்து
கானக் கொடியே! கடிதினில் வருவாய்!

செந்தா: செப்பிய படியே சென்றனன், வருவல்;
மைப்படிந் தன்ன வாளமர் கண்ணீ!

(குறத்தியுடன் செல்ல)

கற்பக: (மற்றத் தோழிகளைப் பார்த்து)
பாங்கிகாள்! ஆடிய பந்தினைப் பார்த்தவர்
'வாங்கிடு மோகை? வருமோ பூவினில்?
இடைவெளி தனிற்றா னியங்குமோ?' எனவே,
அடைவுடன் கூறிய வப்பந் தாட்டம்
குறத்திகைக் குறியாற் குடங்கையி லணைந்த
திறத்தினைக் கொண்டது; திரும்பவு நாளை
யாடுவம்; சென்று வருவீர். அஃதோ

(செந்தாமரை வர)

தேடுதற் கெளிதாய்ச் செந்தா மரையும்
வந்தனள்; மூவரும் வண்கா னுகர்ந்து
தென்றலி னெங்கள் சிந்தையைத் திருத்திச்
சிறிதிவ ணமர்ந்து திரும்பிடு வோமே.

முதற்றோழி: மறியமர் கண்ணீ! வழுத்திய படியே
சிறியேஞ் சென்றனம்.

(தோழிகள் போக)

கற்பக: (செந்தாமரையை நோக்கி)

தேமொழிக் கிள்ளையும்,
முல்லைப் பூவும், முருக்கி னிதழும்
சொல்லெயி றிதழிற் றோற்கு நங்காய்;
வல்லியிற் றிரும்பிய நல்லெழில் யாதோ?

செந்தா : இந்திரை யவளினு நந்தெழின் மிகுந்த
பைந்தொடி நங்காய்! பார்வதி யனைய
செவிலியை வழியிற் கண்டனன், செப்பினன்.
தவிசுடைத் தாயு மவளுங் குறத்தியைக்
குறியாற் றெளிந்து கொடுத்திட வுன்னிச்
செறியா தென்னைத் திரும்ப விடுத்தனள்.

கற்பக : நன்று! நன்று! நம்முடைப் பித்து
மன்றலி னேர்ந்தது. மற்றவர் கட்கென்?

வேண்டா : அன்றென் தாயே! அவர்கட் கேயிம்
மன்ற னம்மினு மகிழ்ச்சியை யளிப்பது.
ஈன்ற ஞான்றினு மிணையறு மணத்தைப்
பூண்ட ஞான்றே புதல்வரைப் பெற்றோர்
களியெனுங் கடலிற் கவலையாந் தெப்பம்
பழியென விலக்கிப் பாய்ந்தின் புறுவர்.

கற்பக : ஆமாம், தோழீ! அவர்கட் கேமணம்
சேமமாம்; ஆகலி னன்றே? திருமண
மக்களின் மனக்கோள் வையகந் தன்னிற்
றக்க தன்றெனத் தகைந்தன ராகி
நடத்திடு பெற்றோர் நாடொறு நாட்டினிற்
குடக்கெழு மதியெனக் குழுமிடல் காணுதும்.

வேண்டா : கலைமக ளௌவையைக் காட்டினில் வென்ற
இலைமுக வைவே லிணையடி மறவாத்
தையால்! இங்ஙனஞ் சாற்றேல்! பணப்பேய்க்
கையா ளன்றோ? கண்ட திம்முறை.

செந்தா : (கற்பகவல்லியை நோக்கி)
பித்த மென்றதென்? பேசிடு சோதிடம்
உத்தம வாருட மோங்கிய விரேகை
சாத்திர மெல்லாந் தவறோ? வார்குழால்!

கற்பக : ஆத்திரப் படேலெம் மன்னையே யனையாய்!
சோதிட முதலாச் சொல்லிய பலவும்
வாதிட வொண்ணா மாபெரு முண்மையே.

ஆயினு முண்மையா யறிந்தோர் மிகச்சிலர்.
தாயினுஞ் சிறந்த தன்மையா மச்சிலர்
காணுதல், கார்த்திகைக் கவின்மதிப் பிறையைக்
காணுத லொக்கும். காணினும், அவர்கொள்
செருக்கு மவாவுந் தென்னவன் பொதியைப்
பொருப்பினு மிகுமே. எனினும், புகன்றது
நன்றெனி னலட்சிய நன்மலை யேறிக்
குன்றெனு நெஞ்சக் கோட்டையைக் கட்டிப்
பகுத்தறி வதனைப் பகைவனுக் கொண்டு
வகுத்தவன் செயலையு மடியாற் றொலைப்பர்.
தீதெனில், அந்தோ! திடுமெனத் துயரங்
காதுறு கவலைக் கடலினி லாழ்ந்து,
'தெய்வந் தன்னு லாகா ததுவுஞ்
செய்வினை முயற்சியின் கூலியாச் சிறிது
பெறுகுவர்,' என்ற பெரியோர் மொழியும்
வறிதே யாக, மயங்கியே நலிவர்.
ஆகலின், அணங்கே! அவனியி லெவருந்
தாகமாய்ச் சோதிட சாத்திரங் கேட்டுத்
திரிவதைக் காட்டினுந் திகம்பர னிணையடி
பரிபவ மனத்திற் பாங்கா யிருத்தி,
கடமையைச் செய்து, காரியா நுகூல
மடமையிற் சிந்தையை மட்டுப் படுத்தி,
வாழ்தலே நன்றாம். மடவரற் றோகாய்!
அணியாய்ப் பூத்துள வவ்வசோ கின்னிழன்
மணியாய் மிழற்றிடு வனிதைகாள்! சென்று,
கன்னற் பொழுதினைக் கழிப்போம், வருவீர்!

(மூவருஞ் சென்றமர)

(அசோகினை நோக்கி)

என்னே! பாங்கிகாள்! இம்மா மரத்திற்
பொன்னே ரசோகப் புதுமலர் நிறைந்தன,
வறியசெவ் வாய்க்கு வழங்கிடு மங்களப்
பொறியுடை வார மெனவே புகறல்,
மானச் சோக மலராய் மாறின!

நானக் கூந்தலும், நல்லதோர் கலையும்,
வளையும், நாணும், மலர்க்க ணீருஞ்
சோருமிஃ தென்னே ! தூயதோர் நெஞ்சம்
நீரினுட் கயலாய், நிலையா தந்தோ !

(சோர்ந்து சாய)

சேந்தா : (கற்பகவல்லியை இருகைகளாலணைத்து)
ஆ ! கா ! இளங்கொடீ ! அரும்பெறற் பாவாய் !
மாகா திபற்கும் வாய்த்திடாக் கற்பகக்
கொடியே ! வந்ததென் ? நொடியினிம்
மாற்றம் !

வெண்டா : (கற்பகவல்லியை நோக்கி)
பூவையு மொழியி லாவல்கொ ளணங்கே !
தேவை நிகர்த்தவிவ் வசோகு தெளியின்,
கூடினார்க் கன்றிக் கொழுநனிற் பிரிந்தார்
வாடிடச் செய்யு மதவேள் தனது
பூங்கணை யைந்திற் புல்லிய வுணர்வினை
வாங்கிடு சோக வாளியென் றுணர்வாய் !

கற்பக : வெண்டா மரையே ! விளம்பிய தொவ்வும்.
கொண்டா டுங்கனி யெனவே, குடதிசை
கண்டான் கதிரவன். கடிமனை புகுந்திடப்
போவோம், வாரீர், பொருவில் பாங்கிகாள் !
காவினை நீங்குங் கடிமயி லெனவே.

(மூவரும் போக)

(காட்சி முடிகிறது)

முதல் அங்கம்

நான்காம் காட்சி

இடம் : பாண்டியன் அரண்மனை அந்தப்புரத்திலுள்ள நிலா முற்றம்.

காலம் : முன்னிரவு.

நடர் : கற்பகவல்லி, வெண்டாமரை, செந்தாமரை.

(கற்பகவல்லி அணையிற் சார்ந்திருக்கப் பக்கலில் வெண்டாமரையும், செந்தாமரையுஞ் சூழ்ந்துபசரிக்க)

(நிலைமண்டில வாசிரியப்பா)

கற்பக :

ஐயோ! அனலினைச் சாந்தென வப்பி
மெய்யினை வாட்டலிர்! விடுதிர்! விரிதிரைப்
பாற்கடற் பிறந்த பானிலாச் செல்வனும்
மாற்கடற் படுத்தனன். மாநில மதனில்,
“கெட்டார் தமக்கு நட்டா ரில்லை,”
என்றே தமிழ்மறை யியம்பிய வதனை
இன்றே கண்டனன். என்னருந் தோழிகாள்!
வெள்ளிவெண் குடநிறை விழுப்பயன் றன்னைத்
தள்ளியங் கொருவன் றுடுமென வறிதே
கவிழ்த்தா லொக்குங் கவின்மதி யொளியெனப்
புவிபுகழ் கூல வாணிகப் புலவன்,
உரைத்தது முழுதும்வீ ணுபசா ரம்மே.
கருப்பு வில்லுடைக் காமனுங் கொடியோன்
நெருப்பினைத் திராவக நீர்மைய தாக்கி
மதியெனும் வெண்கல மாண்புற நிறைத்துச்
சதியாய்ச் சொரிந்தனன்; சற்றும் பிசகில்லை.
அதோபார்! மதிபா லமர்ந்துள விசாகையும்
மதோஒன் மத்தனின் வளர்கலை நெருப்பாம்
பேரினைப் பொருதுதன் பெரிதா முருவினை
நீரினி லிட்ட வுப்பது நேடி

யளக்கு மனவி லகப்படா வதுபோல்,
இழந்தன ணின்றாள்.

வெண்டா: ஏந்திழாய்! முன்னர்
ஒருகா லீண்டே யோகையோ டமர்ந்து,
"புரிகுழன் மங்கையர் புல்லிடு கணவர்
மயமாய் மாறி, மற்றவர் பாற்காண்
செயலுந் தன்மையுங் கொண்டு திகழ்ந்திடன்
மரபா மென்பதை வாணிலாச் சார்ந்து
கையக நெல்லிக் கனியென விளக்கும்
கார்த்திகை திறத்தினைக் காண்," எனக்
கூறுசொற்
போர்த்திறம் விட்டுப் புலம்புவ தந்தோ!
காணத் தரியேன்! காரிகாய்! வடமீன்
நாளை முதலிய நாற்குணம் பூண்டு
காமுகர் செயலைக் கண்டரு வருத்துப்
பூமியை நோக்கும் பொற்கொடி போன்று,
நம்மிடைப் பலமறை நவின்றிட விரும்பி,
"வம்மின்! வம்மின்!" என்றழைத்திடுவதை
மான மின்னி வயங்கிடல் காணுதி!

செந்தா: வெண்டா மரையே! கண்டனெம்; மீனென
அருந்ததி நாளை யறைந்ததென்? நீரிற்
பொருந்திடு மீனைப் புலரவைத் திட்ட
கருவா டன்றோ கருதிடின் வடமீன்?

கற்பக: (சிரிப்புடன்)
ஏ! கே! வடம்! வடாம்! மீன்வடாம்! ஏ! கே!
வாகே செப்பினை! வடமீன் கருவா
டாமே! அதுசரி!
(வெண்டாமரையை நோக்கி)
அயனார் நாவாம்
பூமே லமர்ந்தாள் பொருந்திடு மிடத்தைப்
பெயராக் கொண்ட பேதாய்! உன்மொழி
அயரா நகைப்பை யருத்திய தறியாய்!

வேண்டா: செந்தமிழ் பயிலுஞ் சிறுவய ததனில்
நொந்திடுந் தலையென நுவன்றசெந் தாமரை
வடமீ னென்றையோ வடாம தாக்குவள்?
குடக்கெழு பிறையையும் புரையதாக் கொண்டு
பாலினிற் குத்தி மேலவர் விரும்பும்
அருந்ததி யாக்குவள். இவள்போ லன்றொரு
சிறுமியா மருகியை யருமையா மாமி
நோக்கியே, "பரணியி னுவன்றிடு மடுப்பினை
ஆக்கிடல் வேண்டும்; அகத்தியம்," என்றனள்.
அறிவிலாச் சிறுமி யதனைக் கேட்டு,
"சிறியே னெங்ஙனந் தெண்ணீர் கொண்டு
குறுகுவ தாண்டு? குறிப்பிடு வாய்!" என
முறுமுறுத் தனளாம்; முறுவல் பலர்கொள.

கற்பக: (புன்னகையுடன்)
நன்று! நன்று! இதனினு மதுவே
நன்றாம். நாட்களைக் கொன்றிட லிவையே!
பரணியும் பரணாய் மாறிய தந்தோ!
என்னே! என்னே! கல்வியைக் கைவிடு
பெண்களி னிலைமை! பேசுவெண் டாமரைக்
கண்மணி யனையாய்! கட்டுரை யொன்றாற்
செந்தா மரையின் சிந்தையைத் திருத்த
முந்திடு வாயே! முந்திடு வாயே!

வேண்டா: திருவினு மிக்க செந்தா மரையே!
பெருவிருந் தாகிய அருந்தமிழ் மொழிகளாம்,
'வடமீன்,' எனுந்தொடர், 'வடக்கும், மீனும்,'
என்றே பிரித்து நன்கே யிரண்டு
வார்த்தைக ளாகக் கொண்டிடு! முதன்மொழி
கூர்த்திடு திசையினைக் குறிக்கும் பெயராம்.
திசையொடு பிறவாம் மீனெனுந் தென்மொழி
இசைந்திட விறுதி யுயிர்மெய் கவ்வோ
டொழிந்திடப் புணர்ந்ததே வடமீன். ஒண்டொடீ!

மொழிந்திடு மீன்மொழி முளைத்திடு செயலினை
அறைகுவன் கேண்மோ! அணங்கே! மின்னெனும்
புரையறு முதனிலை புலவர்தம் வாய்வழி
வினைமுதற் பொருளாம் விகுதி புணர்ந்து,
கெட்டுமுன் னீண்டு, கிளரொளி விட்டு
மின்னுவ தாயவின் மீனினை யுணர்த்திப்
பின்னரே, மண்ணினிற் பிறங்கிடு கயலினைக்
குறித்திட லானது. கோதாய்! அன்றியும்,
பறியெனும் பாசம் பற்றிடு நடுவனும்
பரதன் பிறவிப் பௌவந் தன்னின்
மரணமா வலையை மாட்டியே வலிக்கத்
துடித்துத் துள்ளித் துங்கமாம் வான
அடித்தலப் பெருங்கட லமர்ந்திடு பல்லுயிர்
மீன்கண மன்றோ விண்ணுறு முடுத்திரள்?
ஆகலின், நாளினை மீனென லடுக்கும்.
பாகெனு மொழியுடைப் பைந்தொடி நங்காய்!
வடபா ஞௌனல் கருத்தாம்; மதியே.

கற்பக : தண்டமிழ் மொழியாந் தனிப்பெருங் கடலை
யுண்டிடு வெண்டா மரையே! உரைத்தன
அனைத்தும் வாய்மையே. ஆயினும், மீனினைத்
தென்மொழி யென்றதென்? தெளிந்திடின், 'மீனம்,'
என்மொழி யன்றோ விறுதி மறைந்து,
'மீன்,' மொழி யாயது? மீனுட் சியெனு
மிலக்கியங் கண்டு மியம்பிய தென்னே?
விலக்கருஞ் சொல்லுடை வெண்ணகை யணங்கே!

செந்தா : (ஏளனத்துடன்)
தமிழ்நிலக் கடலையைத் தணியா விருப்புடன்
உமிழ்நீர் பெருக வுண்டிடு சிறுமிவாய்ப்
படுபய றியாவும் பகர்நிலக் கடலையாய்,
கடுநிகர் கண்ணாய்! கண்டிட லியல்பே.

கற்பக : (முறுவலுடன்)
செந்தா மரையே! விகடச் செயலின்

முந்துகின் றனையே! முதுவெல் வாயன்
பிழைப்பிற் போட்டியாய்ப் பிறந்தனை போலும்!

வேண்டா: (கற்பகவல்லியை நோக்கி)
உழைநிகர் விழியாய்! உணர்வைகொல்? சிறிது
நாளா யிருவரும் நட்பினர் போல,
வாளா பேசுவர்; வறிதே நகைப்பர்;
நாளடை வினிலே, நட்பது காதலாய்
மீளா நிற்கும். விரைவினி லறிகுவெம்.

கற்பக: (செந்தாமரையை நோக்கி)
ஆ! கா! வியப்பே! அங்ஙன மேயோ?
தோகாய்! ஒளித்தனை, மிகுதியும்! துளங்கிடல்!
நட்போ? காதலோ? நவின்றிடு வாயே!

செந்தா: (நாணத்துடன்)
எட்பூ வினையே யிகழ்ந்திடு நாசியாய்!
காதலோ? நட்போ? கழறிட வறியேன்.
மாதுவெண் டாமரை வடமொழி தென்மொழிப்
போரினி லஞ்சிப் புகலிட மாக
வாரிக் கொண்ட வம்புரை யிதுவே.

கற்பக: ஓதிட வறியாய்! ஆயினு முன்முகம்
வாதிட லின்றி மனமொழி யென்னும்
இருபெருந் திரையையு மெளிதா விலக்கித்
திருவே யனையாய்! திகழ்ந்திடு முள்ளப்
படுபொருள் யாவும் பன்னியே முடித்தது.

(வெண்டாமரையை முறுவலுடன் நோக்கி)

கடலை யுண்ட மடவரால்! "மீனம்,"
வடமொழி யன்றோ?

வேண்டா: அன்று, தென் மொழியின்
முளையிற் றோன்றி விளைவட மொழியே.
காணெனும் பகுதிகொள் காட்சியா மொழியும்,

ஆளெனும் முதற்கொள் ஆட்சியாஞ் சொல்லும்,
மாளெனும் பகுதிகொள் மாட்சியாங் கிளவியும்,
பகுவெனும் முளைகொள் பக்கமாம் பகர்ச்சியும்,
இலக்கெனு முதலி லெழுந்திடு மிலக்கண
இலக்கிய மாய வெம்முடை யொலிகளும்
முறையே காக்ஷியும், ஆக்ஷியும், மாக்ஷியும்,
நிறைவுடைப் பக்ஷமும், லக்ஷண, லக்ஷியம்
ஆம்வட மொழியென அழிவழக் குரைத்துத்
தென்மொழி பழிக்குஞ் சிலர்க்கே யன்றியிவ்
வெம்மொழித் தொடரினை, மீன்புரை கண்ணி!
மலயப் பொருப்பின் மாமுத லூழி
நிலவிய காலே பிறந்து, நெடுமுடித்
தென்னர்ப் புகழிலே திகழ்ந்து, முச்சங்க
நன்னர் மாடம் நலம்பெற விருந்து,
வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி
மெய்யிற் றவழ்ந்து, விளங்குமெவ் வூழியும்,
'காண்பேன் யான்,' எனக் கழறிடல் கடுப்ப
மாண்பேர் காழி வள்ளல்கை யேட்டில்
பற்றுட னெருப்பிற் பசுமையாய் நின்று,
கற்றவர் நெஞ்சக் கவின்பெறு தெருவில்
சிற்றி லிழைத்துத் திகழ்ந்திட் டாடி,
தமிழநன் னாட்டுத் தனிப்பெருந் தூண்களாம்
மூபெரும் வேந்தரை முழங்கிட வளித்து,
கன்னட முதலிய கவின்மொழி யீன்று
கன்னியாய்த் திகழ்ந்தநங் கன்னிநன் னாட்டுச்
செந்தமிழ்ச் செல்வியின் சீரினை யறிந்தநாம்
விட்டிட னேரிதாம்.

கற்பக: கட்டியை நிகர்மொழிக்
காரிகாய்! இவையெலாங் கழறுசெந் தாமரை
நாரியைத் திருத்தநாம் வேண்டின மன்றித்
தாயினைக் குறையுறச் சாற்றிய வாகா;
வேயினை நிகர்த்திடு மென்றோட் பாவாய்!
தொடார்குல மொழித்துத் துவன்றிய வென்றித்

தடாதகைப் பிராட்டி தன்மணக் காதையை
165. இயம்பாய்! நாங்கள் இன்பினை யெய்தவே.

தடாதகை திருமணம்

(கலி வெண்பா)

வேண்டா : (யாழ் மீட்டிக்கொண்டு)

க. "பூமேவு புத்தேளும் புண்மேவு கார்வணனும்
தேமேவு ருத்திரரும் தேவரும்—போய்மேவும்
ந. செம்பொருளின் றண்ணொளியாய்த் தேடரிய பல்லுயிர்க்கு
மம்புவியிற் போற்று மருமருந்தாய்—நம்புமடி
ரு. யார்விரும்பு மெய்ப்பொருளு நல்கு பசுங்கிளியின்
கூரருளா ளையேன் குவிமார்க்கண்—கார்நிறமாய்க்
எ. காணாது, செவ்வாய் வெளிறாது, காரயிற்கண்
பூணா பசுமைநிறம், புன்வயிறு—காணாதே,
கூ. ஐயிரண்டு திங்க ளருஞ்சுமையுஞ் செய்யாதென்
கையிரண்டுந் தாங்கக் கவின்மார்பும்—செய்ய
கக. வயதுமொரு மூன்றாய் வருந்திருவே! பாண்டிக்
கயற்கொடியு நாடுங் களிக்கப்—பெயலாற்
கந. களிக்குநெடுஞ் சாதகம்போற் காசினியோர் போற்ற
தெளிக்குமணிச் செம்பொற் றிருமா—குளிக்கும்
கரு. மகுடம் புனைந்துமதி வல்லமைச்சர் சூழத்
தகுமே றரியணையிற் சார்ந்து—பகுவெண்மைத்
கஎ. திங்கணுதல் வெண்கமலச் செங்கமலக் கோயில்வாழ்
மங்கையர்கள் வெண்கவரி வைத்திரட்டச்—சங்கையிலாக்
ககூ. கஞ்சுகர்கள் சேவைசெயுங் காந்தாரன் சேரனும்
மஞ்சரினைக் கோலால் வழிவிலக்க—அஞ்சம்போற்
உக. செந்தமிழைக் கற்றுணர்ந்தோர் செப்புமறை நூன்முதலாம்
நந்தலில்சங் கச்செய்யு ளன்குணர்ந்து - சந்தமிகு
உந. சைவநூற் போதகர்சொல் சாரங் கருத்திருத்தி
மைவண்ணன் றங்கையைப்போன் மாநிலத்தைச்—சைவலம்போல்,

௨௫. சூழுஞ் சுமதியின்றன் சூழ்ச்சியினு லொற்றரால்
ஆளு மரசே! அழகெல்லாம்—வாழுகின்ற

௨௭. மாடமே! வீரமெலாம் வாய்த்ததொரு பெண்ணணங்கே
பேடனமே! யான்கூறும் பேற்றினையே—கூடியநல்

௨௯. உள்ளமொடு கேட்டுணர்வாய்! ஓங்கியவிப் பேருலகம்
கள்ளமிலாப் பேரன்பாங் காட்சிபெற—வள்ளலாம்

௩௧. மெய்ப்பொருளாற் பல்லுயிர்க்கும் வில்லுமிழக் கட்டிவைத்த
வைப்புமிகு பள்ளியெனு மாட்சித்தே—கைப்புமிகு

௩௩. பேதைமையுந் தன்னலமும் பேராசை யும்பலவாம்
கோதமையு மான்மாக் குவலயத்தில்—ஆதரவாய்

௩௫. வந்தம்மை மாட்டன்பு மாத்தந்தை சுற்றத்தார்
சொந்தவூ ரார்நாட்டார் தொல்லுலகோர்—மைந்தமைந்த

௩௭. நட்டார் முதலோர்பா லுளடைவி லேபெருக்கி
நெட்டாலி னுண்விதையை நேர்கொண்டு—ஒட்டார்

௩௯. உலகி லிலரா யொருபதியைப் போல
அலகிலா வன்புருவாய் ஆர்ந்து—மலநீக்கி

௪௧. வீடடைதல் காண்டியிந்த வேதகத்தைச் செய்யுமன்பு
வீட்டறத்தை விட்டடைதன் மேதினியிற்—காட்டு

௪௩. மொளியின்றி நுண்பொருளை யோர்துமெனச் சென்ற
களிமகனின் கட்டுரையாங் காண்பாய்!—தெளியின்

௪௫. 'அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை,' என்ற
மறைமொழியி னுட்பொருளு மன்னும்—அறற்கூந்தால்!

௪௭. 'கோமக்க ளெம்முறையோ வம்முறையே பூமக்கள்
போமுறையாம்,' என்றமொழி புந்தியிற்கொண்—
டாமுறையா

௪௯. 'மாமணத்தைக் கைக்கொள் வகைதேடு வாய்மானே!
தேமணக்கும் பூவே! செழுந்தேனே!—பாமணக்கும்

௫௧. சொல்லணங்கே!'' என்றனணஞ் சூரன்மகள் காஞ்சனையும்
வில்லார் தடாதகைபான் மேவியன்று—மல்லார்

௫௩. தடந்தோட் டடாதகையாள் தாய்முகத்தை நோக்கி,
"மடநோக் குடையவென்றன் மாத்தாய்!—கடனுகைக்

ருரு. கூறியன வாய்மை. கொடுமுடியைப் பாதமிடும்
வீரியராம் வேலரசர் விஞ்சையிலோ—நாரிநான்

ருஎ. காதலுற ? அன்னாய் ! கட்டழகு மாண்மையொடு
வாதிற்பின் வாங்காத வாலறிவுந்—தீதில்

ருகூ. உழுவலன்புங் கொண்ட வொருவனுக்கே யன்றிக்
கெழுமியவென் காதலின்பங் கிட்டா—விழுமியவென்

சுக. தாயே !'' எனக்கூறத் தான்கேட்ட வேந்திழையாள்,
"ஏ ! ஏ ! அதுவேயென் னெண்ணமுமாம்—சேயே

சுங நினக்கு மணமகனார் நேர்வரேல், நங்காய் !
மனக்குள்ளா நாண மலிய—தனக்குன்றாய்

சுரு. நெஞ்சகத்தின் மத்தியி னின்றிடுமிம் மூன்றுரும்
வஞ்சகமு மாறி மகிழ்ந்திடுவாய்—கிஞ்சுகமே !''

சுஎ. என்றுரைக்க, மீன்கணியு மின்னனமேல் யானதனை
வென்றியினுற் காண்பேன் விரைந்தெனவே—நன்றிச்

சுகூ. சுமதியொடு சூழ்ந்து தொகுபடையைக் கூட்டி
அமைதியுள்ளார் தம்மை யகற்றி—மமதையுள்ள

எக. பூவரசர் யாரும் புறங்காட்ட வோட்டியிட்டுத்
தேவரசர் யாருந் திகைத்திடவே—காவரசோ

எங. டெட்டாசை பற்றிநிற்பார் யாவரையும் விட்டிவிட்டு
நெட்டா ரிமவானை நேர்குலைத்துச்—சிட்டர்வாழ்

எரு. வெள்ளி மலையடுத்து மிக்குவரு பூதகணம்
வெள்விடையா நந்தியையும் வெற்றிகொண்டு—
வள்ளல்தன்

எஎ. மாவரவு நோக்கி வலக்கையி லம்போடும்
கோவிரவு நேர்மைக் கொடுமரத்தைத்—தாவில்

எகூ. இடக்கையிற் கொண்டாவ மீர்த்துத்தோட் பின்னில்
அடக்கமாய்த் தூங்க வரியே—றிடமகன்ற

அக. பொற்குன்றின் மீதேறிப் போர்குறித்துப் பார்த்ததென
நிற்கின்ற தேரி னிமிர்ந்துநின்றுள்—பொற்குன்றை

அங. வில்லாக்கிப் புன்னகையான் மேவலரூர் மூன்றட்ட
பொல்லா மணியும் பொருக்கென்று—நல்லான்

௮௫. மணங்காணச் செல்லும் மணமகன்போற் றன்னை
வணங்கா முடிமுதலா மாத்தா—ளணங்காகப்

௮௭. போர்த்தணிந்து பண்டெறிந்த புத்தேளாங் காமனின்றே
ஆர்த்தெழுந்தா னென்றுலகோ ரார்ப்பரிக்கக்—
கார்த்திரையிற்

௮௯. றோன்றி யொளிக்காது துன்னுகின்ற மின்னலெனத்
தோன்றி விளங்கினான். தூயோன் முன்-றோன்றுதலும்

௯௧. சேணாளாய்ப் பொய்புகன்று சேவலெனக் கூச்சலிட்டு
வாணாளை வீணாளாய் மாற்றியிட்டு—நாணாளாய்ப்

௯௩. போக்கித் திரியும் பொறியிலியின் பொய்ம்மூட்டை
வாக்கிற் றவறி வழுவிவிட—காக்கவிட

௯௫. மின்றி முகவெளுக்க வெச்செருக்குஞ் சென்றுவிட
நன்றியிலாத் தன்முகத்தி னாணமிக— நின்றதுபோற்

௯௭. பூங்குழலாள் வீரப் பொலிவழிந்து தேரிழிந்து
கோங்குமுலை மூன்றிற் குரூரமாய்—ஓங்கு

௯௯. முலைமறைய நாணம் முகமுழுதுங் கொண்டு
நிலநோக்கு விக்க நிலத்தை—முலைநோக்கும்

௧௦௧. மாதராள் காலின் மணிவிரலாற் றானுழுது
காதலான் நோக்கிக் கவிழ்ந்திட்டாள்—தீதின்றி

௧௦௩. "யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்," என்னும்— நானோக்கங்

௧௦௫. காட்சியாய்க் காணக் கடைக்கணித்தாள் நீலகண்டன்,
சூழ்ச்சியாய் வந்து சுரும்போட்டி—மாட்சி

௧௦௭. வலக்கரத்தைப் பற்றி மருங்கணைத்துத் தேர்மேற்
சலக்கரணை யாயமர்ந்து தம்மைக்—கலக்கமிலா

௧௦௯. மந்திரிகள் சூழ வளர்படைக ளார்ப்பரிக்கத்
தந்திரிக ளெக்காளந் தான்முழங்க—சுந்தரமார்

௧௧௧. மாகதர்கள் வாழ்த்தெடுப்ப வந்தியர்க ளேத்திசைப்ப
நாகர்கள் பூமாரி நாற்றிசையும்—போகப்

௧௧௩. புகுந்து மதுரா புரியார் மகிழத்
தகுந்தகு மென்றுபல சங்கும்—மகிழ்ந்தார்ப்ப

௧௧௫. வந்தமண மக்களையும் வாள்விழியாள் கண்டுவந்து
சிந்தனையாற் போற்றிச் செயன்முறையே—நந்தா
௧௧௭. மணம்புணர்த்திச் சேர்க்க மதனும் ரதியும்போன்
மணம்புரிந்தான் நீடூழி வாழ்ந்து.

(நிலமண்டிலத் தொடர்ச்சி)

கற்பக : நங்காய்! யாழும் பாட்டும் நடக்கையான்
மங்காக் காதலர் வாழ்க்கையை யொத்தன.
பொய்யில் புலவர் பொருளினி லகத்தை
மெய்யாய்க் கண்டவர் போலும், விளங்கிழாய்!

வேண்டா: கண்டது மட்டு மன்று, கனங்குழாய்!
உண்டது முண்டென வுரைக்கலாம்; அன்றியும்,
புறப்பொருள் அறப்பொருள் புகன்றதென் மட்டோ?

கற்பக : ஆமாம் திருக்குறள் ஆருயிர் தமக்கே
ஏமமாம் மறைப்பொருள்; இருந்தமிழ் மறையே!

சேந்தா : (மேகந்திரண்டெழ நோக்கி)
மறையே! மறையே! வானமு மறையே!
மதியு மறையே! மாநில மறையே!
மாமுகின் மறையே! மாமழை யுறையே!

(மழை பெய்ய மூவரும் போக)

(காட்சி முடிகிறது.)

(முதலங்கம் முற்றும்.)

இரண்டாவது அங்கம்

முதற்காட்சி

இடம் : உறையூர் வெளியின் ஒரு சார்.

காலம் : வைகறை.

நடர் : புகழேந்தி, மணிவண்ணன்.

(இருவரும் நடந்து கொண்டிருக்க)

(நேரிசை யாசிரியப்பா)

மணிவண்ணன் :

வெண்பாச் செய்யுளின் மிகுதிறற் படைத்த
கண்போற் புலவீர் ! காலமோ வைகறை
ஆமெனத் துணிய அடுத்தது புலரி.
கீழ்த்திசை நோக்குமின் ! கெடலரு பகலவன்
கேழ்கிளர் கதிர்சில மேற்றிசை நிலவொளி
கலந்துடன் கொம்மைசெய் காரிருட் படாத்தில்
நலந்திகழ் குறுக்கிழை நடப்பன போன்று
செல்வதைக் காண்மின் !

புகழேந்தி : கண்டோம், செல்மதி
புற்பனி யிரண்டி னுயரம் பொருந்திட
நிற்பதால், உவாமதி நெருநலே யாகலான்
வைகறை புகுந்திடல் வழக்கே !

மணிவ : பெரியீர் !
தைவக் குறுமுனி தண்ணீர்க் கரகமாம்
குடங்கரின் றிழிந்து குதித்துச் சென்றே,
இடம்படு குறிஞ்சி யெங்குந் திரிந்து,
தடம்பணை தவழ்ந்து, குளம்பல தங்கி,
சோழமா நாடு சோறுடைத் தெனப்பைங்
கூழினை மிகுத்திடச் செய்தவிக் காவிரிக்
கரையா மோட்டினிற் காலைக் கடனை
முறையே கழித்து முறுக்கவிழ் தாமரை

நண்பனைக் குணதிசை நலமுறக் கண்டே
அண்மையா முறையூ ரடைகுவம். முன்னர்ப்
போகும் படைகளும் புகுங்கோட்டை வாயில்
வெளியே நிற்க விதித்தனன், கண்டீர்!

புகழேந்தி: ஆமாம்; அறிந்தேம். அவ்வணஞ் செய்குவம்.
தேமாங் கனியெனத் திகழ்ந்திடு குடமதிச்
சோரனோ டாடிய தொல்லிரு ணங்கை
வீரனா மெல்லோன் வரவினான் முகவெளுத்
திட்டா ளென்னக் கீழ்த்திசை வெளுக்கும்
நேர்த்திகண் டிடுவீர்!

மணிவ: பார்த்தனன், நிகரில்
தொல்காப் பியனே தோன்றினன் மீண்டெனப்
பல்காற் புகழ்பெறு பண்புடைப் புலவீர்!
உடுத்திரள் யாவையு மொவ்வொன் றாக
மடுத்திடு வெங்கதிர் வன்மையை நோக்குமின்!
திங்களங் கதிராற் றேய்வுறுந் தாரகை
கொங்கணி தாமரைக் கொண்கனின் கதிரான்
மாண்டிடு செயலின் மாட்சிதா னென்னோ?

புகழேந்தி: மாண்டிடு முலக மாப்பொருட் டன்மையைக்
கண்டிட விழையுங் காட்சிசா லறிவைக்
கொண்டிடு மன்பீர்! கூறுமிப் பகலவன்
கதிரின் வெம்மை கட்புல னுண்மையைக்
கொதித்திடச் செய்து மறைத்திட லாகவும்,
மதிக்கதிர் தட்ப மருவலான் மீன்றிரள்
தோன்றவு மாயின. அதோகாண்! அருணன்
தோன்றினன். இந்திரன் றெல்திசை முழுதுஞ்
சிவந்ததைக் காண்மின்! செருக்கள மானவே.

மணிவ: சரி, சரி, புலவீர்! சார்ந்தனன், ஞாயிறு
செஞ்ஞாயி றென்ற செய்தியு மறிந்தனன்.
ஆனால், உச்சியி லகன்றிடு காலை
ஆனா வெண்ணிற மடைதலு மேனோ?
ஆனாப் பெரும்புகழ் அமைந்திடு புலவீர்!

புகழேந்தி: நுண்மதி யுடையீர்! நுவன்றிடல் கேட்குதிர்.
கண்மணி யனையவிப் பகலவன் கதிர்கள்
செம்மை, பொன்மை, பசுமை, கருமை
கபிலம், பிங்கலம், நீலம் எனவெழு
திறத்தவாம். அவைகளே செந்தமிழ்ப் புலவரும்,
வடமொழி யாளரும் வாம்பசும் புரவியாய்
வழங்கிட நின்றன. வகையா ரக்கதிர்
கொண்டிடு நாயகன் குறிக்கொளுந் தன்னையே
விண்டொடச் சுற்றியே விரைந்து நிற்றலால்,
எழுவகைக் கதிர்களு மிணைந்தே தம்மிற்
கெழுமிய வெண்மையைக் கிளர்ந்திடச் செய்யும்.
மேற்றிசை கீழ்த்திசை மேவிடு காலை
செம்மை நிறங்கொளல் தெறுகதிர், கொடுமை
வெம்மை நீங்கிட மேதினிப் பரப்பிற்
சாய்ந்தே தண்ணெனத் தவழ்ந்திட லாலும்,
தட்பம், பொன்மை பசுமை கருமை
கபிலம் பிங்கலம் நீலம் என்ற
அறுநிறந் தம்மை யகத்திடைக் கொண்டு
வானப் பரப்பெலா நீனிற மயக்கிச்
செம்மையை நம்மிடஞ் சேர்த்திட லாலுஞ்
செறிந்ததாம்: செந்தமிழ்ச் செல்வீர், தெளிகுவீர்!

மணிவ: ஆயின், வெண்ணிறஞ் செயற்கையோ?
பன்னிறக்
கதிர்களின் றுயாய்க் கவினுறு மியற்கை
இலையோ?

புகழேந்தி: இலையது செயற்கையே கூறிய
காட்டாந் தாயையே கருதுவம்; மக்களைத்
தருதலிற் சேயினு முதலாம்; ஆயினும்,
கருவுறல், சமைதல் முதலாங் காரியம்
நாடிடிற் செயற்கையாம். அதுபோல்,
வெண்ணிறம்
பன்னிறக் கூட்டான் வந்ததாம். பகலவன்
உதயமா கிரியி லுறைந்திடு மதுவும்,

சதையநா யகனுந் தண்மதித் தூயோன்
மேற்றிசை யொருபனை யுயரமே னிற்பதும்,
அவியுண வினுமே லாகிய தென்றுசொல்
செவியுண வொன்றையே தேடுஞ் சீரியீர் !
காலை யென்னுங் கவின்பொற் கொல்லன்
வேலையா நீனிறப் பட்டுடை மேதினிப்
பூவையின் மார்பகம் பூணுபொற் காசு
மாலையொன் றியற்றிட வளமார் கீழ்த்திசை
மலையாம் பட்டடை வளர்செஞ் ஞாயிற்றைப்
பொறியாங் கதிர்கள் போயிட யாங்கணும்
மதியாஞ் சமட்டி வாங்கியே தாக்கி
மீண்டு மோங்கியே வினைசெயன் மானல்
காண்டு மன்றோ? மதியிற் களங்கம்
கருவியின் பழமையும், காலையின் பன்மையும்
குறிக்கும். உதயக் கொழுங்கிரிக் காப்பாற்
சிவந்திடு பரவை செழுநெருப் பாகும்.
அன்றிப் பகலவ னஞ்சிறு செல்வன்
குன்றும் மாளிகைக் குவடதி லேறி
நின்றே தன்கதிர்க் கயிற்றா னிமிர்த்து
நிறுத்திய மதிக்காற் றுடியை நெருங்கிச்
சென்றே வீழ்த்துஞ் செயலினைக் காண்மின் !

மணிவ : ஓ ! கோ ! இரண்டாங் கற்பனை யுருவகம்
வாகாய்ப் பொருந்தி வாய்த்தது, வியப்பே !
பாகே யனையசொற் பைந்தமிழ்ப் புலவீர் !
கதிரவன் கீழ்த்திசை கடந்துமே லேறவும்
சிறிதாய் மாறுஞ் செய்தியென் தெரிப்பீர்.

புகழே : வல்லா னருளா னல்லறி வுற்ற
பொல்லா மணிவணப் புதுமையீர் ! கேளீர்.
சிறந்திடு வயிரச் செழுமணி யொன்றினைத்
திறந்திடு வெளியிற் சேர்த்தே கண்டாற்
சிறுத்தே காணலும், திகழ்ந்திடு செம்மணி
யகத்தே வைத்துக் கண்டா லம்மணி
திகழ்ந்தே சற்றுச் சிறப்பாய்த் தோன்றலும்

புரையக் கதிரவன் பூமியின் பக்கலைச்
சார்ந்திடு காலஞ் சற்றுப் பெரிதாய்த்
தோர்ந்திடச் செயலும், திகழுச் சியினிற்
போந்திடு காலம் பொள்ளெனச் சிறுத்துக்
காணலுங் கட்புலக் காட்சியின் கூறும்.
அன்றியுங் காலையி லருங்கண் ணோக்கம்
பகலவன் வெம்மைப் பாதிப் பின்றிக்
காணலிற் பெரிதாய்க் காட்சியிற் பட்டும்,
நண்பகல் வெம்மையால் நன்கன நோக்கக்
கூடுத லின்றிக் குறைவாய்த் தோன்றியுங்
காணுத லியல்பாம், கடக்களி றனையீர் !.

மணிவ : செந்தமிழ்ச் செல்வீர் ! தெளிந்தனன், யாவும்.
வந்தனம், தொந்தரை தந்தனன், மிகவும்.
செல்வோம், காவிரித் தெண்ணீ ராடி ;
வில்லு மீனமுந் தன்வயின் விளங்க
ஆடும் புலிக்கொடிக் கருகே பாவையர்
நேடும் பந்துங் கழங்குந் தூங்கும்
செல்லூர் கோட்டையாற் றிகழ்ந்திடு
நல்லூ ருறந்தை நற்பதி தனக்கே.

(இருவரும் போக)

(காட்சி முடிகிறது.)

இரண்டாவது அங்கம்

இரண்டாங் காட்சி

இடம் : சோழன் கொலுக்கூடம்.

காலம் : முற்பகல்.

நடர் : ஒட்டக்கூத்தர், வேலையர், ஆறுமுகவேளான், கருப்பணாசாரி, வெள்ளையணாசாரி, கண்ணன், நல்லான், பெருமாள் பிள்ளை, அங்கணாசாரி, வீரத்தேவன், நல்லமுத்து, நகைமொழிநாவலன், மணிவண்ணன், படைத்தலைவர் முதலியோர்.

(ஒட்டக்கூத்தர் முதலியோர் கொலுவிருக்க.)

(நிலைமண்டில வாசிரியப்பா)

கூத்தர் : (வேலையரை நோக்கி)

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல புகழ்சா லமைச்சே!
கவிக்கர சாமெனைப் புவிக்கர சாக்கிய
குலோத்துங்கக் கோவைப்போலவே குணமார்
வலோத்துங்க மன்னை மாநிலத் தறிவிரோ?
அன்னான் றன்னை யென்னாக் கொண்டு
புகழுமா றறியேன்! புவிதனின் யானே.

வேலையர் : படிதனி லொப்புமை பகரொணாப் புலவீர்!
மிடிதீ ரெங்கண் மேலவன் விளங்கக்
கலைமுழு துணர்த்திய கணக்காய ராகியும்,
அலைதரு மாட்சியை நிலைநிறுத் தியதோர்
அச்சாணி யன்ன வழியாப் புகழ்பெறும்
மெச்சா ராற்றலாய் விளங்கியு மெழுந்தருள்
குலதே வாமுமைக் கொண்டர சாக்கிய
திலென்ன வியப்பு? யாது மின்றே!

நகைமொழி நாவலன் :

வியப்பென் ? எண்களில் வெளிப்படை யாகிய
இரண்டோ டிரண்டினை யிணைத்தாற் றோன்றும்
முரணுறு நான்கினு மொழியொணு வியப்பே!

கூத்தர் : (வேலையரை நோக்கி)

ஆமாம், அமைச்சே! ஆயினு நாமினி
ஏம மிவ்வுல கெய்திட நாடொறும்
உழைத்திடல் வேண்டும். நெருந லொருசில
பழையநங் குடிகள் பணிவா யென்னிடம்
வந்து, மிகப்பலர் வாழ்க்கைக் குரிய
நந்தலி னெறிகளை நாடுத லின்றி
மடிமை யென்னுங் கொடியோற் கடிமையாய்ப்
புலவர் வடிவம் பூண்டுநந் நாட்டில்
அலகைபோற் குடிகளை யாட்டுவிப் பதுவாய்
முறையிடக் கேட்டனன். அம்முறை யீட்டை
விரைவினி னீக்கா விட்டால், நாட்டிற்
சோம்பலா மடந்தை துடியெடுத் தாடுவள்.
ஆகலின், நம்முடை யரும்பெறற் சூழ்ச்சி
யாதென வோதுவீர், நீதுதி ரமைச்சே!

நகைமொ : (தனக்குள்)

வந்ததா சூழ்ச்சி! வறியர்க டமக்கு
நொந்திடும் வீழ்ச்சி நூற்றினு மிகுமே.

வேலையர் : (கூத்தரை நோக்கி)

புலவர் பெருமான்! புகன்றவை யனைத்தும்
கலப்பிலா வுண்மையே. கழறவும் வேண்டுமோ?
யானுமிப் போலிப் புலவர்க ளயப்பாற்
றேனீ நடுவண் சிக்குண் டவனை
மானத் துன்ப வகையெலாம் பட்டேன்.
ஆகவே, இதனை யம்புவி யதனிற்
போகவே துடைக்கப் போற்றினே னும்மை.
ஆனல், ஒருதடை யடக்கு நம்மை.

மாணு ரைப்போன் மயக்குமிப் போலிப்
புலவரை யருங்கவிப் புலவரின் வேருய்ப்
பிரித்தறி தலேமிகப் பெருந்துய ராகும்.

கூத்தர் : பிரித்தறி தற்கும் பிறங்கு மொருவழி
கண்டேன் ; அவ்வணங் காலையி லேயே
மண்டல வொற்றரை வரவழைத் தவர்பால்,
"புலவ ரெனவே புறப்படு வோர்கள்
அனைவரு நமதரு கணைந்திட!" என்றே
கட்டளை யிட்டேன். கட்டளைப் படியவர்
நேரில் வந்தால், நேர்மையு மாற்றமும்
சுளுவிற் கண்டு சொல்லலா மன்றே?

நகைமோ : சொல்லுத லெதற்கு? துணிதலே சாலும்.

வேலையர் : (கூத்தரை நோக்கி)
அதுவொழுங் காக வமைந்திடு முறையே.
புதியர் தாங்கள் புகல்வினைக் களுக்கு
விடைசொலு முகமே விளக்கிடு மவர்திறம் ;
தொடைபல தொடுக்குந் தொல்கவிப் புலவிர் !

வீரத்தேவன் : (தோன்றிக் கூத்தரை வணங்கி)
புவிக்குங் கவிக்கும் பொருந்திய வரசே !
குவித்தே னிருகை. கொண்டநா மொற்றரில்
ஒருவ னொருசில புலவர்க ளோடுதம்
காட்சியைக் காணக் கடைவாய்ப் புறத்தில்
வேண்டிநிற் கின்றான்.

கூத்தர் : வெருகளி ! விரைவிற்
றாண்டியே யழைத்துவா !

வீரத் : தொழுதனன்.
(செல்ல)

கூத்தர் : (வேலையரை நோக்கி)
அமைச்சே !
கண்டீர் ! உவகைக் காட்சியின் றொடக்கம் !

நகைமோ : கண்டேன், சனிகளின் காட்சியா மிதுவே.

நல்லமுத்து : (ஒருவனோடு வந்து கூத்தரை நோக்கி)

கவிஞர் பெரும!இக் காட்சி யோடிவர்
புவிபுகழ் வெண்ணெய் நல்லூர்ப் பொருந்தும்
சடையப்ப வள்ள றமதுவீட் டின்று
நடையப்ப வள்ளலாய் நடந்தார். கண்டு,
கட்டளைப் படியே யிட்டிங்கு வந்தேன்.

கூத்தர் : (போலிப் புலவனை நோக்கி,)

ஓ! கோ! நீயார்?

பெருமாள்பிள்ளை : ஒருமூ வாளி.
போகவே விட்டிடிற் புகழே, மிகநனி.

கூத்தர் : ஆனால், உனக்கே னிவ்வணி யாடை?

பெருமா : வானம் வெள்ளை! வளர்பயி ரில்லை!
குடிக்கக் கூழில்லை!..........................

நகைமோ : கொடிதாங் கருப்பு!
படுக்கப் பாயில்லை! பருவமும் போச்சு!
மனைவினைப் பேச்சோ வளர்ந்திட லாச்சு!

கூத்தர் : (பெருமாள் பிள்ளையை நோக்கி)
இலையேற் புலவன் வடிவோ வுனக்கு
விலையிலாப் பொருளாய்க் கிடைத்தது?

(வீரத்தேவனை நோக்கி)

வீரா!

இவனைக் கொடுபோய், இடுசிறைக் கூடம்!

(கொண்டு போக)

நகைமோ : இதுதான் றகுதி யானவேற் பாடாம்!
இராப்பகல் பட்டினி கிடப்பதை விடவிது
தராசின் முனைபோற் சற்றுந் தவறா
திரண்டு வேளை யுணவினை யெதிர
றிரண்டதோர் பரிசில் தேடினாற் போலாம்.

கூத்தர் : (நல்லமுத்தை நோக்கி)
இவனொரு வனேயோ? இணையிலா வொற்றே!

நல்லமு : அன்றென் னரசே! ஆறுபே ரின்னும்
நின்றனர், வெளியில்.

கூத்தர் : (சினத்துடன்)
ஒவ்வொரு வனைக்
கொண்டுவா!

நல்லமு : (சென்று மற்றொருவனோடு வந்து)
இவனொரு மிண்டன். நடுத்தெரு
நாரா யணனொடு போரா டினன்மிக.

கூத்தர் : பொறியி லகப்படு நரிபோற் றிகைக்கும்
அறிவிலி! நீயார்?

ஆறுமுகவேளான் : (அச்சத்துடன்)
ஐயா! யானொரு
குசவன்.

நகைமோ : குயவனா? நான்முகன் றோற்றம்.
ஆகலின், மாலுடன் அண்ணா மலையில்
அடிமுடி தேடிய தடியடி யிதுவே.

கூத்தர் : (வேலையரை நோக்கி)
அமைச்சே! புலமையி னழகினைப் பாரும்!
(குயவனை நோக்கி)
இமைத்திடுங் கொடியோய்! என்னையுன் போக்கு?

ஆறுமுக : பித்தனை யெங்களைப் பித்தனை யாக்கி,
வெங்கல மெங்கள் மங்கையர் தங்கள்
மங்கல நாணையுஞ் செங்கையின் வாங்கி
விற்றிடச் செய்தெம் வேலையின் மண்ணை
யுற்றிடச் செய்த துயர்கவிப் புலவீர்!

கூத்தர் : ஆ! கா! மடிய னறைந்திடு வாயில்
வாகாய் அமைந்தது.

(வீரத்தேவனை நோக்கி)

வாராய், வாயிலோய்!
சிறையிற் கொடுபோய்ச் சேர்ப்பா யிவனையும்.

(கொண்டு போக)

நல்லமு: (வேறொருவனோடு தோன்றி)

இறையே! இவனத் தோப்பிற் கதிரவக்
கோனா ரிடத்தில், ஆனைப் பொருளைப்
பரிசாய்ப் பெற்றான்.

கூத்தர்: பழியுடைக் குருடா!
துரிசாங் கெடுமதி தோன்றிய தென்னை?

கண்ணன்: ஐயோ! பெரியோய்! அடியே னெடுநாள்
வையகம் புகழ வருவார், போவார்
பலர்க்கு மயிர்வினை பண்ணியே பிழைத்தேன்.
தலைப்பித் தத்தாற் சடக்கென விரண்டு
கண்ணும் பட்டுக் கட்டினாற் போல
விண்ணும் மண்ணும் விளங்கவே யில்லை.
அதனால், இப்படிச் செய்தே னறியேன்.
இனிமே லிப்படிச் செய்யே னிறையே;
மனிக்கவே யுன்றன் மலரடி பணிந்தேன்.

(வணங்க)

நகைமோ: (கண்ணனை நோக்கி)

அடடா! என்பா லறிவித் திருந்தால்
வடதிசை மூலைக்குங் கதிரவன் வணங்கத்
தென்றிசை நோக்கத் திருப்புவன். கதிரவக்
கோன்கண் கொடுப்பான்; கொள்ளலா மென்று
போனாய். அந்தோ! புகுந்தது, புலியே.

கூத்தர்: ஓ! கோ! நாவிதன்! ஒழுங்கே! ஒழுங்கே!

(வீரத்தேவனைநோக்கி)

சேவகா! இவனையுஞ் சிறையிற் சேர்ப்பாய்.

(கொண்டு செல்ல)

நல்லமு : (இன்னொருவனோடு புகுந்து)

தக்கோய் இவனொரு தறுதலை யாவன்.
செக்கார் தெருவிற் சின்னையன் செட்டி
இடஞ்சென், "ஒருகுட மெண்ணெய்
கொடுக்க!
இன்றேல், வசைக்கவி யியற்றுவ னுன்மேல்",
என்றே மிரட்டி எதிர்த்தான், கண்டேன்.

கூத்தர் : (போலிப் புலவனை நோக்கி)

முன்னவ னாவிதன் முனைந்துமுன் வந்த
பின்னவ னியார்? பெருந்தூ சுடையோன்?

நல்லான் : ஆமாம், பெரும! அடியேன் வண்ணான்.
கோமா னுக்குக் குறியும் வருமோ?

நகைமோ: ஆமாம், நின்குறி தவறினு மவர்குறி
போமா றில்லை; புவிமுழு தறியும்.

கூத்தர் : என்னே! என்னே! இக்கொடுங் காலம்!
நாவிதன்; வண்ணான்! நலமிகு குயவன்!

(வீரத்தேவனை நோக்கி)

சேவகா! இவனென் றிருமுன் னிராமற்
சிறையினிற் புகுத்துவாய்! விரைவினிற்
போ! போ!

(கொண்டு போக)

நல்லமு : (ஒருவனை யிட்டுவந்து)

மணியே! கல்வியில்; மாநகர்த் தஞ்சைக்
கணிகை நீலக் கண்ணியின் மனையிற்
"கவிக்கா யிரம்பொன் கட்டிடு வா" வெனக்
கவிபோ லிவனும் கலக்கம் விளைத்தான்.

நகைமோ: ஆ! கா! கவிக்கோ ராயிரம் பொன்னா?
ஆயின், இவர்மிக அருமையா னவராய்க்
கம்பர் வீட்டுக் கட்டுத் தறியாய்

இருக்கவே வேண்டும். என்னெனிற் புவியிற்
"கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும்
வம்பாய்க் கவியினை மழைபோற் கொட்டும்",
என்பது பழமொழி யன்றோ?

கூத்தர் : கம்பரின்
ஆயிரம் பொன்னீ கேட்டவ னரடா?

வெள்ளையனாசாரி :
தாயினும் பெரியோய்! தச்சன் யானே.

நகைமோ :
தச்சனா? நன்று. தச்சன்! தமிழே!
உச்சமா மிவ்விரு மொழிகளுந் தகர
முதலெழுத் தினையே முன்னிட்டுக் கொண்டன.

கூத்தர் : ஆகலிற் பொருத்தமே! சேவகா! இவனையும்
சிறையகங் கொண்டுசெல்! கறைமிக வுடையான்.
(வீரத்தேவன் கொண்டுசெல்ல)

நல்லமு : (வேறொருவனைக் கூட்டிவந்து)
வளவர்தம் பெரும! வந்திடு மிவனோ,
வில்லியர் தெருவிற் றொல்லைகள் விளைத்துச்
சள்ளைகள் செய்தனன்; சாற்றற் கரியன.

கூத்தர் : கொள்ளைநோ யனையநீ யார்? முன் சென்றவன்
தச்சன், நீயோ தட்டான்? கருமான்?

கருப்பனாசாரி :
கவிஞர்க ளேறே! கருமான். இன்றெனை
ஏகவே விட்டால், போகே னிப்புறம்.

நல்லமு : இறையே! இவன்மிகத் துடுக்கன்எங் களுக்கு
வரையேற் றம்போல் வகுத்தான் மிகத்துயர்.

கூத்தர் : அப்படி யா? இவன் அனைவரி னுங்கனி
செப்படித் தொழிலைச் செய்பவன் போலும்.
கொடுபோய்ச் சிறையாங் கோட்டஞ்சேர்மின்!
(வீரத்தேவன் கொண்டுசெல்ல)

நல்லமு : (இன்னொருவனோடு புகுந்து)
கவிக்களி றுகைக்குங் கவுடப் புலவீர் !
தடிய னிவன்கடைச் சங்கம் போற்றும்
கடிய னென்று கழறியே பலரை
வஞ்சித் திட்டே வாய்ப்பந்த ரிட்டு
விஞ்சியே நின்றனன்; வேளாளர் தெருவில்.

கூத்தர் : முட்டாள் ! நீயார் ?

அங்கணாசாரி : (அச்சத்துடன்)
தட்டான், அடியேன்.

கூத்தர் : கெட்டாய் ! அப்பாற் சென்றிடு ! கேடே
உற்றது, புலவ ருறுதொழி லந்தோ !
(நல்லமுத்தை நோக்கி)
ஒற்றே ! இவனையு மொழித்திடு சிறைக்கு
(வீரத்தேவன் கொண்டுசெல்ல)
சென்றவிக் கள்வனிற் றீர்ந்ததோ ?

நல்லமு : தீர்ந்தது.

கூத்தர் : நன்றே, "நமது நானிலம் வதியும்
போலிப் புலவர்கள் சிறையிற் புகுவர்.
பின்னவர் கடாக்களாற் பேதுற லுற்று,
நந்நகர்க் காளியி னவராத் திரிவிழா
தன்னிலே தலைக டறிக்கப் பெறுவர்,"
என்பதை நந்நா டெங்கும் பறையான்
மன்பதை யறிய வழுத்திடச் செய்வாய் !

நல்லமு : செய்தனன், சிறியேன் திருவடி வணங்கினன்.
(வணங்கிச் செல்ல)

வீரத்தேவன் : (புகுந்து)
மையலின் மணியே ! வளவர் பிரான்றன்
அரண்மனை யமைச்சர் காணவே தங்கள்
முரணிலா வேலையை முன்னோக்கு கின்றார்.

கூத்தர் : ஆயின், அவரை யழைத்துவா ! நொடியில்.
(வீரத்தேவன் செல்ல)

மணிவ : (தோன்றி)
மாயிரு ஞாலம் வணங்கிடும் புலவீர் !
வணக்க மிகப்பல இணக்கமாய்த் தந்தனன்.

கூத்தர் : அரண்மனை யமைச்சே ! வாரும். எப்பொழு
தடைந்தது ? மணமு மழகாய், ஒழுங்காய்,
நடந்தது போலும்.

மணிவ : நன்னெறிப் புலவர்
பெரும ! நும் வாழ்த்துப் பெற்றவிம் மணத்தின்
பெருமையை யென்னெனப் பேசுவல்? காலை
வந்தேன். வழுதியர் பெருமா னெமக்குத்
தந்தவர வேற்புச் சாற்றிடற் பாற்றோ ?
வரிசைப் பொருள்களின் வளத்தினை யுரைக்கத்
தரிசுடை யென்னு தோல்வியுற் றிடுமே.
ஆதலில், பெரியோய் ! அடங்கிய முடங்கல்
காதலிற் கொணர்ந்தேன். கடைக்கணித்
தருண்மின் !

(ஓலையொன்றைக்கொடுக்க)

கூத்தர் : (வாங்கிப் பார்த்துக்கொண்டே)
யானைக ளெத்தனை ? ஐயா யிரமா !
மானினம் அவற்றினை மடக்கிடும் போலும் !
தேரின மாயிரம். இஃதென் ? திரண்மணி
யழுத்திய வணிகள் ! ஆ ! ! கா ! ! ! இஃதார் ?
பழுத்த முத்தமிழ் பாடுபுக ழேந்தி !
யாண்டுளா னன்னுன் ?

(கொலுவினில் நோக்க)

மணிவ : ஈண்டினர் வாயிலில்.
காண்டகு சிரியோய் ! கழறிய விவையெலாம்
ஒப்புவித் திடுமிடஞ் செப்பிட வேண்டினன்.

கூத்தர் : வரிசைகள் யாவும் புரிசையிற் சேர்த்திடும் !
வாய்க்கொழுப் புடைய மன்புக ழேந்தியைச்
சிறையகஞ் செறித்திடும் !

மணிவ : சிறையகம்! செய்ததென்?

கூத்தர் : பிள்ளாய்! பேசிட லாருட னென்பதை
உள்ளாய்! விரைவில். உளறிடல் வேண்டாம்!
பழமையும் புதுமையும் பார்த்துரை யாடு!
கிழமையு நிலைமையும் யாராற் கிடைத்தன?

மணிவ : புலிபோற் றரசே! புகன்றவப் படியே
தமியேன் செய்தனன்; சடுதியிற் செல்வல்.

(சென்றொரு புறமிருக்க)

நகைமோ : (தனக்குள்)

இதுவரை யேழு சனிகளே சிறையகஞ்
சேர்ந்தன. அவற்றை யேழரை யாக்க,
ஆர்ந்திடு மிந்த அரைச்சனி சேர்ந்தால்,
ஏழரை யாகும். இல்லா விட்டால்,
ஏழுங் கூடி யிளைத்திடு மிகநனி.
சேறு நீருஞ் சேர்ந்தா லன்றோ?
செந்தா மரையும் வந்திடுந் தெளிவே.
ஆயினும், இச்செய லாகா தெனவே
காயினுங் குறிப்பாய்க் கழறனங் கடமை.

(கூத்தரை நோக்கி)

(நேரிசை வெண்பா)

மாமியொடு போதன் மனைவியொன் றாய் வீற்றிருக்கப்
பூமியினி லாட்சிசெயும் புங்கவனே!—நேமியினில்
ஊசியுடன் மற்றொன்று மூசி யுருத்தெழுந்தால்
வாசியுறல் யாதாம்? வழுத்து!

கூத்தர் : சொற்பெருக் கதனிற் றுதித்திடு புலமை
உற்றிடு முளங்கவ ரொருபுக ழுடையோய்!
வாசியி னுடலில் வசியிரண் டழுத்திற்
காசினி யிற்பசி யுற்றோன் கல்வி
பறத்தலே போலப் பறந்திடு மெனவே

பள்ளிப் பையனும் பாங்கா யுணரும்,
வெள்ளிடை மலையா விளங்கிய விதனை
மதித்திறப் புலவர் விதித்திறங் கொண்டு
மதித்திட வந்தவுன் மதிமிகப் பெரிதே!

(வேலையரை நோக்கி)

கதிரவ னுச்சியைக் கண்டனன், செல்வோம்;
விதியினுஞ் சிறந்த மதிமிகு மமைச்சே!

(யாவரும் போக, மணிவண்ணன் நிற்க)

மணிவ : (தனிமொழி)

கற்றறி மூடன்! கண்டிடு வொன்றையே
பற்றிடும் பெரும்பதர்! பகரறி வின்றிச்
சொற்றவிக் கட்டளை தோன்றிட அறிவுஞ்
சிதறிய தென்கொல்! சீர்த்திசால் துங்கன்
கிட்டிடு மளவுங் கீழ்ப்படிந் திவனை
மட்டந் தட்ட வழியினைக் குறிப்பல்.
அந்தோ! கொடுமை! அரும்புல வரைச்சிறை
குந்திடச் செயலே கொடுந்துயர். ஆயினும்,
சிறைக்கா வலர்பாற் செப்பியே, அவர்க்குத்
தேவைக ளனைத்துந் திட்டஞ் செய்து,
காவலன் வரும்வரை காப்பதென் கடனும்;
சேவலங் கொடியோன் றிருவருள் நாடியே.!

(போக)

(காட்சி முடிகிறது)

இரண்டாவது அங்கம்

மூன்றாங் காட்சி

இடம் : சோணாட்டுச் சிறைக்கூடம்.

காலம் : நண்பகல்.

நடர் : புகழேந்தி, ஆறுமுகவேளான், கருப்பணாசாரி, கண்ணன், வெள்ளையணாசாரி, நல்லான், பெருமாள் பிள்ளை, அங்கணணாசாரி, அறப்பெருஞ் செல்வன்.

(ஆறுமுக வேளான் முதலிய எழுவரும் துயருடன் ஒருபுறம் நிற்க)

(நேரிசை யாசிரியப்பா)

புகழேந்தி : (தோன்றித் தனிமொழியாய்க் கூறல்)

என்னே! என்னே! இவ்வர சாட்சி!
மின்னே ருலகில் விளங்குங் கொலைபழி
கொண்டவர்க் கன்றோ கொடுஞ்சிறைக் கூடம்?
குண்ட னென்பாற் கண்டதென்? "புதிதாய்
வந்திடு மணியம் நந்திடு நெருப்பைக்
கட்டிக் கொளுத்தினான்," எனும்பழ மொழிக்குச்
சுட்டுப் பொருளாய்த் தோன்றிய கூத்தன்
அரச னிலையை யடைதலிற் றன்னையே
மறந்தனன் போலும். ஆயினும், மதியிற்
பொருந்திய கல்வியும் போயது யாண்டோ?
வருந்தியு நேரிற் கண்டிட விழைந்து,
பொருந்தினா னில்லையே! புவியர சதனைக்
குரங்கின் கையிற் கொடுத்திடு பூந்தார்
புரையக் கொடுத்த வரையன் மதியை
என்னெனப் புகல்வது! அவன்தா னென்ன
செய்வான்? புலவரிற் சிறப்பனுந் தனது
கைபோல் பவனுங் கல்வியா சிரியனு
மாகிய விவனை யன்றியே யெவரை

அரசக் கட்டிலி லமர்த்துவன்? அன்றியும்,
உரைசெயி லூழ்வினை யூட்டிய படியே
புரிந்தனன் கூத்தன். பொல்லாங் கவன்பால்
ஓதிடற் சாலவு மொண்ணா தந்தோ!

(ஆறுமுகவேளான் முதலியோ ரிருக்குமிட நோக்கி)

என்னை யன்றி, இச்சிறை யகத்தே
இன்னுஞ் சிலரு மிருக்கின் றனர்போற்
காண்கிற தையோ! அவர்களுங் காட்சியின்
மாண்புடை மக்களாய்க் காண்கின் றனரே!
இவர்களு மெனைப்போற் றெளிவிலா னியற்றும்
தவறுடை யாட்சியாற் றடுக்கப் பட்டனர்
போலும். அவர்களை நெருங்கிப் புரிகுவன்.

(அவர்களை நோக்கிச் செல்ல)

ஆறுமுக : (மற்றவர்களை நோக்கி)

அண்ணன் மார்களே! அதோ! பாருங்கள்!
கண்ணனை நிகர்த்த காளைய ரொருவர்
நமைப்போ லிங்கு நண்ணினர். ஆனால்,
உண்மையிற் பெரிய வொருகவி போன்றே
திண்மையாம் பார்வை செப்பிடல் காண்மின்!
அவரு நம்மையே யண்மிவரு கின்றார்.
கவரு மெழினடை காணுந் தோறும்,
அன்பும் நண்பும் அகத்திடை முளைத்தே
இன்பா மவர்மொழி கேட்பதற் கென்செவி
விழைந்த தவருடை மெல்லரு ணோக்கம்
பழைமையா நண்பரைப் பார்ப்பது போன்றே
இருப்பதைக் காண்மின்!

(புகழேந்தி நெருங்கி வர, அவரை நோக்கி)

எம்பெரு மானே!
வருக! வருக! வணங்கினோம், நும்மை.

(எழுவரும் வணங்க)

புகழேந்தி : (எழுவரையும் நோக்கி)

வணக்க மிகப்பல இணக்கமா முமக்கே
தந்தனன். தவநனி நொந்திடு முளத்தீர்!
நன்முகக் குறியு நன்மைசான் மொழியுஞ்
செம்மைசால் பணிவுஞ் செறிந்திடு முங்களைச்
சான்றோ ரினத்திற் சார்த்திநற் கரியாய்,
ஊன்றியே கூறிட, ஒடுங்கியிச் சிறையகஞ்
சேர்ந்ததென்?

ஆறுமுக : பெரியீர்! சிவபெரு மானே
நேர்ந்தா லொத்த நேர்மையீர் தாமே
இவண்புக நேரின், எங்களை யொத்த
சவங்களி னிலைமை சாற்றவும் வேண்டுமோ?

பெருமா : கலைமகள் படிந்த காட்சிவிட் டகலா
நிலைகொ ணோக்க நேர்த்தியை யுடையீர்!
திருவுளங் கருதிய வணமே சிறியேம்
பெருமையி லொருசிறி துடையேம்; ஆயினும்,
வயிற்றின் கொடுமையான் மதியினை யிழந்தேம்.

புகழேந்தி : வயிற்றின் கொடுமையா? அதனால், வழிப்பறிச்
செயனேர்ந் ததுவோ?

வெள்ளைய : சீ! சீ! அப்படிச்
செயலிலை பாழுங் கருப்பா லகவிலை
ஏறிட வெங்கள் பிழைப்பெலா மிழுக்கி
மாறிட லானது.

புகழேந்தி: மாறிட! என் செய்தீர்?

கண்ணன் : செய்ததென்! தீங்காஞ் செயலொன் றுமின்று
உய்வினை வேண்டி யுண்மையி லறிந்த
கல்வியைக்கொண்டு குடிகளின் கடைதொறும்
பல்லினைக் காட்டிப் பலமொழி பகர்ந்தே
"ஏற்ப திகழ்ச்சி," எனுமொழி துறந்தே
ஏற்கத்தொடங்கினேம். இதுதா னெஞ்செயல்.

நல்லான் : ஆமாம், ஐயா! அதுதா னெங்களைத்
திருட்டுப் புலவனுஞ் செயலினிற் சேர்த்தே
உருட்டிய திந்த வொருபெருஞ் சிறைக்கே.

கருப்பனு : சிறையுடன் தீர்ந்தாற் றெம்புட னிங்குக்
கிடைக்குங் கஞ்சியைக் கேடொன்று மின்றிக்
குடித்தே குடிசையிற் கொல்லும் பசி,பிணி
அடுத்திடா திருப்பேம். அங்ஙன மன்றி
நவராத் திரியிலே நம்மூர்க் காளி
கோயிலி லெம்மைக் கொண்டுபோய் நிறுத்திப்
பலியிடத் துணிவாம். பலிக்குமுன் னுங்கள்
கிலிகொளக் கேள்விகள் கேட்கப் படுவெமாம்.
விடையிறுப் பவர்கள் மீள்வராம். மற்றோர்
படையினாற் றுணிக்கப் படுவராம். எங்களைக்
காப்பது கடவுள் கடமையாம்; பெரியோய்!

புகழேந்தி : (தனக்குள்)
இஃதென் கொடுமை! இயம்பொணாப் பழியே!
அஃதைகள்! அந்தோ! அடாக்கொடுங்
கொலைச்செயல்!
"நரிக்குப் பட்டங் கட்டினால், நாட்டில்
வரிக்குமேல், கிடைக்கொரு வாருடை
வேண்டும்,"
நடைபோ லன்றோ கூத்த னாட்சி
நடைபெறு கின்றது? நாமிவ னுக்குப்
படிப்பினை யொன்று புகட்டியே படிந்த
தடிப்பினை யொழியத் தடிந்திடல் வேண்டும்.

(வெளிப்படையாய்)

உடற்பிறப் பனைய வுயர்நட் பாளர்காள்!
கடமையை முடிக்கவே கடவுள ரென்னை
அனுப்பின ரிங்கே. அலக்கண் வேண்டாம்.
பனுவல் பலவறி பண்புடை யோனெனக்
குறும்புகள் பலசெய் கூத்த னும்மை

எறும்பின மெனவே யெண்ணினன் போலும்.
ஆயினும், அவன்கருத் தழிவது திண்ணம்.
பாயிரம் பலவென்? பாண்டிநன் ஞட்டின்
அரண்மனைப் புலவனை யறிவிர்கொல்?

கண்ணன் : ஆ! கா!

அறிவோம். அவர்பெயர் புகழேந்தி யன்றே?
கல்வியிற் பெருங்கடல்! காட்சிக் கெளியர்!
நல்லறி வினிலோ நலமிகு வியாழன்!
ஆனல், நேரி லறியு நல்வினை
தேனர் மொழியீர்! செய்தோ மில்லை.
அன்னர் தம்மை யறியுமோ திருமுன்?

ஆறுமுக : (கண்ணனை நோக்கி)

அண்ணல்! இவரே, அவரென் றெனக்கோர்
எண்ண நண்ணிய திவரே யவர்காண்!

(புகழேந்தி முகத்தைப் பார்த்துக் கொண்டே)

கண்ணு முகமுங் கருத்திடை யுள்ளதைப் [சித்
பளிங்குபோற் றெரித்திடல் பார்மின்! பகர்ச்
தெளிவே முன்னர்ச் செப்பிய தயர்த்தேன்!

அங்கணனு : அப்படி யாயின், இப்புகழ் மலையே
எப்படி யுந்நமைத் தப்பிட வைக்கும்.

புகழேந்தி : ஆமாம், யானே அப்புக ழேந்தி.
ஏம முறுவீர்; எண்ணம் விடுமின்!
நவராத் திரிவிழா நணுகிட வின்னும்,
நவமா நான்கு நன்மதி வேண்டும்.
அதற்குள், நீவிர், அரும்பாடு பட்டு
மொழியியல் பொருளியல் பாவியன் முறையே
தெளிந்திடல் வேண்டும். ஒழிந்திடு நுந்துயர்.
ஒட்டக் கூத்தனை யுலகெலா மறிய
மட்டந் தட்டி மடக்கலாம்; மதிவலீர்!

பெருமா : ஐயமென் ? தங்க ளருண்மட்டு முண்டேல்,
பையலிக் கூத்தனைப் பதறவே யடிப்பேம்.
வேண்டா மரையாள் விரும்பிவந் தடையும்
தண்டமிழ்ப் புலவீர் ! தாங்களு மிங்கு
வந்திட நேர்ந்ததென் ?

புகழேந்தி : வளவர்கோன் வாயிற்
புலவனு யிருக்கப் பாண்டியன் புகன்ற
நலமொழிப் படியே நண்ணின னின்று.
கெட்டகா லத்தாற் கெடுமதி பூண்ட
ஒட்டக் கூத்தன், உங்களிக் கட்டை
போக்குதல் விரும்பிய போத னுணையாற்
போக்கினன்; சிறையில். புகுந்தனன், வந்தேன்.

அறப்பெருஞ்சேல்வன் : (தோன்றிப் புகழேந்தியை நோக்கி)
ஒப்பிலாப் பெரியோய் ! உண்டிட வுணவு
செப்ப மாயிற்று. திருவுளம் புரிந்து
கொண்டிடவேண்டினன்.

புகழேந்தி : கோதிலா வட்டில்
கண்டிட யாண்டு ?

அறப்பெரு : கவிஞர் மணியே !
தென்பா கத்திற் றிகழ்ந்திடு கின்றது.
அன்பா யடியே னழைத்துச் செல்வல்.
எழுந்தரு ளிறைவ !

புகழேந்தி : (மற்றவர்களைச் சுட்டி)
ஆனுல், இவர்கள் ?

அறப்பெரு : பின்னு லழைக்கப் பெறுவர்.

புகழேந்தி : அஃதென் ?
நன்னு வலரிவர் நலிந்திடப் பசியால்,
முன்னு னுணவுணன் முன்னேன். அன்றியும்,
இவர்களு மெனைப்போ லெல்லா விதத்திலும்
முறையே நடத்தப் பட்டா லல்லது

பெரியோய்! உணவுணும் பெற்றியிங் கில்லை.

அறப்பேரு: அரியோய்! அங்ஙனஞ் செய்யக் கட்டளை
இலை. என் செய்வன்?

புகழேந்தி: எவரது கட்டளை?

அறப்பேரு: மலைநிகர் கூத்த மன்னவ ரதுவே.

புகழேந்தி: மன்னவ னவனா? மறந்தனை மிகுதியும்.
ஒட்டக்கூத்த னெனவே யுரைத்திடு!
கெட்டனன், அவனு மெனைப்போற்
கீழ்மையாம்
இச்சகம் பேசும் பச்சைப் புலவனே.
அரசன் வந்தபின், அவனிலை யறிவன்.

அறப்பேரு: இருக்கலாம்! ஆயினும், எளியேம், யாரும்
தலைமையாய் வந்தால், அவர்களே தலையாய்க்
கொண்டிடல் வேண்டும், கும்பிடல் வேண்டும்.
அன்றெனிற் பிழைப்பு நின்றிடா தகலும்.

புகழேந்தி: ஆம், அது வாய்மை. ஆயினும், இவர்களை
ஆம்வகை நடத்தியென் னோடவே யமர்த்தின்
வருங்கே டொன்று மின்றாம். முடிவிற்
பெரும்புக ழடைவாய். பேதாய்! என்மொழி
நேர்மையாம், நம்பு!

அறப்பேரு: நிலந்திகழ் புலவீர்!
அப்படி யாகுக! ஆனால், என்னைக்
காட்டிக் கொடுத்திடல்! கழகமார் பொருளே!

புகழேந்தி:
காட்டிக் கொடுப்பதா? கழறினை நன்கு!
செய்ந்நன்றி கொல்லுஞ் சிறுமக னீங்கிலை.
(மற்றவர்களை நோக்கி)
செல்வோம், யாவருஞ் சிரிதே;
கல்வியின் செல்வி களிப்பினை யெய்தவே.

(யாவரும் போக)

(காட்சி முடிகிறது)

இரண்டாவது அங்கம்

நான்காம் காட்சி

இடம்: சோணாட்டுச் சிறைக்கூடத்தி னருசார்.

நடர்: புகழேந்தி, மணிவண்ணன்.

காலம்: மாலை.

(நிலைமண்டில வாசிரியப்பா)

புகழேந்தி: (ஒருபக்கம் அமர்ந்து)

“வகுத்தான் வகுத்த வகையலாற் கோடி
தொகுத்தார் தமக்குந் துய்த்த லரி” தெனும்
பொய்யா மொழியினைப் புகரி றுறவியும்
மெய்யாக் கொண்டிடல் விதியெனிற் சிறியேன்
கையா றுறுவது கழிபெரு மடமையாம்.
அன்றியும், இறைவ னழகுற நடத்தும்
மின்றிகழ் செயலெலாம் விளங்கிடு பல்லுயிர்க்
குறுதி பயப்பன; அன்றியோ ரணுவும்
இறுதி பயப்ப இல்லையே. சிலசெயல்
வீணென மதிப்பதும் வெளிறுகொ ளறிவே.
பேணிய மெய்யறி வாகுங் காட்சியைப்
பெற்றோர்க் கனைத்தும் பெரும்பய னுற்றே
விளங்கிடும்.

மணிவ: (தோன்றி)

செந்தமிழ் வியன்பெறு செல்வி
களங்கொளுங் கலித்தொகை நற்றிணை யகம்புற
நானூ றும்முத னற்றமிழ்ச் சங்கப்
பேழையி லுற்ற பெரும்பணி யனைத்தையும்
நாவாங் கைகளா னலமுற எடுத்துப்
பூவாம் பெரியதோ பொருட்காட்சி நிலையில்
வைத்தே மகிழ்ந்திடும் மெய்த்தமிழ்ப் பெரியீர்!

'வாழ்க! நீடு வாழ்க!' எனவிறை
சூழ்கழ றொழுதனன். சுகமே போலும்.
குறைவெது முண்டோ? குறுமுனி யனையீர்!

புகழேந்தி: அறிவாற் பெரியீர்! உறுகுறை யாதும்
பெறுமா றில்லை. பெயரள வன்றிச்
செயலா லரண்மனைத் தோற்றமாச் சிறக்கும்
உயலினைக் கொண்டதிவ் வொருபெருஞ் சிறையே.

மணிவ: ஆயின், எங்கணு மறியொணா வியப்பே!
தாயினு மன்புடன் றையலார் வளர்க்கும்
கிள்ளைகள் கூட்டினைச் சள்ளையில் வையகம்
என்றது போன்றவோ ரிரும்பூ தாமே!

புகழேந்தி: "கலக்கம் பிட்டுக் காடையை வளர்க்கினும்
கலக்கமுள் நெஞ்சங் காட்டினில் வைகும்,"
என்பது வாய்மையே. எனினும், இச்சிறையினை
மன்பதைக் குரிய வல்லோன் கட்டளைப்
படியே வொட்டக் கூத்தப் பட்டனின்
கொடிதா நெஞ்சக் கோட்டையை யிடிக்க
வேண்டுங் கருவிகள் விளங்கிட வேண்டிய
கொல்லுலைக் கூடமாய்க் குயிற்றிட வந்தனன்.
நல்லவர்க் குயிரையு நல்கிடு மணியே!
ஆகலின், இதுசிறை யன்றெனக் கருதுவீர்.

மணிவ: நெஞ்சக் கோட்டையா! யாதது? பெரியீர்!

புகழேந்தி: பஞ்சக் கொடுமையாற் கஞ்சியை வேண்டி
நயமொழி பகர்ந்தே யிரந்திட, 'நயமிலாப்
போலிப் புலவர் சிறையகம் புக!' எனக்
கோலிச் செலுத்தக் குறையுறு மெழுவர்
வந்திவண் சேர்ந்தார்; மாண்புடை மக்கள்!
நொந்திடு மவரை நுவன்றவெண் மதியன்
கல்விச் செருக்காற் காளியின் றிருமுன்
கொல்வித் திடவே குறித்துளான்; கொடுமை!
இக்கொலை நவராத் திரிவிழா வன்றும்.

தக்கோ ரவரை யதன்முனந் தகுங்கலை
மிக்கோ ராக்கி, வீணை மட்டந்
தட்டும் பணியே தாழ்சிறைக் கூடங்
கொட்டுங் கொல்லுலைக் கூடமாய் மாற்றிட
லானது.

மணிவ : ஓ! கோ! அழிம்பன்! பழியொடு
மானமில் புலைவினை மாக்களிற் கொலைவினை
கொண்டனன் கொல்லோ! குவலய மதனிற்
கண்டிடும் பல்லுயிர் காட்சிசா லுடம்பிற்
பொருந்திடு மருமையும், புரையறு முதல்வன்
திருந்திட அவற்றினைச் செலுத்து முறையும்,
மறத்தொழி லதனுன் மாற்றுமோ ருயிரை
அறத்தொழி லதனு ளுக்கற் கியலா
மாந்தர் நிலையு மடயன் கற்ற
தீந்தமிழ் மொழிதான் றெரித்திட விலையோ?
அரண்மனைத் தோற்றமா யமைந்தவிச் சிறைபின்
பரண்மிகு கொல்லுலைக் கூடப் பண்பாய்
மாறுவ தெங்ஙனே? வளர்கவிப் புலவீர்!

புகழேந்தி : வீறுடை மன்னர்கண் மெச்சிடு மமைச்சே!
கோட்டை யரணும். அதனைக் கொல்லும்
கூடம் மனையாம். ஆகலிற் கூத்தன்
நெஞ்சக் கோட்டையை நீறதாப் போக்கும்
தஞ்சமா மிச்சிறை தகுமரண் மனையாம்.

மணிவ: செஞ்சொற் புலவீர்! செப்பிய தொவ்வும்.
வஞ்சகன் கோட்டை மடிந்திட னலமே.

புகழேந்தி : நலமொன் றேயோ? நற்பே றுலகை
ஆட்டு மலகையை யோட்டிய தாமே.
ஆகவே, நீவிர், அதற்கின்றி யமையாக்
கருவிக ளுதவக் காவற் றலைவனும்
பெரியோற் குணர்த்துதிர்; பேரற மணியே!

மணிவ : அங்ஙனஞ் செய்வல்; அகத்தியம். அரசனும்
திங்கணொன் கிற்குட் டிரும்புவன். அவன்முன்
கவிக்களிற் றினையே புலிக்களி றாக்கி,
மாவுத்த னொருவனை மத்தகத் தேற்றிப்
பூவுல கறியப் பொன்னம் பாரிவைத்
துலாப்புறப் படுவம். “ஓங்குசீர் மிகுந்த
கலைமகள் வாழி! கவின்புக ழேந்தி,”
என்றே வாழ்த்துவம்.

புகழேந்தி : இறைவனி னருளால்
நன்றே யாற்றுவம்; நானில மகிழவே.

மணிவ : ஈவதை விலக்கி யிருஞ்சிறை யிட்டதூர்த்
தேவதை யாகிய கூத்தன் செயற்குக்
கூலியே கொடுப்பம். கொடுமையே! சிறையாம்
வேலியிற் பட்ட மேதைக ளெழுவரும்
யாண்டுளர்? அவர்களை யீண்டிட வேண்டினன்.

புகழேந்தி : படுக்கை யறையிற் றுயின்றனர்; இடுக்கண்
மிகுதியும் பட்டனர்; தகுதியா மிவர்கள்
உணவினைக் கண்டே நெடுநா ளொழிந்தன,
எனநினைக் கின்றேன். எழுமின்! சென்று,
காண்குவம்; இரக்கக் காட்சி சிறக்கவே.

(இருவரும் போக)

(காட்சி முடிகிறது)

இரண்டாவது அங்கம்

ஐந்தாங் காட்சி

இடம் : சோணாட்டுச் சிறைக்கூடத்தின் மற்றொரு சார்.

நடர் : புகழேந்தி, ஆறுமுகவேளான், கருப்பனாசாரி, கண்ணன், வெள்ளையனாசாரி, நல்லான், பெருமாள் பிள்ளை, அங்கணனாசாரி.

காலம் : பிற்பகல்.

(ஆறுமுகவேளான் முதலிய எழுவரும் அடக்கமா யொருபுறம் அமர்ந்திருக்க, அவர்கட்கு முன்னே புகழேந்தி யொரு முக்காலியில் வீற்றிருக்க).

(நேரிசை யாசிரியப்பா)

புகழேந்தி :

மாணவ மணிகாள் ! சென்றநன் மதியிற்
காணவே விளக்கிய கவின்மொழி வகையாம்
இயற்சொ றிரிசொ லியல்பாய் வடசொல்
திசைச்சொற் பகுமொழி பகாமொழி திறலார்
பெயர்ச்சொல் வினைச்சொற் பிறங்கு மிடைச் சொல்
உரிச்சொ லிடுகுறி காரண முயர்வாம்
குறிப்புட னாக்க மரபுகு ழூஉக்குறி
இலக்கண முடைய திலக்கணப் போலி
மரூஉவோ டிடக்க ரடக்கன் மங்கலம்
தொகைதொடர் புணர்ச்சி முதலாந் தொல்லியல்,
அகம்புற மாகு மப்பொருண் முறையும்
விரித்துமே யுரைத்தனன் ; விளங்கிட,
தரித்தனி ரன்றே ? தண்ணொளி மிகவே. (க)

ஆறுமுக :

தரித்தோம், நன்றாய்ச் செரித்துங் கொண்டோம்.
அமிழ்தினை நிகர்த்தநந் தமிழ்மொழி யதனிற்

சொற்களொவ் வொன்றின் றாய்மையுந்
தோற்றமும்
கற்கண் டினையுறழ் காட்சியுஞ் சுவையும்,
புறக்கா ழுடையன புல்லென மொழிந்து
புல்லறி வெனுந்தொடர் புலனுற வைத்தலும்,
கல்வி யெனுமொழி கருதிய பொருளைக்
கண்டிடு முறையை விண்டிட நடத்திச்
செலுத்திடு சீர்மையுந் தெளிந்தனம்;
உலுத்தர்கட் ககப்படா வொருபெரு மணியே!
(௨)

பெருமா: உறுதிப் பொருளா மொருபெரு நான்கினை
அறுதியிட் டுரைத்த வகப்பொருள் புறப்பொருட்
போக்கினை யுணர்ந்தே பொன்றுதல்
நீக்கினம்; நேர்மையி னெடுமா லனையீர்! (௩)

அங்கணன்: அன்பே சிவமென வறிந்தநம் பெரியார்
அன்பினை முறையே, அழகாய், நிலையாய்
இன்பினோ டெய்த வியற்றிய வகப்பொருட்
டுறைகளை யடியேன் றுவன்றிய வேழு
பிறப்பினு மறவேன்; பேதுறும்
இறப்பினு மறவா தென்னுடை நெஞ்சே. (௪)

கண்ணன்: கந்தழி நிலையுங் கவினுமப் பெயர்தான்
வந்திடு முறையு மனக்கண்
தந்தென் பெயரைத் தகுதியாக் கினவே. (௫)

புகழேந்தி: தமிழ்த்தா யினையே சார்ந்தவர் கண்ணிணை
மட்டுமோ பெறுவர்? மற்றெலாப் பொறிபுலன்
கட்டுரை யாகுங் கவின்பெறு முடலுடன்
பெற்றிடல் தகவே. பேரறி வுடையீர்!
சற்றெனை நோக்குதிர்! சார்ந்திடு பாவியன்
முற்று மொழிகுவன். மொழிந்தன வெல்லாம்
உயிராம். பாவிய லுடலாம். உடலின்
கூட்டங் கிடையா வாவி கூரறி
வோட்ட மின்றி யொள்ளிருட் பிழம்பிற்

கிடப்பது போன்று, பாவியன் முறையே
நடப்பது தெரியா நானில மாந்தர்
மடத்தனத் தாலே மயங்கியே நலிவர்.
பாவிய றெரிந்தும் பாடுதற் கியலாப்
புலவர்க ணிலைமை விலையிலாப் பதராம்.
“ காரிகை கற்றுக் கவிபா டுவதிலும்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்(று),” எனத்
தோன்றிய பழமொழி, ‘ வறிதே யாப்பியல்
கற்றதல் வலுவான் முற்றும் பாடுவோம்,’
என்றே கருதி, நன்றே வருந்தி
இளைத்தவர் தமக்காம். ஆதலின், நீவிர்
சளைத்திடு முன்னம், பாவியற் கற்று,
கூறுவன் பாச்செயு முறையைக் குறிப்பாய்.
பாக்களி னுறுப்புப் பகுப்போ ராறும்.
அவற்றுண் முதல தெழுத்தாம். அவ்வெழுத்
துயிர்பனி ரண்டாம்; மெய்பதி னெட்டாம்.
உயிருட் குறுகிய வோசை கொண்டன
குறிலா மைந்தும் ; நெடிய வோசை
கொண்டவோ ரேழுங் குறைவிலா நெடிலாம்.
இவைமெய் பதினெட் டினிலும் பரவத்
தோன்று முயிர்மெய். தொகுமுயி ரைந்தும்
ஏன்றிடு மெய்யாற் றொண்ணூ றெண்ணம்.
அவற்றொடு குறிலுயி ரைந்தினைச் சேர்க்கத்
தொண்ணூற் றைந்தாங் குறிலெனத்
தொகுப்பீர்.
நெடிலா மேழு மவற்று னிறைந்த
நெடி லுயிர் மெய்யவை நூறுதலை யிட்ட
இருபத் தாறு மிணைந்திடத் தோன்றும்
ஒருநூற்று முப்பத் தொருமூன் றினையும்
நெடிலெனக் கொள்வீர். நின்ற விரண்டாம்
உறுப்பினை யோதுவன் ; கருத்தினி லுணர்வீர்.
அசையது, அவ்வெழுத் தொன்றும் பலவும்
இசைவதாற் றோன்றும். குறிலும் நெடிலும்
தனித்துநின் றேனும், தமராம் மெய்யுடன்,

சனித்துநின் றேனுந் தழுவுத னேரசை;
‘வாழி, வேன்மன்,’ எனவரு தொடரிற்
பாழியந் தோளீர்! பகர்குறி னெடிலும்
தனித்துமொற் றடுத்துந் தயங்கிடல் காண்மின்!
இனித்திடு நிரையசை யிணைக்குறில் குறினெடில்
வாளா வரினும், வளர்மெய் யுடனே
கேளாய்த் தொடரினுங் கிடைக்குமற் றதுவே.
‘குகநமோ, மயிற்படாம்,’ எனத்திகழ் மொழிகளில்
அகவிய குறிலிணை, குறினெடி லவைநனி
தாமே நின்றும், தகைவிலா வொற்றுடன்
ஆமா றடைந்து மசைதலை நோக்குமின்!
நந்நான்கு வழியாய் நடக்குமிவ் வீரசை
ஒன்றும் பலவு மொருங்கி யிசைந்தே
ஒத்துமு டிந்த வோசையாஞ் சீர்பெற
நிற்பது சீராம்; நேரசை தனித்து
நின்றிடி னாளாம்; நிரையசை மலராம்.
இவ்விரு சீரு மிணையுறு வெண்பா
இறுதியிற் பெரும்பா லிற்றுச் சிறுபால்
அம்போ தரங்கக் கலிப்பா வகத்தும்
வஞ்சிப் பாவினம் மருவியும் வருமே.
சொற்றவவ் விரண்டசை தம்முளொன் றேடொன்
றுற்றிடத் தம்முட் டாமும் பிறவுங்
கலத்தலா னன்குசீர் காணலாம். அவற்றை
இயற்சீ ரெனவே இயம்புவர் பெரியர்.
நேர்நேர், தேமா, நீள்வேல்; நிரைநேர்,
புளிமா, நிணவேல்; புகரில் நிரைநிரை,
கருவிளம், திருத்தணி; கவினர் நேர்நிரை,
கூவிளம், வான்மயில் எனவே கூறிய
முறையே யியற்சீர்க் காட்டினே முன்னுவிர்
இச்சீர் நான்கு மியற்பா வாகிய
அகவ லகத்தே யகவியே நிற்றலான்
அகவற் சீரென வறையவும் படுமே.

இயற்சீர் நான்கி னிறுதியி னேரசை
புணர்வதால், நேர்நேர் நேர்,தே மாங்காய்,
கந்தன் வேல் ; நிரை நேர்நேர், புளிமாங்
காய், கடி மாவேல் ; நிரைநிரை நேர், கரு
விளங்காய், கடிமயின் மேல் ; நேர் நிரைநேர்,
கூவிளங் காய், வேல் மயிலான் ; குறித்தவிம்
மூவசைச் சீர்க ளுன்கு முதற்கண்
கண்டிடு வெண்பாக் கவினுரிச் சீராம் ;
காய்ச்சீர், வெண்சீ ரென்றுங் கழறுவர்.
கனிச்சீர், பொதுச்சீ ரெனவே கழறும்
சீர்களைப் பின்னர்ச் செப்புவல். சீருறு
தளையவை யேழாம். தக்க அவற்றினில்
இரண்டினை விளக்குவல். இயற்சீர் வெண்டளை
வெண்சீர் வெண்டளை யெனவவை விளங்கும்.
வெண்பா வினிலே விளக்கிமுற் கூறிய
ஓரசைச் சீரு மீரசைச் சீரும்
மூவசைச் சீரு முன்னுற வருமே.
வருங்கா லொன்றினே டொன்று மயங்கும்
முறையே தளையாம். தேமா, புளிமாச்
சீர்முனம் நிரையசை முதலிற் சேரும்
சீரும், கூவிளம், கருவிளச் சீர்முனம்
நேரசை முதலிற் பொருந்துஞ் சீரும்
புணரின், இயற்சீர் வெண்டளை புணரும்.
வெண்சீர் முன்னர், நேரசை முதற்கொள்
சீர்வரின், வெண்சீர் வெண்டளை சிறப்பே.
ஐந்தா முறுப்படி யாமே. அவ்வடி
ஐந்து வகையதாய் முடியும். அவற்றுள்,
வளமார் சிந்தடி யளவடி மதித்திடின்,
முச்சீர், நாற்சீர் கொண்டிடு முறையே.
ஆறு முறுப்பி னகலம் விரிக்கின்.
ஏழா றென்று மிணையுறு தொடையே.
அடியினுஞ் சீரினு முதலெழுத் தொன்றும்
மோனைத் தொடையும், முதலெழுத் தளவொத்
திரண்டா மெழுத்தொன் றெதுகைத் தொடையும்

தெரிமின். மற்றைய பின்னர்த் தெரிப்பல்.
பாவின் வகையைப் பகரின், நான்கே
ஆமவை முதற்க ணடுப்பது வெண்பா.
குறளெனும் வெண்பா, இருகுற ணேரிசை
வெண்பா, இன்னிசை, சிந்தியல், பஃறொடை
வெண்பா வெனவே விளங்குமற் றதுவே.
விளங்கிடு மவற்றுள், வெண்குறண் முதற்கண்
நாற்சீர் கொண்ட அளவடி கொண்டு,
முச்சீர்ச் சிந்தடி பின்னர்ப் பெற்றே
ஓரசைச் சீரினு லிறுதி யொடுங்கும்;
முன்னர்க் கூறிய வியற்சீர் வெண்டளை,
வெண்சீர் வெண்டளை கொண்டிடல் வேண்டும்.
மோனைத் தொடையா முதற்சீர் மூன்றுஞ்
சீர்முன் னெழுத்துத் திகழ்ந்திட வொத்து
முடிவதும், அடிதொறு முன்னெழுத் தளவொத்
திரண்டா மெழுத்தொன் றெதுகை பெறுதலும்
இரண்டடி தொடுக்குந் தொடையாம். இவற்றை
மனனுறக் கொண்டு மற்றைநாட் காலை
தினகர னுதிக்குமுன் றுயிலது தெளிந்து
வள்ளுவ ரருளிய வள்ளுவப் பயனில்,
நற்றவப் பயனு நலமிகு தொடர்களில்,
“ மலர்மிசை யேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்,” என மொழியுந்
தொடரினைப் பன்முறை துகளற வோதி,
நடையுற நாவினி னன்குறப் பயின்று,
கூறிய விதியெலாங் கொண்டிடல் கண்டு,
வீறிய நாவின் விளங்கிய விசைகொடு
மாற்றியற் குறளினை வழுத்திட
ஊற்றிய னீரினை யொப்பவர் திடமே. (கூ)

நல்லான் : கடன்மடை திறந்தெனக் கழறிய விவையெலாம்
திடமுட னறிந்தனம். செப்பிய படியே
செய்குவோம். சேண்பொழு தின்று சிறியேம்
உய்குதற் குதவிய வொருபெருந் திருவே!

புகழேந்தி :	ஆமாம், நாளை யறைகுவன் மற்றவை.
ஏமமாய்க் கூறின விதயத் திருத்துமின்!
வாமமாங் கலைமகள் வளரருள்
நாமனை வருங்கொள நாட்டினிற் றானே.	(௭)

(யாவரும் போக)

(காட்சி முடிகிறது)

(இரண்டாவது அங்கம் முற்றும்)

மூன்றாவது அங்கம்

முதற் காட்சி

இடம்: சோணாட்டுச் சிறைச்சாலைக்குப் பக்கத்துத் தெரு.

நடர்: குலோத்துங்கன், ஒட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தி, நகைமொழிநாவலன், ஆறுமுகவேளான் முதலிய மாணவர்கள், மந்திரி, படைத்தலைவர், யாழ்ப்பாணர் முதலியோர்.

காலம்: மாலை.

(புகழேந்தியும் மாணவர்களும் சிறைக்கூட மேற்றளத்தினின்றும் வேடிக்கை பார்க்க)

(நிலைமண்டில வாசிரியப்பா)

புகழேந்தி:

அன்ன மாவி னன்னிலை கைக்கொள்
மாணவ மதித்திறம் வாய்த்தநற் புலவீர்!
காணவே யெளிதாய்க் கவினுறத் தோன்றுமித்
தெருவழி நோக்குமின்! தேமா விலையொடு
வாழைநற் கமுகின் வாங்கிய குலையும்
செவ்விள நீருந் திகழ்கடிப் பகையும்
கூந்தற் பனையின் கொழுவிய பாளையும்
தூக்கிய தோரண வாயிலும், பூரண
கும்பமும், பாலிகை கொண்டநல் லெழிலும்,
செம்பொன் ஞேவெனத் திகைக்குநற்
றாண்களும்
உம்பரோ விவரென வம்புறு மாந்தர்
சிந்தையின் மகிழ்ச்சியைத் தேக்கிடு முகமும்,
சந்தார் மடந்தையர் தவளநன் னகையும்,
மாநில மக்கள் வாழ்க்கைக் குயிராம்
மேனில மன்னன் விடுத்தநற் றுணையெனும்
நானிலக் காவலன் நற்பெருந் தெய்வம்
தமக்கெனக் கொண்ட தணிவிலா வரச

அன்பினை வானக மடைந்தநன் மதியென
இன்புற விளக்கு மெழிலினை யுணர்மின் !

பெருமா : கற்றோர் மணியே ! கவின்குலோத் துங்க
நற்றவ வள்ளல், நாட்பல இரவியின்
றேற்ற மின்றித் துலங்குநன் மதியும்
ஆற்றவுஞ் செறிந்த வழிபெரு முகிலான்
மறைந்திட மிகுபனி வாடைபன் னோய்கள்
அடைந்திடத் துன்பத் தமிழ்ந்திடு மக்களை
நிகர்த்தவிவ் வுறையூர் நெடுநகர் மக்களின்
அகத்தினிற் பருதியா யமர்ந்துநற் காட்சி
கொடுக்குமிவ் வேளையிக் குதூகல மாட்சி.
யடுப்பது தகவே.

(ஒட்டக்கூத்தர், கம்பர், வேலையர் முதலிய மந்திரி பிர தானிகள் குதிரை மீதேறிச் சூழ்ந்துவர, குலோத்துங்கன் யானைமீது பவனிவர)

அங்கணனு : அஃதோ ! காண்மின் !
உதயமா கிரியிடை யுதித்திடு கதிரென
மதமா மிசையே வதிதரு துங்கன்
பச்சைப் புரவிசூழ் பவனியின் சிறப்பை.

(குறள்வெண் செந்துறை)

யாழ்ப்பாணர் :

க. கார்மா மிசையே தோன்றிடுநற்
கவினுர் பருதி தனைநிகர்த்துப்
போர்மா வயங்கக் கைம்மாவிற்
பொலியுந் துங்கன் சிறந்திடவே.

உ. கிரி யெடுத்து வான்புக்குச்
செழித்த கற்ப தருவினொடு
மகியே சிறக்கச் சாதமெனும்
வல்லி கொணர்ந்த கண்ணனையே,

ங. நிகர்த்துத் தென்னு டேபுகுந்து
நிகரில் கற்ப வல்லியெனும்

அகத்தைக் கொணர்ந்த பெருவாழ்வே!
அழகாய் வாழி! வாழியவே!

௪. முந்நா டதனிற் சிறந்திடுநன்
முளரிப் பொய்கை நிறைபதியாம்
நன்னாட் டதிபா! நாயகமே!
நாளும் வாழி! வாழியவே!

௫. சோழ வளமா நாடதுவே
சோறுடைத் தென்று துதிபுலவர்
வாழும் பெருமா நாட்டிறையே!
வாழி! நாளும் வாழியவே!

ஆறுமுக: ஆ! கா! அரசனு மிதோவரு கணைந்தனன்.
மாகா திபர்நிலை வாய்த்தநாம், செவ்விதே
மேற்றளத் தமர்ந்து வீரனின் முகத்தருட்
காற்றது வீசக் காணும் பெருமை
அமரர் விண்ணகத் தமர்ந்தும் பொருந்தார்.

(குலோத்துங்கன் பவனியோடு சிறைச்சாலைக்குப் பக்கத்தில் வர)

வெள்ளைய: பொருந்தார், பொருந்தார், பொருந்தவே பொருந்தார்.
மருந்தினை யனையநம் மன்னனு நெருங்கினன்.
காண்மின், முகத்தின் களையினை! நிறைமதி
நாண்மீன் யாவும் நலனுறச் சேரினும்,
ஒவ்வா இந்த வொளியினைச் சிறிதும்.

புகழேந்தியும், மாணவர்களும்:
(குலோத்துங்கனை நோக்கி)
வாழி! குலோத்துங்க வள்ளால்! வாழி!
ஊழிக் காலமிவ் வொண்மகிழ் சிறந்தே.

குலோத்துங்கன்: (ஒட்டக்கூத்தரை நோக்கி)
முத்தமிழ் மதம்பொழி மத்தகக் களிறே!
இத்தலத் திருக்குமிவ் வரும்பெருஞ் சீரியர்
வெண்பா வரிப்புலி வேங்கையா மன்றோ?

கூத்தர்: கண்பா னல்கள்சூழ் கவின்மார் புடையாய்!
வேங்கை வரிப்புலியானே. அவன்கான்
பாங்கர்வாழ் புல்வாய்ப் பான்மைய ஞவன்.

(கலித்துறை)

மானிற்கு மோவிந்த வாளரி வேங்கைமுன்? வற்றிச்செத்த
கானிற்கு மோவிவ் வெரியுந் தணன்முன்? கனைகடலின்
மீனிற்கு மோவிந்த வெங்கட் சுறுமுனம்? வீசுபனி
தானிற்கு மோவிக் கதிரவன் றோற்றத்திற் றார்மன்னனே?

புகழேந்தி: புகழா மலையிற் பொருந்திய துங்க!
இகழ்வா யிசைத்தவிக் கவிக்குத் தரமாய்ப்
பாடுதல் வேண்டினன். பாடிய பஞ்சைப்
பாட்டினை யொட்டிப் பாடவோ? வெட்டிப்
பாடவோ? செப்பாய்!

குலோத்: பல்விதப் புலமைசால்
திருவினை நிகர்ப்போய்! திகழ்ந்தநங் குருவும்
கருவினின் றெடுத்துக் கவினுற வளர்த்த
தந்தையு மாய மைந்தமை புலவர்
தந்தவாய் மொழியினை வெட்டிடத் தரியேன்.
ஒட்டிட வேண்டினன், உயர்கவிப் புலவீர்!

புகழேந்தி: அட்டியில் லாமலே யங்ஙனம் புரிவல்.

(கலித்துறை)

மானவ ஞனந்த வாளரி வேங்கையும்; வற்றிச்செத்த
கானவ ஞனவ் வெரியுந் தணலாம்; கனைகடலின்
மீனவ ஞனந்த வெங்கட் சுறவினம்; வீசுபனி
தானவ ஞனக் கதிரவன் றோற்றநற் றார்மன்னனே!

நகைமோ: ஓ! கோ! இஃதோ வொட்டிடல்! அட்டையின்
ஒட்டு மிதனை யொவ்வா தாயினும்,
செருமுகத் தெவரே கிளையினைத் தெரிவர்?

குலோத்: திருமகட் கிளைய மருமக ளாகிய
செந்தமிழ்ச் செல்வியின் றிருநோக் குடைய

மைந்தர்நீ ரிருவிரு மிங்ஙன மாறிடல்
இழுக்கே யாகும்;

கம்பர் : இணையறு தமிழ்க்கே.

(பவனியப்பாற் செல்ல)

கண்ணன் : (புகழேந்தியை நோக்கி)

அழுக்கினை யகற்றி யைந்தோ டைந்தரை
மாற்றுப் பொன்னென வெங்களை மாற்றிய
ஆற்றலிற் பெரியீர்! அறிவிலாக் கூத்தனோ
டின்றே நாட்போ ரியக்கத் தொடங்கி
நன்றே வெற்றியு நமதாய்ப் பெற்றோம்.

புகழேந்தி : ஆயினும், இதுநா மடைவதி லொருதுளி.
தாயினும் பெரியதாய்க் கூத்தனைத் தழுவும்
அரசன தன்பினை யுணர்மின்! ஆகலின்,
அரசன் முன்பி லணைந்திடு காலம்
நேரிடின், யாவரும் நிமிர்ந்துநம் மொழியால்
வீறிடின், மீள்வம்.

கருப்பணு : மெய்யே, யெம்முயிர்
போயினும் பின்னிடோம், புலவர் மணியே!

(புகழேந்தி முதலோர் மேற்றளத்தைவிட் டிறங்க)

(காட்சி முடிகிறது.)

மூன்ருவது அங்கம்

இரண்டாங் காட்சி

இடம் : சோழன் நவராத்திரிக் கொலுக் கூடம்.

நடர் : குலோத்துங்கன், ஒட்டக்கூத்தர், கம்பர், வேலையர், மணிவண்ணன், வீரத்தேவன், நகைமொழி நாவலன், ஆறுமுகவேளான், கருப்பணுசாரி, வெள்ளையணுசாரி, கண்ணன், நல்லான், பெருமாள்பிள்ளை, அங்கணுசாரி, படைத்தலைவர் முதலியோர்.

காலம் : முற்பகல்.

(குலோத்துங்கன் முதலியோர் கொலுவிருக்க)

(நேரிசை யாசிரியப்பா)

குலோத் :
அறனறிந் தான்றமைந்த சொல்லுடை யமைச்சே!
திறனறிந் தரசிய லீரிரு திங்கள்
நல்லா ருக நடந்ததோ? மாமியும்
சொல்லின் கிழத்தி மருகியுந் துகளற
ஒன்ருய் வாழ்ந்த வொருபெரும் புதுமை
நன்ருய் நிகழ்ந்ததோ, நம்முடை நாட்டிடை?

வேலையர் :
ஆமாம், கல்வியு மரசுங் கூடிடின்,
ஏம முறுதன வெவையே? நாம
வைவே லரசே!

நகைமோ :
வையக மதனில்
ஒட்டிப் பாட லிதுவே. உயர்வாம்
திட்டினைப் பெய்தே யொட்டினே னென்று
வெண்பாப் புலியின் வெள்ளறி வுதவா.

(மணிவண்ணனை நோக்கி)

கண்போற் பெரியீர்! கண்டதைக் கூறலும்
நீங்காம். சிரிப்பினும், செப்புவர் பழியே.

மணிவ : ஆயின், இனிநீர், அழுமொழி நாவலர்
ஆவீர் போலும்.

கம்பர் : (சிரிப்புடன்)

ஆயின், இவர்பணி
மாற்றற் கெவரே வருகுவர்? அழுகை
சாற்றற் கியலாச் சங்கட மன்றோ?

குலோத் : (புன்னகையுடன்)

வருகுவர், பாண்டிய மன்ன னவையிற்
பெருகுவெல் வாயரென் றொருநற் பெரியார்
உள்ளார். அவர்தம் மொழிவெல் வாயாற்
கள்ளார் செந்தா மரையாள் கலக்கப்
பெற்றவர்; பேசத் தொடங்கின லெவருங்
குற்றங் காணு மொழிகளாற் குட்டுவர்.

நகைமோ : ஆ! கா! அதுசரி, எனையழு மொழியின்
நாவல னுக்கிய நண்பர்கள் பலரும்
மொழிகளாற் குட்டுண முரணிலா வழுகைக்
கழிகளின் மூழ்கக் காணுவ னன்றோ?
" மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்,
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு," என அறைந்த
பெரியார் மதியிற் பெரியா ரன்றோ?

குலோத் : போதும், நாவல! புகழ்மிகு நம்மவை
தொடங்கிய நாளினை மடம்பெறு மொழிகள்
இடம்பெற விட்டிடா தெழிலாய் நடத்துதும்.

(கூத்தரை நோக்கி)

நல்லா சிரியரே! நான்குநன் மதிகளாய்ப்
பொல்லா அரசப் பொறுப்பினை விடுத்து,
பாண்டிமா நாட்டிற் பல்விதச் செழிப்பில்
ஈண்டிநம் பதியும், இருங்குடி மக்களும்,
மக்களின் கண்ணென வளருநம் மரசும்,
தொக்கநங் கொலுவும், தொல்கவிப் புலவரின்
வாயுறை வாழ்த்து வளர்செவி யறிவுறாஉ

ஆயபன் மொழிகளும், அரியநங் காட்சியும்
வறிதே விடுத்து மயங்கிய பிழையைச்
சிறிதே யாகத் தெளிந்திட வேண்டினன்.

கூத்தர்: அன்பினின் விளைந்த இன்புடை யரசே!
பொல்லா வரசப் பொறுப்ப தெனக்கு
நல்லா றுக நடந்துமே நாவலர்
எவர்க்குங் கிட்டொணாப் பெருமையை யீந்தது.
எவரே புவிக்குங் கவிக்கு மரசாய்
வாய்த்தது? செப்பீர்! வருங்கா லத்திலும்
வாய்க்குமோ விப்புகழ் மாந்தர்க டமக்கே?

குலோத்: "மன்னனிற் கற்றோன் மாபெருஞ் சிறப்பினன்,"
என்னலை மறந்து பேசுவ தேதிது!
அரச விருப்ப மகத்திடைப் புகுந்தே
உறைந்தது போலும்! ஓ! கோ! இன்று
நவராத் திரிவிழா நாண்முத லன்றே?
நவமாம் புலவர்க ணற்பலாக் கனியில்
ஈயென மொய்க்குந மிருங்கொலு
நோயென நுடங்கு நுட்பமி யாதோ? (க)

(நிலைமண்டில வாசிரியப்பா)

மணிவ: மருதப் பணைசூழ் மண்டல மாளும்
பருதியே! கவிக்கும் புவிக்கும் பாலனும்
ஒட்டக் கூத்தர்த மொருபெரு மாட்சியில்
மட்டப் புலவரின் வம்பினை மாற்ற
வேண்டிச் சிலரை வெறுஞ்சிறை யிட்டார்.
அதனால், உண்மை யரும்பெரும் புலவர்கள்
விதன மிகுந்தே வியர்த்தனர் போலும்.

குலோத்: இதனால், விதனமேன்? இரும்பெரும் புலவரிற்
போலியைப் போக்கினா லன்றோ வாலியர்
சித்திரைத் திங்களைப் போன்றே திகழ்வர்?

கூத்தர்: அறிவிற் பெரியோய்! அதனோ டின்னும்
ஒருவிண் ணப்பம். ஒன்று மறியாப்

போலிப் புலவரைச் சிறையகம் புகுத்தன்
மட்டும் போதா. மகாநவ ராத்திரி
விட்டுக் களிக்கும் விழவினி னந்நகர்
ராஜரா ஜேச்வரி நற்றிரு முன்னர்க்
கொடுபோய் வாளாற் கொலைபுரி விக்க
வேண்டுவன். அங்ஙனம் விதிப்பின், எவரும்
பூண்டிடார், புலவரின் புகழுடை யதனை.
இதனைக் கருதி யன்றே தமிழ்மறை
கொலையிற் கொடியரை வேந்த னொறுத்தல்
களையினைப் பைங்கூழ் கண்டுவிட் டகற்றல்
என்றே பகர்ந்தது, நன்றே யறிவாய் !

குலோத் : ஆமாம், அதனை ஆய்வது நேரிதே.
சேமம் புகுந்தா ரெத்தனை பேரவர் ?
நாமம் முதலிய யா ?அவை நவில்வீர் !

வேலையர் : எழுவர். அவர்களி னிலச்சினை யமைந்த
முழுமுடங் கல்லிதோ! காண்க! எம் முன்னவா !
(ஓர் ஓலை நறுக்கிணைக் கொடுக்க)

குலோத் : (வாங்கிப் பார்த்துக் கொண்டே)
என்னே ! என்னே ! இக்கொடுங் காலம் !
வண்ணான் ! தச்சன் ! மயிர்வினை ஞன்முதற்
கருமான் ! குசவனுங் கடையரு மிங்ஙனம்
கருதினர் கொல்லோ !

நகைமோ : கருதின தொன்றோ ?
கச்சையும் வரிந்து, கட்டினர் போர்க்கு.

கூத்தர் : ஆமாம், அரசே ! அரும்புகழ்ப் புலவர்
'நாமாம்,' என்று நவின்றுமுன் வரவும்
வெட்கினர் மிகநனி. விளங்குமுன் னாழித்
தமிழ்ச்சங் கம்போற் றழைத்தநின் வேத்தவை
அமிழ்துறழ் மதிபோ யகன்றநல் லிரவெனக்
காணுதற் கிதுவே காரணம்.

குலோத் : ஓ! கோ!
அப்படி யாயின், அதனையிப் பொழுதே
செப்பஞ் செய்குவம். சேவகா! சிறையினில்
வதியும் போலிப் புலவர்தம் வகையினை
விதியே முறையாய், விளங்கிட வொருவர்பின்
ஒருவராய் நமதவை யுற்றிடச் செய்வாய்!

வீரத் : கட்டளைப் படியே.

(செல்ல)

கம்பர் : (அரசனை நோக்கி)
கார்போ னுடொறும்
திட்டமாய்ப் பொருண்மழை தெளித்திடு வள்ளால்!
இம்மைச் செல்வ மிருவகைப் படுமவை
செம்மை யுறவே சேர்ந்திடப் படுவோர்
மேற்பால் கீழ்ப்பா லாயினும், வேற்றுமை
ஏற்கார் புவியோர். ஆகலின், இன்றுநீ
வருவோர் பாலினை மறந்துமற் றவரின்
அருமையை யுணர்தலும், ஆன்றவ ரென்று
நடுநிலை கோடா நன்மையி னின்றே
உயர்நிலை காண்பார்ப் பரிசுபெற் றுய்தலும்
புரிதர வேண்டினன், புகழ்சா லரசே!

(ஆறுமுகவேளான் தோன்றி அரசனை வணங்கி, கூத்தரை மிடுக்குடன் பார்த்து நிற்க)

கூத்தர் : (இறுமாப்புடன்)

(கலிவிருத்தம்)

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவ னாரடா?

ஆறுமுக : (பெருமிதத்துடன்)
கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானை யுஞ்செயு மங்குசப் பையல்யான்.

நகைமோ: ஆ ! கா ! நேர்த்தி ! நேர்த்தி ! ஆ ! கா !
பாகினை யடர்த்துப் பன்மதம் பொழியும்
கரியினை யடர்ப்பது கருதுமங் குசமோ ?
வரியிரண் டாலே மாட்டின னன்றாய் ;
விரிசெவி யிரண்டும் வெடிக்கவங் குசப்பயல்.

குலோத்: ஓ ! கோ ! மும்மத மொழுகுங் கரிக்குப்
பாகின் கைவாழ் பாரவங் குசமோ ?

(சேவகனை நோக்கி)

சரிதான் ! சேவக ! சடுதியி லிவரைப்
பரிவுடன் கொடுபோய்ப் பகர்கரு வூலத்
தலைவர்பாற் சேர்த்து, தக்கநற் பரிசுகள்
பலவுங் கொடுக்கப் பகர்ந்துமற் றொருவரை
அழைத்துவா !

வீரத் : ஆணை.

(குயவனோடு போக)

நகைமோ : ஆ ! கா ! இவர்முனம்
அடிமுடி தேடிய தடியடி விடுத்து,
வடிமிகு மங்குச மாற்றமுற் றனரோ !

(கண்ணன் தோன்றி வணங்கி நிற்க)

கூத்தர் : (கடுமையோடு)

(கலித்துறை)

விண்பட்ட கொக்குவல் லூறுகண் டன்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குநின் றாய்பொட்டை யாய்புகலாய்.

கண்ணன் : (மிடுக்குடன்)

கண்பொட்டை யாயினு மம்பட்ட ணன்கவி வாணர் முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவனே.

(கூத்தர் திடுக்கிடல்)

நகைமோ : அந்தோ ! அந்தோ ! அடியிவை யிரண்டும்
நொந்திடச் செய்யு நுட்பமா மடியே.

குலோத் : (வியப்புடன்)
திடுக்கிடப் பாடுந் திறலுடை யீரோ ?

(சேவகனை நோக்கி)

அடுத்திடு வீர ! இவரையு மழைத்துக்
கருவூ லத்தையே காட்டிடு ! மற்றவர்
' வருக !' எனவே வழங்கிடு மாற்றம்.

(கண்ணன் போக, கருப்பஞசாரி தோன்றி அரசனை வணங்க)

கூத்தர் : (அமைதியாக)
ஐய !எம் மவையி லணைந்தநீ விர்யார் ?

கருப்பஞ : (கிளர்ச்சியுடன்)

(கலித்துறை)

செல்வன் புதல்வன் றிருவேங் கடவன் செகத்குருவாங்
கொல்லன் கவியைக் குறைசொல்லு வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர் முன்னே
அல்லும் பகலு மடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே

(கூத்தர் மனங்குழம்ப)

நகைமோ : என்னே ! என்னே ! இருங்குற டதனாற்
பல்லைப் பிடுங்கலா ? பகர்கொல்ல னன்றோ !
அதனால், கவியிருப் பாணியா யிற்றோ !

குலோத் : கவியிருப் பாணியோ ! கண்டோ நுந்திறம்.

(சேவகனை நோக்கி)

புவிபுகழ் வீரா ! பொருக்கென விவரை
வேண்டும் பரிசுடன் விரைவா யனுப்பு !
மீண்டுமற் றொருவரை விளித்திடு வாயே.

(கருப்பஞசாரிபோக, வெள்ளையஞசாரி தோன்றி அரசனை வணங்க)

கூத்தர் : பெரியோய் ! யாரெனப் பேசுவாய் சிறிதே.

வெள்ளைய : (சினத்துடன்)

(கலித்துறை)

சொன்னசந் தக்கவி யாவருங் கேட்கச் சொல்லுவனியான் ;
இன்னசந் தக்கவி யேதென்ற போதி லெதிர்த்தவரை
வன்னசந் தங்கெட வாயைக் கிழித்திட்டு வாய்ச்சியினாற்
கன்னசந் தங்களி லிக்கவி யாப்பைக் கடாவுவனே.

(கூத்தர் தலை குனிய)

நகைமோ : வாய்ச்சியி னாலே வாயைக் கிழித்துக்
காய்ச்சிடக் கவியாப் பைக்கைக் கொண்டு
கடாவுவ ராமே ! கவின்தச்சுப் பணியின்
திறனெலாஞ் செய்யுளிற் றெருண்டிடச் செய்த
திறமையே திறமை !

குலோத் : (வியப்புடன்)

திகழ்ந்திடு பெரியீர் !
என்னே ! என்னே ! என்னே நும் மிருபொருள் !
நன்னயக் கவிப்பா ! - நற்கவி யாப்பு !
முன்னயக் கவியிருப் பாணியி னிதுவே
சொன்னய முடைய துகளறு மொழியே !

(சேவகனை நோக்கி)

விருப்புடை வீரா ! விளங்கிய இவரும்
கருவூ லத்தைக் கண்டிடச் செய்து
வருவாய், மற்றொரு மாணவர் தம்மொடு.

(தச்சன் போக, நல்லான் தோன்றி வணங்க)

கூத்தர் : தம்பிநீ யாவன் ? சாற்றுவாய், சற்றே.

நல்லான் : (கலித்துறை)

சேலேய் விழிமட வாரிற்செங் காலன்னஞ் சேர்பழனப்
பாலேய் மணவையிற் கூத்தநின் போலியர் பாப்புனைந்த
நூலேய் துகளறத் தூய்தாக்கு நோன்மை நுவல்வதல்லான்
மேலேய் தமிழ்ப்புல வோரென்னை யென்னை விளம்புவதே ?

(கூத்தர்முகஞ் சுளிக்க)

நகைமோ :
கசையடி ! இதுநல கசையடி யாமே.
பசைமிக வுளதிவர் பாடிய பாவில்.
துவைத்த லாகிய தொழிலினைக் கூத்தரின்
கவைத்திட நடுவிற் கண்டோட்டு தொழில்வரும்
ஆடையைத் தூயதா யாக்குநற் றொழிலாய்க்
கூறிய மதித்திறங் கொண்டாடற் பாற்றே.

குலோத் :
நூலெய் துகளற நொறுக்கும் புலவீர் !
பாலெய் நுங்தொழிற் பார்த்து மகிழ்ந்தனம்.
வைப்பக நோக்கிச் செல்லுதிர் ! மற்றவர்
கைப்பக நீங்கிக் காண்க !நம் மவையே.

(நல்லான் போக, அங்கணஞசாரி தோன்றி அரசனை வணங்கி நிற்க,)

கூத்தர் :
எத்துறை வல்லாய் ? இயம்புக ! தெளிவாய்.

அங்கணஞ :
(கலித்துறை)

திகிரிவட் டக்குடைச் செங்கோ லபயன் செழுஞ்சிலம்பிற்
பகுதியொட் டக்கூத்தப் பட்டனை நானப் பணைக்கவியில்
மிகுதியொட் டத்தட்டி விட்டகை யோட்டி லுருக்கிக்குத்திப்
புகுதவொட் டத்தட்டி மேலனு காவணம் போர்செய்வனே.

(கூத்தர்முகம் வெளுக்க)

நகைமோ :
சுட்டித் தட்டித் தட்டா னென்னப்
பட்டார் தாமெனப் பாட்டினிற் கூறி
ஒட்டி லுருக்கிக் குத்துஞ் செயலும்
காட்டிய விவர்திறம் காணுணு வியப்பே.
மறுதொழிற் செய்து மறுவறு கல்வியைப்
பெறுமவர் பெருமையே பிறங்கல் விளக்காம்.
வந்துசெல் லறுவர் நந்திடல் காண்மின் !
மேலுமுன் சங்கம் விளங்கிய புலவர்தம்
வாலுடைப் பெயர்களும் வலியுறச் செயுமே.

குலோத் :
பசுத்தோல் போர்த்த புலியெனப் பாயும்
விசித்திரப் போலிப் புலவர்தஞ் செயலெலாம்
கண்டுநாம் வியப்பே கொண்டனம்.

(சேவகனை நோக்கி)

காவல!
கொண்டுசெல்! இவரையும் கொடுத்திடப் பரிசிலே.

(தட்டான் போக, பெருமாள் பிள்ளை தோன்றி அரசனை வணங்கி, கூத்தரை முறைத்து நோக்கி நிற்க)

கூத்தர்: காப்பியக் கவிஞர்முன் கவல்சிறி தின்றிப்
பார்ப்பனப் புலவனீ பார்த்திடன் முறையோ?

பெருமா: (அரசனை நோக்கி)

(கலித்துறை)

கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர்; கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில; பூதலமேழ்
காக்கின்ற மன்ன! கவியொட்டக் கூத்தனின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிடு பாவலரே.

(கூத்தரை நோக்கி)

புவிக்குங் கவிக்கும் பொருந்திய வரசெனக்
கவிக்கும் பெருமையாங் கவின்மலை வாழ்வீர்!
புவிக்கும் திலகமாம் புகழ்குலோத் துங்கன்
செவிக்கினி மையொடு செப்பிய வண்டப்
பரணியிற் பூவினைப் பகர்நக ராயும்
தரணிசூழ் சக்கிர வாளநற் கிரியைக்
கோட்டையா வதற்குட் கொண்டிடு கடலை
மோட்டிடங் கர்வாழ் மொழிபெருங் கிடங்கா
மேருநன் மலையே விளங்குநற் கொடியாக்
கூறிய நீவிர் கோட்டைக்கு வெளியே
அகழினை யமைக்கு மருமையை யயர்த்தே
இகழினைக் கொண்டதென்? நேமிக் கப்பாற்
பொருந்திய பெரும்புறப் புனலையறி யீரோ?
அருந்திறற் கம்பர் அயோத்தியைச் சிறப்பில்,

(கலிவிருத்தம்)

“நேமி மால்வரை மதிலாக நீள்புறப்
பாம மாகடற் கிடங்காகப் பன்மணி
வாம மாளிகை மலையாக மன்னற்குப்
பூமியு மயோத்திமா நகரம் போலுமே,”

என்பது நம்முடை யீரமி னெஞ்சிற்
புகுந்திலை போலும்!

(கூத்தர் வெட்கித் தலை குனிய)

நகைமோ : புகுந்தது. ஆனாற்
பொருந்திய திலையே. போலிப் புலவர்செய்
கேலிக் கிடமாய்க் கிடைத்தநங் கூத்தர்
நிலையினைக் காண்மின்! விலையிலாச் சூதிற்
பன்முறை தோற்ற பாவியிற் கொடியராய்
வின்முறை வணக்கம் மெத்தவுங் கொண்டார்.

குலோத் : (வெறுப்புடன்)

என்னை, நாவல! யாது கூறினை?
இவர்களோ போலியர்? இவர்களை யடைத்த
செயலே போலியாம். சீ! சீ! இம்முறை
விழலே!

(வேலையரை நோக்கி)

அமைச்சரின் மிக்கோய்; இவர்க்கும்
பரிசில் கொடுத்து, பன்னாள் வறிதே
சிறையகப் பட்ட சிறுமையைத் தீர்த்துச்
செலுத்துவாய்! இத்துடன் கொலுவினைத்
தீர்த்தேன்;
செல்லுவன், அரண்மனை வல்லையின் யானே.

(அரசன் செல்ல, கொலுக் கலைகிறது.)

(காட்சி முடிகிறது)

மூன்றாவது அங்கம்

மூன்றாங் காட்சி

இடம் : சோழன் அரண்மனையில் அந்தப்புரம்.

காலம் : பிற்பகல்.

நடர் : கற்பகவல்லி, வெண்டாமரை, செங்கமலம், மணிவண்ணன்.

(கற்பகவல்லி கூடமொன்றின் நடுவண் சாய்மணையிற் சார்ந்திருக்க, வெண்டாமரை வெண்கவரிவீச, செங்கமலம் வாயிலிற் கைகட்டி நிற்க).

(நிலைமண்டில வாசிரியப்பா)

கற்பக: (மகிழ்வுடன் வெண்டாமரையினை நோக்கி)

கலைமக ளலைமகட் கவினுடை நங்காய்!
மலைமக ளனையநின் மாற்றப் படியே
இருபுறக் காத லிணைந்தது. தலைவரின்
பெருநலச் சிறப்பினைப் பேசிட நாணம்
குறுக்கிடு கின்றது.

வெண்டா : அன்றியும், கொற்றவன்
குறுநகைச் சிறப்பினைக் கூறிட நமது
வெண்பாப் புலியும் மிகநலிந் திடுவர்;
என்றால்,—

கற்பக : அந்தோ! அயர்த்தேன்! இணையறு
குன்றும் கவிக்கு; குவலய மனைத்தும்
ஒன்றாய்த் திரளினு மொவ்வாப் புலமை
வல்லோ ரீண்டுமுன் வந்துள் ளனரே!
என்னே! அவர்தா மென்னைவந் தீண்டு
கண்டன ரில்லை! கண்டனை கொல்லோ?

வெண்டா : யாதோ அறியேன், தீதுதீர் மருந்தே!
தண்டமிழ்ப் புலவரைக் கண்டே னிலையே.

கற்பக : ஆயின், அவரைநாம் அகத்திய மின்று
காணுதல் வேண்டும்.

(செங்கமலத்தை நோக்கி)

கமலமாங் காரிகாய்!
மாணுறு மணிவண அமைச்சரை மற்றியான்
காணுற விரும்பிய வேணவாக் கழறிக்
கொண்டுநீ வருவாய்!

செங்கமலம் : கூறிய படியே!

(செல்ல)

கற்பக : (வெண்டாமரையை நோக்கி)

கண்டனை நங்காய்! கவியவர் ஒழுக்கம்?
பெண்டுக ளென்றாற் பெரிதுபின் னிடுவர்.
அதனா லன்றோ அவர்நமைக் காண
வந்தன ரிலையே?

வெண்டா : வாய்மை. முன்னர்ச்
செந்தமிழ் நமக்குச் செப்பிய காலையும்
நம்முக நோக்கு நயப்பினை விடுத்து
பைம்முகங் காட்டும் பளிங்கினை நோக்கிப்
பாடஞ் சொல்லிய பண்பென் னெஞ்சகம்
ஓடம் போன்றே யுலவிய தொண்டொடீ!

கற்பக : பிறன்மனை நோக்காப் பெரியா ரிவர்போல்
அறன்கடைப் பிடித்தா ரியாரே? அறைகுவாய்!

வெண்டா : பிறன்மனை யென்னலிற் பெண்டி ரெவரையும்
அறனிற நோக்கா வண்ணலே யாமெனல்
மணமது கொள்ளாக் குணத்தையும் விளக்கும்.

மணிவ : (தோன்றிக் கைகுவித்து)

குலோத்துங்கக் குரிசிலாங் கொற்றவர்க் குற்ற

வலோத்துங்கப் பாண்டி மன்னவன் செல்வீ!
வணக்கந் தந்தேன். மங்கையாள் கமலம்
அழைத்தனள் திருவடி யாணையைக் கூறி.
பிழைத்திலன் யாதும்; பேணிய வெல்லாம்
அமைத்தனன் முன்னரே. ஆயினும், அயர்ப்பால்,
இமைத்துயான் விட்டன எவையு முளவேல்,
மனித்தெனைத் தெருட்ட வணங்கினன்
பன்முறை.

கற்பக: நுனித்திடு மமைச்சே! நும்முடன் முன்பு
எந்தையா ரனுப்பிய வெழிற்புக ழேந்தியாம்
நந்திய நற்றமிழ் நாவலர் யாண்டுளர்?
எம்மவை காணு திருப்பதென்?

மணிவ: எம்முடைச்
செம்மலின் றேவீ! ஈங்குக ணிகழ்ந்தன
அறியாய் போலும்!

கற்பக: (வியப்புடன்)
ஆ! கா என்னே!!
மாண்டன ரேயோ?—!

மணிவ: மாண்டன ரல்லர்.
கூத்தப் புலவர் கொண்டிடு வித்வக்
காய்ச்சலாற் புலவரைக் கடிமனைப் படுத்து
வைத்தனர். அவரும் மனையகந் தன்னில்
புத்தமு துண்டு, போலிப் புலவரை
வித்தக ராக்கி வீறுகொள் துங்கன்
நவராத் திரிக்கொலு நண்ணிய வின்று
அவைக்கே யனுப்பி யாடுங் கூத்தனை
ஒடுங் கூத்தனு வோட்டி யடித்தார்.
ஆயினும், அவர்சிறை யரசற் கின்னும்
மேயின தில்லை. அரசனோ மெத்தவுங்
காய்சின முற்றுளன்; காலையி லவைக்கண்
நிகழ்ந்தன நெஞ்சக நிறைந்தன போலும்.

கற்பக : ஓ! கோ! கூத்தன் ஒப்பிலா வரச
ஓகையில் வெறிகொண் டுணர்விழந் தனன்கொல்!
வாகே யவன்றிறம்! மணிவணா! இன்றிரா,
சூழ்ச்சிகள் சிலவாற் கூத்தனைத் தொலைத்து
மாட்சிப் புகழுடை மாபெரும் புலவரைச்
சிறையக நீக்கிச் சிறப்புறச் செய்வான்
இறைவனை யழைத்திங் கேற்பன செய்வாய்.
இரவி படுமுனம் எம்முடைப் பள்ளி
அறையினை யடைப்பேம். அரசன் கவலுறின்,
கூத்தனை யழைக்கக் கூறு, முதற்கண்.
காத்தனன் மீண்டுங் கலங்குறு மரசன்.
அப்பொழு தரசன் செவியகம் கூத்தனின்
ஆட்சியை விளக்கி, சூழ்ச்சிசால் புலவரை
வரவழைப் பதற்கு வழியினை நாடு.
கரவுடைக்கூத்தனின் தலையினைக் கவிழ்த்துதும்.

மணிவ : அம்மணீ! குறித்த வாணைப் படியே
இம்மியுந் தவறா தியற்றுவல். கூத்தன்
செருக்கினை யளக்குந் திறனிலை. அதனை
உருக்குலைத் தருள்வ துன்னுடைப் பணியே.
இன்றுமுன் னிரவி லிணையிலா வரசுடன்
நன்றியோ டண்டு நணுகுவல். அரசன்
நாடினும் நாடுவன். நானினிச் சென்று
வருகுவல் பாற்கடல் வந்திடு கற்பகத்
திருவே யனையாய்!

(செல்ல)

வேண்டா : (கற்பகத்தை நோக்கி)

தேவர்கட் கரிய
அமிழ்தே யனையாய்! கண்டனை அழிம்பை?
இமிழ்திரைக் கடல்சூழ் இவ்வுல கதனிற்
கூத்தனைப் போன்ற கொடும்பதர் காணுதற்
கருமையாம். அன்றே அவையினம் புலவரோ
டுழறிய பேச்சி னுணர்ந்தனன், முற்றும்.

கற்பக : ஆமாம், குறைகுடம் ! அறிவிலாப் பெரும்பதர் !
ஏமம தில்லா விருங்கலை மூடன் !

செங்க : (கற்பகவல்லியினை நோக்கி)

அன்னாய் ! இன்றவ ரவையினிற் பட்டன
என்னொரு நாவா லியம்பற் காகா.
போலிப் புலவர்கள் போட்டநற் போட்டால்
தாலி யறுந்தது.

கற்பக : ஓ ! கோ ! தாலியை
அறுத்து மூலையி லமர்த்திய போலிப்
புலவர்க ளாரவர் ? புகுந்தன யாவை ?

செங்க : வலம்புரி யனைய மணிமிடற் றம்மணீ !
நிகழ்ந்தன நெடுங்கதை யாமே. அவற்றை
நிகழ்த்துவன் கேட்டருள் !

வெண்டா : (கற்பகத்தை நோக்கி)

நேரிழாய் ! இங்குப்
புழுக்கமே மிகுந்தது. பூங்காப் புகுந்தால்
இழுக்கமே யின்றி, இருங்கதை யதனைக்
கேட்கலா மன்றோ ?

கற்பக : ஆமாம், கிளிமொழீ !
நாட்களாங் கோடை நடப்பன போன்று
வியர்த்தது மிகவும். அயர்த்தனன், புலவர்பால்
கொண்டிடு மன்பகங் கொண்டிட லாலே.

(யாவரும் போக)

(காட்சி முடிகிறது)

மூன்றாவது அங்கம்

நான்காங் காட்சி

இடம் : அந்தப்புரப் பள்ளியறை.

காலம் : முன்னிரவு.

நடர் : குலோத்துங்கன், கற்பகவல்லி, வெண்டாமரை, செங்கமலம், மணிவண்ணன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, மூக்கன்.

(பள்ளியறை மூடப்பட்டு, செங்கமலம் வெளியே காவலாக நிற்க.)

குலோத் : (மணிவண்ணனோடு தோன்றி)

(நிலைமண்டில வாசிரியப்பா)

மணிவணா ! இன்றியான் மறந்தது போன்றே
அணிநகை மடந்தையை அயர்த்திலே னென்றும்.
பகற்பொழு தனைத்தும் மறந்ததாற் பாவை
இகற்பொழு தாக்குவ ளிரவைத் திண்ணம்.
அதோபார் ! பள்ளி யறைக்கத வந்தோ !
மதோஒன் மத்தனின் வளர்கண் போன்றே
மூடிக் கிடத்தலை. மூவர்தாம் வரினும்
ஓடிக் கெடுமோ வொள்ளிழை யூடல் ?

(செங்கமலத்தை நோக்கி)

வாராய் கமலா ! வார்குழல் யாண்டுளாள் ?
கூறாய் ! கதவங் கொண்டதென் மூடி ?

செங்க : வளவர்தம் மணியே ! கிளவிகள் யாதும்
கேட்டிலேன். ஆயினும், வாட்டடங் கண்ணி
மாலையி லிருந்து வளர்முகஞ் சிவந்து,
மாலையாய்க் கண்ணீர் மார்மீ தோட,
உலைமூக் கெனவே உயிர்ப்புவிட் டதனால்

மலைப்போக் கெனவே மார்புக ளெழுந்திட
இருந்தா ளெழுந்தாள், யாதோ வொன்றை
நினைந்தாள் போல நெடுமூச் செறிந்தாள்,
காவினை மறந்தாள், கடிமயி லிகழ்ந்தாள்,
தேவினைத் திட்டினள், சேடியை வெறுத்தனள்,
கந்தினை யுந்திலள், கழங்கினை யாடிலள்,
எம்மனோ ரெவரையும் ஏறிட்டு நோக்காள்,
மம்மர்நோ யெனவும் வாய்விட்டுக் கூறாள்,
இருந்தாள், சிலநொடி முன்னரே யெழுந்து,
பள்ளியிற் புகுந்து கதவினைப் படுத்துத்
துள்ளியங் கொளித்தாள். தோன்றனீ
கண்டால்,
என்வரு மோவென வேங்கியே நின்றேன்.

குலோத்: ஓ! கோ! இஃதென்? ஊடலாம். கரும்பின்
பாகே யனையசொற் பைந்தொடீ! என்வர
வுணர்த்தியே நங்கையி னூடலை யொழிப்பாய்!

சேங்க: துணர்த்தார்த் தோன்றால்! தொடுத்தநுங் கட்டளைப்
படியே செய்வல்.
(கதவருகிற் சென்று)

(குறள்வெண் செந்துறை)

௧. அபய னண்மினன் அபய னண்மினன்
அழகு கற்பக வல்லியீர்!
அபய மீகுவன் அயர்த்தி லானினி
அணங்கு பொற்கத வகற்றுமின்!

௨. பகலி லேநமை மறந்த மன்னனைப்
பார்க்கொ ணாதென வூடுவீர்!
அகலி லேவிடு நெய்ய தென்னவே
அணைந்த னன்கத வகற்றுமின்!

(உள்ளிருந்து கதவைத் தாழிட)

பார்த்தனை? பெரும!
துடியிடை மிகுதியுந் துனியுற் றுள்ளாள்.

மாற்றுத லென்னு லாற்றவு மாகா (து).
அரியே றன்ன வரசே! புலவர்க்
கரியே றன்ன வருந்தமிழ்க் கூத்தர்
வாய்மொழி கேட்பின் மாறினு மாறுநம்
ஆய்மொழி நங்கை யகத்துறை யூடலே.

மணிவ: ஆமாம், பெரும! அதுவே யுறுதி.
வாமமாம் மணத்தினைப் பேசி முடித்தவர்
அவரே யன்றோ? அவர்தம் வாய்மொழி
துவர்வாய்த் தோகையர்க் கமிழ்தே துணியின்!

குலோத்: அங்ஙன மாயின், மணிவணு! கூத்தரை
இங்ஙனம் வருவா னியம்புவல்.

(சேவகனை நோக்கி)

ஏவலா.

மூக்கன்: அடியேன்.

குலோத்: சென்றுநீ யரண்மனைப் புலவரை
நொடியிற் கொடுவா!

மூக்கன்: அடிமையப் படியே.

(செல்ல)

குலோத்: மணிவணு! கூத்தர் மதிமிக வுடையர்.

மணிவ: அணியுறப் பாடுவர்.

குலோத்: ஆயினும், இன்று
கொானுவினில்—

மணிவ: அவர்செயல் கோணலா யிற்று.

குலோத்: ஆமாம், அஃதெனக் களவின் மானக்
கேடாய்க் கற்பகக் கிளியூடப் பற்றுக்
கோடாய் முடிந்தது. இஃதென் கொள்கை?
புலவரைப் போலிப் புலவரென் றடைத்துக்
கலாமிக விளைத்தார்! கருத்தென்?

மணிவ : யார்க்கும்
நிலையது மிகுந்தாற் கிளையினை மறக்கும் ;
கலையது வளரும் ; கண்களோ காணா ;
செவிகள் செவிடாய்த் திரும்பும் ; நெஞ்சம்
புவியினை நாடா. புலோமிசை வேண்டிக்
குறுமுனி வாயாற் கொடுஞ்சாப முற்றுப்
பெருமா சுணமாய்ப் பிறங்கிய நகுட
அரசன் கதைநீ அறிவா யன்றோ ?

குலோத் : ஓ ! கோ ! நகுடனை யொத்ததோ இவர் நடை ?
வாகே இவர்செயல் ! மணிவணா ! இவரும்
நகுடனைப் போன்று யார்பாற் பிழைத்தார் ?
தமிழ்முனி போன்ற தகுதியர் யாவர் ?

மணிவ : அரசே ! தமிழ்முனி யனையபுக ழேந்தி.

கூத்தர் : (தோன்றி)

மாணவ மணியே ! வந்தனம் ! நள்ளிராக்
காணவே வேண்டிய கடிவினை யாதோ ?

குலோத் : புலவீர்! பாண்டியன் பொற்கொடி யின்று
புலவியிற் புக்கனள். புலவியை நமது
விலையிலாப் பாடலான் விலக்கவே வேண்டிக்
கலைவலோய் ! அழைத்தனன். கண்டீர் கதவம்
மூடியே கிடப்பது ? மொய்குழற் புலவி
ஓடியே யொளிக்க வொருகவி யோதுவீர் !

கூத்தர் : ஆ ! கா ! அரசே ! அங்ஙன மேயோ ?
பாகே யனையநம் பைந்தமிழ்க் கவியால்
இட்ட முருத வேந்திழை யுண்டோ ?

(கதவருகிற் சென்று)

(கலித்துறை)

கரத்துஞ் சிரத்துங் களிக்குங் களிற்றுடைக் கண்டன்வந்தான்
இரத்துங் கபாட மினித்திறப் பாய்பண் டிவனணங்கே

உரத்துஞ் சிரத்துங் கபாட திறந்திட்ட தாண்டிலங்கா
புரத்துங் கபாட புரத்துங் கல்யாண புரத்தினுமே.

கற்பக : (உள்ளிருந்து கொண்டே)

ஒட்டக் கூத்தரே! உம்முடைக் கவிக்கியான்
இரட்டைத் தாழ்க்கோ லிட்டே னறிவீர்!

(இரட்டைத் தாழிட, கூத்தர்முக மாறுபட)

குலோத் : அந்தோ! இரட்டைத் தாழினை யகமிக
நொந்துமே யிட்டாள்; மணிவணா! நுண்ணிடை
புலவியோ பெரிதாய்ப் போராய், இரவிற்
கலவியைக் காணல் கான னீரினை
அவாவிய மானிலை யாகும் போலும்.
கவான்கவின் மிக்க காரிகைக் கிவ்வணம்
தவாச்சின மூளத் தவறு புரிந்தவர்
யாரே? கூறுதி!

மணிவ : அண்ணால்! அறியேன்.
ஆயினும், பாண்டிய னரண்மனைப் புலவர்
தாயினு மிக்கார், தனிப்புக ழேந்தி
கூத்தப் புலவராற் கொடுஞ்சிறைப் பட்டார்.
ஏத்தருஞ் செல்வி இதனாற் கவலை
கொண்டனள் போலும். குவலயம் புகழும்
மண்டல வரசே! அவரினைக் கொண்டு
கெண்டையங் கண்ணியி னூடலைக் கெடுக்கச்
செய்திட னலமாம்: தென்னவன் மருக!

குலோத் : செய்தியென்? அந்தோ! செந்தமிழ்ப் புலவரை
மறந்தேன் மிகுதியும். வாரீர் கூத்தப்
பெரியீர்! அவரைச் சிறையிற் பெயர்த்திடச்
செய்ததென்?

மணிவ : சீர்த்திசால் வளவ! சேயிழை
ஊடலை முதற்க ணொழிப்பாய்! பின்னர்
நேடலாங் கூத்தர் நிகழ்த்திய மனுமுறை.

குலோத்: ஆமாம், மணிவண்ணா! அதுசரி. கூத்தரை
நாளைக் காலை நம்முடைத் தனியறை
அகத்தே வரச்சொல். யாரது? சேவகா!

மூக்கன்: அடியேன் வந்தேன்.

(சேவகன் வர, கூத்தர் நழுவ)

குலோத்: பிடிநீ அரச
அடையா ளக்கணை யாழி யிது.கடு
நடையாய்ச் சென்று நற்சிறைக் கூடத்
தலைவற் கண்டுநாஞ் சாற்றிய தாக
விலைமிகு மாழியைக் காட்டி விரைவினில்
நற்புக ழேந்தியை நயமுடன் கொடுவா!

மூக்கன்: கற்பனைப் படியே.

(கணையாழியைப் பெற்றுச் செல்ல)

குலோத்: மணிவண்ணா! கலைவலார்
நின்னுட னன்றோ நெருங்கின ரீண்டு?

மணிவ: மன்னவ! வாய்மை. வந்தே மிருவரும்;
தென்னவன் றந்த சிறப்புடன். ஒட்டக்
கூத்தப் புலவர் கொண்டநம் புலவரின்
நாத்திகழ் பெயரினைக் கேட்டலும், நயமிலாக்
கொடுஞ்சின முற்றனர்; "சிறையாங்கோட்டம்
கொடுபோ!" என்றனர். மறுத்தியான் கொடுத்த
நன்மொழி பலவும் நறுக்கப் பட்டன.
கன்மொழி பலவாற் கடியவும் பட்டனன்.

புகழேந்தி: (தோன்றி மகிழ்வுடன்)

வாழ்க! வாழ்க! வளவர்தம் பெரும!
ஊழிக் காலம்; ஒள்ளிழை யுடனே.

குலோத்: வருக! வருக! மாசிலா மணியே!
வருக! வருக! பெருகுபுக ழேந்தி!
வருக! வருக! வருந்தினிர் பெரிதும்.

(புகழேந்தியைத் தழுவிக் கொள்ள)

புகழேந்தி: வருந்திலேன், சிறிதும்; மன்னவர் மன்ன!
திருந்தலர்க் கடந்து செருப்புகன் மறவ!

குலோத்: நாவலர்க் கரசே! நல்லது. நுஞ்சிறை
ஏவல ரியம்ப வின்னே யறிந்தேம்.
கற்பக விளங்கொடி நும்மைக் காணு (து)
அற்பகஞ் செறிந்த வெம்மையுங் காண
மறுத்தனள்; பள்ளியில் மயக்கமுற் றனள்போல்
இறுத்தனள். அவட்கே இயம்புவிர் சின்மொழி.

புகழேந்தி: மன்னவ ரேறே! வழுத்திய படியே,
கன்னன் மொழிக்கு நன்னயம் பகர்வல்.

(கதவருகிற் சென்று)

(கலித்துறை)

தூபங் கமழுபைங் கோதையன் விக்ரம சோழமன்னர்
தீபன் புறங்கடை வந்துநின் றுனின் றிருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலை சாய்த்துநின்ற
கோபந் தணியன்ன மேயெளி தோநங் குடிப்பிறப்பே.

கற்பக: (தாழ்களை விலக்கிக் கதவினைத் திறந்து கொண்டே)
புகழினை யேந்திய புலவிர்! நுமது
புகழ்மிகு பாட்டினைக் கேட்டுமுன் போட்ட
இரட்டைத் தாழு மெடுக்கப் பட்டது.

(வெண்டாமரையுடன் வெளியில் வந்து)

அரட்டைய ராகிய கூத்தரின் செயற்கு
மாணவி யாங்கள் வருந்தினேம் மிகவும்.
ஆணவச் செயலா மதனை மறந்து,
களித்திட வேண்டினேம்; கழகமெய்ப்
பொருளே!

(குலோத்துங்கனை நோக்கி)

அன்பினில் விளைந்த அமிழ்தே! இன்றியான்
துன்பினில் நம்மைத் தொடக்குற விட்ட
பெரும்பிழை பொறுப்பீர்! பேதையே னன்றோ?
துரும்பினுங் கடையேன் றொழுதன னும்மடி

(வணங்கி)

குலோத் : (கற்பகத்தைக் கட்டியணைத்து)

அரும்பெறற் பாவாய்! அவ்வணங் கூறேல்!
பெரும்பிழை யெமதே. பெரிதும் புலவர்
சிறையினிற் புகுந்து சிறுமையை யுற்றார்.
அறியேன் முன்னர். அறிவனேல், நீயும்
இவ்வண மூடாய். எல்லாங் கூத்தரின்
கைவண மாகும். கற்றறி வுடையயாம்
கழிந்ததற் கிரங்கற் காணொணா தாகலின்,

கற்பக : கழிபே ரின்பக் கடலினைக் காணுதும்.
அன்பே! அதோ! காண்! அப்பெரு வூசலில்
இன்பே யுறநாம் இருப்பம். மணிவணன்
வெண்டா மரையுடன் மேவிநம் மூசலைத்
தண்டா ரலையத் தண்கான் மோத
ஆட்டுவன். நமது அரண்மனைப் புலவராம்
பாட்டுடைப் புகழார் பாடுவ ரூசல்.
கேட்டே மகிழ்வம். கிட்டுதற் கரிய
மதவே ளனைய மார்ப! நீ வருகவே!

குலோத் : இதமிகு மென்னுடை யின்பே! உன்மொழி
வியாழன் மொழியினும் மிகுமே. புலவீர்!
வயாநிறை மங்கை மனப்புண் மாற,
வள்ளியு முருகனு மானவே யாங்கள்
ஊசலி லமர்வே முள்ளமு மூசல்
நிலையினை யுறவே கலைவலீர்! பாடுமின்!

(கற்பகத்துடன் ஊசலில் அமர)

(வெண்டாமரையும், மணிவண்ணனும் வடந்தொட்டாட்ட,)

(ஊசல்வரி—கலித்தாழிசைகள்)

புகழே:

க. வயிரநிறை விட்டத்தின் மணிக்கயிறு பூண
வயிரநிறை பலகையது மணிக்கயிற்றைப் பற்ற
உயிராய கற்பகத்தை யுடன்கொண்டு சேர்த்தென்
உயிராய குலோத்துங்க! ஆடாயோ வூசல்
உம்பர்கட மருமருந்தே! ஆடாயோ வூசல்.

உ. மணிவண்ண னின்பக்கன் மணிக்கயிறு பற்ற
மணிவண்ணத் தாமரையாண் மகிழ்ச்சியுடன் வந்தே
அணிவண்ணக் கற்பகத்தை யணைந்துமணிக் கயிற்றை
அணியுறவே யிழுத்தாட்ட ஆடீரோ வூசல்.
அன்பர்களே! இன்புறவே ஆடீரோ வூசல்.

ந.. முத்தமிழை முச்சங்கத் தொட்டிலிலே யேற்றி
முத்தமிழி னற்றமிழா மூன்றுதொகை நூலை
இத்தரையிற் தொகுப்பித்த வெழின்மரபின் விளக்கோ(டு)
அத்தனெனுங் குலோத்துங்க! ஆடாயோ வூசல்
அமரர் துயர் தீர்த்தவனே ஆடாயோ வூசல்.

(கரந்துவர லெழினி காண)

(காட்சி முடிகிறது)

மூன்றாவது அங்கம்

ஐந்தாங் காட்சி

இடம் : சோழனரண்மனை யந்தப்புரப் பூஞ்சோலை.

நடர் : வெண்டாமரையாள், செங்கமலம், மணிவண்ணன்.

காலம் : அதிகாலை.

(பூஞ்சோலையினூடே வெண்டாமரையும், செங்கமலமும் புகுந்து உலாவ)

(நிலைமண்டில வாசிரியப்பா)

வெண்டா : காரிகாய்! கமலா! காணிச் சோலையின்
நேர்மையை யென்னென நிகழ்த்துவன்? புள்ளினப்
பாடலும், கதிரவ னிளங்கதிர் பரவி
யோடலும், அதனால், உலகப் பொருளெலாம்
நெஞ்சகங் கவரு நிறங்கொள நிற்றலும்,
கிஞ்சுகந் தம்முட் கொஞ்சிநின் றாடலும்
வையகத் துறக்க மெனமயங் குவிக்கும்.

செங்க : ஐயமென்? அம்மணீ! அதோபார்! பேடைப்
புறவினை யாண்புறா, பொன்றுத லில்லா
அறமது புரிந்தோர் ஆடகப் பைம்பூண்
தெய்வ மகளிர் தம்மொடு சேர்ந்து
மெய்வளர் கலவி விளைப்பதைப் போன்றே
கூடுதற் காணாய்! ஊடுத லுடனே.

வெண்டா : ஆமாம்; அறிந்தேன். அஃறிணை யுயிர்க்கே
ஏமம் பெரிதும் இயற்றினன் வல்லான்.
உயர்திணைப் பொருளாம் மக்களே படைப்பில்
உயர்விலாக் கடையர்; உவப்பினை யறியார்;
எதிருறு நிகழ்ச்சிக ளெண்ணியே நலிவர்;
விதியினை நோவர்;—

மணிவ : (தோன்றி)

மேதினி யதனிற்
கண்டதே காட்சி! கொண்டதே கோலம்!
மண்டலப் பெரியார் வழுத்திய வெல்லாம்
சிறியோர் தம்மைச் செறித்திடச் செய்த
பொறியெனல் வேண்டும். பொற்கொடீ!
பெரிதும்
உண்மை யுரைத்தன ; உணர்ந்தனன் மிகவும்.
இருவே முள்ளமு மிணைந்தன. ஆகலின்,
மருவியே வாழ்ந்து மன்னிட லாமே.

வேண்டா : (திடுக்கிட்டு நோக்கி)

மண்டலச் சோழ வள்ளல்த மமைச்சே!
கெண்டையங் கண்ணியர் கிளவிகள் யாவும்
பேதமை மிக்க கோதுக ளென்ன
ஒழிப்பதை விடுத்துக் களிப்புட னொத்துப்
பாடுவ தாண்மைப் பண்பினுக் கிழுக்காம்.
(செங்கமலத்தை நோக்கி)
ஓடரிக் கண்ணாய்! ஒண்டொடி கற்பக
வல்லியாம் நமது மெல்லிய லரசி
பள்ளிவிட் டெழுந்து பகலவற் றொழுதிடும்
பள்ளியிற் புகவே பாங்குடன் தேடுவள்.
செல்வோம், விரைவினிற் ; சேயிழாய் வாவே!

(இருவரும் செல்ல)

மணிவ : (எதிர்மறித்து)

முல்லை முகையினை நல்லெழிற் படவே
பவளவள் ளத்திற் பாங்குற நிறைத்த
தவளவா ணகையுடைத் தையல்வெண்
டாமரைத்
திருவாம் வாணியின் சிறப்பெலாங் கொண்ட
திருவே யனையரின் திகழ்நீ லோற்பலக்
கட்கடைப் பார்வையைக் கண்டது முதலாக்
கொண்டனன் காதல். விண்டிட வழியிலாக்

கண்டிட லின்றியே யிந்நெடுங் காலம்
கொண்டனன்; ஊமையன் கண்டநற் கனவாய்ப்
பெண்டகாய்! இன்றே பிறவியின் பெரும்பயன்
வாய்த்திடப் பெற்றேன். மங்காய் ! நினது
வாய்மொழி யதனா லப்பயன் மன்னிடச்
செய்தெனை யுய்ந்திடச் செய்திடு தேனே.

வேண்டா: அரசிய லறிவினும், உலகிய லறிவினும்
பரசிடும் பெருமைப் பண்புகள் வாய்ந்த
புலமைசா லமைச்சே ! புகழ்மிகு காதல்
நிலவாப் பெருமணம் உயிரிலாப் பிணமாம்.
அதனைநீ ரறிவீர் ! ஆகலிற் காதலில்
மதலையா மென்னை மறந்துமற் றொருநற்
கன்னிகை தன்னைநீர் நண்ணிட லழகாம்.
அரசியா ரென்னை யழைத்திடுஞ் சமயம்
நெருங்கிய தப்பால் நின்றென் வழியினை
விடுவீர் !

(விரைந்து ஒருபக்கம் பாய்ந்து செல்ல)

மணிவ : (வியப்புடன் நோக்கி)

விண்ணணங் கனையவெண் டாமரை
நடுவமர் நாயகி! நற்காத லில்லா
மதலையோ ! வடிவிலா மதனற் குறுதியை
இதமுறச் செய்திடு மேந்திழை யலையோ ?

(வெண்டாமரை மறைய அங்கு வெறுப்புடன் தன்னை நோக்கிக் கொண்டிருந்த செங்கமலத்தை நோக்கி)

வாராய், கமலா ! மாதிவள் செய்தி
யாதாம்? அறிவைகொல்?

செங்க : (சினத்துடன்)

அறிவேன் சிறிது.
ஆயினும், உம்மை அறிவேன் பெரிதும் !
நறுமணா நுகர்ந்து நயனில் காலை
மறுமலர் நாடும் வண்டின மனையநும்

வெறுமொழி யெவரே விலையெனக் கொள்வர்?
அறிவிலாக் கடையே னுகலின், அக்கால்
அறிகிலேன். நம்முடை யழகுடைப்
பொய்ம்மொழி
மெய்யென நம்பி விலையிலா மணியாம்
தையலர் கற்பைநும் மையலி லாழ்ந்து
தொலைத்தேன். அதுபோல், தோகைய ரெவரும்
தொலைக்கார். அன்றியும், தொல்புகழ் வாணியை
அனையநற் கல்வி யகத்தமர் அவளை
அணையநீர் முயல்வதும்,அழகுடை மொழிகளால்
மயக்கிட முயல்வதும் வான்தா மரையைச்
சூடிட முயன்ற தொல்லறி வொக்கும்.
வெண்டா மரையில் வெண்புக ழன்னஞ்
சேர்தலே யன்றிச் சிறுபுன் காக்கை
சேர்தலு மாமோ? தேமொழி யவளும்
கலைமகள் மலரவற் கண்டுகொண் டாங்கு
கலைப்புக ழேந்தியைக் கருத்திற் காதலாய்க்
கொண்டுளாள். வீணே குவலயத் திற்கிளி
இலவுகாத் திட்ட வெழிற்கதை போன்றே
இரும், இரும், என்பழி எளிதல! சென்று
வருகுவன். அரசி மலர்ப்பள்ளி யெழுச்சி
அறிவிக்கும் வாச்சிய மதிர்கிற தந்தோ

(சென்று ஒருபுற மறைந்து நிற்க)

மணிவ: (தனிமொழி)

தெரிவைவெண் டாமரைச் சேர்க்கையை வேண்டி
அரிவை யிவள்தன் பகையு மடைந்தேன்.
ஐயோ! இவட்குமுன் வலக்கை யடித்துச்
செய்தசூழ் மொழிகளைத் தேமொழிப் பார்வையால்
மறந்தேன். அவளோ மறுத்தெனை யகற்றி
பஞ்சைப்பு கழேந்தி பாற்காதல் கொண்டு
விஞ்சிப்பே சுகின்றாள். வீணனப் புலவன்
பிடித்தாற் கற்றை; விடுத்தாற் கூளம்.
அவனையிங் கிருந்து வெளியே யனுப்பித்

தவளவா ணகையுடைத் தையலின் காதலைப்
பெறவே முயல்வல். பேதையே னிதனைச்
சிறிதுநான் முன்னர்த் தெரிந்திருப் பேனேல்,
வறிதே சிறையிலப் புலவனை மாண்டிடச்
செய்தின் புறுவல். ஆயினும், சிறுநொடி
எய்துமுன், அவனை எழுகாத தொலையே
செல்லும் படியாய்ச் செய்குவன்; சூழ்ச்சி
வல்லமை பலரும் வழுத்தியின் புறவே.

(செல்ல)

சேங்க: (வெளிப்பட்டு)

அந்தோ! கொடியன்! யாதோ செய்து
மைந்தமை புலவரை மடக்குவன் போலும்!
இன்றிவன் செய்திகள் யாவென வறிந்து
நன்றியான் செய்தே நற்பழி வாங்குவல்;
ஆடவர் பெண்களை யலட்சியஞ் செய்முறை
ஓடவே செய்குவ னும்பரும் வியக்கவே.

(செல்ல)

(காட்சி முடிகிறது.)

(மூன்றாவது அங்கம் முற்றும்)

நான்காவது அங்கம்

முதற்காட்சி

இடம் : முரணை நகரினை யடுத்த காடு.

காலம் : பிற்பகல்.

நடர் : புகழேந்தி, சந்திரன்சுவர்க்கி, மகிழ்மொழி வலவன், மாயவன், படைவீரர்கள்.

(நிலைமண்டில வாசிரியப்பா)

புகழேந்தி : (தனியே நின்றுகொண்டு)

கொடுங்கோன் மன்னன் குலவிடு நாட்டிற்
கடும்புலி வாழுங் காடே நன்றாம்.
கள்ளங் கபடு களங்கஞ் சூது
பொறாமை யாணவம் பொய்யிவை முதலாக்
கடுங்குண நிறைந்த கடிநக ரதனினுங்
கொடுங்கா னாகிய நெடும்புதர் வெளியிது
பெரிது நெஞ்சிற் பெருமகிழ் வூட்டி
அமைதியை யளிக்கு மருமையென் னென்பேன்!
அமைதியின் மக்களே யந்நக ரதனில்
வாழ்தற் குரியர். மற்றைய ரெல்லாம்
வீழ்தற் குரியர். மெய்யிது, சரதம்.
வேலியே பயிரை மேய்ந்தநல் லாறுபோல்
சாலிநன் னாடனுஞ் சார்துணை யமைச்சரும்
சோழநன் னாட்டினிற் றுளக்கமின் மாந்தராய்
வாழநே ரிட்டது மாநிலஞ் செய்த
தவப்பயன் குறைவே. தனியர சாளுந்
தவக்குலோத் துங்கன் றவறுக ணிறைந்த
ஆட்சியைச் சீர்திருத் தாமலே, கூத்தன்
ஆட்டுவிக் கின்றகைப் பாவையா யமைந்து,
கமரிற் கவிழ்த்த பசுப்பால் போன்று,

வறிதே யரச மாண்பினைக் கெடுத்தே,
எளியார்க் குதவியா யியக்குதல் விடுத்து,
தெளியார் போலத் தியங்கிடல் வியப்பே!
நெருந லிரவினி னேர்மையா யென்னுடன்
குறுநகை யாடிக் குலவிய துங்கனை
மாற்றியே பெரும்பகை மனனுற வைத்த
கூத்தன் மொழித்திறங் கூறொணா வியப்பே!
அந்தோ! மணிவண னன்புஞ் சூழ்ச்சியு
மிலவேல், எமனகர்ச் சேர்ந்தியா னிதுவரை
பலவாங் காட்சியும் பார்த்திட லாகும்.
மணிவணன், பாற்கடன் மாண்புற வமர்ந்த
மணிவணன் போன்றே மதியிலேன் றன்னை
இருமுறை காத்தனன். என்னே! அவன்றன்
பெருந்தகை! மக்கள்பாற் பெற்றபே ரன்பு!
துங்கன் விருப்பப் படியே துணிந்தியான்
அங்கிருந் துயிரினை யகற்றிட நினைந்தபோ
தேங்கியே வருந்தி யெனைவெளி யேற்றிப்
பாங்கியே போலப் பருவரன் மிகுந்த
அன்னன் போல்பவர், இந்நா னிலத்தினின்
மன்னிட லரிதாம்.

(எக்காள வொலி கேட்டு)
மாவொலி யேயோ?

மக்கட மொலியு மயங்குகின் றனவே!
எக்காள வோசை யிதுவாம். என்னே!
அமைதியாங் காட்டினை யழித்திட வரசர்செய்
வேட்டம் போலும்! நாட்டினி னுள்ள
கொடுங்குண விலங்கினைக் குமைத்திட வியலா
வடுங்குண வரச ரடவியி னமைதியை
யொழித்திட முயலு மொருபெரும் போக்கினை
யொழித்திட முயலு மமைச்சரு முண்டோ!
அதோ! சில மறவ ரரும்படை யுடனே
மதோன் மத்தராய் வந்துகொண் டுள்ளார்;
துங்கனின் வீரராய்த் தோன்றிடற் றுயராம்.
இங்குள புதரி லிருந்தே மறைந்து,

தப்புவல். மக்கள்கண் சீயத் தழலமை
வெப்புடைக் கண்ணினும் மிகக்கொடி தாகும்.
(புதரின் மறைய)

மகிழ்மொழிவலவன் :

(மாயவன், படைவீரர் முதலியவர்களோடு தோன்றி)

அன்பர்காள்! அரசனை யகலவே விடுத்தே
யின்புற யாமிங் கிரும்படை யேந்தி
வறிதே திரிதரற் பெரிதே பிழையாம்.
மள்ளுவ நாட்டினை வளரர சியலான்
வள்ளுவர் நாடென மதிவலோர் புகன்றிடத்
தெள்ளுபைந் தமிழைத் தெவிட்டா வமிழ்தென
யாவரு முணர்ந்து, மேவிவீற் றிருக்கச்
செய்து,தன் னாட்டினைச் சுவர்க்கமாச் செய்து,
சுவர்க்கி யென்ற தொல்பெயர் பெற்ற
சந்திர னிலாவித் தனிப்பெருங் காடு
பகலே யெனினும் பாழ்த்திருண் டெனக்கே
யிகலே விளைத்திடு கின்றது. பாய்புலிப்
பின்னர்ச் சென்ற மன்னவன் செய்தி
யாதோ? அறியேம்! அதோ! அக் குன்றினின்
றோதா தார்த முணர்வி னேக்கினை
மான விழித்தே வருமவ் வேங்கையின்
விரைவினைக் காண்மின்! மேலும், நம்மையது
நோக்கியே வருவதை நண்ணிதி னுணர்மின்!
வாக்கிற் புலியே றன்னயான் வருமிப்
புலியின் றுக்காம் போக்கினைப் பொறுத்துக்
கிலிகொளா திருக்க கில்லேன். நெடும்புத
ரிதனின் மறைந்தே யிருப்பல். சுவர்க்கியா
மிதனை திருப்பின், இவ்வணம் பதுங்க
வேண்டுவ தின்று.

(புகழேந்தி மறைந்திருந்த புதரிற் புகுந்து மறைய)

சந்திரன்சுவர்க்கி :

(குதிரைமீதேறி வேங்கை யொன்றினை விரட்டிக்கொண்டே)

வீரர்காள்! அதனை
ஈண்டியே மறிமின்! இற்றைப் பகலாம்

நேரமோ குறுகி மாலையு நெருங்கச்
செய்தவிவ் வேங்கையே சிறுகுடி பலரின்
கால்நடை தம்மைக் களவுசெய் துண்டு
மாந்தர் சிலரையு மடிவித் ததுகாண் !

மாயவன் : (குத்தீட்டியினைக் கொண்டவனாய்)

அன்பர்காள் ! வம்மினவ் வழியினை யடைமின் !
துன்புற வேங்கையைச் சூழ்மின் ! குத்துமின் !
இன்றுநம் வேட்டையி லிதுவே வெற்றிநன்
மாதினை மணக்க வாய்த்தநல் லமயம் !
கோதிலா மன்னனுங் குறுகினன் மறுபுறம் ;
தோட்புற மசைத்த தோமர மெடுத்தே
விடுத்தனன், ஒருகணை. வேங்கையை யச்சோ !
படுத்த தக்கணை ! பழித்தது நந்திறல் !

(வேங்கை சாய்ந்துவீழ)

மகிழ்மோ : (புதரிலிருந்து வெளிப்பட்டு)

அலகை ! ஐயகோ ! அந்தோ ! அலகை !
இலகுறு பகலினு மிங்ஙனந் தோன்றுமோ ?
பார்வைக் கமைதியாய்ப் பண்புறப் பார்க்குமிப்
பேயினும் பாய்புலிப் பேறு நன்றாமே.

(புதரைவிட்டு வெளிப்பட்டு, அரசன் முன்னோட)

சுவர்க்கி : என்னே அலகையா விப்பகற் போதில் !
மின்னோர் கனவுன் விழிப்பினி லுண்டோ ?
அன்றி, மகிழ்மொழி யாடுகின் றனையோ ?

மகிழ்மோ : அன்றென் னரசே ! மகிழ்மொழி யாடுநற்
கிதுவோ வேளை ? இப்பெரு வேங்கைமுன் !
கருமென விதுதகி வருவையேற் காட்டுகேன்.
அப்புத ரடியினில், ஆந்தைபோல் விழித்துச்
செப்புதற் கரிய சிறுநகை யோடு
கோட்டான் போலக் குந்தியே யுள்ள
நாட்ட மதனை யெவரு நன்றாய்க்

காணலாம். தாழ்ப்பையேற் காணுறு
தொழியும்.

மாயவன் : (குறுநகையுடன்)

மகிழ்மொழி வலவரே! நமக்குவாய்த் திட்ட
முகிழ்முகப் பேயது மோகினி போலும்!
ஆதலால், அஃதுமைக் காதலாங் குறுநகை
கொண்டுமே நோக்கியும் கண்டத னருமையை
விழலே யாக்கியெம் வீரமன் னவன்விடு
அழலே யனைய கணையத னருமையை
நினைந்தியாம் போற்று நேர்மையைக்
கெடுத்தீர்;
வினையதாம் வேட்டத் தொடக்கந் தொட்டுநீர்
மகிழ்மொழி வலவரென் மாண்பினை யிழந்தே
யழுமொழி யலவ ஞயது சரியல.

மகிழ்மோ : அன்பனே! முன்பே யறைந்துளேன் அதனை.
முன்பரு மயங்கு மோகினி யன்ற
தின்புற நோக்குமி டாகினிப் பேயே!
வம்மின்! யாவரும், வகுத்துக் காட்டுகேன்.

மாயவன் : வீரர்காள்! வலவரை வீழ்த்திய பேயினை
நேருறக் காண்பது நேரிதாம், வம்மின்!

(யாவரும் அப்புதரிவணச் சூழ)

புகழேந்தி : (புதரினின்றுஞ் சிறுநகையோடு வெளிப்பட்டு)

அன்பர்காள்! யானோ ரலகையு மல்லேன்;
முன்பரை மயக்கு மோகினி யுமலேன்;
இன்புற நோக்குமி டாகினி யுமலேன்.
வழிப்போக் கனியான்; வகுந்துசென் மயக்கா
லிழிந்தேன், சின்னெடி இப்புத ரடியே.
(யாவருங் கைகொட்டி நகைக்க)

மாயவன் : (பெருநகையுடன்)

என்னே! வலவரே! இப்பொழு தேநீர்

பொன்னனைக் கண்டு வரப்பனை யிற்புகும்
அலவனே யானீர்!

மகிழ்மோ : (ஏளனத்துடன்)

அல! அப் படியல!
இங்குள நீவிரெல் லீரு மிருகை
சங்கத் தொனியெழத் தட்டி நகைக்கச்
செய்த மகிழ்மொழிச் சேவகன் யான்காண்!

சுவர்க்கி : ஓ! கோ! குப்புற் றுடுங்கியோன் மீசையில்
வாகாய் மண்மிக வாய்த்திட விலையெனுங்
கதையினை யின்றே கண்டனம். நிற்க, இக்
கதையினிற் றோன்றிய விதையினைப் போன்றவிப்
பெரியா ரெவரே? பெரிதுங் கல்வியிற்
பெரியா ரெனவே பேசிடு மிவர்முகம்!

மாயவன் : ஆமாம், அரசே! இவர்முக மெனக்கும
னெங்கோ கண்டுரை யாடி யிருப்பதாய்ச்
சங்கையிற் பட்டுத் தடுமாறு கின்றது!

(சிறிது நேர மெண்ணி யிருக்க)

ஆ! கா! உணர்ந்தேன்! உணர்ந்தேன்! ஆ! கா!
பாகே நனிசொரி பைந்தமிழ்ப் பாக்களான்
பராக்ரம பாண்டியன் பல்லவைக் களத்தே
தராதல மெச்சிடு தண்மதி யாய
புகழேந்தி யென்னும் புலவர்நன் மணியிவர்!

சுவர்க்கி : புகழேந்தி யாவிவர்? புகழ்மாற னவையினி
லொட்டக் கூத்தனை, மட்டந் தட்டிய
மதிவலா ரன்றோ?

மாயவன் : ஆமாம், மாறன்
றதிவலா ரிவரே! தொல்புக ழிலங்கையிற்
றூதாய்ச் சென்று செழியனின் றொல்லர
சதனைக் கொற்கையி லழகுற நிறுத்திய
நாவல ரிவரே! பின்பு, சோ ணாட்டிற்

செழியன் விருப்பப் படியே சென்று,
சிறையகஞ் சேர்ந்து சிறுகுடி மக்களை
முறையகக் கல்வியான் முதற்குடி மக்களாய்
மாற்றிக் கூத்தனை வளவ னவையினிற்
காற்றிற் பூளைபோற் கலங்கிட நெருநற்
கண்ட தமிழ்முனிக் கற்கண் டிவரே.

மகிழ்மோ : குறுமுனி யிவரே! குறுநகை யதனைக்
கண்டவப் போதே கொண்டன னையம்.

சுவர்க்கி : (இரு கைகளாலும் புகழேந்தியின் வலக்கரத்தைப் பற்றிக் கொண்டு)

தமிழ்முனி யனைய தனிப்புக ழேந்திய
தமிழ்மொழிப் பெரியீர்! தமையின் றறியப்
பெற்றவென் பெருமை பெருகுவி யாழனைப்
பெற்றவிண் ணவன்றன் பெருமையின் மிகுமே!
கற்றவர் மணியே! கற்பிலா மூர்க்கர்தஞ்
சுற்றமோ டுழலுந் தொழின்மிகு மிக்கொடு
வனத்திடைத் தங்க நேர்ந்த வழக்கென்?

புகழேந்தி : அனத்தினைப் போன்றே யாவன கொண்டு
போவன விலக்கும் புதுமைசா லரசே!
நாவல ரயினு நல்லூ ழில்லாப்
பாவலன் யான்காண்! ஆகலிற் படிமீ
தாவல்கொண் டரசரை யணுகிடல் வெறுத்துத்
தவமே புரிவான் சார்ந்தனன் வனமே.

சுவர்க்கி : சிவமே யனையநற் செந்தமிழ்ப் புலவீர்!
அவமே யாகநும் புலமையை யழித்த
றமிழ்த்தாய்க் குச்செயுந் தவற்றினிற்
பெரிதாம்.
குலோத்துங்க னெட்டக் கூத்தர்பாற் கொண்ட
வலோத்துங்க வன்பான் மதித்தில னும்மை.
ஆயினும், பெரியீர்! அதன்பொருட் டுந்தந்
தாயினுஞ் சிறந்த தமிழ்ப்புல மையினை
வறிதே காட்டினின் மலர்ந்தநன் மலரென

வறிதே யாக்கி மயங்கிட லொண்ணா (து).
எம்மவை புகுந்தே யெம்மனோர் நெஞ்ச
மம்மர்நோய் மாற்றி மள்ளுவ நாட்டினைத்
தெள்ளுநற் றமிழ்மிகு செந்தமிழ் நாடென
வளர்த்திட வேண்டினன்.

புகழேந்தி : மாசிலா மணியே!
“ வளவனின் சினத்தான் மறைந்துறை நிலையேன்
றன்னை நீ கொண்டா லன்னவன் பகையா
மின்னலை யுற்றே யிளைத்திட லாகும்,”
என்பதை யெண்ணியே பேசிட லினிதாம்.

சுவர்க்கி : வளவனின் சினமா? யாதுநும் மறுவே?

புகழேந்தி : அளவிலை யவன்சினம்! களவிலை யென்பால்!
ஒட்டக் கூத்த னோதலே யாவும்.
திட்டமாய் யானெத் தீங்கு மறியேன்!

சுவர்க்கி : இவ்வள வன்றே? இதற்கோ வெண்ணம்?
செவ்விது! வளவனச் சிறுமொழி கட்கெலாஞ்
செவிகொடான். அறிவேன். சீர்த்திசால் பெரியீர்!
புவியினி னுமது புகழுமென் புகழும்
நிலைபெறத் தமிழ்த்தாய் கலையுறச் செய்வோம்.

மகிழ்மோ : கலையுறச் செய்வோம். ஆனாற் கதிரவன்
கலையுறான், குடகடற் கண்டான். அருணனுந்
தோன்றியே தேரினைத் துரத்துகின் றானப்
மான்றோர் பலவு மாநகர் நோக்கி
விரைந்தே நின்றன.

சுவர்க்கி : விடேனென மாலையும்
நிறைந்தே சூழா நிற்கும் விரைவினில்.
தமிழ்முனி யனையீர்! சாருமித் தேரி
லமர்வோம் வருவீர்! அகநகர் புகவே.

(யாவரும் போக)

(காட்சி முடிகிறது)

நான்காவது அங்கம்

இரண்டாங் காட்சி

இடம் : சோழன் அரண்மனையந்தப்புரம்.
காலம் : முன்னிரவு.
நடர் : வெண்டாமரை, செங்கமலம்.

(ஓரறையில் வெண்டாமரையும், செங்கமலமும் வீற்றிருக்க)

(நிலைமண்டில வாசிரியப்பா)

வெண்டா : (துயருடன்)
வாராய், கமலா! மனத்துயர் யாதெனக்
கேட்டனை யன்றோ? வாட்டடங் கண்ணீ!
யாதென வோதுவன்? காதலென் றியம்புஞ்
சாத றன்னால் வேதனை நெடுநாட்
பட்டேன். இன்றது பழுத்தே பயன்றான்
கிட்டு மென்றே கிளர்ச்சியுற் றிருக்கக்
காதற் கனியது காணுதற் கரிதாய்
மறைந்தது. போய வழியது தெரியேன்,
கறைந்தனன் பெரிதும். காரிகாய்! இதுவே
யென்துய ராகும்.

செங்க : ஏந்திழாய்! காலையின்
மன்றுணை யான மணிவணற் குரைத்ததென்?
காதலின் மதலையாக் கழறினை யன்றோ?

வெண்டா : மாதே! ஆமாம். மணிவணற் கியானொரு
மதலையே.

செங்க : மற்றியார் நின்வாழ் விற்கே
யுதவிட வுரியார்? ஒண்ணுதால்! ஓதுதி!

வேண்டா : (கண்ணீர்த் துளிகளைச் சிந்தியபடியே)
நங்காய்! குழந்தை நாட்களி லேயே
பங்கமில் பெற்றோர் பரகதி யுற்றிட,
உற்றா ருறவினர் பற்றிலா தென்பா
னெருங்கா தேகினர். நீணிலம் புரக்கும்
பெருங்கா தலனாப் பிறங்கிடு செழியனின்
நற்றவ மகளா நலமுள கற்பகப்
பூங்கொடி யன்பினாற் பொலிந்து சிறந்தே
வளர்ந்தே னிதுவரை. ஆயினென் மனக்கோ
ளளந்தே புரிதுணை யாதர வில்லேன்.
அரசியோ வென்பா லளவிலன் புள்ளாள்.
பரசியென் கருத்தைப் பகர்ந்தா லுடனே
செய்குவள். நாணநாச் செறித்தெனை யடக்க
நைகுவே னாகி நாட்பல கழித்தேன்.
இன்றென் கருத்தை யியம்பியென் றுயரைப்
பொன்றுவித் திடவே புரிந்தேன். அதற்குள்,
நெருங்கியே நின்ற நிகரிலா வக்கனி
சுருங்கியே மறைந்து தோற்றமின் றாயது.
எங்கையைப் போனீ யேந்திழாய்! எனக்குப்
பங்கமி லுதவி பண்ணுவை யென்றே
யாதோ வொன்ற தோதா நின்றது.
மங்காய்! கேட்டாய்! மனமெனு மேடையி
லமர்ந்த கனியதை நீயு மறிகுவை!
கல்வியிற் பெரியது! காட்சியிற் சிறந்தது!
நல்லறி வினிலோ நலமிகு வியாழனும்
பின்னிடச் செய்யும் பெற்றிய தன்றே!
றென்ன லிரவினி னிகரிலாத் தமிழ்மழைப்
பொழிவாற் பெருக்கிய வூசற் புனலது!
கழிபே ருவகைக் கடலி னகத்தது!
இன்றதி யாண்டோ சென்றது! தெரியேன்!—

சேங்க:- அறிவேன்! அம்மணி! அஃதிவ ணகன்ற
பரிவே. காலையிற் பகர்ந்தவின் மாற்றமே
மணிவணாற் றூண்டி வஞ்சகச் செயலால்,
துணிவிலாப் புலவரைத் தொலைத்தது, வெளியில்.

மணிவணா னினது மனத்துறை காதலை
யெங்ஙனோ வறிந்து புலவரை வெளிதா
யெங்ஙனோ கூறி மிரட்டியிவ் விடத்தை
வெறுக்கவே செய்து விரட்டினன்; காலை
யுருக்கமா யவர்பான் மறைபல வோதிடக்
கண்டனன். மேலும், கண்டனை யின்றையப்
பகலெலாம் மணிவணான் பகருநன் னயமொழி.

வேண்டா. (சினத்துடன்)

ஓ! கோ! அவனு வொப்பிலென் வைப்பினை
யேகவே செய்த மோகமார் மடையன்?
அன்பனை யகற்றினு மகத்துறை யன்பினை
அகற்றவொண் ணாதென வறியான், அறிவிலி!
பகற்பொழு தேயிதைப் பண்புறத் தெரிவனேல்,
அரசிக் குரைத்தவ னமைச்சினை யறிவல்!
ஆயினென், நாளை யவனிவ் வரண்மனை
மேயிடா வண்ணம் வேண்டுவ செய்வல்!
காண்டியென் றிறமை! காரிகாய்! மிகவே.

சேங்க : (சிறிது முகச்சுளிப்போடு)

ஆமாம், அவனை யழித்தலே நன்றாம்.
ஆயினும், புலவரை மேயிடும் வரையிற்
பொறுத்தலே யறிவாம். பொறியிலி மேலும்,
கறுத்துமே புலவரைக் காணொணா வகைசெய
விடுத்திட வொண்ணா.—

வேண்டா : விளங்கிழாய்! உரைத்தன,
அடுத்திடு முண்மையே. அவனறி வின்றியே
புதையலை நாடிடப் புகுவேன். நாளைக்
காலையி லெனக்குக் கார்க்குழால்! ஆணுடை
யொன்றது தேடிக் கொணர்வாய்! உதவிய
நன்றியை மறவேன், நாட்பல செலினுமே.

சேங்க : (மகிழ்ச்சியோடு)

தெரியிழாய்! கொணர்வல். சிறிதும் பின்னிடேல்!

அரிவைநீ யானுடை யணியினெம் மகளும்
புரிகுவன் மோகம்; புரிகுவ ரெவரும்.
புகன்றவப் படியே வைகறைப் பொழுதி
லகன்றிட வானுடை யமைத்துமே வைப்பல்.

வேண்டா: ஆ! கா! உன்னுடை யன்பே யன்பு !
மாகா திபனன் மருகனை முருகன்
அருளால் விரும்பிய தனைத்தும் பெற்றுநீ
பொருளாற் குபேரனைப் போன்றே பொலிகவே !
இறைவிக் கிப்பொழு தென்செல வதனை
யுரைத்திடேல்! பின்னர், உசாவுங் காலை,
காதலும், செலவும், மணிவணன் கபடும்
ஓதாய்! என்பாற் றீதுக ளொழியவே.

சேங்க : அம்மணீ ! செப்பிய வப்படிப் புரிகுவல்.
அம்மணி முழங்குவ தறிகுதி! அம்மணி
அழைக்கின் றனணமை யகத்தியம் வைகறை
பிழைத்திட லின்றிக் காண்குவ னின்னை
மழைக்கணாய் ! செல்வம், விரைவினில் வாவே!

(இருவரும் செல்ல)

(காட்சி முடிகிறது)

நான்காவது அங்கம்

மூன்றாங் காட்சி

இடம் : சுவர்க்கியின் கொலுக்கூடம்.

காலம் : முற்பகல்.

நடர் : சுவர்க்கி, புகழேந்தி, மகிழ்மொழிவலவன், மாயவன் நற்சொல்நாவலன், படைவீரர்கள்.

(சுவர்க்கி புகழேந்தி முதலியவர்களுடன் கொலுவில் வீற்றிருக்க)

(நிலைமண்டில வாசிரியப்பா)

சுவர்க்கி : (மாயவனை நோக்கி)

ஒன்னா ருட்கு முயர்படைத் தலைவ !
முன்னாங் கூறிய முறையே யொழுங்காய்ப்
படையினை யமைத்துப் பயிற்சியுங் கொடுத்து
நடையுறச் செய்கின் றனையோ ?

மாயவன் : நாயக !
வழுத்திய படியே மாப்பெரும் படையினைப்
பெருக்கியே வேண்டும் பெருந்திறற் பலவும்
பயிற்சியான் மிகுத்துளேன். பாரினின் மேருவே
யெதிர்க்கினு மஞ்சிடேன்.

சுவர்க்கி. ஓ ! கோ ! இணையிலா
வீரனே ! நாமதைக் கண்டிட மெத்தவும்
விரும்பினோம். கொலுவினை விட்டபின் படைக்களம்
புகுவோம்.

(புகழேந்தியை நோக்கி)

பாண்டியன் போற்றவே யரசியற்
புகழ்மிக வேந்திய பொய்யில் புலவீர் !

அகழ்கடன் ஞால மகன்றுள தறிவீர்.
அதன்கண் வாழு மலகில்பல் லுயிர்களில்,
மதன்வாய்ப் பட்டு வறிதே கழிந்தன;
கழிவன பலவாம். கனவுல கிதனில்,
அழிவினை விலக்கி, கழிவினை நீக்கி
வாணாட் கழித்தன சிலவே. அவற்றுள்,
வீணாட் படாமைநன் றாற்றுமெய் யறிவே
கொண்டுள வுயிர்கள் மிகவுங் குறைவே.
குறைவா மவற்றுள், புகுந்தே குலவிநாம்,
நின்றிட வேண்டினம். ஆகலின், நீதிசேர்
வன்றிற னளன்றன் வாழ்க்கையைச் சுருக்கி
யழகாய், ஒருநூல் பழகுதொல் காப்பியத்
திந்தமி ழமுதந் தேக்கிட வுண்டு
சங்கத் திட்டுத் தண்ணளி மிகவே
யன்பது பொங்கப் புகட்டிய வருந்தமிழ்த்
தொகைநூன் மருந்தினைத் துகளற வேற்று,
வள்ளுவ ரருளிய தெள்ளுநற் றமிழாந்
தலையணி பூண்டு, தாழ்விலா மணியாம்
வாசக நெற்றியில் வாசமார் திலகமா,
குண்டல கேசிநற் குழையா, சிறந்த
சிந்தா மணியே திகழ்மார் பணியா,
வளையா பதியே வளையா வணிந்து,
மணிமே கலையினை யணியரை யசைத்து,
திருக்கோ வையினைச் சிறுகுறங் கிடையே
பெருங்காஞ் சியாகப் பிறங்கிடப் பிணைத்து,
சிலப்பதி காரச் சிலம்பினை யுலகெலாம்
சிலம்பிடத் திருவடி சேர்த்துப் புலவர்தம்
சிந்தையாஞ் சிற்றிலிற் றிகழ்சிறு காப்பியக்
கழங்கம் மானையாற் களிப்புட னாடுஞ்
செந்தமிழ்ச் செல்வியின் சிறுமூக்கு வறிதே
காணுத லின்றிக் கவின்மூக் கணியாய்ப்
பூணுத லுறவே பொற்புட னியற்றுவீர் !

மாயவன் : அரும்பெற லரசே! ஆமாம், யானும்
விரும்பினேன்; இவ்வணை நெருநலே. மெல்லியற்

செந்தமிழ் நங்கையின் வாழ்வே சிறந்தநம்
வாழ்வாம். மற்றவள் தாழ்வே நம்மவர்
வீழ்வாம்; அறிகுவை. மேதினி யதனின்
மொழிச்சிறப் பில்லா மாந்தர்முன் னேறுதல்
விழிச்சிறப் பில்லான் வீறுட னடத்தலாம்.

மகிழ்மோ : ஆமாம், அரசே! அனைத்தும் வாய்மையே.
பூமா தவட்குப் பொருந்துநன் முகமாந்
தமிழ்நா டதனி லமிழ்தென வழங்குந்
தமிழ்மொழி தழைத்தலே தாயவள் பேச்சாம்.
தமிழ்மொழி பிழைத்தலே தாயவட் கேச்சாம்;
உலகவர் நம்மை யலகையா வெண்ணிப்
பலகவர் மொழிகள் பகர்ந்திட வழியாம்.

புகழேந்தி: அமிழ்துறழ் தமிழ்மொழி யதனையே யுயிரென
இமிழ்கடன் ஞாலத் தெண்ணியே மள்ளுவ
நாட்டினைப் புரக்கும் வாட்டமி லரசே!
காலமாங் கள்வனம் முதியரிற் கணக்கிற்
சாலவாம் பலர்தம் வாழ்க்கையைச் சதியாய்க்
களவுகொண் டெவருங் காணுறு வகையே
மறைத்துமே வைத்த வஞ்சகம் போல,
நமதுநல் வாழ்க்கை நாட்பல வெதிர்காற்
செலினுங் கவராத் திறமைய தாகவும்,
செந்தமிழ்ச் செல்வியின் சிறுமூக் கதனி
னந்திடு வயிர நன்மூக் கணியா
நளவெண் பாவா நற்சிறு காப்பியம்
வளனுற வகுப்பல். பழமையாய் நின்பெயர்
கதிர்மதி நிலவிடுங் காலம் வரைக்கும்
புதுமதி யெனப்புகழ் புவியினிற் சிறக்கவே.

நற்சோல் நாவலன் :

முரணைநன் னகரினை முரணிலாச் சுவர்க்க
வரணதா வமைத்த வரசநன் மணியே!
நின்னரு ளாலிம் மள்ளுவ நிறைந்தோர்
பொன்னும், மணியும், தூசும் பொலியத்
திருமக டிருநோக் கருள்மிகச் செறிந்துளார்.

ஆயினும், அன்னவன் மருமக ளாகிய
கலைமக ளருளினைக் காணா தார்பலர்
விலையிலாப் பதரென விளக்கமின் றுள்ளார்.
அன்னார் தம்மைநந் நன்னாப் புலவர்தஞ்
சார்பால் விளக்கிடுந் தகைமையு நம்மான்
மேற்கொள வேண்டிய விலக்கரு நெறியாம்,
என்பது திருவுள மியம்பிடா தறியும்.

சுவர்க்கி : மன்பதை வாழ்வே மன்னர்தம் வாழ்வெனக்
கண்படை கொள்ளாக் கவினுறு மமைச்சே !
உரைத்தன வாய்மை. ஒருபெரும் புகழமை
பெரியார் தமது பேருத வியினால்,
நந்நா டெங்கு நற்றமிழ் மணமே
முன்னா ளூழி முதற்சங் கத்தினிற்
றிகழ்ந்தாற் போன்று திகழ்ந்திட வுனக்கே
யுரிமை யளித்தனன். ஒப்பரு தமிழ்மொழி
விரிவுறப் பரப்புவாய் ! விண்ணும் வியக்கவே.
(படைத்தலைவனை நோக்கி)
மாயவ! நமது படைகடம் மாட்சியை
நேயமாய்க் காண்பாம்.

(மற்றவர்களை நோக்கி)

நேரவை மாந்தர்காள் !
கொலுவினைத் தீர்த்தனன். கூடுவோ நாளையே.

(கொலுக் கலைய)

(காட்சி முடிகிறது)

நான்காவது அங்கம்

நான்காங் காட்சி

இடம்: முரணை நகரை யடுத்த காடு.

காலம்: அதிகாலை.

நடர்: புகழேந்தி, உழுவலன்.

(நிலைமண்டில வாசிரியப்பா)

புகழேந்தி: (தோன்றித் தனக்குள்)

சிறுபொழு தாறனுட் சிறந்திடு வைகறை
யுறுபொழு தேபெரி துகத்தற் குரியதாம்.
உலகத் தொல்லையி னொழிவாம் வீடுற்றுப்
பலவா மனக்கறை யொழித்துப் பண்புற
வுறங்கியே விழித்த வொப்பரு வைகறை
பிறங்கிடு பெருமையைப் பேசவென் னொருநா
பற்றுமோ? பற்றா. பகரர வரசுபோற்
பெற்றுப் பன்னாப் பேசிட றகவாம்.
உடற்கு முயிர்க்கு முறுதியை யளிக்கும்
விடியலொன் றின்றேன் மேதினி மாந்தர்
மடியராய் மடிவர். வானிலே பறக்குமிப்
பறவைத னூக்கமும், பாடிடும் வானப்
பறவைதன் பாட்டும், பைங்குயி லிடைக்கிடை
கூவிடின் குரலும், பூவையின் மொழியும்,
கிள்ளையின் கிளவியும்,விள்ளொணாப் புள்ளினச்
சிலம்பலுங் கேளாச் செவியினைப் பெற்றோன்
புலம்பலே யுற்ற புன்மைய னன்றோ?

(ஒரு மரத்தடியினை நோக்கி)

அதோகாண் ! ஒருவன் விடியலி னருமையை
ஓதான் மலர்ந்தே யுன்மத்த னாகக்

கண்வளர் போக்கினே ! காட்சியி லவன்மிகப்
பண்வள ருடையும், இளமையும், பாங்கும்,
அழகு மொருங்கே யமைந்தும் வீணே
பழகிய குறையாற் பகலவற் கண்டு
முறங்கிட லாயினன். ஒ!கதி ரொளியாற்
பிறங்கிடு மவன்முகப் பொலிவின் பெருமை
யென்னென வுரைப்பன் ! இன்னும் மீசை
யரும்பிடா விளைஞன் !

(அருகிற் சென்று)

பெரும்பட ருற்றே
களைத்தனன் போலும் ! சளைத்தது வதனம் !
என்னே ! உறக்கத் தெழுந்திடு முயிர்ப்பின்
முன்னஞ் சிறிது முன்னுறக் காண்கிலன் !
மூர்ச்சையோ ? சாவோ ?

(மூக்கிற் கைவைத்து நோக்கி)

மூர்ச்சையே ! கொடுமை !
பெருந்துயர்க் கடலிற் பேதுற் றவன்காண் !
மருந்திதற் கியாது ? மாநீ ரதனினுஞ்
சிறந்ததென் ? அஃதோ ! தெளிநீர்த் தடத்தே
நிறைந்திடு நீரினை நீண்டவித் துணியிற்
கொணர்வல். களையினைப் போக்குவல்,

(துணியினை நனைத்துக்
கொண்டுவந்து முகத்தில் தெளிக்க)

உழுவலன்: (மூர்ச்சை தெளிந்து தனக்குத்தானே)

குவலயம்
புகழுநல் லன்பே ! பொறியிலே னுன்னைக்
காணுமா றென்னே ! கவலையாம் வரையினைக்
கடக்குமா றென்னே !

புகழேந்தி : காளையே யனையாய் !

உழுவலன்: (திடுக்கிட்டு நோக்கி)

காண்பதென் ! கனவோ ?

புகழேந்தி : அன்றுநன் னனவே.
வருந்தல் வினை! அருந்திடு நீரே!

(துணியிலுள்ள நீரைப் பிழிந்து வார்க்க)

உழுவலன் : (நீரருந்தித் தெளிவுடன் வியப்பாக நோக்கி)
பெரியீர்! பெரிதும் வந்தனம். தம்மையா
னறிவேன் போலும்! ஆ! கா! ஆமாம்!
அறிந்தேன்! பாண்டிய னவைக்களஞ் சிறக்கச்
செந்தமிழ் நடத்திய செல்வரீ ரன்றோ?

(நாண மேற்கொள, தலை கவிழ்ந்து நிற்க)

புகழேந்தி : செந்தமிழ்ச் சிறுவ! செப்பிய துண்மை.
மதவே ளனையநீ யாவன்? முன்னெங்கோ
கேட்டது போன்ற கிளவிக ணின்பாற்
கேட்டன னின்று. நினக்குள கேடென்?
“அன்பே! என்றனை! “அடையுமா
றியா(து),” எனத்
துன்புற லாயினை! யாதுநின் றோற்றம்?
அன்பினை யிழந்தாற் றுன்பது பெரிதே!

உழுவலன் : (சிறிது நேரம் எண்ணி நின்று)

(குறள் வெண்செந்துறை)

க. ஆமாமென் னரும்புலவீர்! அறைகுவனீர் கேளீர்!
அவனியிலே சிறந்தநக ராமதுரை தன்னில்,
ஏமார்ந்த மறைவல்லா னெனும்பெரியோ னெழிலா
ரேத்தருநற் குணமாகு மேந்திழையா டன்னைக்

உ. கூடியவன் பெற்றமகா ரோரிருவர். முதற்கட்
குலம்விளங்க வந்தமகள் குவலயத்தே யறிவு
நாடியிடம் பெற்றகலை நல்வாணி யெனவே
நலஞ்சிறந்த தாமரைவெண் ணற்பெயரைப் பெற்றாள்

ங. அவளுடனே பிறந்தவனியா னன்பினிலே சிறந்த
ஆர்வநிறை யுழுவலன்பன் அந்தோவெம் பெற்றோர்

தவழுகின்ற பருவமதிற் றனித்தெம்மை விடுத்துத்
தயாபரனின் கழலிணைக டம்மையவர் சார்ந்தார்.

௪. பாண்டியனும் பராக்கிரமன் பரிந்தெடுத்தே யெம்மைப்
பண்புடனே வளர்வித்தான் பாங்குள்ள வெமக்கை
பாண்டியனி னவைக்களத்தே பழகுதமிழ்ப் புலமைப்
பண்புமிகு முமதுபக்கற் பரிந்தன்பு கொண்டாள்.

௫. காதறனை நீரறியீர் சோணாடு கண்டீர்!
காரிகையு முமைத்தொடர்ந்து காதன்மிக நிறைந்தாள்
ஆதரவான் அவணினைந்தே யழிந்துநெஞ்சம் புண்ணாய்
அவட்கண்டு மீள்வலென வடைந்தேனிக் கானே.

௬. இக்கானே தன்னிழலை யளக்கவென வெண்ணரி
யிடுங்குறியொன் றியற்றுதே யெடுத்தடிவைத் தளக்கும்
மிக்கானின் செயல்போல விடுதிபெறு தந்தோ!
வீணேயென் கானடையை வீழ்த்தியது பெரியீர்!

௭. இதுவேயென் வரலாறும். ஏந்திழையைக் காண
வென்னிருகண் மிகவிழைந்த வெளியேனை விரைவில்
மதுமலரில் வண்டனைய மலர்விழியா டிருமுன்
மாப்புலவீர்! சேர்த்திடுவீர்! மலரடிதாங் கதியே.

புகழேந்தி: ஓ! கோ! வெண்டா மரைக்கொரு பின்னவ
ளுண்டோ? அறியேன்! மயிலவ ளொப்பிலாக்
கற்பக வல்லியி னற்பகஞ் செறிந்த
பாங்கி யலளோ? பாண்டியன் மனையிற்
கண்டுளேன் சில்கால். கல்வியிற் கலைமகள்!
கண்டுபோன் மொழியாள்! கருதுமைம் புலனைய
யாற்கடல் வீழ்த்தா வளரறி வுடையாள்!
நாற்குணப் படையினை நனிமிகப் படைத்தாள்!
அன்னவ டன்னைச் சோணாட் டரண்மனை
நென்னலே கண்டனன். நேரிலா வவளும்
பஞ்சையா மென்பாற் பற்றுவைத் தனளோ?
வஞ்சியென் பாலிலை. ஆயினும், மற்றவட்
காணு மாற்றினைத் துணையுடன் காட்டுவல்.

வீணே யிவ்விள வெயிலினைக் கொளாது
நகர்க்கே புகுவம். நகைமதி யனைய
வதனநற் காளாய்! வருக! இவ் வழியே.

(இருவரும் போக)

(காட்சி முடிகிறது)

———

நான்காவது அங்கம்

ஐந்தாங் காட்சி

இடம்: சோணாட் டரண்மனைப் பூஞ்சோலை.

காலம்: மாலை.

நடர்: கற்பகவல்லி, செங்கமலம்.

(கற்பகவல்லி மேடைமீது வீற்றிருக்க, செங்கமலம் வெண்டாமரை மலரொன்றினைப் பறித்துக் கொண்டு வந்து கொடுக்க.)

(நிலைமண்டில வாசிரியப்பா)

கற்பக: (வெண்டாமரைப் பூவினைக் கண்களி லொற்றிக் கொண்டே)

கமலா! களிப்புடன் றடத்தினிற் கவின்மிகக்
காணாத லுற்றவித் தாமரை, கடிதடம்
கோணாத லுறவே கொண்டது போன்றே
யென்னக மாகிய வெழிற்றட மதனிற்
பொன்மலர் நாற்றம் பூண்டது போன்று
பொற்புங் கற்பும் பொருந்தியே மலர்ந்த
வெண்டா மரையினைக் காட்சியா மென்கொடி
துண்டா மாறே கொண்டா ரியாரே?
கோதறு மவள்முகந் தீதறு மிந்நாட்
காலையி லிருந்து காணா தென்மனம்
வேலையிற் றுரும்பென மெலிகிற தந்தோ!,

செங்க: அம்மணீ! வீணே யவல முறற்க!
செம்மணி யாகிய செல்வியா மவளைக்
கொள்வா ரெவரே? கோமக னாட்சியிற்
கள்வரு முளரோ? காரிகை பன்முறை
காதற் கிளவிகள் கலக்கமுற் றோதிடக்
கேட்டேன். அன்னாள் கேழ்கிளர் காதலர்
நாட்டேன் மலரென நாற்கவி யிசைக்கும்

இசைப்புகழேந்தி யென்னவக் கிளவிகள்
இசைத்தன, இசைத்து மறைத்தன ளெமக்கு.
றென்ன லப்புலவர் நேரார் தமைப்போல்
நன்னய மின்றி நடந்தனர் புறத்தே.
அதுமுதற் கொண்டே யரிவைவெண் டாமரை
வெதுவெதுப் புள்ள மேனிய ளாகித்
தனியே தங்கினள், தனியே மொழிந்தனள்,
"கனியே! கரும்பே! கண்டே!" என்ற
மொழிக ளிடைக்கிடை மொழிந்திட லானாள்.
கிளிமொழி விழிக ளுறக்கமே கிட்டில.
பாயலிற் புரண்டனள், நோய்மிகக் கொண்டனள்,
"யாண்டுனை நாடுகேன்? ஆண்டகை மணியே!"
என்றே நேற்றிரா விசைத்தனள் பன்முறை.
குன்று வுறக்கக் கொடுமையா லிவற்றையான்
றீதா மென்றே சிந்தியா தயர்த்துப்
போயினேன். காலையே மேயின தறிந்தேன்.
ஆகலின், அம்மணி! தோகையா மவளுங்
காதலற் றேடியே போதலைக் கொண்டாள்,
எனவே யெனக்கோ ரெண்ணங் காலையே
மனவே தனையோ டுதிக்கமற் றதனைப்
பலர்முன் பகரற் பழுதா மென்றே,
அலர்பூங் கொடியாய்! அடக்கின னிதுவரை.

கற்பக : அங்ஙன மேயோ? அறியேன் சிறிதும்!
பைங்கொடி யவளும் பகுத்தறி விழந்தே
புறத்தே சென்றது பொல்லாப் பிற்கிடம்;
அறத்தா றுகா. முன்னரே யறிவனேல்,
முடித்தவள் மனத்தே மகிழ்ச்சி முளையாம்
பாலிகை விளைப்பல் பாவம்! உலகிய
லறியா விளங்கொடி தெரியாத் தன்மையாற்
றுணிவினைக் கொண்டாள்! தொன்மையா முலகப்
பெருங்கா டதனிற் பிறங்கிடுங் காமுகப்
பேய்களாற் பெரிதும் பேதுற லாவள்!

(வெண்டாமரையை நினைந்து)

அந்தோ! பொற்கொடீ! ஆருயி ரனையாய்!
நொந்தேன் பெரிதும்! நுண்ணூன் மதியாய்!
என்னே! உன்செயல்! காதலா லியாவு
மிழந்தனை போலும்! ஏ! ஏ! காதலின்
வன்மையே வன்மை! மனத்துள வெதனையும்
புன்மையாய்ப் போக்கிப் புகுந்துவீற் றிருக்கும்
காதலே! நினைநிகர் காண்பது மாமோ?
காதலாற் சாதலே கடனெனத் துணிந்துபின்
போதலைக் கொண்ட பொற்றொடி வீணே
சாதற் குரிய தகைமைய ளல்லள்.
ஆதலின், இன்னே அரசன தாணைகொண்
டோதற் கரிய வொருபுக ழேந்தியோ
டாதற் குரிய வவளையுங் கொணர்ந்து
மணந்தின் புறவே வைப்பல்; கமலம்
மணந்தநான் முகன்வெண் மலரவள் மானவே.

(இருவரும் செல்ல)

(காட்சி முடிகிறது)

(நான்காவது அங்கம் முற்றும்)

ஐந்தாவது அங்கம்

முதற் காட்சி

இடம்: சுவர்க்கி யரண்மனையில் ஓரறை.

காலம்: பிற்பகல்.

நடர்: புகழேந்தி, உழுவலன்.
(புகழேந்தி யொரு சார்மணையிலிருக்க, உழுவலன் கவரிகொண்டு வீச)

(நிலைமண்டில வாசிரியப்பா)

புகழேந்தி: உழுவ லன்பே! உனதுநற் றமக்கை
முழுவலன் பினைநீ முன்னுறக் காணுதற்
குற்ற சமய முனக்குவாய்த் ததுகாண்!
பெற்றம் பிரிந்த சிற்றிளங் கன்றுபோ
னெடுநா ளுற்ற துயரினை நீக்குவாய்!
கடுநிகர் கண்ணாய்! அரசியற் கணக்காக்
கொற்றவன் சுவர்க்கியின் குணமாந் தூதுவர்
நற்றவத் துங்கனை நாடியே நாளைப்
புறப்படு கின்றனர். அவருடன் போகில்,
சிறப்புடன் சேரலாஞ் சீர்த்திசால் வளவன்
உறந்தைப் பதிக்க ணுயர்மணி மாடமே.

உழுவலன்: அறந்திக ழுகநிறை யன்புடைப் பெரியீர்!
உரைத்தன சரியே. ஆயினும், உம்மை
வரையப் பெறாது மயங்கியே நலியு
மவள்பா லியான்போ யாவதென் னவட்கு?
அன்றியும், அவளுறு நலனே யவனியின்
மின்றிகழ் யானுறு மேன்மையாம். ஆதலின்,
அடிகாள்! தாமு மவணெழுந் தருளி
யிடியுறு மெமது மெலிவினை யகற்றிட
வேண்டினன் பெரிதே.

புகழேந்தி :
ஆண்டினி லிளையோய் !
வளவனென் பான்மிக வருத்தங் கொண்டுளான்
களவினி னவனவை கடந்துவந் துள்ளேன்.
மீண்டு மாண்டியான் புகுதல் வீணே
மணலின் முழுகி மறைந்து கிடக்கு
நணல்தன் வாயா னுயிலைக் கொண்ட
கதையாம்.

உழுவலன் :
கவின்புகழ்க் கடலிற் காணும்
மதமாக் களிறே ! மகிதல மிதனி
லும்பால் வெறுப்புள வொருபெரு வேந்தரு
முளரோ ? துங்கன் உலகிய லாகுந்
திருவேறு தெள்ளிய ராதலும் வேறெனுந்
திருமறை மொழியினைத் திகழா மறைமொழி
யெனப்பல ரெண்ணிட விருபெரு செல்வமுந்
தனதெனக் கொண்ட தகுதிய னன்றோ ?
நம்போ லுயர்கவி நோக்கினுண் மணியெனப்
போற்றுமப் புரவலன், புலவீர் ! நமக்கு
மாற்றல னுயது மாபெரும் வியப்பே !

(நேரிசை யாசிரியப்பா)

புகழேந்தி :
வியப்பென் ? ஒட்டக் கூத்தனின் வித்வக்
காய்ச்சலே யென்பாற் பாய்ச்சலாய்ப் புகுந்து
வளவனின் பகையை வளர்த்தது. வளவனும்
வெறுத்தெனைக் கோறல் விரும்பினன். நின்போல்
வெறுத்திடா மணிவண னுதவியால் வெளிக்கடற்
புகுந்தே சுவர்க்கியாம் பொற்புறு தீவகத்
திருந்தேன். ஆண்டினி யேகுத லழையா
விருந்தே யாகும்.

உழுவலன் :
ஆமாம், விழுலே !
ஆயினும், அடியேன் நம்மை யாண்டு
புகுந்திடச் செயாது, போகேன். பொற்புடை
முடங்க லொன்று முகிழ்வெண் டாமரைத்
திருவே யனையவென் சேயிழை தனக்கு

வரைவேன். அதனுல், வளவன் மனக்கோ
ளரைசியான் மாற்றி நம்மை யவளும்
வரவழைத் திடுவள். ஆகலின், மாண்பமை
புலவீர்! தூதுவர் போங்கா லியான்றரு
நறுக்கினைக் கொண்டே நடப்பதற் குரிய
வழியினை நாடுவீர்!

புகழேந்தி:
கழிபெருங் காதல்
வைத்தநல் லிளைஞ! மாற்றர சர்பால்
வாழ்மடக் கொடிக்குக் கேழ்கிளர் முடங்கற்
போக்குவ தெளிதல. வெளிப்படிற் புகர்பள
வாக்குவ தாகும். அன்றியும், சுவர்க்கியே
ஐயுற னேரும். நேரிடின், அவன்றன்
அன்பையு மிழந்தியான் றுன்புற லாகும்.
ஆகலின், நீசென் றுவன புரிதல்
வாகே யாகும்.

உழுவலன்:
வளர்மதிப் புலவீர்!
தூதர்தந் தலைவ னியாரவன்? தொல்புகழ்
முருகனே யன்றோ? அறிகுவன் பெரிதும்.
கழிபே ரன்புறற் காட்சியு மறிவுந்
தெளிபே ருதவியாஞ் செயலு மருளு
முடையான். அன்றியும், என்பா லொழிவிலா
தடைபே ரன்பா மகநட் புள்ளான்.
முடங்கலோ வரசியன் முறையினை யொழித்த
குடும்பச் செய்தியாம். அதனுற் குவலய
நண்பனுஞ் சுவர்க்கியு நாடிட விரும்பான்.
துங்கன், கற்பகத் துலங்குநற் கொடியாம்
பங்கமி லரசி யிருவர்தம் பார்வை
யுற்றே யவர்தம் வாயிலாய், ஒண்டொடி
பெற்றிட வென்றே பெருங்கண் ணெழுத்துப்
பொறித்தே யனுப்பப் போகுநன் முடங்கலாற்
குறித்தே கொள்ளுங் குணக்கே டின்றும்.
ஆகலிற் பெரியோய்! அகத்திய முடங்கற்
போகவே செய்வல்.

புகழேந்தி :

புகரிலா மதியாய் !
விருப்பம் போல வேண்டுவ செய்க ;
ஆயினும், வெண்டா மரையா மரிவை
தாயினுஞ் சிறப்பாய்த் தழுவுநற் கூத்தன்
புகன்மொழிக் கெதிராய்ப் புகன்றுநற் றுங்கனைத்
திருப்பிட வலியளோ ?—

உழுவலன் :

தேவியா மரசிக்
குரைத்தே மாற்றிடல், ஓ ! எளி தன்றே !

புகழேந்தி :

ஆமாம், கற்பக வல்லியா மரசி
யேமமி லென்பா லிரக்க மிகவுளாள்.
அவளா லன்றோ வருஞ்சிறை யகன்றேன் !
தவள வாணகைத் தையலார் முயலின்,
ஆகா தனவு முளவோ ?
மாகாதி பத்யமும் வாவென வருமே.

(கரந்துவர லெழினி தோன்ற)

(காட்சி முடிகிறது)

ஐந்தாவது அங்கம்

இரண்டாங் காட்சி

இடம்: சோழன் அரண்மனை யந்தப்புரம்.

காலம்: பிற்பகல்.

நடர்: குலோத்துங்கன், கற்பகவல்லி, செங்கமலம், மூக்கன்.
(கற்பகவல்லி சார்மணையிற் சார்ந்திருக்க,
செங்கமலம் வெண்கவரி வீச)

(நிலைமண்டில வாசிரியப்பா)

கற்பக: (வருத்தத்துடன்)
நேரிழாய்! கமலா! நெடுநா ளாயின.
வார்குழற் செய்தி மணற்கிணற் றிட்ட
கல்லே போன்று யாதுங் காண்கிலன்!
பல்லோ ரொற்றாய்ப் பலதிசை நாடியும்
வல்லேர் நகிலாள் வளரிட மறியார்,
மடங்கினர். அந்தோ! மடக்கொடி யெவர்பால்
மடங்கியே நலிவான் மடிந்தனள் கொல்லோ?
தாய்தந்தை யற்ற தளர்நடை யணங்கவள்,
நோய்கொளப் பொறாத நொய்மையள். எந்தையா
ரறியி னவணிலை யவலமுற் றிடுவர்.
(வெண்டாமரையை மனக்கண்ணா னோக்கி)
வறியனோர் செய்வினை வளமுறச் செயல்போ
லூணும், உடையும், உயர்ந்தநற் கல்வியும்
மாணுறப் புகட்டி மகளென வளர்த்த
வழுதியி னுழைப்பெலாம் வறிதே காட்டி
லெரித்த நிலவும். இருங்கம ரதனிலே
கவிழ்த்தநற் பாலும் மானக் கயற்கணீ!
ஒளித்தது தகவோ?
(கண்ணீர் சொரிய)

குலோத்: (புகுந்து)
ஒண்டொடீ! என்னே!
துயர்க்கடல் புகுந்தனை! தோழியின் பிரிவது
மயற்கட லாக மாறிடல் வியப்பே!

தலைவன் பின்னே தலைவியைத் தொலைத்துத்
தனித்துயர் கொண்டநற் றுய்த்துயர் தனினு
நின் துயர் பெரிதே !

கற்பக : (எழுந்தெதிர் கொண்டு)
நெடுமா லனையவெம்
மன்னவ! அவடியர் மகளையும், மகனையும்
பின்னொரு காலே பெட்புறக் காணலா
மென்றநற் களிப்பாற் குறைவுறும். மென்றுயர்
குலமணி யாழியைக் கொடுங்கடல் வீழ்த்தே
யலமரு மனங்கி னுழ்துயர் போன்றே,
பாழியந் தடந்தோட் பார்த்திப ! மாறு
வீழ்துய ரன்றோ ?

(இருவருமோ ரிருக்கையி லமர)

குலோத் : ஆமாம் ; மெல்லியால் !
இன்றுநம் மவையி லெழிலார் மள்ளுவ
நாட்டுத் தூதுவர், நடக்கு மரசியல்
வினையாய் வந்தவர், விளங்குவெண் டாமரை
நனையா டனக்கொரு நறுக்கா நிருபங்
கொடுவந் தனரது குலவிடு மவள்பின்
றுழுவலன் வரைந்ததாம். ஒண்மொழீ !
இதோகாண் !
மண்ணுடை முடங்கல் ! மாதுவெண் டாமரை
கண்ணிடைப் படாதவிக் காலையிம் முடங்கலை
யென்செய வெனவே யேங்குதெ னுள்ளம் !

கற்பக : (நறுக்கினை ஆவலோடு வாங்கி நோக்கி)
பொன்செய் நன்செய்ப் புகழ்மிக வுடைய
நீர்நாட் டரசே ! நீண்டுமே சுருண்ட
வூர்கோ ளனையவிம் முடங்கலி னொருபுறங்
காணுறு கண்ணெழுத் தென்னாற் பன்முறை
காணப் பெற்ற கவினுறு மெழுத்தாய்த்
தோன்றிடு கின்றது !

(சிறிதுநேர மெண்ணிப் பார்த்து)

தொன்மையாம் வளப்பஞ்
சேர்ந்திடு புனனாட் டரசே! செவ்வ
னறிந்தேன்! சிறிது மையமே யில்லை.
அரிவைவெண் டாமரை யதுவே! பிரித்துத்
தெரிவல்; அவடன் செய்தி. பின்னவன்,
உழுவல னென்பன வுபசரிப் பேயாம்.
வெண்டா மரைக்குடன் பிறந்தார் மேதினி
கண்டதே யின்று. காரிகை சூழ்ச்சியிற்
கொண்டாள்; இம்முறை.

(நறுக்கினைப் பிரித்து நோக்கி)

கொற்றவா! இதோகாண்!
விளித்திடு முறையினை! மேலும், இறுதியி
லளித்திடு கையொப் பவள்பெயர் கொண்டு
விளங்கிடல் காண்பாய்!

(நறுக்கினைப் படித்து முடித்து)

வேந்தே! கமலாள்
முன்னர்க் கூறிய முறையே, மாதவள்
நன்னர்ப் புகழினை நலமுற வேந்திய
புலவர்பாற் காதற் பொலிவுற் றுள்ளாம்.
புலவர் முரணைப் பூப னரண்மனை
வாயிற் புலவராய் வதிவதும், அன்னா
ளாணுடை யோடவ ரருகணைந் தவர்க்கே
மாணுடை யுழுவல னெனப்பெயர் மாற்றிச்
சோதர னெனவே யுரிமையுஞ் சொல்லி
யாதர வுடன்பணி விடையவர்க் காற்றி
வருவதும், மணிவணன் சூழ்ச்சியான் மற்றவர்
வெருவர லுற்றிவண் வெளிப்புறப் பட்டதும்,
மணிவண னவள்பால் வளர்பே ராசையாற்
றுணிவுடன் சதிபல சூழ்ந்ததும், தனது
காதற் கனியினைக் கண்டே கொணரச்
சாதற் கொத்த தனித்துயர் கொண்டே
யாணுடை யுடனம தரண்மனை யகன்றதும்,

சுவர்க்கியி னவையிற் றொல்புக ழேந்திவா
னவர்க்குங் கிட்டா வமிழ்தென வடமொழி
யகத்தே வழங்கு மரியநன் னூலாம்
நளன்வர லாற்றினை நற்றமிழ்ப் பாவாம்
வெண்பா வினிலே விளக்கிக் காப்பியக்
கண்போற் செய்து கவினரங் கேற்றிப்
பொலிவதும் வரைந்துளாள். மேலும், புலவர்
கிலிகெட மன்ன ! நீ கேடின் முடங்கல்
வரைந்தே புலவரை யவளுடன் வரவழைத்
துறைந்தே வாழ வொருவழி யுஞற்றிட
வேண்டியே யுள்ளாள். காண்டியின் நிருபம் !

(தங்கன் கையிற் கொடுக்க)

குலோத் : (நிருபத்தைப் படித்துவிட்டு)

கண்டினை யுறழ்மொழிக் காரிகாய் ! உனது
திண்டிறற் றோழியின் செய்திகண் மிகவும்
வியத்தற் குரியன. மேலும், அவளோ
ராண்மக னாக வவதரித் திடுநன்
மாண்பினைக் கொண்டுளாள். மற்றவள் விருப்ப
நிறைவே றற்கே நிருப மிரண்டு
புலவர் தமக்கும் பொருந்துநந் நண்பனுஞ்
சுவர்க்கிமன் னனுக்குந் தொல்புகழ்ச் சங்கமா
நம்மவை தனிலே நளவெண் பாவின்
பொம்மல் பலரின் புலங்கொளச் செய்வான்
வருக ! என்றே வரைகுவ னின்றே.

(சினமிக்கு)

கறைமிக வுடையான் போலும் ! காமுகன் !
மணிவணன் ! நமது மாண்பமை யரண்மனைக்
கணியவர் பன்முறை கழறினர், அவன்செய
றீங்கா மெனவே. தெரிந்திலே னயர்த்தேன் !
பூங்கா வினிலுறை புலிநிக ரவனை
யொறுத்தே யொழிப்பல் ! ஓ ! கோ ! வளவர்தம்
அரண்மனை யவற்கோ ராடிடம் போலும்!

யாரது அங்கே !

மூக்கன் ; (தோன்றி)

அடியேன் !

குலோத் ; மூக்கா !

நேரவை யமைச்சர் நிகரிலா வேலையர்
பாற்சென் றெமது பணிப்பென மணிவண
மாற்சரி யம்மிகு மடையனைச் சிறையகஞ்
சேர்த்திடச் செய்தே திரும்புவாய் நொடியே.

மூக்கன் : பார்த்திப ரேறே ! பணித்தவப் படியே.

(செல்ல)

குலோத் : (கற்பகவல்லியை நோக்கி)

கூர்த்திடு மதியாய் ! கொண்டநின் கவலை
பேர்த்திட வழியது பிறந்தது. அதனால்
சென்றமும் மதியாய்த் திகழ்முக மதியினைக்
கன்றவே வைத்தென் னெஞ்சங் கலங்கச்
செய்திடு செயலினைச் சேயிழாய் ! சிதைத்தெனை
யுய்ந்திடச் செய்வாய் !

கற்பக : ஒப்பிலா வெனது

கண்மணி யனையவென் கட்டழ கா ! யான்
பெண்மணிப் பேதையாட் பிரிவா லுணர்விழந்
தயர்த்தனை மறந்தேன். அதுபிழை யெனினும்,
அயர்விலா தென்பா லன்பினைக் கொண்ட
பண்பார் மன்னவ ! பலநாட் பட்ட
பாடெலா மொழியப் பாடெலா நிறைந்த
விளமரக் காவினுக் கேகியே யாங்குறு
மிளமாங் குயிலோ டெதிர்கூக் கூவியும்,
தென்ற லுகர்ந்தும், தேமாம் பூவின்
மன்றன் மணந்தும், மல்லிகை பறித்தும்,
தோகைத மாட லோகையாய்க் கண்டும்,
அன்னமென் னடையினை யகனுறக் கொண்டும்
மன்னவ ! வருதும், வளர்மதி யெனவே.

(கைப்பற்றி யழைத்துச் செல்ல,
செங்கமலம் பின்னடக்க)

(காட்சி முடிகிறது)

ஐந்தாவது அங்கம்

மூன்றாங் காட்சி

இடம் : சோழன் கொலுக்கூடம்.

காலம்: முற்பகல்.

நடர்: புகழேந்தி, உழுவலன், குலோத்துங்கன், பராக்கிரம பாண்டியன், சந்திரன் சுவர்க்கி, கம்பர், ஒட்டக்கூத்தர், நகைமொழி நாவலன், வேலையர், படைத்தலைவர் முதலியோர்.

(குலோத்துங்கன் முதலியோர் கொலுவில் வீற்றிருக்க)

(நிலைமண்டில வாசிரியப்பா)

குலோத்:
புலவர்த மணியே! புகழாம் புணையினி
னுலவிடு மொளியே! உம்பர்கட் கந்நாட்
பாற்கடற் கடைந்தே யமிழ்தினைப் பாத்த
மாற்கட வுளினை மானவே செந்தமிழ்
மொழிக்கடற் கடைந்து முனிவரும் புலவருங்
களிக்கடற் புகுந்து கலந்து கூட்டுண்ண
நன்பனுஞ் சுவர்க்கித னல்லவை யதனி
னுதவிய நளவெண் பாவெனு மொருபெரும்
புத்தமு ததனைப் புலவீர்! யாங்களு
முள்ளங் களிக்கவே யுண்டு புகரிலா
வானவர் போல வாழ்ந்திடும் வண்ணம்
மானவர் மணியே! வளர்சொற் பெருக்கால்
வழங்கிட வேண்டினன்.

புகழேந்தி:
களங்கமி றுங்க!
விருப்பப் படியே விளக்குவல்.
(உழுவலனை நோக்கி)
விழுமிய
கருப்பங் கட்டியே நிகர்த்துக் காதுகட்
கினித்திடு மொழியமை யெழிலா ருழுவல!
ஒன்பான் சுவையமை வெண்பா வேட்டினை
யெடுத்தே படித்திடு!

உழவலன் : என்னகக் கோயிலில்
விடுத்தே போற்று மேன்மைசால் பெரியீர் !
செப்பிய படியே செய்வல்.

(சிறப்புப் பாயிரச் செய்யுட்களைப் படிக்க, புகழேந்தி சொற்பொழிவாற்ற)

குலோத் : புலவீர் !
செப்பிய கடவுட் சிறப்பிற் சமய
மாறுபா டின்றி வழுத்தியுந் தமது
வேறுபா டான விசிட்டாத் வைதக்
கொள்கையை, "எங்கட் கிறை", யெனக் கூறி
விள்ளவே நடத்திய மேன்மையே மேன்மை.

(உழவலன் முதற் பதினொரு பாடல்களைப் பாடப் புகழேந்தி சொற்பொழிவாற்ற)

பாண்டியன் : ஆ ! ஆ ! முன்னுரை யாக வமைந்தநற்
பாகாம் பதினொரு பாக்களும் பழைய
பாரதக் கதையினை நேருறச் சுருக்கி
விளக்கின. பாரத வெண்பா வெனநூல்
கிளத்திடின், மீண்டுந் தமிழகங் கிளைத்திடும் !

கம்பர் : வெண்சீர் மிகுத்து வெள்ளாற் றொழுக்காய்க்
கண்போற் சிறந்த கவினுடைப் பாக்களான்
நூலினை நடத்து நுட்பம் பெரிதும்
பாலின் சுவையாய்ச் செவியகம் பாய்வதான்
வெண்பா வினிலே மிகுபுக ழேந்திய
பண்புளா ரிவரே !

(உழவலன் நாடு, நகரச்சிறப்புக்களைத் தெரிவிக்கும் ஆறு பாக்களையும் பாட, புகழேந்தி சொற்பொழி வாற்ற)

பாண்டியன் : பாரீர் ! நாட்டின்
வளத்தினைக் கேட்போர் மனத்தினைக் கொள்ளைகொ
டிறத்தினி லோவியந் தீட்டிய வாறுபோல்
விளக்கிய வகையினை !

கம்பர் : மேலும், நகரச்
சிறப்பது ஆடியிற் சில்வகை யெழுத்திற்
பல்வகைப் பொருளைப் புலனுறப் பதித்துச்
செப்பிய திறமை திப்பிய முறையாம்.

குலோத் : செப்பிய துண்மை. சிற்ற சாகிய
அன்பன் சுவர்க்கித னகநகர் முரணையும்
மன்பதை யுலகிற் குடக்கெழு வான்பிறை
போன்றே முரணிலாப் புதுநக ராகச்
சான்றது காணீர் !

(உழவலன் சுயவரகாண்ட முடியவுள்ள பாடல்களைப்
பாடப் புகழேந்தி சொற்பொழி வாற்ற)

சுவர்க்கி : (துங்கனை நோக்கி)
தண்ணளி வேந்தே !
முகமதி யோடே குவளையு முகிழ்த்த
நகர்நிறை காட்டி னயத்தினைத் தேராய் !

கம்பர் : செம்மனத் தானெனுஞ் சிறுவெண் பாவின
னன்மனத் தலைவனி னயம்புகு வித்ததும்,
நாற்குண நாற்படை யெனமிகு நலமுள
தலைவியைத் தலைவனி னெஞ்சகஞ் சார்த்தலுங்
கலைநிறை வன்மையைக் காட்டு வனவே !

பாண்டிய : இவ்வள வினிலே யென்றெடுத் திளவ
லொவ்வொரு நொடியு மோதிம வரவினை
யெதிர்பார்த் தமைதனை யெழிலாய்க் குறித்தது
புதிதாய் வியப்பினைப் புகட்டுவ தாகும்.

குலோத் : குலமுனி கொற்றத் தனியாழ்க் குணத்தினைப்
பலபடி யாகப் பகர்வதை விடுத்து
நெற்றித் தனிக்க ணெருப்பை யவிக்கும்
பெற்றிய தென்ற பெருமையே பெருமை !

நகைமோ : அள்ளிக் கொளலா யடையத் திரண்ட
கொள்ளியும் விலக்கொணுக் கூரிரு ளென்ற

மொழித்திற னென்றே மூவுல கும்பெறும்.

வேலையர் :
மொழிக்கடற் குளித்த முதன்மையீர்! செவ்வன்
பைங்கிளி யோடே பருந்துபா லுண்ணச்
செங்கோல் வளர்ச்சியைத் திறமுற வுரைத்த
நயமே நயமாம்! நற்கொங்கை யிளநீ
ரெனுநற் பாவி னேற்றமெவ் வுலகினுங்
காணுதற் கரிதாம்! கதிரவன் குடபாற்
பேணியே மறைந்த பெற்றியைக் கூத்தன்
காணிருட் படாத்தினைக் கவினுற வாங்கி
யாரணம் பாட வாடிக் குடவரை
யொருமுக வெழினியி லோடியொ ளித்ததாய்ப்
புகன்றுபின் மாலையின் புறப்பா டதனைமன்
மகன்புறப் பாடென மல்லிகைச் சங்கொடு
கருப்பு வில்லிதன் காவலு மமைத்துச்
செலுத்திய சிறப்பே செப்பொணுச் சிறப்பாம்.

கூத்தர் :
ஆயினும், மல்லிகை யடிப்புறம் விடுத்து
மேயின நுனிப்புற மெல்லென வூதும்
வண்டினைச் சங்கின் மறுபுறம் வாய்வைத்
தொண்டிற லோடு மூது மாந்தர்க்
கொப்புமை கூற லுலகிய லுணராத்
தப்பித மன்றோ ?

புகழேந்தி :
தப்பித மேயோ ?
பல்லெயி றென்ற பழந்திரு மொழியி
லெல்லியம் போதிருஞ் சிறைவண் டெமது
பல்புகழ்ப் பெருமான் குணமதைப் பாடி
மல்லிகை வெண்சங் கூது மதிலுடை
யரங்க மென்ற வதுவென் ? தவறோ ?

நகைமோ :
பெரியார் மொழியினைத் தவறெனப் பேசுதற்
பெரிதுந் தவறும். பேதமை மிக்க
நாலறி வேயுள நயமில் வண்டினம்
வாலறி வதனையும் வாய்த்தகட் குடியா

விழந்தே யடிநனி யென்பதை யறியா
துழந்தன போலும் !

கம்பர் : ஓ ! கோ ! நாவலன்
ஆராய் வின்றே யருமையும் பெருமையு
நேராய்க் கொண்டது ! நேர்த்தி !! நேர்த்தி !!!

பாண்டியன் : இன்னொன் றறிமின் ! எந்திழை யவளுங்
கன்னலன் றுயராற் கருத்தழிந் தயலே
வதியுந் தோழிகள் வார்த்தைகட் கெதிராய்
மதிதன் சுடர்பட வாய்த்தநற் கொப்புளங்
கொண்ட குளிர்வா னென்னுங் கொள்கையை!

கூத்தா : (புன்சிரிப்புடன்)
கண்டனம் ! ஆயின், கண்டிடு கொப்புளங்
கொண்டிடு சீயும், நீருங் கண்டிலேம் !

உழவலன் : கண்டனர், பலரே ! நாமுங் கருத்துடன்
நோக்கிடின், வானக நின்று நுட்பமாம்
மீனின மூதிர்தலும், விண்பனி வீசலுங்
காணலாம்.

நகைமோ : காணுவர், கருத்திலார் பலரும்.

சுவர்க்கி : கற்றவர் குழுவே ! கருதுமிந் நூலி
னற்ற மியம்பநந் நாவுபல் காணு !
பொற்றொடி சுயவர மண்டபம் புகுந்த
சித்திர மெவருந் தேடுசித் திரமே.
சேடியர் புகழ்ந்த தேர்வேந் தர்க்கெலாம்
பொன்னி யமுதப் புதுக்கொழுந் தென்று
மன்னவ ! நின்பால் வைத்தபே ரன்பான்
முன்னர்க் கூறிய முறைமையும், பின்னர்
வழுதிநற் சேரனை வைத்தநல் லொழுங்கும்
பழுதிலாத் தமிழகப் பற்றின் மிகுதியாம்.

குலோத்: ஆமாம், புலவர்த மருமையும் பெருமையு
மளவிடற் கரியன.

(ஒட்டக்கூத்தரை நோக்கி)

அருந்தமிழ் தெரித்த
வாரிய ! தாமிங் காவன கூறு
திருத்தலென் ? தமிழ்த்தா யெண்ணில் காலம்
வருத்தியே யுடலை மாநோன் பியற்றிப்
பெற்றனன் மக்கணீர் செற்றங் கொள்ளுதல்
தமிழ்த்தா யவட்குத் தாங்கொணாத் தீங்காம்.
ஆகலிற் பெரியீர் ! அன்புடை யீராய்
மாகமே போற்ற வளர்மதி போன்று
நண்பதைப் பெருக்கி நற்கலை மடந்தை
மன்பதை யகத்தே வளர்ந்திடப் பொருந்துவீர் !

கூத்தர் : மாணவ மணியே ! வழுத்திய துண்மை.
ஆணவ குணத்தாற் சிறிதுநா ளயர்த்தனன்.
புலமையில் வியாழனே போன்றவிப் புலவரைப்
பெரிதும் வருத்தினன்.

(புகழேந்தியை நோக்கி)

பெரியீர் ! நும்மையான்
பாண்டிய னவையினிற் பார்த்தவவ் வேளைப்
பிசகது ! பொறுப்பீர் ! பெருஞ்சொலாற் பொழிந்த
நளவெண் பாவெனு நன்மழை யதனால்
வறண்டவென் னெஞ்சம் புரண்டது புனலால்.
இருசெவி குளிர வெடுத்துநீ ரியம்பிய
நளவெண் பாவாம் நல்லமிழ் ததற்கு
நான்செய் கைம்மா றியாதா நவில்வீர் !

(புகழேந்தியின் வலக்கையினை இருகைகளாலும் பற்றி நண்புபாராட்ட.)

குலோத் : நான்செய் நற்றவ மின்றே பலித்தது !

கம்பர் : ஊன்கண் கட்குண வின்றே யுகந்தது !

பாண்டியன் : தமிழ்த் தாயின்றே தணிந்தனள் மனக்குறை !

சுவர்க்கி: தமிழக மின்றே தலைசிறந் ததுகாண் !

நகைமோ : இருளு மொளியு மின்றே கலந்தது!

குலோத் : அருளுந் தெருளு மனையநற் புலவீர்!
நாளை மிகுதியா நளவெண் ணமுதினை
யாய்வோம். இன்றோ வரும்பக லுச்சியாய்க்
காய்பசி மிகுந்தது. கலைப்போம் கொலுவினை.

புகழேந்தி : ஆய்வினை மன்னவ! அவ்வணம் புரிவோம்.
நோய்பசி நீங்கி நுண்மதி சிறக்கவே.

(கொலுக் கலைய)

(காட்சி முடிகிறது)

ஐந்தாவது அங்கம்

நான்காங் காட்சி

இடம்: சோழன் அரண்மனைப் பூஞ்சோலை.

காலம்: மாலை.

நடர்: புகழேந்தி, உழுவலன், வெண்டாமரை, குலோத்துங்கன், கற்பகவல்லி, ஒட்டக்கூத்தர், பராக்ரமபாண்டியன், சந்திரன்சுவர்க்கி, நகைமொழிநாவலன்.

(புகழேந்தியும், உழுவலனும் சோலையினூடே புகுந்து உலாவ)

(நிலைமண்டில வாசிரியப்பா)

புகழேந்தி:

ஒப்பிலா நண்பார் உழுவல! நீ முன்
செப்பிய படியே சேர்ந்தனம், ஈண்டு.
வெண்டா மரையினைக் கண்டனை கொல்லோ?
துங்கனின் மனத்தினைத் துணிவுற மாற்றிய
திங்கணன் முகத்தினு டிறமையே திறமை.
துங்க னினக்குத் தொடர்ச்சியா மன்பினைப்
பங்க மிலாவகை பாலிக் கின்றனன்.
என்னே! இளைஞரா நம்பா னுள்ள
மின்னோர் தன்மை! என்மன நின்னைக்
கண்டது முதலே கழிபே ரன்பாங்
கொண்ட னிறைந்து குமுறலாம் விருப்பம்
மிகுந்தே யருண்மழை விடாதே நின்பாற்
புகுந்தே பொழிந்திடு கின்றது! புவியில்
நீயே யெற்கு நெருங்கிய சுற்றமாம்.
தாயுந் தந்தையுந் தமயனுந் தம்பியுந்
தமக்கையுந் தங்கையுந் தனைவிட் டகலா
மனையு மகனு மகளு மாயினை!
இனியிப் பிறப்பி லேகவே யுனையான்
விட்டே வாழ்த லொட்டா வொன்றும்.
என்னே! உன்பா லிருக்குந் தன்மை!

உழுவலன் :
தன்னே ரில்லாத் தனிப்புகழ் மிக்க
புலவர் மணியே! புலனுற யானு
நும்மைக் கண்ட நொடிமுதல் விலக்கொணு
மெய்ம்மை யன்பாம் விளங்குநற் கயிற்ருற்
பிணிக்கப் பட்டுளேன். பேதையென் றமக்கையைக்
கண்டேன். அவளும் நும்பாற் கணக்கிற்
கணித்திட வொண்ணுக் கழிபே ரன்பா
னும்மையே கனவினு நனவினு முன்னிச்
செம்மையாங் காதல் கொண்டு சிறந்துளாள்.
அன்னவ டன்னை நீ ரன்புடன் மணந்தே
முன்னரெங் குறையினை முடித்திட வேண்டினேன்.

புகழேந்தி :
அமிழ்தினை யொத்தே தமிழ்மொழி பகரு
முழுவல! உனது தமக்கையின் வேண்டுகோட்
கெழுமிய மொழிகள் கிட்டுத லின்றி,
விழுமிய நின்மொழி வீணே யன்ருே ?

உழுவலன் :
ஆமாம், வீணே. அனுப்புவ லவளை.
ஏமம தில்லா விளங்கொடி யவளைக்
காப்பது நுங்கடன். கழிபே ரன்பாங்
கடலே! நொடியினி லவளின் காட்சி
கண்டு வணங்குவான் செய்குவல், காண்பீர்!
(செல்ல)

புகழேந்தி :
(தனக்குள்)
கண்டே யனைய தண்டமிழ் மொழிகளால்,
இவ்விளை ஞன்னெனை வவ்வினன் பெரிதும்!
அன்றியும், இவன்ற னரியநற் றமக்கை
வெண்டா மரையினைப் பண்டே யறிகுவன்.
அறிவுங் கல்வியு மழகுஞ் செறிந்த
தெரிவையே யாவள். ஆயினும், பெரிதும்
வறியனு மென்னை மணக்க விசைவதே
வியப்புடன் ஐயமாய் விளங்கிட லாயது.

வேண்டா :
(தோன்றி)
மேன்மைசா லன்பே! மேதினி யதனில்,

வான்மை சால் சுற்றமாய் நின்னை மதித்தியான்
திருவடி தொழுதனன்.

(மண்டியிட்டு வணங்க)

புகழேந்தி : (தூக்கி நிறுத்தி)

செந்தா மரையாட்
பெருவடி வுடைய பேரெழி லணங்கே!
உழுவலன் யாரவன்? உம்பியோ? உனையவன்
பழுதிலா துருவின் முழுவது மொத்துளான்!

வெண்டா : (நாணத்துடன்)

உழுவல வெனதுடற் பிறப்பே யாவன்.
யானே யவனும். அவனே யானும்.
யானுறு மின்ப துன்ப மவனுறு
மின்ப துன்பமாம். இணையிலா வெனதுயி
ரின்ப வெள்ளமே!—

(நாண மீதூரத் தலைகுனிந்து நிலத்தைப் பெருவிரலாற் கிளறி நிற்க)

புகழேந்தி : (வலக்கையினைப்பற்றி)

ஏந்திழாய்! உனது
விருப்ப முழுவலன் விளம்பமுன் னறிந்தேன்
கருப்பங் கட்டியே யனையநற் காரிகாய்!
அரச னரசிமுன் நமதருங் காதலை
பரசியே பகருவம், வாராய்; பைந்தொடீ!

குலோத் : (கற்பகவல்லியோடு தோன்றி)

பரசுநான் முகனும் பாரதி வாணியும்
புரையவே நீங்கள் பொலிக! நீடூழி!

(வெண்டாமரை நாணத்தாற் சிறிது பின்னிட்டு விலக)

புகழேந்தி : இம்மையி லெதிர்ப்படு மேத்தரு தெய்வச்
செம்மைசால் செல்வரீர்! சேயிழை யிவளும்
யானு மில்லற நற்சக டதனைப்
பூணுமா றமது பொன்மொழி விழைந்தோம்.

கற்பக : (வெண்டாமரையை நோக்கி)

நாணமென்? நங்காய்! நாமே யுன்னைப்
பேணுத லுற்ற பெற்றோர். வாராய்!

(வலக்கையினைப் பற்றிக்கொண்டு, புகழேந்தியை நோக்கி)

தமிழன்னை பெற்ற தமிழா சிரிய!
இமிழ்கடன் ஞால மேத்துநல் லுழுவ
லன்புள காதலி யாமிவ டன்னை
மன்பதை யுலகினில் வாழ்விலுந் தாழ்விலு
மொருபடித் தாய்க்கொண் டூழியோ டூழி
பெருமதி ஞாயிறு போலப் பெருகவே!—

(வலக்கையிற் சேர்க்க)

குலோத் : வாழ்க! வாழ்க! வாழ்க! நீ டூழி!

கூத்தர் : (தோன்றி)

வாழ்க! வாழ்க! வாணியுஞ் சிறக்கவே!

பாண்டியன் : (தோன்றி)

தண்டமிழ்ப் புலவீர்! சாற்றரும் பண்புள
வெண்டா மரையுடன் விளங்குக வூழி!

சுவர்க்கி : (தோன்றி)

மலரும் மணமும் மானவே புலவீர்!
நிலவிட வேண்டினன், நேரிழை யுடனே.

நகைமோ : (தோன்றி)

நேரிழையுடனே நேருநல் லூசிபோ
லூழிக் காலமிவ் வொள்ளிழை யுடனே
வாழிநீ டூழி! வாழி! வா ழியவே!

புகழேந்தி : மன்பதை களிக்கக் கண்டே மகிழு
மன்புடைத் துங்க! அகமிக மகிழ்வுறு
மிவ்வே ளையினில், இம்மண முதலாய்
நின்றே நடத்திய நிகரிலா வுழுவல

னின்றே போயதென் னிதயத் துற்ற
புண்போ லாயது. ஆகலிற் புரவல!
பண்போற் கிளவிகள் பகருநல் லுழுவல
னென்பாற் சேர்ந்தே யின்னுரை வழங்கக்
கண்பார்த் தருள்செய் காவல ரேறே!

குலோத்: (முறுவலுடன்)

அளப்பரு மறத்தின் றிறத்தான் விளைந்த
பொற்கதிர் நெற்கதி ராப்போ ரடித்துப்
புலவர்க் களித்த பொற்களத் தூர்வரு
புலவர்த மணியே! பொருந்திறும் மருகே
யுழுவலன் புடைய வோங்குவெண் டாமரை
யிழுதினை யிருத்தியு மின்னுமோ ருழுவல
னுமக்கேன்?

கற்பக: ஒப்பிலா வொண்டமிழ்ப் புலவீர்!
வெண்டா மரையே விடேனென வும்மைக்
கண்டே கடிமணங் கொண்டிட வேண்டி
யுழுவல னுருவோ டும்மை யீங்கே
பழுதிலா தழைத்துப் பலருங் காண
மணமது கொண்ட மறையது தெளிவீர்!

புகழேந்தி: (வெண்டாமரையை வியப்புடன் நோக்கி)

ஓ! கோ! இடையூ றொன்றையும் பொருட்செயா
உழுவலன் புள்ளாள் உழுவல னுகுத
றகவே! தகவே

குலோத்: !! வெண்டா மரையினி
றகவே கல்வித் தனிப்பொருள் சேரலே!!!

வெண்டா: (தங்கவை நோக்கி)

எளியார் வாழ்வே வலியார்க் குறுதி
யென்றே யெண்ணி யெம்போன் றெளியார்க்
குதவு மொருபெரு முயர்வுடை யரசே!
இதமுறு மெமைப்போ லேந்திழை கமலாட்
காதலன் மணிவணன் கடுஞ்சிறை நீங்கிப்

போதல் பெற்றுப் புகழ்மிகு மவளுடன்
மணமக ளுக மருவியே வாழுங்
குணமதை வரமாக் கொடுத்திட வேண்டினன்.

குலோத் : 120. இன்னு செய்தார்க் கினியவே செய்யு
நன்னயப் பாவாய்! நல்கினேன். மேலும்,
சிறையுள பலர்க்குஞ் செய்தனன், சிறைவிடு
தலையே தரணியிற் றமிழ்ப்புகழ் சிறக்கவே.

(கரந்துவர வெழினி காண)

(காட்சி முடிகிறது)

(ஐந்தாவது அங்கம் முற்றும்)

நூன்முற்றும்

பாடியுள்ள செய்யுட்களின் தொகை

பாடியுள்ள செய்யுட்களின் தொகை

முதலங்கம்.

காட்சி

1.	நேரிசை வெண்பா 3-க்கு அடி	....	12
	ஒத்தாழிசைக் கலிப்பா 1-க்கு அடி	....	18
	நிலைமண்டில வாசிரியப்பா 1-க்கு அடி	....	65
	ஆசிரிய விருத்தம் 2-க்கு அடி	....	8
2.	கலித்தாழிசைகள் 6-க்கு அடி	....	24
	நேரிசை யாசிரியப்பா 1-க்கு அடி	....	61
3.	கலித்தாழிசைகள் 3-க்கு அடி	....	9
	ஆசிரிய விருத்தம் 4-க்கு அடி	....	16
	நிலைமண்டிலவாசிரியப்பா 1-க்கு அடி	....	124
4.	நிலைமண்டிலவாசிரியப்பா 1-க்கு அடி	....	177
	கலிவெண்பா 1-க்கு அடி	....	118
	ஆகப்பாக்கள் 24-க்கு அடி	....	632

இரண்டாவதங்கம்

காட்சி

1.	நேரிசை யாசிரியப்பா 1-க்கு அடி	....	132
2.	நேரிசை வெண்பா 1-க்கு அடி	....	4
	நிலைமண்டிலவாசிரியப்பா 1-க்கு அடி	....	255
3.	நேரிசை யாசிரியப்பா 1-க்கு அடி	....	168
4.	நிலைமண்டிலவாசிரியப்பா 1-க்கு அடி	....	98
5.	நேரிசை யாசிரியப்பா 7-க்கு அடி	....	181
	ஆகப்பாக்கள் 12-க்கு அடி	....	838

மூன்றாவதங்கம்

காட்சி

1.	நிலைமண்டிலவாசிரியப்பா 1-க்கு அடி	....	80
	குறள்வெண் செந்துறை 5-க்கு அடி	....	10
	கலித்துறை 2-க்கு அடி	....	8

2.	நேரிசை யாசிரியப்பா 1-க்கு அடி	....	59
	நிலைமண்டிலவாசிரியப்பா 1-க்கு அடி	....	152
	கலிவிருத்தம் 2-க்கு அடி	....	8
	கலித்துறை 6-க்கு அடி	....	24
3.	நிலைமண்டிலவாசிரியப்பா 1-க்கு அடி	....	107
4.	நிலைமண்டிலவாசிரியப்பா 1-க்கு அடி	...	168
	குறள் வெண்செந்துறை 2-க்கு அடி	....	4
	கலித்துறை 2-க்கு அடி	....	8
	கலித்தாழிசை 3-க்கு அடி	....	12
5.	நிலைமண்டிலவாசிரியப்பா 1-க்கு அடி	....	111
	ஆகப்பாக்கள் 28-க்கு அடிகள்	....	751

நான்காவதங்கம்

காட்சி			
1.	நிலைமண்டில வாசிரியப்பா 1-க்கு அடி	....	209
2.	நிலைமண்டில வாசிரியப்பா 1-க்கு அடி	....	92
3.	நிலைமண்டில வாசிரியப்பா 1-க்கு அடி	....	97
4.	நிலைமண்டில வாசிரியப்பா 1-க்கு அடி	....	68
	குறள்வெண் செந்துறை 7-க்கு அடி	....	14
5.	நிலைமண்டில வாசிரியப்பா 1-க்கு அடி	....	65
	ஆகப் பாக்கள் 12-க்கு அடிகள்	...	545

ஐந்தாவதங்கம்

காட்சி			
1.	நிலைமண்டில வாசியப்பா 1-க்கு அடி	....	36
	நேரிசையாசிரியப்பா 1-க்கு அடி	....	55
2.	நிலை மண்டில வாசிரியப்பா 1-க்கு அடி	....	125
3.	நிலை மண்டில வாசிரியப்பா 1-க்கு அடி	....	152
4.	நிலை மண்டில வாசிரியப்பா 1-க்கு அடி	....	123
	ஆகப்பாக்கள் 5-க்கு அடிகள்	....	491

1-வது அங்கம் பாக்கள் 24-க்கு அடிகள்	....	632
2-வது அங்கம் பாக்கள் 12-க்கு அடிகள்	....	838
3-வது அங்கம் பாக்கள் 28-க்கு அடிகள்	....	751
4-வது அங்கம் பாக்கள் 12-க்கு அடிகள்	....	545
5-வது அங்கம் பாக்கள் 5-க்கு அடிகள்	....	491
ஆகப் பாக்கள் 81-க்கு அடிகள்	....	3257

புகழேந்தி

அரும்பொருள் விளக்கம்

பாயிரம்

ஆசிரிய வணக்கம்

அல்லல் திமிரம்—துன்பமாகிய இருள். துன்பம், அறிவை மயக்கிப் புலன்களைத் தடுமாறச் செய்கின்றமையால் இருளாகக் கூறப்பட்டுளது. படிதல் - சேர்தல். கடிதல் - விலக்கல். அகம் - உள்.

தமிழ்த்தாய் வணக்கம்

தரவு:—எழில்-அழகு: மங்கல மொழி. பாரதமா இளங்கொடி - பரத கண்டமாகிய பூமிதேவி. ஆர்தல் - நிறைதல். பொழில் - சோலை. தெக்கணம் - தென்னிந்திய நாடு. ஐம்மொழிகள் - தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம். புலன் - விஷயம். ஐம்பொறி - கண், காது, மூக்கு, வாய், மெய். கண்கள் இரு விழிகள். வலன் - வெற்றி, வலப்புறமாகச் சுழன்றெழும் ஒலிவடிவ வரிவடிவங்கள். எண் - கணிதம். எழுத்து - இலக்கணவிலக்கியம். வதிதல் - பொருந்துதல்.

தாழிசைகள்:—(க) மொழி - பாஷை. விருத்தி - மேன்மை. மறை - வேதம். விளம்பல் - சொல்லல். திருக்குறள், தமிழ் மறைகள் கடல் கோளால் மறைந்த இடைச்சங்க காலத்தெழுந்த தமிழ் மறை யென்பது அறிஞர்கள் முடிபு.

(உ) அகப்பொருள் - மனத்தகத்தே கண்டு மகிழும் இன்பமாகிய விஷயம். புறப்பொருள் - வெளிப்படையாய்க் கூறிநடத்தும் இல்லறம், துறவறம், அரசியல் முதலிய உலக நடையாகிய விஷயம். இவ்விரண்டினையும், வேறு எம்மொழியாரும் இலக்கணத்தோடு கூட்டி இவ்வளவு அமைதியும் அழகும் பெறக் கூறியதில்லை என்பது கருத்து. சகம் - பூவுலகம். வியப்பு - ஆச்சரியம்.

(௩) எழில் - அழகு. ஆதி - முதலியன. வீறு - மற்றொன்றற்கு இல்லாச்சிறப்பு. இப்பொழுது காணப்பெறும் சங்க நூல்கட்குத் தொல்காப்பியம் கலங்கரை விளக்கம் போன்றிருப்பதனைப் பழைய வுரைநூல்களிற் கண்டுணர்க.

(தனிச்சொல்) என - என்று. ஆங்கு - அசைநிலை.

(ஆசிரியச் சுரிதகம்)

நெறி - ஒழுக்கம். தொண்டு - ஊழியம். பூணல் - மேற்கொளல். பிடர் - பிடரி. உந்தல் - செலுத்தல். கடமை - அவசியம் செய்யவேண்டிய காரியம். படி - பூமி. பருப்பொருட்டு - நுட்பமில்லாத வெளிப்படையான பொருளையுடையது. தேட்டு - சம்பாத்தியம்,

(அவையஞ்சின நெஞ்சோடு கிளத்தல்)

புக்கிருத்தல் - புகுந்திருத்தல். இகழ் - தாழ்வு. இரங்கல் - வருந்தல். அகழேந்தல் - அகழினைப் போன்று நாற்புறமுஞ் சூழ்ந்திருத்தல். ஊர்க்குருவி - சிட்டுக்குருவி. நீதம் - நியாயம். ஒருகால் கடலொடு மாறுகொண்ட ஊர்க்குருவி யொன்று தன்னினப் பறவைகளையெல்லாம் ஒருங்கு கூட்டிக் கடலுடன் போர்செய்து வெற்றியுற்றது என்பது பழங்கதை.

முதலங்கம் - முதற்காட்சி

1-5. ஏர் - அழகு: மங்கல மொழி. இயல் - தன்மை. பார் - பூமி. அவை - சபை. பல்குதல் - பெருகுதல். ஊழி-நெடுங்காலம். வினை - காரியம். மணம் — விவாகம்.

6-10. புனல் - நீர். துறை - வழி. குவலயம் - பூமி. நனி - மிகுதிப்பொருள் தருமுரிச்சொல். வள்ளல் - கொடையாளி. தமப்பன் - தகப்பன். சமயம் - வேளை. மாட்சி - சிறப்பு. கூத்தர் தமது பெருமிதந்தோன்ற, "மாட்சியாய் வந்தனன்" என்றார்.

11-15. ஒன்று-காட்சி காணல். மற்றொன்று - மணச்செய்தி. வகுத்திடல் - விளக்கிக்கூறல். புரை - உவமவுருபு. கதிரவன் - சூரியன். மதி-சந்திரன். கிழமை - உரிமை.

16-20. செல்வன் - புத்திரன். அறைதல் - சொல்லுதல். வென்றி - வெற்றி. பெருந்தகை - சிறந்த குணங்களையுடைய குலோத்துங்கன். புல்லுதல் - தழுவுதல். புகலுதல் - சொல்லுதல்.

21-26. மா - சிறப்பு. புலவர் - அறிவாளிகள். மரபு - வம்சம். பாண்டவர்களில் அருச்சுனன் தீர்த்த யாத்திரையாகத் தென்னாடு சென்ற பொழுது, ஆண் சந்ததியில்லாச் செழியன் மகளாகிய சித்திராங்கதையை மணந்து, புத்திரப்பேறு கண்டு போக, அதுமுதற் பாண்டியர் பலர் வந்தனரென்பது புராதன வழக்கு. தீண்டுதல் - கைப்பற்றல்; மணத்தல். மகிதலம் - பூமி. சோழநாட்டில் காவிரிப் பாய்ச்சலால் நன்செய்கள் மிகுந்து, நீரினை நிலத்திற் கட்ட வேண்டி வரம்புகள் இட்டுள்ளமை இழித்துக் கூப்படுவதுபோல் சிறப்புத் தோன்றக் கூறப்படுகிறது.

கோரம்:—கோரம் - சோழனது குதிரை. கனவட்டம் - பாண்டியனது குதிரை. அம்மான் - அம்மகான்; சிரேஷ்டன். ஆர் - சோழன் அணியும் ஆத்திமாலை. வேம்பு - பாண்டியன் அணியும் வேப்பமாலை. நிகர் - உவமவுருபு. ஆதித்தன் - சோழ வம்ச முதல்வனாகியசூரியன். அம்புலி - பாண்டிய வம்ச முதல்வனாகிய சந்திரன். மீனவன் - மீன்கொடியையுடைய பாண்டியன். புலிக்கொடி - புலியின் வடிவம் எழுதப்பட்ட சோழன் கொடி. உறந்தை-சோணாட்டுத் தலைநகர். கொற்கை - பாண்டிநாட்டுத் தலைநகர். சோணாடு - சோழன் நாடு : மரூஉ.

27-30. போடுதல்-பலர்க்கும் மத்தியில் கெம்பீரமாகப் பேசுதல். இவர்தல் - ஏறிச் சவாரி செய்தல். மிகுதல் - மேம்படுதல்.

31-35. செழியன் - பாண்டியன். புவி - பூமி. கவின் - அழகு. வீரன் - பராக்கிரமசாலி.

35-40. காட்டுப்புலி - காடுகளில் வசிக்கும் புலி; கொடிய மிருகம். கடல்மீன்-கடலில் வசிக்கும் மீன். காட்டில் வசிக்கும் ஒன்றுக்குக் கடலில் வாழுமொன்று பயப்படுவது அசம்பவம் என்பது கருத்து. பழஞ் சோணாடு - மேன்மையான சோணாடு; பழைமையான (உபயோகமற்ற) சோணாடு. களி - தமாஷ். சிறப்பெனும் வரப்பு - நீரை நிறைத்துப் பயிரை வளர்க்கும் வரப்புக்கள். நீர் தேக்கிடும் வரப்பு - நீரைத்தேக்கிக் கொசுகொடுநாற்ற முதலியவற்றை யுண்டாக்கும் குட்டையின் கரைகள்.

ஒருமுனி :—ஒரு முனிவன் - ஒப்பற்ற அகத்திய முனிவர். நேரி - சோணாட்டிலுள்ள தொரு மலை. உரை - தமிழ்; தென்னாட்டு மக்களால் பேசப்படுவது. "நேரியிலோ ?", என்றவிணு நேரியிலன்று, பொதியிலில் எனப் பொருள் தரும். இங்ஙனமே மற்ற விணுக்கட்கும் மறுதலையான பாண்டியன் தலைநகர் முதலியவற்றைக் கொள்க. கடி - பேய். தாதகியங் கண்ணி - ஆத்திமாலை. பரவை - கடல். பராக்கிரமம் - வீரம்; பாண்டியன் பெயரையே குணமாகக் கொண்டார். பகர்வரிது - எடுத்துச் சொல்ல முடியாத அவ்வளவு அருமையானது. இது புகழேந்தியாரின் கருத்து. இதனை ஒட்டக் கூத்தர், "எடுத்துச் சொல்லுதற் கொன்றுமின்று," என "அரிது," என்பதற்கு இன்மைப் பொருள் கொடுத்தல் பின்னர்க் காண்க.

41-45. குடைதல் - வருத்தல். கொடை - கொடுக்கப் படுவது. விடுத்தல் - போகவிடல். விடை- பதில். மற்று - வேறு. "பராக்கிரமம் பகர்வரிது," என்ற தொடர்க்கு கூத்தர் முற்கூறியாங்கு வேறு பொருள் கொண்டமையின், "வெற்றியை விளக்க மற்றினியிலை," என்றூர். துங்கன் - குலோத்துங்கன். பாயல் - படுக்கை.

46. "யாவும் கனவிற் றேன்றும்," என மாற்றுக.

வென்றி :—வென்றி - வெற்றி. வளவன் - சோழன். விறல் - வலிமை. பிரான் - பெருமான். "முதுகிற்கு என்றும் கவசம் இடான்," என்று கூட்டுக. துன்றுதல் - நெருங்கல். வெறி - வாசனை. தொடை - மாலை. கமழ்தல் - வாசனை வீசல். "(பகைவர்)புறங் கொடுக்கின் மீனவர் கோன் கைவேலினை (அப்பகைவர்மேல்) எறியான் என்று (நினைத்து) வளவன் என்றும் முதுகிற்குக் கவசம் இடான்," எனக் கொண்டு கூட்டுக. புறங் கொடுத்தல்—போரில் நிற்க மாட்டாது ஓடுதல்.

47-50. இயல்பு - மேன்மை. 'அவன்கை கொண்டு அவன்கண் குத்தல் ;—பழமொழி.

51-55. போர் - வாக்குவாதம். மணவினை-விவாக காரியம். சிந்தனை - ஆலோசனை.

56-60. 'பழநழுவிப் பாலில் விழுந்தது,' —பழமொழி.

61-65 கணியார் - ஜோதிடர்- அமைத்தல் - எழுதுதல். பாங்கு. ஒழுங்கு. மலரடி - மலர்போன்ற பாதங்கள்.

முதலங்கம் - இரண்டாங்காட்சி

கலித்தாழிசைகள்

க. வெள்ளம் - நீர். உள்ளப் பெருக்கு - மணலூடு பெருகிச் செல்லுநீர். அம்மானை - மகளிர் விளையாட்டுகளிலொன்று: மூவர் ஒருங்கமர்ந்து கொண்டு, யாதாமொரு பொருளை கடாவிடைகளாலாராய்ந்து பாடிக்கொண்டே அம்மனைக்காய்களை மேலேதூக்கி யெறிந்து அவைகளை மாற்றி மாற்றிக் கைப்பற்றுவது. இங்கு அம்மனைக் காய்களை முன்னிலைப்படுத்திக் கடாவிடைகள், அன்று முற்பகலில் நடந்த புகழேந்தி ஒட்டக்கூத்தர் சொற் போரே பொருளாகக் கூறப்படுகின்றன. பிள்ளை - திருஞானசம்பந்தர். பிறங்குதல்-விளங்குதல்.வையை குண்டோதரற்காக சிவபெருமான் தமது சடையினின்றும் வெளிவிட்டார் என்பது புராணகதை.

உ. ஊர் - கொற்கை. காண்- முன்னிலையசை. பெரும் புலவர்- புகழேந்தியார்.

ங. தட்சன் சாபத்தால் கலைகளை யிழந்த சந்திரன் சிவன்முடி சேர்ந்து சிறப்புற்றான் என்பது புராணம். நிகர் - உவமவுருபு.

ச. இன் - ஐந்தனுருபு: எல்லைப் பொருளது. வலித்தல் - வற்புறுத்தல். மாயம் - வஞ்சகம். நெடுமால் - மகாவிஷ்ணு. புரிதல் - விரும்பல்.

ரு. போர்-வாதம். உறந்தை- உறையூர். மதுரை - கொற்கையைச் சார்ந்த மதுரையாகியவூர். உரைத்தல் - சொல்லுதல்.

சு. மாறர் - பாண்டியர். பெரும் பரவை - சமுத்திரம். வழிபடல் - வணங்கல். பாண்டியர்களிலொருவனை ஒரு கால் சமுத்திரம் அவன் விட்ட வேலால் அடங்கிப் பணிந்தது என்பது புராணம். மணங்கொண்டார் - வளவர்கள் கற்பக வல்லியை மணம்பேசி வந்தனர்; உலகமக்கள் பாண்டியர்களின் சிறந்த ஆட்சியால் தமிழ் மண முதலிய மேன்மைகளை யடைந்தனர்.

1-5. அம்மனைப் போது - அம்மானை விளையாடுங் காலம். பூரிப்பு - மகிழ்ச்சி. குல + உத்துங்கன் = குலோத்துங்கன் - குணசந்தி. விள்ளல் - பிளவுபடல். கொள்கை - பெருந்தன்மை முதலிய போக்கு.

6-10. வல + உத்துங்கம் = வலோத்துங்கம் - வன்மையாகிய மேன்மை. வண்மை - கொடைத்தன்மை. புயல் - மேகம். சூழ்ச்சி - ஆலோசனை. தவ - மிகுதிப் பொருள் தருமுரிச் சொல்.

11-15. கவிக்களிறு - புலவர்களாகிய ஆண்யானைகள். உகைத்தல் - செலுத்தல். கவுடம் - இருவகைச் செய்யுள் நெறிகளிலொன்று. மற்றொன்று வைதர்ப்பம். சினம் - கோபம். பதற்றம்- அவசரகுணம். மன்னவை - அரசசபை. மன்றல் - விவாகம். வேட்டல் - விரும்பல்.

16-20. "குலத்தினைப் பலபடியாகப் பழித்தனர்", எனக் கூட்டுக. தொன்மை - பழமை. பாவை - பெண்.

21-25. தெரியிழை - பெண். பாங்கிகள் - தோழிகள். உய்யானம் - சிங்காரத் தோட்டம். வந்தோம் - விரைவு பற்றி வந்த கால வழுவமைதி. ஒருங்கு - ஒன்

ருக. வழுத்தல் - சொல்லல் : கட்டளையிடல்.

26-30. சென்றனன் - முன்போல் வந்த காலவழுவமைதி. மன்று - கோயில். வாமம் - அழகு. கிழி - சித்திரம்.

31-35. மன்பதை - மக்கட் கூட்டம். அகன் - மனம். "வகுத்தவ னருளால் அது இன்று முடிந்தது," என முடிக்க. வாய்த்தல் - பொருந்தல். ஐயம் - சந்தேகம். பார் அணி - பூமிக்கு அழகினைச் செய்யும்படியான. பய + உததி = பயோததி - பாற்கடல்.

36-40. திரு-இலக்குமி. உந்திடல் - மேற் செலுத்தல். "நெருப்பின்றிப் புகை தோன்றாது," என்பதுதருக்க நூலிற் கண்டதாம்.

41-45. பாகு - தேன் பாகு. கண்டு - கற்கண்டு. வண் + தமிழ் = வண்டமிழ் - சொல்வளம், பொருள்வளமிக்க தமிழ். கொல்- அசைநிலை. மாற்றம் - வாக்கியம். "முன்னர்த் தந்தையார் சாற்றிய மாற்றமே இம் மணத்தினைப் பேசிட வந்திடச் செய்தது," என மாற்றிக் கூட்டுக.

46-50. அயர்த்தல்-மறத்தல். பொற்கொடி - பெண். வாயில் - காரணம். அறைதல் - சொல்லுதல். மகிதலம் - பூமி.

51-55. ஓதல் - சொல்லல். அணங்கு - பெண். ஐயுறல்-எதிர் மறைவியங்கோள் வினைமுற்று. வாணி - சரஸ்வதி.

56-61. காரிகை - பெண். அம்பிகாபதி - சிவபெருமான். தென்றல் - தெற்கிலிருந்து வீசுங் காற்று. தளிர்-இளமையானஇலை. உந்தல் - அடித்துச் செலுத்தல்.

முதலங்கம் - மூன்றுங்காட்சி

கலித்தாழிசைகள்

க. சந்தம் - அழகு; சந்தனம். ஆர்தல் - பொருந்தல். அந்தம் - அழகு. சோமன் - சந்திரன். சுந்தரமாம் வழுதி - சோம சுந்திர பாண்டியன். சொக்கலிங்கம் - மதுரையிற் கோயில் கொண்ட பெருமான். அளித்திடல் - வெளிவிடல்.

உ. கொந்து - பூங்கொத்து. குழல் - கூந்தல். குழலல் - கலத்தல். கந்து - பந்து. இலங்கல் - பொருந்தி விளங்கல். கரம் - கை. கன்றல் - உட் புண்ணுதல். ஆர்த்தல் - ஒலித்தல். தாவில் - கேடில்லாத. ஆரம்-இந்திரனாற் கொடுக்கப்பட்ட பெரியமாலை. "தமிழ் நாட்டில் வற்கடம் வந்த காலத்தில் மழையினை வேண்டி இந்திரன்பாற் சென்ற தமிழ் வேந்தர்களில், பாண்டியன் வணங்காமுடியனாய், இந்திரனாற் கொடுக்கப் பெற்ற வலிய மாலையினைச் சுமந்து திரும்பினன்," என்பது புராணம்.

ங. வான் - ஆகாயம். வளவன் - சோழன்;குலோத்துங்கன். சூரியன் மரபு - சோழவம்சம்

தூறம்.

க. நேரி - சோணாட்டு மலை. நேரிழைமார் - பெண்கள். வாருடை - மார்க்கச்சினையுடைய.

நேர்உடை - ஒழுங்கான உடைகளையுடைய. வழங்கிய - பழகிய. கலை - வஸ்திரம். வழங்கல் - கொடுத்தல். நடப்பன - எதிர்காலம். நடந்தன - இறந்தகாலம். நிகழ்காலம் - சிறப்பின்மை கருதி விலக்கப்பட்டது.

1-5. மாகாதிபன் - இந்திரன். அமுதாம் - அமிர்தம் போன்றவளாகிய. காந்தள் - அகங் கையினைப் போன்ற ஒருவகைப்பூ. அன்பு - உளம் = அற்புளம். ஆடி - முகம் பார்க்குங் கண்ணாடி. பிற்பகல் - எதிர்காலம். பேணல் - விரும்பல்.

6-7. கற்பகம் - சேர்ந்தார்க்கு விரும்பியவற்றைக் கொடுக்குந் தெய்வீக மரம். பொற்பகம் - மகிழ்வாற் பொலியும் மனம். புகர் - அசுரகுருவாகிய சுக்கிரன். நிகர் - உவமவுருபு.

தூறம்

உ. செய் - நன்செய்: கழனி. தாமரை - பத்மரேகை. துய்யது - சிறந்தது. இறை - வரி; கோடு. ஐயென - வியப்பாக. சுட்டிய விரல் - சுட்டுவிரல்.

ங. மாண் உடை - உயர்வினையுடைய. தாள்நிழல் - பாதமாகிய சார்பு. போகம் - அனுபவம். தளர்தல் - சோர்வு. மாணிழை - கற்பகவல்லி. கதித்தல் - மிகுதல். வடதிசைக் கொண்கன் - வடக்குத் திக்கிலுள்ள நாயகன் (குலோத்துங்கன்). வாய்த்தல் - கிடைத்தல்.

ச. கூர்ந்து நோக்கின், நிகழ்காலம் இறப்பிலும், எதிர்விலுஞ் சேர்ந்து மிகுவது துளியேயாகலின், காலம் இரண்டெனப் பட்டது. கதிர்மதி - சூரிய சந்திரர். "நிச்சயம் பலித்திடும்," என மாற்றுக. ஓலை - பனையோலை. மட்டை - பனைமட்டை. திறம் - வகை.

8-10. மைக்குறி - இயல்பாகவே மையிட்டாற் போன்ற கரிய அடையாளத்தை யுடைய. மாலை - முத்துமாலை.

11-15. மாலை - வரிசை. சுரும்பினம் - வண்டுக்கூட்டம். நாறுதல் - மணத்தல். இரும் - பெரிய. நங்கை - பெண்களிற் சிறந்தவள். குடர் - குடல். தொல்லை - துயர்.

16-20. குரக்கு - குரங்கு. வாதை - உபாதை. "ஊண் உண்ணவும், உடை பூணவும்," என மாற்றிக் கூட்டுக. மாண் - உயர்வு. ஆண்டு - வயது.

21-25. அனைத்தும் - அவ்வளவும்: யாவும். நந்தல் - கெடுதல். கற்று - கன்றினையுடைய பசு. கரத்தல் - ஒளித்தல்.

26-30. மான - போல. கானம் - காடு. கொடி - கொடி போன்ற பெண். கடிது - விரைவு. சென்றனன் - முற்றெச்சம். வாள் அமர் — வாளாயுதத்தை யொத்த.

31-35. பூ - பூமி. இயங்கல் - திரிதல். குடங்கை — உள்ளங்கை.

36-40. வண்கால் - வளமுள்ள காற்று. நுகர்தல் - அனுபவித்தல். இவண் - இவ்விடம்.

41-45. மறி - மான். சென்றனம் - காலவழுவமைதி. கிள்ளை - கிளி. முருக்கு - முருக்கம்பூ. கிள்ளை சொல்லிலும், முல்லை எயிற்றிலும், முருக்கிழ் வாயிதழிலும் தோற்கும் என முடிக்க. வல்லை - விரைவு. நல் எழில் - நல்ல சந்தர்ப்பம்.

46-50. இந்திரை - இலக்குமி. நந்தெழில்—சிறந்த அழகு. பைந்தொடி - பசியவளையல்-

செவிலி - வளர்த்த தாய். தவிசு - தலைமையாசனம். தவிசுடைத் தாய் - பாண்டிமாதேவி. அவள் - செவிலி. உன்னல் - நினைத்தல்.

51-55. செறிதல் - நெருங்கல். பித்து - மயக்கவுணர்வு. மற்று - அசைநிலை.

56-60. ஈனல் - பெறல். ஞான்று - பொழுது. இணையறு - ஒப்பில்லாத. களி - மகிழ்ச்சி. பழி - குற்றம்.

61-65. சேமம் - க்ஷேமம் - பாதுகாப்பு. மனக்கோள் - மனத்தே கொண்ட விருப்பம். வையகம் - உலகம். தகைதல் - விலக்கல். குடக்கெழுமதி - மேற்கிற் காணப்படும் வளர்பிறைச் சந்திரன். குழுமிடல் - மிகுதல். காணுதும் - காண்கின்றோம்.

66-70. கலைமகள் ஔவை - சரசுவதி யம்சமாகிய ஔவைப் பிராட்டி(யினை முருகவேள் காட்டினிடத்தே தோன்றி வாதத்தால் வென்றமை கர்ண பரம்பரைக் கதைகளி லொன்று). வை - கூர்மை. வேல் வேன் முருகன். நூலாசிரியரின் வழிபடு தெய்வமாகிய முருகப் பெருமான் இடையிற் புகழப்படுகின்றூர். இம்முறையே மற்ற அங்கங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு முறை புகழப்படுதல் காணலாம். தையல் - பெண். சாற்றல் - சொல்லல். கையாள் - ஏவலாள்.

71-75. ஆரூடம் - எதிர்கால நிகழ்வினை முன்னறிந்து கூறல். வார்குழல் - பெண். வாதிடல் - மறுத்துப்பேசல். ஒண்ணுதல் - கூடுதல், இயலுதல்.

76-80. "கார்த்திகை மாதப் பிறையினை மேகச் செறிவாற் காணுதலரிது," என்பது பழைமையான தொரு கொள்கை. கவின் - அழகு. செருக்கு - கர்வம். அவா - பேராசை. தென்னவன் - பாண்டியன். பொதியை - பொதிகை.

81-85. பொருப்பு - மலை. புகன்றது - சோதிடர் முதலோர் கூறிய விஷயம். குன்று எனும் - குன்றென்று சொல்லக்கூடிய. வகுத்தவன் - இறைவன். மடி - சோம்பல்.

86-90. "புகன்றது (81) தீதெனில்," என எடுத்துக் கூட்டுக. திடும் - ஒலிக்குறிப்பு. காதுதல் - கொல்லுதல். தெய்வம் - தலைவிதி.

91-95 வறிது - வீண். நலிதல் - துன்புறல். அவனி - பூமி. தாகம் - விருப்பு. திகம்பரன் - திசைகளை யாடையாகக்கொண்ட இறைவன். பரிபவம் - வீணே வியாகூலப் படுகின்ற (மனம்). பாங்கு - ஒழுங்கு; சிதருத செயல்.

96-100. கடமை - மக்கள் அவசியஞ்செய்து தீரவேண்டிய காரியங்கள். மடமை - அறியாமை. அணி - அழகு. மணியாய் - ஒலிக்கின்ற மணிபோல். மிழற்றல் - பேசுதல். வனிதை - பெண்.

101-105. கன்னல்-நாழிகை. நேர் - போல. பொறி - அடையாளம். புகறல் - சொல்லல். "நிறைந்தனவாகிய புது மலர், (106) சோகமலராய் மாறின," எனக் கூட்டுக.

106-110. மான - போல. சோகம் - துயர் : எதிர்ப்பதம் - அசோகம். நானம் - வாசனை. வளை - வளையல். நாண் - வெட்கம். கணீர் - கண்ணீர். கயல் - ஒருவகை மீன். அந்தோ-ஐயோ.

111-115. இளங்கொடி -

பெண். மாற்றம் - மாறுபாடு. நொடி - விநாடி. பூவை-மைனு. தேவு - கடவுள். தெளிதல் - ஆலோசித்தறிதல்.

116-120. கூடினுர் - தலைவ ளோடு கூடியுள்ள பெண்கள். கொழுநன்-தலைவன். மதவேள்- மன்மதன். பூங்கணை - பூவாகிய அம்பு. அவை முல்லை, அசோகு, நீலோற்பலம், தாமரை, மாம்பூ என்பனவாம். உணர்வு - நினைவு. புல்லுதல் - சேர்ந்திருத்தல். வாளி - அம்பு. விளம்பல் - சொல் லல். ஒவ்வுதல் - பொருந்துதல்.

121-124. கனி - பழம். குட திசை - மேற்குத்திக்கு. கதிர வன் - சூரியன். கடிமனை - அரண்மனை. பொரு - ஒப்பு. கா - சோலை. கடி - சிறப்பு.

முதலங்கம் - நான்காங்காட்சி

1-5. அனல்-நெருப்பு. சாந்து- சந்தனம். மெய் - சரீரம். திரை - அலை. பால் நிலாச் செல்வன் - பால்போன்ற வெண்மையான கிரணங்களைச் செல்வமாகக் கொண்டுள்ள சந்திரன். மால் - மயக்கம். நட்டார் - சினேகர்.

6-10. தமிழ் மறை - திருக் குறள். இயம்பல் - சொல்லல். பயன் - பால். துள்ளுதல்-குதித் தல். துடும் - ஒலிக்குறிப்பு. கவிழ் த்தல் - சாய்த்தல். கவின் - அழகு. மதி - சந்திரன்.

11-15. கூலவாணிகப் புல வன் - மதுரைக்கூல வாணிகஞ் சாத்தனுர்: மணி மேகலையினை இயற்றிய ஆசிரியர். கூலம்- தானியம். வாணிகன்-வியாபாரி. உபசாரம் - ஒன்றை மற்றென் ருகக் கூறுதல். கருப்பு - கரும்பு. திராவகம் - செய்நீர். வெண் கலம் - வெண்மையான பாத்தி ரம்.

16-20. சதி - வஞ்சனை. விசாகை - விசாக நட்சத்திரம். மதோஒன் மத்தன் - மிகுந்த வெறியன்; சந்திரன்: செய்யு ளிசை நிறையள பெடை. கலை - சந்திரனின் ஒளி. பேரினை- பெயரையுடைய ஒளியை. நேடு தல் - ஆராய்தல்.

21-25. ஒருபடி நீரிலிட்ட அரைப்படி உப்பானது கரைந்த பின், அந்நீரினை அளக்குங்கால், அந்நீர் மிகாது, ஒருபடியாகவே காணுமென்பது அறிவாளிகளின் முடிபு. தொல்காப்பிய வுரையில் நச்சினுர்க்கினியர், "அப்பிலிட்ட வுப்பே போன்று." எனக் கூறு தலை நோக்குக இழந்தனள் - முற்றெச்சம். ஏந்திழை - பெண். ஓகை - மகிழ்ச்சி: உவகை யென்பதன் மரூஉ. புல்லிடு தல் - தழுவல். மயம் - வடிவம்.

26-30. செயல் - தொழில். தன்மை - குணம். திகழல். விளங் கல். மரபு - வழக்கம். வாள் - ஒளி. கார்த்திகை - கார்த்திகை நட்சத்திரம். திறம் - தன்மை. புலம்பல் - வருந்தல்.

31-35. வடமீன் - அருந்ததி நட்சத்திரம். நாற்குணம் - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. பொற் கொடி - பெண். மறை - இரக சியம். நவின்றிடல் - சொல்லல்.

36-40. வம்மின் - வாருங்கள்.

வயங்கிடல் - விளங்கல். நாள் - நட்சத்திரம். புலர்தல் - உலர்தல்.

41-45. கருவாடு - காய்ந்தமீன். வடமீன்-வடமாகிய மீன். வடம் - வடகம் : வற்றல். வடாம் - வற்றல். வாகு - ஒழுங்கு. அயனூர் - பிரமன். நாவாம் பூ - நாக்காகிய பூ (மேலமர்ந்தாள் - சரசுவதி) பொருந்திடு மிடம் - வெண்டாமரை.

46-50. அயர்தல் - சோர்தல். அருத்தல் - உண்பித்தல் ; கொள்வித்தல் ; மேற் கொளச் செய்தல். "தலை நொந்திடும்," எனக் கூட்டுக

51-55. குடக் கெழும் - மேற்கிற் றோன்றும். புரை - குற்றம், பாலிற்கு இட்டு வைக்கும் புரை மோர்: பாலின் தன்மையைக் கெடுத்துத் தயிராக்குதலின் புரை யெனும் பெயர் வந்தது போலும். குத்தல் - ஊற்றல். அருந்ததி - அருமையான தயிர், நட்சத்திரங்களிலொன்று. மருகி - மருமகள்: மருமகன் - ஆண்பால். பரணி - நட்சத்திரங்களிலொன்று ; பரணுக்குப் பெயராக வழங்கும் கிராமிய மொழி.

56-60. அகத்தியம் - அவசியம். எங்ஙனம் - எவ்விதம். தெண்ணீர் - தெளிந்த நீர். குறுகுவது - சேர்வது. ஆண்டு - அவ்விடம் ; பரணில். "ஆண்டு எங்ஙனந் தெண்ணீர் கொண்டு குறுகுவது?" என மாற்றுக. குறிப்பிடுதல் - தெரிவித்தல். முறுமுறுத்தல்-வெறுப்புக் குறியினைக் காட்டல். முறுவல் - சிரிப்பு.

61-65. பரண்-விறகு முதலியன இட்டுவைக்கும் சிறிய மேற்றளம்.

66-70. கட்டுரை - உறுதி மொழிகளாகிய பயன் படு சொற்கள். விருந்து - நல்லுணவு.

71-75. கூர்த்திடு திசை-நுட்பமாகிய வடதுருவத்தைக்கொண்டிடு திக்கு. தென்மொழி-தென்னாட்டில் வழங்குந் தமிழ்ச்சொல்.

76-80. ஒண்டொடி - பெண். முளைத்தல் - தோன்றல். புரை - கெடுதல். முதனிலை - பகுதி.

81-85. வினைமுதற் பொருள் விகுதி - இ, ஐ, அம் என்பனவாம். முன் - முதலெழுத்து. கிளர்தல் - தோன்றுதல். விண்மீன் - நட்சத்திரம். கயல்-மீன். கோதை - பெண்.

86-90. பறி - மீன்கள் இட்டு வைக்குங் கூடை. பாசம் - யமன் கைக்கயிறு. நடுவன் - யமன். பரதன் - வலைஞன். பௌவம் - கடல். துங்கம் - உயர்வு. வானம்- ஆகாயம்.

91-95. கணம் - கூட்டம். விண் - ஆகாயம். உடுத்திரள் - நட்சத்திரக் கூட்டம். அடுக்கும் - பொருந்தும். வடபால் நாள் - வடக்குத் திக்கிலுள்ள நட்சத்திரம். மதித்தல் - நினைத்தல். கடலை=கடல்+ஐ எனப் பிரித்துச் சமுத்திரத்தை எனப் பொருள் கொள்ளுதலை விடுத்து, பின் (103) கடலையாகிய ஒரு விதப் பயறு எனச் செந்தாமரை பொருள் கொள்ளுதலைக் காண்க. தண்தமிழ் - குளிர்ந்த தமிழ்.

96-100. மீனினை - மீன் என்னும் வார்த்தையை. வாய்மை - உண்மை. இறுதி - அம்மென் விகுதி.

101-105. இலச்சியம் - இலக்கணநூற்படி வழங்குமுதாரணம். இயம்பல் - சொல்லல். விலக்க + அரும்=விலக்கரும் ; தொகுத்தல் விகாரம்: மறுக்கவியலாத. நகை-பற்கள். நிலக்கடலை-வேர்க்கடலை. தணிதல் - நீங்கல். உமிழ்

நீர் - எச்சல் நீர். படுதல் - அகப்படுதல். பகர் - முன் சொன்ன.

106-110. கடு - விஷம். விகடச் செயல் - வேடிக்கையாகப் பேசல். முது - பழைமை. பிழைப்பு - ஜீவனம். உழை - மான். உணர்தல் - அறிதல். கொல் - ஐயப்பொருள் தரு மிடைச் சொல்.

111-115. வாளா - வீணே. மீளுதல் - திரும்பல். இருவரும்- செந்தாமரையும், வெல்வாயனும்.

116-120. தோகை - பெண். துளங்கிடல் - பயப்படாதே. நவிலல் - சொல்லல். நாசி-மூக்கு. மாது - பெண்.

121-125. போர் - சண்டை. புகலிடம் - பாதுகாப்பு. வம்பு - தீமை. வாதிடல் - மறுத்து மொழிதல்.

126-130. பன்னுதல் - சொல்லுதல். கடலே - சமுத்திரத்தை, கடலேயாகிய பயறு. மடவரல் - பெண். மூளே-பகுதி.

131-135. முதல் - பகுதி. கிளவி - சொல். பகர்ச்சி - சொல்.

136-140. ஒலி - சொல். அழி வழக்கு - புரட்டு நியாயம்.

141-145. "இவ்வெம் மொழித் தொடரினை .... (157) செந்தமிழ்ச் செல்வியின் சீரினையறிந்த நாம் விட்டிடணேரிதாம்," எனப்பின் கூட்டி முடிக்க. புரை - போன்ற. மலயப் பொருப்பு - பொதியமலே. நிலவுதல் - தங்குதல். கால்-பொழுது. தென்னர் - பாண்டியர். நன்னர் - நல்ல. மாடம் - உப்பரிகை.

146-150. பொய்த்தல் - நீரின்றி வறளல். கடுப்ப - ஒப்ப. காழி வள்ளல் - திருஞான சம்பந்தர். பற்று - அன்பு.

151-155. சிற்றில் - சிறுவீடு: சிறுமிகள் கட்டி விளையாடும் மணல்வீடு. இழைத்தல் - கட்டல். மூபெரும் வேந்தர் - சேரர், சோழர், பாண்டியர். அளித்தல்- காப்பாற்றல். மொழி - பாஷை.

156-160. கன்னி - கட்டழகு மாருத இளம்பெண். கன்னி நாடு - கன்னிகையாகிய தடாதகைப் பிராட்டியாரால் ஆளப்பட்ட பாண்டி நாடு. சீர் - சிறப்பு. கட்டி - சருக்கரை. நேரிது - நல்லது. பிறந்து (143), திகழ்ந்து (144), இருந்து (145), தவழ்ந்து (147), நின்று (150), ஆடி (152), அளித்து (154), ஈன்று (155), திகழ்ந்த (156), செந்தமிழ்ச் செல்வி (157) என எச்சங்களைக் கூட்டி முடிக்க. கழறுதல் - இடித்துப் பேசுதல். நாரி - பெண்.

161-165. வேய் - மூங்கில். தொடார் - பகைவர். துவன்றுதல் - பொலிவுறுதல். வென்றி - வெற்றி. தடாதகைப் பிராட்டி - பகைவரால் தடுக்க வொண்ணுத தகுதியினையுடைய பெருமாட்டி. காதை - வரலாறு. "நாங்கள் இன்பினை யெய்த இயம்பாய்," என முடிக்க.

தடாதகை திருமணம்
(கலிவெண்பா)

௧-௪. பூமேவுபுத்தேள் - பிரமன். புள் - கருடன். கார்வணன் - திருமால். ருத்திரர் - சங்காரத் தொழில் நடத்தும் தெய்வம். செம்பொருள் - பரம்பொருள். தேடு அரிய - இவ்வள வென்று கணக்கிட் டறியவொண்ணுத. மருந்து - அமிர்தம்.

௫-அ. நல்குதல் - கொடுத்தல். பசுங்கிளி - தடாதகை "ஒளியாய், மருந்தாய், எப்

பொருளும் நல்கும் பசுங்கிளி," என முடிக்க. கூர் - மிகுதி: உரிச்சொல். மார்க்கண் - முலை நுனி. கார் - கரிய. அயில் - வேல், "கண்பசுமை நிறம் பூணு(து)", என மாற்றிக் கூட்டுக. து - தொகுத்தல் விகாரம். வயிறு காணல் - வயிறுபருத்தல்.

கூ-கஉ. ஐயிரண்டு திங்கள் - பத்துமாதம். மார்பு - முலை. கயற்கொடி - மீன்கொடி. மார்பு மூன்றாய், வயது மூன்றாய்," எனத் தனித் தனி கூட்டுக. களித்தல் - மகிழ்தல். பெயல் - மழை. "பசுங்கிளியின் அருளால், கார்நிறமாய்க் காணாது, வெளிறாது, பூணாது, வயிறு காணாதே, செய்யாது, தாங்க, மூன்றும் வருந்திருவே !" என்று எச்சங்களைக் கூட்டி முடிக்க.

கங-கசு. சாதகம்-ஒருவகைப் பறவை. காசினி - பூமி. "திருகுளிக்கும் மாமகுடம்," எனப் பிரித்துக் கூட்டுக. மதி-அறிவு. அமைச்சர் - மந்திரிகள். ஏறு அரி-ஆண்சிங்கம். பகுவெண்மை-பாதியான வெண்மை நிறத்தோடு கூடிய.

கஎ-உ0. திங்கள் - அட்டமி நிலவு. நுதல்-நெற்றி. "வெண் கமலக் கோயில், செங்கமலக் கோயில்," எனப் பிரித்துக்கூட்டுக. மங்கையர் - சரசுவதி, இலக்குமி. கவரி - சாமரம். இரட்டுதல் - வீசுதல். சங்கை - ஐயப்பாடு. கஞ்சுகர் - மெய்காப்பாளர். சேவை செயல் - காட்சி காணல். மஞ்சர் - மைந்தர். அஞ்சம் - அன்னம்.

உக-உச. மறைநூல் - வேதம். சங்கச் செய்யுள் - சங்கநூல்கள். சந்தம் - மேன்மை. சாரம்-முக்கியபாகம். மைவண்ணன்தங்கை- திருமாலின் சகோதரியாகிய பார்வதி. சைவலம் - பாசி.

உரு-உஅ. சூழ்தல் - நெருங்கல். சுமதி - பாண்டி நாட்டு மந்திரி. ஒற்றர் - வேவுகாரர். "களிக்க, போற்ற, புனைந்து, சூழ, சார்ந்து, இரட்ட, விலக்க, உணர்ந்து, இருத்தி, மாநிலத்தை ஆளும் அரசே!" என முடிக்க. "சூழ்ச்சியினாலும், ஒற்றராலும் ஆளும் அரசே!" என உம்மை கொடுத்துப் பொருள் கொள்க. பேடு - பெட்டை. பேறு - பெறக் கடவதாகிய விஷயம். கூடுதல் - ஒன்று சேர்தல்.

உகூ-நஉ. உள்ளம் - மனம். ஓங்கிய - சிறந்த. கள்ளம் - வஞ்சகம். வள்ளல் - அளவின்றிக் கொடுத் துதவுவோன். மெய்ப் பொருள் - பரம்பொருள். வில்- ஒளி. வைப்பு - மூலதனம். பள்ளி - கலாசாலை. மாட்சித்து- பெருமையினை யுடையது. "இப் பேருலகம் அன்பாங்காட்சிபெற, மெய்ப் பொருளாற் பல உயிர்க்கும் கட்டிவைத்த பள்ளிக் கூடம் போன்ற மாட்சித்து," என முடிக்க. கைப்பு - வெறுப்பு.

நந-நசு. பேதமை - அறியாமை. தன்னலம் - சுயலாபம். கோது - குற்றம். ஆன்மா-உயிர். குவலயம் - பூமி. ஆதரவாய் வருதல் - பிறத்தல். அம்மைமாட்டு- தாயிடத்தில். மாதந்தை - சிறந்த தகப்பன். சுற்றத்தார் - உறவினர். மைந்து - வலிமை.

நஎ-ச0. நட்டார் - சிநேகர். நெட்டால் - நெடிய ஆலமரம். நுண்விதை - சிறியவிதை. ஒட்டார் - பகைவர். ஒருபதி - பரம்பொருள். அலகிலா - அளவில்லாத. ஆர்ந்து - அமைந்து. மலம் - அழுக்கு.

சக-சச. வீடு - மோட்சம். காண்டி - காண்கிருய். "ஆன்மா குவலயத்தில் (ந.ச), வந்து அம்மை தந்தை (நடு), முதலோர் பால் (நஎ), அன்பு (நடு), நாளடைவிலே பெருக்கி, ஒட்டார் இலராய், ஒரு பதியைப் போல, அன்புருவாய் ஆர்ந்து, நீக்கி, வீடடைதல் காண்டி," எனக் கொண்டு கூட்டுக. வேதகம் - வேறுபாடு. வீட்டறம் - இல்லறம். மேதினி - பூமி. நுண்பொருள் - நுட்பமான வஸ்து. ஓர்தல் - அறிதல். களிமகன் - கட்குடியன். கட்டுரை - உறுதி மொழி. 'அன்பினை வீட்டறத்தை விட்டடைதல் களிமகனின் கட்டுரையாம்'', என முடிக்க. தெளிதல் - ஆலோசித்தறிதல்.

சடு-சஅ. மறை - திருக்குறள். மன்னல் - மனத்திற்ருேன்றி நிலைபெறல். அறல் - கருமணல். அறற் கூந்தல் - பெண். கோமக்கள் - அரசர். பூ மக்கள் - குடிகள். புந்தி - மனம். ஆமுறை - தக்க வழி.

சகூ-ருஉ. மான் - பெண். தேம் - வாசனை. பா - செய்யுள். காஞ்சனை - மலயத்துவச பாண்டியன் மனைவி. மல் - மற்போர்த் திறம். உம் - உயர்வு சிறப்பு. "சூரன் மகள் காஞ்சனையும் அன்று வில்லார் தடாதகை பால் மேவி, திருவே (கக), அரசே (உசு), மாடமே (உஎ), அணங்கே (உஎ), பேடனமே (உஅ), அறற் கூந்தால் (சசு), மானே (சக), பூவே (ருo), தேனே, அணங்கே (ருக) யான் கூறும் பேற்றினை (உஅ), கேட்டுணர்வாய் (உக), இப்பேருலகம்... ...மாட்சித்து (கஉ), ஆன்மா வீடடைதல் காண்டி (சக), காண்பாய் (சச), மன்னும் (சசு), கொண்டு (சஅ), தேடுவாய் (சக) என்றனள்,'' எனக்கூட்டி முடிக்க.

ருந-ருசு. தடம் - பெரிய. மடநோக்கு - இளமைத் தன்மை மிக்க பார்வை. கடன் - கடமை. கொடு முடி - கரடு முரடான கிரீடங்கள். வீரியர் - வீரமில்லாதவர்: குறிப்பு மொழி. விஞ்சை - வித்தை.

ருஎ-சுo. வாதில் - உரையாடலில். வால் - தூய்மை. உழுவல் அன்பு - எவ்வித இடையூற்றுக்கும் பின் வாங்காத பேரன்பு. கெழுமிய - பொருந்தியுள்ள. விழுமிய - சிறந்த.

சுக-சுச. எந்திழை - காஞ்சனை. சேய் - புத்திரன்: மகிழ்வு பற்றி வந்த பால் வழுவமைதி. நேர்தல் - எதிர்ப்படல். நாணம் - வெட்கம். மலிதல் - மிகுதல். தனம் - திரவியம்.

சுரு-சுஅ. நெஞ்சகம் - மார்பு. மூன்ருகும் - மூன்ருவதாகத் தோன்றும். வஞ்சகம் - கொடுமையான தோற்றத்தைக் கொண்ட முலை. கிஞ்சுகம் - கிளி. மீன்கணி - மீனுட்சியாகிய தடாதகையார். இன்னணம் - இவ்விதம். "விரைந்து காண்பேன்,'' எனக் கூட்டுக. நன்றி - நன்மை.

சுகூ-எஉ. சூழ்தல் - ஆராய்தல். அமைதியுள்ளார் - அடங்கிப்போகு மரசர். அகற்றல் - விலக்கல். மமதை - கர்வம். பூ - பூமி. காவரசு - இந்திரன்.

எந-எசு. ஆசைபற்றிநிற்பார்- திக்குப்பாலகர். ஆசை - திக்கு. நெட்டார் - உயர்ந்த. இமவான்- பர்வத ராசன். சிட்டர் - பெரியோர். வெள்ளிமலை - கைலா

யம். "பூதகணம்," என்பதற்கு இறுதியில் இரண்டாம் வேற்றுமை யுருபும், உம்மையும் கொடுக்க. வள்ளல் - சிவபெருமான்.

எஎ-அ0. மா - சிறந்த. கோ- தலைமை. கொடுமரம் - வில். தா - குற்றம். ஆவம் - அம்புறை தூணி. தூங்கல் - தொங்கல். அரியேறு - ஆண்சிங்கம். இடமகன்ற - விசாலமான.

அக-அச. பொன் - அழகு. குறித்தல் - எதிர்நோக்கல். என- போல. பொற் குன்று - மேருமலை. நகை - சிரிப்பு. மேவலர் - பகைவர் - திரிபுரர்கள். பொல்லுதல் - துளையுறல். பொருக்கு- ஒலிக்குறிப்பு. நல்லாள் - நல்ல மணமகள்.

அரு-அஅ. மணங்காணல்-விவாகம் புரிதல். தாள் - பாதம். அணங்கு - அழகு. புத்தேள் - தெய்வம். ஆர்த்தல் - ஒலித்தல். கார் - மேகம்.

அகூ-கூஉ. துன்னுதல் - பொருந்திக்காணுதல். தூயோன்- சிவன். சேணுள் - நெடுநாள். புகலல் - சொல்லல்.

கூரு-கூசு. பொறியிலி - அறிவிலான். வழுவல் - தவறல். செருக்கு - கர்வம். நன்றி - நற்குணம்.

கூஎ-க00. பூங்குழலாள் - தடாதகை. கோங்கு - கோங்கமலர். குரூரம் - விகாரம். "நாணம், கொண்டு,நோக்கு விக்க," என, இயைக்க.

க0க-க0ச. மாதராள் - தடாதகை. மணி - அழகு. உழுதல்- கிளறல். கவிழ்தல் - தலைகுனிதல். காலை - பொழுது. நகுதல் - சிரித்தல். நூல் - திருக்குறள்.

க0ரு-க0அ. கடைக் கணித்தல் - காதலோடுகூடிக் கட்கடையால் பார்த்தல். சூழ்ச்சி - உபாயம்: சுரும்போட்டல். ஈண்டு இது தழுவதற்கு மேற்கொண்டதாகும். சுரும்பு-வண்டு. மருங்கு- பக்கம். சலக்கரணை - நயப்பு, அன்பு. கலக்கம் - மனக் குழப்பம்.

க0கூ-ககஉ. தந்திரி - படைத்தலைவன். எக்காளம்-வெற்றி முழக்கவாத்தியம். சுந்தரம் - அழகு. மாகதர் - புகழும் பாணர். வந்தியர் - மங்கலப் பாடகர். எத்து - புகழ். இசைத்தல் - எடுத்துச் சொல்லல். மாகதர்கள் எத்திசைப்ப, வந்தியர்கள் வாழ்த்தெடுப்ப என மாற்றிப் பொருள் கொள்க. நாகர் - தேவர். போகுதல் - பரவி விசாலித்தல்.

ககரு-ககஅ. தகும்! தகும்! - ஒலிக்குறிப்பு: இரட்டுற மொழிதல் கொண்டு மற்றொரு பொருள் தோன்றுமாறு காண்க. வாள் விழியாள் - காஞ்சனை. கண்டு + உவந்து எனப்பிரிக்க. நந்துதல் - கெடுதல். "நீலகண்டன் (க0ரு) வந்து, ஒட்டி, பற்றி, அணைத்து, அமர்ந்து, சூழ, ஆர்ப்பரிக்க, முழங்க, எடுப்ப, இசைப்ப, போக, புகுந்து, மகிழ, ஆர்ப்ப, சேர்க்க மணம் புரிந்தான்," எனக்கூட்டுக. வாள்விழியாள் கண்டு, உவந்து, போற்றி, சேர்க்க எனமுடிக்க. "மணம் புரிந்து நீடூழி வாழ்ந்தான்," என விகுதி பிரித்துக் கூட்டுக. செயல் முறை - செய்யவேண்டிய சடங்கு முறைப்படி. மதன் - மன்மதன்.

16(-170. யாழ் - வீணை. மங்கல் - குறைதல். பொய்யில் புலவர் - திருவள்ளுவர். பொருள் - பொருளிலக்கணம்.

அகம் - அகப்பொருள்: ஒத்த தலைவன் தலைவியரின் காதல் ஒழுக்கம்.

171-177. உண்ணல் - அனுபவித்தல். புறப்பொருள் - அரசியன் முதலிய ஒழுங்குகள். அறப்பொருள் - விதி விலக்கு முதலிய திட்டங்கள். மட்டு - குறைவு. ஆருயிர்=அருமை+உயிர். ஏமம் - பாதுகாப்பு. மறை - வேதம், மறைதல். உறை - துளி.

இரண்டாவது அங்கம் - முதற் காட்சி

1-5. திறல் - சமர்த்து. வைகறை - சிறு பொழுது ஆறனுள் ஒன்று. புலரி - விடியல். பகலவன் - சூரியன். கேழ் - நிறம். கதிர் - கிரணம்.

6-10. கொம்மை - அழகு, நெசவுத் தொழில் வகைகளில் ஒன்று. படாம் - வஸ்திரம். "கதிர் சில கலந்து, போன்று, செல்வது," எனக்கூட்டுக. செல்மதி - அஸ்தமனச் சந்திரன். புல்பனை - புல்லாகிய பனைமரம்: 'புறக்காழுடையன புல்லென மொழிப," என்பது தொல்காப்பியம். உவாமதி - பூர்ணச் சந்திரன். நெருநல் - நேற்று.

11-15. வழக்கு - இயல்பு: சகசம். தைவக்குறுமுனி - அகத்தியர். குடகு-மேற்குத் தொடரிலுள்ள மலை. கரகம் - கமண்டலம். குறிஞ்சி - மலையும் மலையினைச்சார்ந்த நிலமும். பணை - வயலும் வயல் சார்ந்தநிலமும்.

16-20. "சோழமாநாடு சோறுடைத்து," என்பது, "வேழமுடைத்து மலைநாடு, மேதக்க சோழவளநாடு சோறுடைத்து," என்றதனை யடி யொற்றியது. பைங்கூழ் - பசும்பயிர். மோடு - மேடு. காலக்கடன் - அதிகாலையிற் செய்து முடிக்க வேண்டிய முக்கியமான கடமைகள். முருக்கு - கட்டு. தாமரை நண்பன் - சூரியன். குணதிசை - கீழ்த்திசை.

21-25. அண்மை - சமீபம். விதி - கட்டளை. அவ்வணம் - அவ்வண்ணம் - அவ்விதம். கனி - பழம். குடமதிச்சோரன் - மேற்கேயுள்ள சந்திரனாகிய கள்ளக் காதலன்.

26-30. இருள் நங்கை - இருளாகிய பெண். எல்லோன் - சூரியன். நிகர் - ஒப்பு. "தொல்காப்பியன் மீண்டு தோன்றினன் என," என்று கூட்டுக.

31-35. உடுத்திரள் - நட்சத்திரக்கூட்டம். மடுத்திடல்-உட்கொள்ளல். வெங்கதிர் - சூரியன். திங்கள் - சந்திரன். தாரகை-நட்சத்திரம். கொங்கு - வாசனை. தாமரைக் கொண்கன் - தாமரை நாயகனாகிய சூரியன்.

36-40. மாண்டிடல் - மடிதல், உயர்வுறல். விழைதல் - விரும்பல். காட்சி-அற்புதம். வெம்மை- உஷ்ணம். கட்புலம் - கண்ணின் பார்வையாகிய அறிவு. நுண்மை- நுட்பம்.

41-45. தட்பம் - குளிர்ச்சி. மருவல் - பொருந்தல். மீன்-நட்சத்திரம். அருணன் - சூரியன். இந்திரன் திசை - கிழக்கு. தொல்- பழமை. செருக்களம் - போர்க்களம். மானுதல் - ஒத்தல்.

46-50. ஞாயிறு- சூரியன். ஆறு - மிகுந்த.

51-55. நுவலல் - சொல்லல். பொன்மை - மஞ்சள்நிறம். கபிலம் - கருமை கலந்த மஞ்சள் நிறம். பிங்கலம் - செம்மை கலந்த மஞ்சள் நிறம். திறம் - வகை.

56-60. வடமொழி யாளர் - ஆரியர். பசும்புரவி - பச்சைக் குதிரை. அக்கதிர் கொண்டிடு நாயகன் - சூரியன். "நாயகன் விண்டொட, தன்னையே விரைந்து, சுற்றி நிற்றலால்," எனக் கூட்டுக.

61-65. கிளர்ந்திடல்-தோன்றல். "(பகலவன்) செம்மைநிறங் கொளல்கதிர் தவழ்ந்திடலாலும், (66) தட்பம் செம்மையை நம்மிடஞ் சேர்த்திடலாலும் செறிந்ததாம்," என முடிக்க.

66-70. அகத்திடைக் கொளல் - மறைத்துக் கொள்ளல். வானம் - ஆகாயம். நீலம் + நிறம்=நீனிறம் - கடைக்குறை விகாரம்.

71-75. செறிதல் - ஒருங்கு சேர்தல். தாய் ஆய் - தாய் போன்று. காட்டு - உதாரணம். கருதல் - ஆராய்தல்.

76-80. சேய் - குழந்தை. முதல் - காரணம். கருவுறல் - தோன்றல். சமைதல் - விருத்தியாதல். நாடிடல் - ஆராய்தல். கூட்டு - கலப்பு. கிரி - மலை.

81-85. சதையம் - நட்சத்திரங்களி லொன்று. அவியுணவு - தேவருணவு, சமைத்த சாப்பாடு. செவியுணவு - கேள்வி யுணர்வு. காலை - காலை நேரம். பொற்கொல்லன் - தட்டான்.

86-90. வேலை - கடல். மேதினிப் பூவை - பூமாதேவி. கீழ்த்திசை மலை - உதயகிரி. "யாங்கணும் பொறியாங் கதிர்கள் போயிட," என மாற்றுக.

91-95. வினை செயல் - வேலை செய்தல். மானல் - ஒத்தல். சமட்டி - சம்மட்டி. கொழுமை - வளமை. (85) பொற் கொல்லன் காசுபாலை யொன்றியற்றிட, தாக்கி, ஓங்கி வினை செயலை, (79) பகலவன் உதயமா கிரியிலுறைந்திடு மதுவும், மதித் தூயோன் மேற்றிசை ஒரு பனையுயரமேனிற்பதும் மானல் சாண்டும் எனக் கொண்டு கூட்டுக. காலை - பொற் கொல்லனாகிய காலை நேரங்கள். காண்டும் - காண்கின்றோம். அன்றே - தேற்றப்பொருள் கொண்டன.

96-100. பரவை - கடல். நெருப்பு - உலோகத்தினைக் காய்ச்சும் உலை நெருப்பு. குவடு - உச்சி. மதிக்காற்றுடி - சந்திரனாகிய பட்டம். நெருங்கல் - காற்றுடியை நோக்கிச் செல்லல். கீழ்த்திசைச் சூரியன் மேனோக்கி வர, வர, மேற்றிசைச் சந்திரன் கீழ் நோக்கிச் செல்வது இங்ஙனம் உருவகிக்கப்பட்டது.

101-105. உருவகம் - உபமேயத்தை உபமானமாக்கிக் கூறுவது. வாகு - ஒழுங்கு. பாகு - தேன்பாகு. கதிரவன் - சூரியன்.

106-110. செய்தி - தன்மை. வெளி - வானிடம்.

111-115. செம்மணி - மாணிக்கம். அகம் - நடுவிடம். செம்மணியகம் - மாணிக்கங்களின் மத்தியம். புரைதல் - ஒத்தல்.

116-120. பொள் - ஒலிக்குறிப்பு. போதல் - புகுதல். கூறு - வகை. பாதித்தல் - வருத்தல்.

121-125. கடம் - மதம். களிறு - ஆண் யானை.

126-132. தெண்ணீர் - தெளிந்த நீர். வில் - சேரர் கொடி. மீனம் - பாண்டியர் கொடி. பாவையர் - பெண்கள். நேடுதல் - விரும்பல். பகைவரைப் பெண்பாலராகக் கருதி அலட்சியமாகத் தமது கொடிகட்குப் பக்கத்தில் பந்து, கழங்கு முதலிய விளையாட்டுக் கருவிகளைக் கட்டித் தொங்க விடுதல் அக்கால மரபு. "வில்லும், மீனமுந்தன் வயின் விளங்க," என்றது புலிக் கொடிக்குரிய சோழன் ஏனைச் சேர பாண்டியர்களை வென்று தன்னடிப்படுத்தமையை விளக்கியதாம். செல் - மேகம். ஊர்தல் - தவழ்தல். நற்பதிதனச்குச் செல்வோம் எனக் கூட்டுக.

இரண்டாவது அங்கம் - இரண்டாங் காட்சி

1-5. பொருத்தல் - கூட்டுவித்தல். பேணிக் கொளல் - விரும்பிக் கூடல். சால் - மிகுதிப் பொருள் தருமுரிச்சொல். கோ - அரசன். வலம் + உத்துங்கம் - வெற்றிச் சிறப்பு. மன் - அரசன். மாநிலம் - சிறந்த பூமி.

6-10. "யான் புகழுமாறறியேன்," எனக் கூட்டுக. படி - பூமி. மிடி - வறுமை. எங்கள் மிடிதீர் மேலவன் - குலோத்துங்கன். கணக்காயர் - உபாத்தியாயர்.

11-15. அலைதரல் - சுழம்பல். அச்சாணி - அச்சுருவாணி. மெச்சு + ஆர் + ஆற்றல் - புகழ்ச்சி பொருந்திய சக்தி. குல தேவு - குல தெய்வம்.

16-20. இணைத்தல் - சேர்த்தல். முரணுறல் - பெருக்கல் தொகையாதல். $2+2=4$ இக்கூட்டல் தொகையாம் நான்கினையே $2 \times 2=4$ இப்பெருக்கலினும் பெறுவது போன்ற வியப்பாம். இவ்வுலகு - "சோறுடு, ஏமம் எய்திட," என மாற்றுக.

21-25. நெருநல் - நேற்று. பணிவு - வணக்கம். நந்தல் - கெடல். நெறி - வழி. நாடுதல் - தேடுதல். மடிமை - சோம்பல். கொடியோன் - துஷ்டன்.

26-30. அலகை - பேய். மடந்தை - பெண். துடியெடுத்தாடல் - உற்சாகமாய் உலாவிவரல். துடி - உடுக்கு.

31-35. அரும்பெறல் - பெறுதற்கரிய. சூழ்ச்சி - ஆலோசனை. தீது - தீமை. வீழ்ச்சி - நாசம்.

36-40. கழறல் - வற்புறுத்திக் கூறல். நயப்பு - மலிவு. நடுவண் - மத்தியில். அம்புவி - பூமி.

41-45. துடைத்தல் - ஒழித்தல். போற்றுதல் - வேண்டுதல். "உம்மைப் போற்றினேன்," என மாற்றுக. மானார் - பெண்கள். துயர் - துன்பம்.

46-50. பிறங்குதல் - விளங்குதல். மண்டலம் - நாடு. அணைந்திட - சேர்க்க: வியங்கோள் வினை. ஒற்றர் - வேவுகாரர்.

51-55. கட்டளை - உத்தரவு. நேர்மை - ஒழுங்கு. மாற்றம் - மாறுபாடு. சுளுவு - இலகு. துணிதல் - நிச்சயித்தல். சாலும் - போதும். இங்குக் கூத்தர் அரசராயிருந்தும் பழைய வாசனை

கொண்டு, பேசுதலும், நாவலன் திருத்துதலும் நோக்கற்பாலது.

56-60. புதியர் - போலிக் கவிஞர். தொடை - பாக்களின் உறுப்புகளி லொன்று. தொன்மை - பழமை. "இருகை குவித்தேன்," என மாற்றுக.

61-65. கடைவாய் - வாயிற் கடை. களி - சந்தோஷம். தூண்டுதல் - செலுத்தல். உவகை - மகிழ்ச்சி: வேடிக்கை. தொடக்கம் - ஆரம்பம்.

66-70. காட்சி - தோற்றம். பொருந்துதல் - தங்குதல்.

71-75 உழவாளி - விவசாயி. போகவிடல் - மன்னித்தல். "விட்டிடில் மிக நனிபுகழே," என மாற்றுக. அணியாடை - வேஷம். வானம்வெள்ளை - மழையில்லை.

76-80. கருப்பு - பஞ்சம். பருவம் - தக்கவயது. மணவினை - கல்யாணம். இலை - இல்லை. வடிவு - வேஷம். விலையிலாப் பொருளாதல் - இலகுவாய்க் கிடைத்தல். "கொடிதாங் கருப்பு! படிக்கப் பாயிலை! பருவமும் போச்சு! மணவினைப் பேச்சோ வளர்ந்திடலாச்சு," என்றது மக்கணிலை எவ்வளவு கொடிதாயினும் மாயை வசப்படு முலகினிலையினை விகடமுறையில் வெளிப்படுத்தியதாம்.

81-85. தினை - சிறிதாகிய வோரளவு எதிரல் - பெறுதல்.

86-90. திரளல் - நிறைதல். பரிசில் - வெகுமதி. இணை - ஒப்புமை. மிண்டன் - தடியன்.

91-95. போராடுதல் - வாதிடல். பொறி - அகப்படுத்தும் யந்திரம்; குயவன், நான்முகனாகிய பிரமா உடற் பாண்டத்தை யுண்டாக்குவது போல், மட்பாண்டத்தை யுண்டாக்குவதால் நான்முகன் தோற்றம் எனப்பட்டான். குயவனாகிய நான்முகன் நடுத்தெரு நாராயணனோடு செய்த போர், அண்ணாமலையில் பிரமவிட்டுணுக்கள் அடிமுடி தேடிய தடியடி எனப்பட்டது.

96-100. இமைத்திடல் - அச்சத்தால் அடிக்கடி கண்களை மூடித்திறத்தல். பித்தளை - உலோகங்களிலொன்று. பித்து + அளை - பயித்தியத்தினிருப்பிடம். அளை - பாம்பு முதலியன வாழும் வளை. எங்கள் மங்கையர் - மனைவியர்.

101-105. மங்கல நாண் - தாலியுங் கயிறும். மங்கலத்தையும் நாணையும் என உம்மையை ஈரிடத்துங் கூட்டுக. வேலை - பிழைப்பு. உற்றிடல் - பொருந்தல். மடியன் - சோம்பேறி. வாயில் - காரணம்.

106-110. வாயிலோன் - காவலன். தூரிசு - குற்றம். ஆறு - மிகுந்த.

111-115. வையகம் - உலக மக்கள். மயிர்வினை - சௌளம். சடக்கு - ஒலிக்குறிப்பு.

116-120. விண் - ஆகாயம். மண் - பூமி. இறை - தலைவன். மனிக்க - மன்னிக்க.

121-125. "வடதிசை முளைக்குங் கதிரவன் வணங்கத் (121) தென்றிசை நோக்கத் திருப்புவன்," என்றது, "கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்," என்ற வாக்கியத்தை யுட்கொண்ட வேடிக்கை மொழியாம். கதிரவக்கோன் - சூரியனாகிய தலைவன் எனவுங் கொள்க. புலி - புலி போன்ற ஒற்றன். நாவிதன் - அம்பட்டன். ஒழுங்கு என்பது

சினங் கருதி அடுக்கி வரலா யிற்று.

126-130. தறுதலை - துஷ்டன். மிரட்டல் - பயமுறுத்தல். கொடுக்க - வியங்கோள்வினை. வசை - திட்டு.

131-135. தூசுடையோன் - வண்ணான். கோமான் - அரசன். குறி - சோதிடம், அடையாளம், புடவை முதலியவற்றி னமைந்த பன்னிறக் குறி.

136-140. நின் குறி - வண்ணான் குறி. அவர் குறி - கைக்கோளர் குறி: நெசவு நூலால் ஏற்படும் பன்னிறக்குறி. ஆறு - வழி. திரு முன் - சந்நிதி.

141-145. 'போ' என்பது விரைவுபற்றி அடுக்கியது. "கல்வியில் மணியே," என மாற்றுக. கணிகை - வேசை. கலக்கம் - குழப்பம். விளைத்தல் - உண்டாக்கல்.

146-150. பொன் - பொன்னாற் செய்யப்பட்ட நாணயம். கட்டுத்தறி - மாடு கட்டும் முளைக்கொம்பு.

151-155. வம்பு - வீண். கம்பரின் - இன் ஐந்தாம் வேற்றுமை யுருபு: ஒப்புப் பொருள்.

156-160. உச்சம் - உயர்வு. கறை - குற்றம்.

161-165. வில்லியர் - வேடர். தொல்லை - தொந்தரவு. சள்ளை - சங்கடம். சாற்றல் - சொல்லல். கருமான் - கொல்லன்.

166-170. ஏகுதல் - செல்லுதல். போதல் - வருதல். துடுக்கன் - தீயன். வரை - மலை. செப்படித் தொழில் - ஒரு வித்தை.

171-175. கோட்டம் - சாலை. உகைத்தல் - செலுத்தல். கடியன் - சிறந்தோன். கழறுதல் - சொல்லுதல்.

176-180. விஞ்சுதல் - மேற்போதல். அந்தோ - ஐயோ.

181-185. தீர்தல் - முடிதல். நானிலம் - பூமி: குறிஞ்சி முதலிய நான்கு நிலங்களோடு கூடியது. வதிதல் - தங்குதல். கடா - கேள்வி. பேதுறல் - பயப்படல்.

186-190. தறித்தல் - வெட்டல். மன்பதை - மக்கட் கூட்டம். வழுத்தல் - தெரிவித்தல். செய்தனன் - செய்வேன்: விரைவு பற்றிய காலவழுவமைதி. மையலின்மணி - மயக்கமில்லா மாணிக்கம்; மயக்கத்தினையுடைய மணி எனப் பொருள்பட்டுப் பொருந்து மாற்றினையு முணர்க.

191-195. அரண்மனை அமைச்சர் - அரண்மனைக் காரியதரிசி. முரண் - மாறுபாடு. ஞாலம் - பூமியிலுள்ள மக்கள்.

196-200. அடைதல் - சேர்தல்.

201-205. வழுதியர் பெருமான் - பராக்கிரம பாண்டியன். வரிசைப் பொருள்கள் - சீர்ப் பொருள்கள். முடங்கல் - வரைந்தனுப்பிய வோலை.

206-210. காதல் - விருப்பம். மானினம் - குதிரைக் கூட்டம். அவற்றினை மடக்கிடுதல் - பதினாயிரமாதல். அழுத்தல் - பதித்தல். அணி - ஆபரணம்.

211-215. பழுத்தல் - சுவை முதிர்தல். ஈண்டுதல் - நெருங்கல். புரிசை - அரண்மனை.

216-220. மன் - அசை நிலை. செறித்திடல்-சேர்த்தல். பிள்ளை-சினம் பற்றி வந்த இழிவு மொழி. உள்ளுதல் - நினைத்தல். பழமை - முன்னைய நிலைமை. புதுமை - தற்கால நிலை.

221-225. கிழமை - அரச சம்பந்தம். நிலைமை - காரிய

தரிசி உத்தியோகம். தமியேன் - வறியேன். சடுதி - விரைவுப் பொருள் தருந் திசைச்சொல். ஏழு சனி - குயவன் முதலோர்.

226-232. ஆர்ந்திடல் - நிறைந்திடல். அரைச்சனி - புகழேந்தி. நூற்றை நிறைப்பதும், குறைப்பதும் குறுணியே ஆகலான், போலிப்புலவர்களைப் புகழுறுவிக்கும் புகழேந்தி அரைச்சனி எனப்பட்டார். தெளிவு - அறிந்த விஷயம். காய்தல் - கோபித்தல்.

(நேரிசை வெண்பா)

போதன் - பிரமா. போதன் மனைவி - சரசுவதி. சரசுவதியின் மாமி - இலக்குமி. புங்கம் - மேன்மை. நேமி - பூமி. உருத்தல் - கோபித்தல். வாசி - குதிரை, சுகம். ஊசி - தையற் கருவி, சிமிட்டா ஊசி முள். "ஊசிக்கு ஊசி எதிரூசி பாயாது," என்பது நாவலன் கருத்து. கூத்தர் அதனை இரட்டுறமொழிதலாகக் கொண்டு மற்றைய பொருளை எடுத்துக் காட்டி, நாவலனை யடக்குகின்றார்.

233-240. சொற்பெருக்கு - பிரசங்கம். உளம் - மனம். வாசி - குதிரை. வசி - குதிரைச் சவாரி செய்வோர் காலிடு தோற்செருப்பிற் செறித்து வைத்துள்ள ஒருவகை யிருப்புமுள். பறத்தல் - வேகமாய்ச் செல்லல். பள்ளிப் பையன் - படிக்கு மாணாக்கன். வெள்ளிடை - வெட்ட வெளி. மதித்திறம் - அறிவாகிய சாமர்த்தியம். விதித்திறம் - தீர்மானமான வாக்கியம்.

241-245. விதி - பிரமா. கற்றறிமூடன் - படித்த முட்டாள்.

246-250. சொற்ற - சொன்ன: வலித்தல் விகாரம். துங்கன் - குலோத்துங்கன். கிட்டிடல் - சோணாடு சேரல்.

251-255. குந்திடல் - உட்கார்ந்திருத்தல். செப்பல் - சொல்லல். சேவலங் கொடியோன் - முருகன்.

மூன்றுங் காட்சி

1-5. மின்னேர் - மின்னலைப் போல் விரைவில் அழியும்படியான. மணியம் - நாட்டாண்மை. நந்திடல் - மிகல்.

6-10. சுட்டுப் பொருள் - குறித்துக் காட்டப்படும் வஸ்து. மதி - அறிவு. யாண்டு - எவ்விடம்.

11-15. "நேரிற் கண்டிட விழைந்து வருந்தியும்," எனக் கூட்டுக. பொருந்தல் - சம்மதித்தல். தார் - மாலை. புரைய - போல. அரையன் - அரசன் முழு வளவில்லாப் பாதியளவுறிவுள்ளவன்.

16-20. அரசக் கட்டில் - சிங்காதனம். உரை செயல் - சொல்லல். ஊழ்வினை - தலைவிதி. ஊட்டல் - அனுபவிக்கச் செய்தல்.

21-25. புரிதல் - செய்தல். ஓதிடல் - சொல்லல். சாலவும் - மிகவும். ஒண்ணாது - கூடாது.

26-30. தெளிவிலான் - அறிவில்லாக் கூத்தன். இயற்றுதல் - நடத்துதல். புரிகுதல் - தெரிதல்.

31-35. கண்ணன் - கிருஷ்ணன். காளையர் - இளைய எருதினைப் போன்ற கெம்பீரத்தோற்றமுடையவர். நண்ணுதல் - சேர்தல். திண்மை - தைரியம். அண்முதல் - நெருங்கல்.

36-40. கவர்தல் - கண்களைப் பற்றி யீர்தல். எழில் - அழகு. அகம் - மனம். விழைதல் - விரும்புதல். அருள் நோக்கம் - கிருபையோடு கூடிய பார்வை. நண்பர் - சிநேகர்.

41 - 45. இணக்கம் - இசைவு. தவநனி - மிகவும் அதிகமாக: ஒரு பொருட் பன்மொழி.

46-50. செறிதல் - சேர்ந்திருத்தல். கரி - சாட்சி. ஊன்றுதல் - நிலை நிறுத்தல். நேர்தல் - எதிர்ப்படல். நேர்மை - ஒழுங்கு.

51-55. இவண் - இவ்விடம். சவம் - பிணம். கலைமகள் - சரசுவதி. நோக்கம் - பார்வை. திருவுளம் - மனம்.

56-60. மதி - அறிவு. வழிப்பறிச்செயல் - கொள்ளையடித்தல். செய - செய்ய. அகவிலை - தானிய விலை.

61-65. இழுக்கல்- கேடுறல். உய்வு - பிழைப்பு. கடை - வீட்டு வாசல். குடிகள் - பிரஜைகள்.

66-70. துறத்தல் - விட்டுவிடல். ஏற்றல் - பிட்சையெடுத்தல். திருட்டுப் புலவன் - போலிப் புலவன்.

71-75. உருட்டுதல் - செலுத்தல். தெம்பு - உற்சாகம். அடுத்திடல் - பொருந்தல்.

76-80. கிலி - பயம். விடை - இல். துணிவு - தீர்மானம்.

81-85. படை - ஆயுதம். அலைதை - நிராதரவானது. அடா - தகுதியில்லாத. பட்டங் கட்டுதல். அரசனுக்குதல்.

86-90. வரி - அரசனுக்குக் கொடுக்கும் வரி. கிடை - மந்தை. வாருடை - ஆடு. தடிப்பு - கொழுப்பு. தடிதல் - குறைத்தல்.

91-95. அலக்கண் - துன்பம். பனுவல் - நூல். பண்பு - குணம்.

96-100. பாயிரம் - முன்னுரை. திண்ணம் - நிச்சயம்.

101-105. காட்சி - கண்டுகொள்ளுதல். வியாழன் - பிரகஸ்பதி. தேனார் - தேன்போன்ற. திருமுன் - சமூகம்.

106-110. அண்ணல் - தமயன். நண்ணல் - பொருந்தல். பகர்ச்சி - சொல். பளிங்கு - கண்ணாடி.

111-115. தப்பிடல் - பிழைத்தல். ஏமம் - பாதுகாப்பு. எண்ணம் - கவலை. நணுகிடல் - பொருந்தல்.

116-120. நவமாம் - புதிதாக வரக்கடவதாகிய. நன்மதி - நிறைமாதம். இயல் - இலக்கணம். பா - செய்யுள்.

121-125. ஐயம் - சந்தேகம். வெண்டாமரையாள் - சரசுவதி, கற்பகவல்லியின் உயிர்ப்பாங்கி. (124) இவ்வடி பின்வரும் கதைப் போக்கினைக் குறிப்பிட்டுக் காட்டுவதாம்.

126-130. கோன் - அரசன். வாயிற் புலவன் - சமஸ்தானகவி. நேர்தல் - சம்பவித்தல். உங்கள் இக்கட்டு - உங்கட்குச் செய்த துன்பம்.

131-135. போதன் ஆணை - தலைவிதி. "கூத்தன், போதன் ஆணையால், சிறையில் போக்கினன்," எனக்கூட்டுக. செப்பம் -

ஒழுங்கு. அட்டில் - சமையலறை.

136-140. கவின் - அழகு. திகழ்தல் - விளங்கல்.

141-145. நாவலர் - நாவன்மை மிக்க புலவர். நலிதல் - வருந்தல். முன்னுதல் - நினைத்தல். பெற்றி - தன்மை.

146-150. அரியோன் - அருமையான குணங்களை யுடையவன். இலை - இல்லை. நிகர் - ஒத்த.

151-155. இச்சகம் - முகமன்: வெறும் உபசாரமொழிகள். பச்சை - பஞ்சை: வலித்தல் விகாரம். யாரும் - எவரும். தலை - உயர்வு.

156-160. அகலும் - விலகும். வாய்மை - வாஸ்தவம். அமர்த்தல் - இருக்கச் செய்தல்.

161-165. நேர்மை - செம்மை. நிலம் - பூவுலகம். கழகம் - கல்விச் சபை.

166-168. செய்ந்நன்றி - ஒருவர் செய்த வுதவி. கொல்லல் - மறத்தல். கல்வியின் செல்வி - சரசுவதி. களிப்பு - மகிழ்ச்சி. எய்தல் - அடைதல்.

நான்காங் காட்சி

1-5. வகுத்தான் - பிரமன். வகுத்த வகை - தலைவிதி. துய்த்தல் - அனுபவித்தல். அரிது - கூடாது. பொய்யா மொழி - உண்மை வாக்காகிய திருக்குறள். துறவி - சந்நியாசி. விதி - நியமம். கையாறு - கவலை. கழிபெரு - மிகவும் பெரிய: மீமிசைச் சொல். மடமை - முட்டாள் தனம்.

6-10. இறைவன் - எல்லாம் வல்ல பரம்பொருள். மின் திகழ் - மின்னலைப்போல் திடீரென்று எதிர்பாராமல் நிகழும். உறுதி - நன்மை. அணுவும் - சிறிதும். இறுதி - தீமை. வெளிறு - ஒன்று மின்மை.

11-15. மெய்யறிவு - உண்மை ஞானம். களம் - கழுத்து. "அகநானூறு, புறநானூறு," என, "நானூறு," என்பதை இரு வழியிலும் கூட்டுக.

16-20. பேழை - பெட்டகம். பணி - ஆபரணம். பூ - பூமி. இறை - பரம் பொருள்.

21-25. கழல் - திருவடி: ஸ்தானியாகு பெயர். குறுமுனி - அகத்தியர். செயல் - செய்யப்படு முபசாரங்கள்.

26-30. உயல் - உய்யல்: பிழைத்தல். வியப்பு - ஆச்சரியம். தையலார் - பெண்கள். கிள்ளை - கிளி. சள்ளை - தொந்தரவு. வையகம் - உலகம். இறும்பூது - ஆச்சரியம்.

31-35. சலம் - முகத்தலளவைப் பெயர். சம்பு - ஒருவகைத் தானியம். காடை - ஒருவகைப் பறவை. கலக்க முள்நெஞ்சம் - காடைப் பறவையினது குழப்ப மிகுந்த மனமானது. வல்லோன் - பரம்பொருள். பட்டன் - பட்டத்தினையுடையோன். பட்டம் - பெருமை.

36-40. கொல் - கொல்லன் தொழில். குயிற்றல் - செய்தல்.

41-45. நயம் - நன்மை. கோலுதல்-வளைத்தல்.

46-50. நுவலுதல் - சொல்லல். குறித்தல் - நினைத்தல்.

51 55. கலை - கல்வி. பணி - "வேலை, சிறைக் கூடத்தை மாற்றிடலானது," என விரித்து முடிக்க. அழிம்பன் - கொடியன்.

56-60. புலைவினை மாக்கள் - சண்டாளர். குவலயம் - பூமி. புரையறு முதல்வன் - குற்றமற்ற பரம்பொருள்.

61-65. மறத்தொழில்-கொலை. அறத்தொழில்-தருமம். ஆக்கல் - பிழைப்பூட்டல். மாந்தர் - மனிதர். "மடையன் கற்ற மொழி, (59) அருமையினையும், (60) முறையினையும், நிலையினையும் (அவனுக்குத்) தெரித்திட விலையோ," எனக் கூட்டுக.

66-70. பரண் - பொருள்களை யிட்டு வைக்கும் மேலிடம். வீறு - மற்றொன்றற்கில்லாச் சிறப்பு. அரண் - பாது காவலான இடம். கூடம் - Hall.

71-75. நீறு - சாம்பல். தஞ்சம் - புகலிடம். ஒவ்வுதல் - பொருந்துதல். மடிந்திடல் - நாசமாதல்.

76-80. அலகை - பேய். இன்றியமையாக் கருவிகள் - கற்றற் கவசியமான ஓலை எழுத்தாணி முதலியன. உணர்த்தல் - அறிவித்தல். அகத்தியம் - அவசியம்.

81-85. திங்கள் - மாதம். கவிக்களிறு - ஒட்டக்கூத்தன். புலிக்களிறு - சாதாரண யானை. பின்னர் கூத்தர் தாமே தம்மை, "மோனை முத்தமிழ் மும்மதமும் பொழி யானை," எனக் கூறிக் கொள்வதை நோக்குக. மாவுத்தன் - யானைப்பாகன். மத்தகம் - தலையின் மேற்புறம். உலா - ஊர்வலம்.

86-90. "ஓங்கு சீர் மிகுந்த (85), கவின் புகழேந்திக் கலைமகள் வாழி," என முடிக்க. "புகழேந்தியாற் கலைமகள் வாழி," என இரட்டுற மொழிதலாகவுங் கொள்க. ஆற்றுதல் - செய்தல்.

91-98. மேதைகள் - அறிஞர்கள். துயிலுதல் - தூங்குதல். இடுக்கண் - துன்பம். இரக்கம் - பரிதாபம்.

ஐந்தாங் காட்சி

1-5. நன்மதி - நன்மையாய்க் கழிந்த மாதம். பகுமொழி - பகுபதம். பகா மொழி - பகாப்பதம்.

6-10. தொகை - தொகை நிலைத்தொடர். தொடர் - தொகா நிலைத்தொடர்.

11-15. அகம் புறமாகும் அப்பொருள் - அகப்பொருள், புறப்பொருள்கள். தண் ஒளி - குளிர்ந்து அடங்கி விளங்குமறிவு. செரித்தல் - நிலைபெறச் செய்தல்.

16-20. தூய்மை - செம்மை. காழ் - வயிரம்: கெட்டித்தன்மை. புல் - உள்ளீடில்லாத பொருள். புல் அறிவு - உட்கருத்தினை யறியாத சாமான்ய ஞானம். புலன் - அறிவு. கல்வி = கல் + வி: தோண்டுதல்; அறியாமையிற் புதைந்து கிடக்கும் உண்மைகளை ஊக்கமாகிய மண்வெட்டியாற் கிளறித் தெரிந்து கொள்ளுதலாம். சொற்களின் தூய்மைக்குக் 'கல்வி' என்ற

சொல்லும், தோற்றத்திற்கு, 'புல்'. என்ற முதனிலையும் உதாரணங்களாம்.

21-25. உலுத்தர் - உலோபிகள். உறுதிப் பொருள்கள் நான்கு - அறம், பொருள், இன்பம், வீடு. அறுதி - முடிவு. புறப்பொருளில் அறமும், பொருளும்; அகப்பொருளில் இன்பம் கூறி அவற்றால் வீடு பேற்றினை விளங்க வைத்தல் தமிழ் நூல் வழக்கு.

26-30. பொன்றுதல் - வீணே மடிதல். நெடுமால் - மகாவிஷ்ணு. அன்பாகிய சிவத்தைச் சேர்தல் வேண்டி, இன்பமாகிய அகப்பொருளால் உயிர்கட்கு அன்பினைப் படிப்படியாய்ப் புகட்ட எழுந்தது அகப்பொருணூல் என்பது அறிஞர்களின் துணிபு. நிலை - ஸ்திரம். அன்னியர் நலங்கருதலாகிய அன்பினை, கைப்பு மருந்தினைக் கட்டியுடன் சேர்த்துண்பார் போல, அகப்பொருளான் மேற்கொள்ள என்பார், "அன்பினை முறையே, அழகாய், நிலையாய் இன்பினோடு எய்த," என்றார்.

31-35. துறை - வகை. துவன்றுதல் - நெருங்குதல். பேதுறல் - அறிவு மயங்கல். கந்தழி - தத்துவப் பொருள்: பற்றுக் கோட்டினை யழித்து நிற்பது. அதாவது உயிர்களின் பற்றுக்கோடாகிய உலகமாயை ஒழித்து விடுதலை யளிப்பது. இக்கருத்தினையே நெருப்பினிடத்தும், சூரியனிடத்துங் கூறி, அவற்றைப் பழந்தமிழ் மக்களின் பிரத்தியட்ச தெய்வமெனக் கூறுதலுமுண்டு. மனக்கண் - அறிவு.

36-40. இணை - இரண்டு. பொறி - மெய், வாய் முதலியன. புலன் - சுவை, ஒளி முதலியன. கட்டுரை - எடுத்துரைத்தல்.

41-45. சற்று - சிறிது. பா - செய்யுள். கூட்டம். சேர்க்கை. ஆவி - உயிர். ஓட்டம் - செலவு. ஒண்மை - மிகுதி. பிழம்பு-திரட்சி. இருள் - அறியாமை.

46-50. பாவியல் - யாப்பிலக்கணம். மடத்தனம் - அறியாமை. விலை - மதிப்பு. பதர் - அரிசியில்லா நெல்.

51-55. காரிகை - யாப்பருங்கலக்காரிகை யென்னும் இலக்கண நூல். பேரிகை - முரசம். வறிதே - பாடுதற்குரிய முயற்சியும், வழியுமின்றி.

56-60. சளைத்தல் - அலுப்புறல். பாவியல் கற்றுச் சளைத்திடு முன்னம் பாச்செயு முறையைக் குறிப்பாய்க் கூறுவன், என முடிக்க. குறிப்பு - சுருக்கம். பகுப்பு - வகை. முதலது - முதல் வகையினைச் சேர்ந்தது.

61-65. குறுகிய - குறைந்த. "குறைவிலா நெடில்," என்று விதந்து கூறினமையின் ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கங் களைக் கொள்க; "விதப்பு இளவி வேண்டியது விளக்கும்," என்பது சூத்திரமாகலின். பரவுதல் - சென்று சேருதல்.

66-70. தொகுமுயிர் - குற்றெழுத்துக்கள். என்றிடல் - ஏற்றுப் பொருந்தல். பின்னர் அசையினை விளக்குதல் வேண்டி, "தொண்ணூற்றைந்தாங் குறிலெனத் தொகுப்பீர்," என்று கூறிக் கொள்ளப்பட்டது. பின்னரும், (73) "ஒரு நூற்று முப்பத்தொரு மூன்று என நெடிலினைத் தொகுத்துக் கூறுவது மது.

71-75. நூறுதலையிட்ட = நூற்றினை முன்னர்க் கொண்டு

வருகின்ற. இணைந்திடல் - ஒன்ருய்ச் சேரல்.

76 - 80. "அது அசை," என மாற்றுக. இசைதல் - பொருந்துதல். தமராம்-பொருட் பொருத்தமாம். சனித்தல் - தோன்றுதல். வாழி வேல்மன் - வேல் முருகனுகிய தலைவன் வாழி. ஒவ்வோரங்கத்தும் யாதாமொரு காட்சியில் வழிபடு கடவுளை வணங்கு முறையாக, இவ்விதம் முருகக்கடவுளைப் புகழ்ந்து செல்லலைப் புகுந்து காண்க. பின்னர் (86), "குக நமோ, மயிற்படாம்," என்பனவும் இம்முறையில் வந்தனவே.

81 - 85. பாழி - பெருமை. தயங்கிடல் - விளங்கல். நிரையசை பெரும்பாலும் சந்தக் கவிகளில் அடுக்கி நின்று சந்தவின்பங் கொடுப்பதால், 'இனித்திடு." என்ற அடை மொழி பெற்று வந்தது. வாளா - தனித்து. கேள் - பொருட் சம்பந்தம். மற்று-அசை நிலை.

86-90. அகவுதல் - ஒலித்து நிற்றல். நனி - பெரும் பான்மை. தகைவு - விலக்கல். அசைதல் - அசையாதல். நந்நான்கு=நான்கு நான்கு - அடுக்குத் தொடர்: நேரசை தோன்று முறை நான்கும், நிரையசை தோன்று முறை நான்குமாம்.

91-95. ஒருங்குதல் - கூடுதல். இசைதல் - பொருந்தல். ஒத்து முடிதல் - பொருளோடு இணைந்து வரல். ஓசையாம் சீர் பெறல் - பிரிந்திசைத்தலாகிய தாளவறுதி கொளல். தனித்து நின்றிடல் - தனியே நின்று சீராய் வரல். தனித்து நிற்றலே நிரையசையோடுங் கூட்டுக. நாளாம்- நாள் என்று பெயர் பெறும். மலராம் - மலர் என்று பெயர் பெறும். இணை - ஒப்பு.

96-100. இறுதல் - கடையில் வருதல். அகம் - நடுப்பாகம். இனம் - வகை. மருவல் - பொருந்தல். தம்முட்டாம் கலத்தல்-நேரசை முன் நேரசை, நிரையசை முன் நிரையசை வருதலாம். தம்முட் பிற கலத்தல் - நேரசை முன் நிரையசை, நிரையசை முன் நேரசை வருதலாம்.

101-105. இயற்சீர் - இயல்பாக மொழிகளிற் காணப்படுஞ் சீர். நிணவேல் - ஊன்பசையினைக் கொண்ட வேல். நிரை நிரையாகிய கருவிளச்சீர் சந்தக் கவிகளிற் பெரும்பான்மையாகக் கையாளப்பட்டுச் சிறத்தலினுல், "புகரில்," என அடைமொழி பெற்று வரலாயிற்று. திருத்தணி - முருகன்படை வீடுகளிலொன்று. நேர் நிரையாகிய கூவிளச்சீரும் சந்தக்கவிகளில் கையாளப்படுகின்றமை யான் 'கவிஞர்," என அடை கொண்டது.

106-110. காட்டு - உதாரணம். முன்னுதல் - நினைத்தல். வான் - சிறந்த.

111-115. கடிமாவேல் - சூரன்மாவினைக் கடிந்த வேல். கடி - சிறப்பு.

116-120. உரிச்சீர் - உரிய சீர்கள். காய்ச்சீர்கள் மட்டுங் கொண்ட வெண்பாக்கள் சிறப்புற்றுக் காணலான், "கவினுரிச்சீர்," எனலாயிற்று.

121 - 125. தளை - சீர்களைப் பிணைத்து நிற்கும் கட்டு. இயற்சீர் வெண்டளை - இயற்சீர்களாலுண்டாகிய வெண்பாவிற் குரிய தளை. வெண்சீர் வெண்டளை - காய்ச்சீர்களாலுண்டாகிய வெண்

பாவிற் குரியதனை. "வெண்பாவினிலே..................(127) வரும்," எனப் பின்னர்க் கொண்டு கூட்டுக.

126-130. மயங்குதல் - வேறுபாடின்றிப் புணர்தல்.

131-135. புணர்தல் - சேர்தல், உண்டாதல். வெண்சீர் வெண்டளை தளைகளெல்லாவற்றினுஞ் சிறந்து, ஆற்றொழுக்காய் நடப்பதால், "சிறப்பே," என உயர்த்துக் கூறப்பட்டது.

136-140. மதித்திடின் - ஆராயின். முறை என்றதனால், "சிந்தடி முச்சீரும், அளவடி நாற்சீரும் கொண்டிடும்," என முடிக்க. அகலம் - விவரம்.

141-145. எழாறு - நாற்பத்திரண்டு. இணையுறல் - அடிகளை இணைத்துப் பொருத்தல். தொடை - தொடுக்கப் படுவது. "அடியினுஞ் சீரினும்," என்பதனை எதுகைத் தொடைக்குங் கூட்டுக.

146-150. அடுத்தல் - இருத்தல். மற்று - அசைநிலை. அது - அவ் வெண்பா, குறளெனும் வெண்பா முதலிய வகையினையுடையதாய் விளங்கும், என முடிக்க.

151-155. வெண் குறள் - குறள் வெண்பா. ஒடுங்கல் - முடிதல்.

156-160. "முடிவதும், எதுகை பெறுதலும், (161) தொடையாம்," எனப் பின்னர்க் கொண்டு முடிக்க.

161-165. மற்றை நாள் - அடுத்தநாள். தினகரன் - சூரியன். துயில் - தூக்கம். வள்ளுவப்பயன் - திருக்குறள். நற்றவப்பயனும் நலமிகு தொடர்கள்— கடவுள் வாழ்த்து அதிகாரத்திற் பட்ட பத்துத் திருக்குறள் வெண்பாக்கள்.

166-170. மலர் - அடியாரின் மனக்கமலம். தொடர் - வாக்கியம், குறள் வெண்பா. துகள் - குற்றம். நடை - பாட்டின் போக்கு. நன்கு ற - நன்றாக. பயிலல் - பலகாற் சொல்லல். விதி - யாப்பிலக்கண முறை.

171-175. வீறுதல் - மற்றொன்றற்கில்லாச் சிறப்புறல். இசை - வெண்பாவிற் குரிய செப்பலோசை. மாற்றியல் குறள் - அம்மாதிரியான புதிய குறட்பா. வழுத்திடல் - சொல்லல். திடம் - உறுதி.

176-181 சேண்பொழுது - நெடுநேரம். "கூறின எமமாய் இதயத் திருத்துமின்," என மாற்றிக் கூட்டுக. வாமம் - அழகு. "நாட்டினில் நாமனைவரும் கலைமகள் அருள்கொளக் கூறின...... இருத்துமின்," என முடிக்க.

மூன்றுவதங்கம் - முதற் காட்சி

1-5. ஆ - பசு. நன்னிலை- தீப்பொருள் விலக்கி நற்பொருள் கொண்டு சிந்தித்தல். "வாழை நற்குலையும், கமுகின் வாங்கிய குலையும்," எனப் பிரித்துக் கூட்டுக.

6-10. கடிப்பகை - வேப்பிலை. கொழுமை - வளப்பம். "குலையும், இளநீரும், கடிப்பகையும், பாளையும் தூக்கிய வாயில்," என முடிக்க. வாயில் - வாசல்.

11-15. உம்பர் - தேவர். வம்பு - புதுமை. தேக்கிடல் - நிறையக் கொண்டிருத்தல். சந்து - அழகு, சந்தனம். தவளம் - வெண்மை. நகை - மகிழ்ச்சியுடன் வெளிப்படும் பற்கள். மேனில மன்னன் - பரம்பொருள்.

16-20. காவலன் - அரசன். தணிவு - குறைவு. அரச அன்பு - இராஜபக்தி. "(8) வாயிலும், கும்பமும், எழிலும், தூண்களும், முகமும், நகையும், (மக்கள்) காவலன் தெய்வம் எனக்கொண்ட அரசவன்பினை மதியென விளக்கும்," என முடிக்க.

21-25. இரவி - சூரியன். முகில் - மேகம். நோய் - வியாதி. "இரவியின் றேற்றமின்றி, மதியும் மறைந்திட, நோய்கள் அடைந்திடத் துன்பத் தமிழ்ந்திடு மக்கள்," எனக் கூட்டுக. "அழி பெருமுகிலான் நாட்பல இரவியின் றேற்றமின்றி," எனவும், "அழிபெரு முகிலான் நாட்பலமதியும் மறைந்திட," எனவுங் கூட்டுக.

26-30. பருதி - சூரியன். குதூகலம் - சந்தோஷம். "(21) வள்ளல், துன்பத் தமிழ்ந்திடு மக்களை நிகர்த்த இவ்வுறையூர் மக்களின் அகத்திற் பருதியாய் அமர்ந்து காட்சி கொடுக்குமிவ் வேளை," எனக் கூட்டுக. கதிர் - சூரியன்.

31-32. மதமா - யானை. மிசை - மேல். வதிதரல் - தங்கல். பச்சைப் புரவி - பச்சைப் போர்வைகளால் அலங்கரிக்கப் பட்ட குதிரை. பவனி - ஊர் வலம்.

(குறள் வெண் செந்துறை)

௧. கார்மா மிசை - முகிலின் சிறந்த மேற்பாகம். கவின் - அழகு. போர்மா - குதிரை. கைம்மா - யானை. பொலிதல் - விளங்கல். சிறந்திட - சிறக்க: வியங்கோள் வினை.

௨. திகிரி - சுதர்சனம் என்னும் சக்கிரம். வான் - தேவருலகு. மகி - பூமி. சாதம் - பாரிசாதம். வல்லி - பூங்கொடி. கண்ணன் - கிருஷ்ணன்.

௩. தென்னாடு - பாண்டிமா நாடு. கற்பவல்லி - கற்பகவல்லி: பாண்டியன்மகள். அகம் - மனைவி: ஆகுபெயர்.

௪. முந்நாடு - சேரசோழ பாண்டி நாடுகள். சிறந்திடல் - நடுவிற் பொலிதல். முளரிப் பொய்கை - தாமரைத் தடாகம். பதி - ஊர். நன்னாடு - நல்ல நாடாகிய சோணாடு.

௫. துதித்தல் - புகழ்தல். இறை - அரசன். நாளும் - எந்நாளும்.

33-35. மாகாதிபர் - தேவேந்திரன் முதலோர். செவ்விது - நன்றாக. வீரன் - குலோத்துங்கன்.

36-40. அமரர் - தேவர். விண்ணகம் - ஆகாயவீதி. பொருந்தார் - அடுக்குத் தொடர்: இசை நிறைப்பொருள் கொண்டது. தேவர் உச்சியில் இருத்தலால் ஊர்வலச் சிறப்பையும், குலோத்துங்கனின் முகத்தெளிவையும், அருளோக்கையும் செவ்வனே காணப்பெறுர் என்பது கருத்தாம். மருந்து - அமிர்தம். கலை - தேசசு. நிறைமதி - பூர்ணச் சந்திரன்.

41-45. நாண்மீன் - நட்சத்திரம். "இவ்வொண் மகிழ்

சிறந்து ஊழிக்காலம் வாழி," எனக் கூட்டுக. முத்தமிழ் - இயல், இசை, நாடகத்தமிழ்கள். ஒண்மகிழ் - சிறந்த குதூகலம்.

46-50. தலம் - மேற்றளம். சீரியர் - பெரியார். வரி - கோடு, அடி (Line). கண்பானல்கள் - பெண்களின் கண்களாகிய நீலோற்பலங்கள். கான்பாங்கர் - காட்டுப்பக்கம். புல்வாய் - மான்.

(கலித்துறை)

வாள் - ஒளி. தணல் - நெருப்பு. கனை - ஒலி. சுறு - மகர மீன். தோற்றம் - உதயம்.

51-55. இசைத்தல் - சொல்லல். உத்தரம் - பதில். பஞ்சை - அற்பம். புலமை - அறிவு.

56-61. திரு - கல்விச் செல்வமாகிய கலைமகள். குரு - ஆசிரியன். கரு - குழந்தை. மைந்து - வலிமை. வாய்மொழி - பாட்டு. தரித்தல் - சகித்தல். அட்டி - தடை.

(கலித்துறை)

கதிரவன் - சூரியன். தார் - பூமாலை.

62-65. அட்டை - நீரில் வாழும் ஒரு வகைப் பிராணி. செருமுகம் - போர்க்களம். கிளை - உறவு. திருமகள் - இலக்குமி. மருமகள் - சரசுவதி.

66-70. திருநோக்கு - கிருபாகடாட்சம். இழுக்கு - தவறு. "இணையறு தமிழ்க்கு இழுக்கேயாகும்," எனக் கூட்டுக. அழுக்கு - அறியாமை. ஐந்தோடு ஐந்துரை - பத்துரை.

71-75. ஆற்றல் - வன்மை. நாட்போர் - நல்ல நாள் கருதித் தொடங்கும் முதல் யுத்தம். வெற்றி - ஜயம்.

76-80. வீறிடல் - பெருமையுறல். மீள்தல் - வெற்றியுடன் திரும்பல். புலன் - அறிவு. ஆர்தல் - பொருந்தல்.

இரண்டாங் காட்சி

1-5. அறன் - தருமம். திறன் - வகை. திங்கள் - மாதம். மாமி - இலக்குமி. சொல்லின் கிழத்தி - சரசுவதி. மருகி - மருமகள். துகள் - குற்றம். புதுமை - வியக்கத் தகுசெய்தி.

6-10. நிகழ்தல் - நடத்தல். ஏமம் - இரட்சிப்பு. வை - கூர்மை. ஒட்டிப்பாடல் - ஒத்துக் கூறல்.

11-15. திட்டு வசவு. வெண்பாப் புலி - புகழேந்தியார். வெள்ளறிவு - பயனில் ஞானம். அழுமொழி - நகை மொழிக்கு எதிரானது.

16-20. பணி - உத்தியோகம். சாற்றல் - எடுத்துச் சொல்லல். இயலுதல் - கூடுதல். அவை - சபை.

21-25. ஒளி - பிரகாசம். கள் - தேன்: தாமரை என்ற பெயருக்கேற்ற அடைமொழி. செந்தாமரையாள் - கற்பகவல்லியின் பாங்கிகளிலொருத்தி. "மொழிகளால் மனப்போக்கைக் கொள்ளை கொள்வர்," எனச் செயப்படு பொருளை விரித்துக் கூறுக. குட்டுதல் - அபகரித்தல்.

26-30. குட்டுணல் - அடிபடல். முரண் - மாறுபாடு.

கழி - ஓடை. சூழ்தல் - நினைத்தல். அறைதல் - கூறல்.

31-35. பெரியார் - திருவள்ளுவர். மடம் - அறியாமை.

36-40. ஈண்டுதல் - நெருங்கிக் கலத்தல். கொலு - சபை.

41-45. வாயுரைவாழ்த்து - இடித்துரையாது, எங்கூற்று முன்னர் வெறுப்புடையனவாயினும், பின்னர்ப் பெரிதும் நன்மை பயக்குமென வெண்பா முதலிலும் ஆசிரியப்பா இறுதியிலுமாக வரும் மருட்பாவால் பாடப்பெறுவது. செவியறிவுறூஉ - உபதேசம். காட்சி - தெரிசனம். வறிது - வீண்.

46-50. நாவலர் - புலவர். ஈதல் - கொடுத்தல். கிட்டுதல் - கிடைத்தல். வருங்காலம்-எதிர்காலம். வாய்த்தல் - பொருந்தல்.

51-55. மாந்தர் - மனிதர். உறைதல் - நன்குதங்கல்.

56-60. நாண்முதல் - முதல்நாள். நவம் - புதுமை. நோய்என - வியாதி கொண்டதுபோல. நுடங்குதல் - ஒடுங்குதல். நுட்பம் - ஆராய்ச்சிக்குரிய விஷயம். மருதப்பணை - மருதநிலம்; வயலும், வயல் சார்ந்த இடங்களும். மண்டலம் - பூமி.

61-65. ஆட்சி - ஆளுகை. மட்டம் - குறைவு. வம்பு - தீச்செயல்.

66-70. விதனம் - மனத்துயர். வியர்த்தல் - கோபித்தல். வாலியர் - தூயர்: நற்புலவர். திங்கள் - சந்திரன். திகழ்தல் - விளங்கல்.

71-75. விண்ணப்பம் - வேண்டுகோள். களித்தல் - கொண்டாடல். நந்நகர் - நமது உறையூர். திருமுன்னர்-சந்நிதி.

76-80. கொடு - கொண்டு. விதித்தல் - ஏற்பாடு செய்தல். உடை - உடுப்பு. தமிழ்மறை - திருக்குறள். கொலையில் - கொலைத்தண்டனையாலே. ஒறுத்தல் - தண்டித்தல். பரிமேலழகர், "கொலைத் தொழிலை மேற்கொள்ளுதலினலே," எனப் பொருள் கொள்வதை இங்கு மாற்றிக் கொள்வது கருதத்தக்கது.

81-85. பைங்கூழ் - பசிய பயிர். சேமம் - சிறைக் கூடம். நாமம் - பெயர். யா - யாவை. நவிலுதல் - சொல்லுதல்.

86-90. இலச்சினை - அடையாளம். முடங்கல் - ஓலை. முன்னவன் - தலைவன். கடையர் - கீழ்மக்கள்.

91-95. கொல், ஓ - ஐயப் பொருளன. "போர்க்குக் கச்சையும் வரிந்து கட்டினர்," எனக் கூட்டுக. முன்னூழித் தமிழ்ச்சங்கம் - முதற்சங்கம்.

96-100. வேத்தவை — அரச சபை. அமிழ்து - அமிர்தம். செப்பம் - ஒழுங்கு.

101-105. வதிதல் - தங்குதல். விதி - உத்தரவு. அவை - சபை. கார் - மேகம். திட்டம் - ஒழுங்கு.

106-110. இம்மைச் செல்வமிரு வகை - பொருள், கல்வி என்பனவாம். மேற்பால் - உயர்சாதி. கீழ்ப்பால் - தாழ்ந்த சாதி. "புவியோர், படுவோர் ஆயினும் வேற்றுமை எற்கார்," எனக் கூட்டுக. எற்றல் - மேற்கொளல். பால் சாதிப் பகுப்பு.

111-114. ஆன்றவர் - விஷயம் நிரம்பியவர். நடு நிலை கோடுதல் - நியாயம் பிசகல். காண்பார் - காணப்படுபவர். உய்தல் - விடுதலை பெறல். புரிதரல் - செய்தல்.

(கலி விருத்தம்.)

மோனை - அடிதோறும், சீர் தோறும் முதலெழுத் தொன்றி வருவது. மும்மதம் - கன்னமதம், கைமதம், கோசமதம். கூன் - மட்கல வகைகளி லொன்று. அங் குசப் பையல் = அம் + குசப்பை யல் - அழகிய குயவன்: அங்கு சம் + பையல் - அங்குசத்தைக் கையிற் கொண்ட யானைப்பாகன். அங்குசம் - யானைத் தோட்டி.

115 - 120. பாகு - பாகன். அடர்த்தல் - கொல்லல். கரி— யானை. அடர்த்தல் - ஒடுக்கல். வரி - பாவின் அடி. விரி செவி - விரிந்த காது, பலவிதக் கேள்வி களால் விசாலமான காது.

121 - 125. பாரம் - கனம். சடுதி - விரைவு. பரிவு - அன்பு. கருவூலம் - பொக்கிஷம்.

126 - 128. ஆணை - உத்திரவு. முனம் - முன்பு: போலிப் புலவ ராய்ப் புறப்பட்ட காலம். அடி முடி தேடிய தடியடி—நடுத்தெரு நாராயணனோடு செய்த போர். வடி - கூர்மை.

(கலித்துறை)

விண் - ஆகாயம். வல்லூறு - இராஜாளி. புண்படல் - வருந்தல். பொட்டையன் - குருடன். பண் பட்ட - சீர் திருந்திய. செந்தமிழ் - செம்மையான தமிழ்ப் பாக்கள். நீயும் - உம்மை உயர்வு சிறப்பு. புகலல் - சொல்லல்.

129 - 135. அடி - செய்யுளடி. நொந்திடல் - வருந்தல். அடி - தாக்குதல். திறல் - சாமர்த்தியம். வழங்கிடல் - சொல்லல். மாற் றம் - சமாச்சாரம். நீவிர் - நீர்: முன்னிலைப் பன்மைப் பெயர்.

(கலித்துறை)

செல்வன் - செல்லப்ப ஆசாரி. திருவேங்கடவன் - திருவேங்க டாசாரி: தன் பெயர், செகத் குரு - லோக குரு, ஆம் - ஆகிய, கொல்லன் - கருமான்: தனது தொழில். பருந்தாட்டம் - அகப் பட்ட கோழிக்குஞ்சினைப் பரு ந்து பலவிதமாய் வருத்தல். அல் - இரவு.

136-140. இரும் - பெரிய. திறம் - சமர்த்து. பொருக்கெ னல் - விரைவுக்குறிப்பு.

141-143. மீண்டும் - பழைய படியும். விளித்திடல் - கூப்பி டல். சிறிது - கொஞ்சம்.

(கலித்துறை)

சொன்ன - பாடச் சொல்லிய. சந்தக்கவி - இன்னிசையினைக் கொண்ட செய்யுள். வன்னசந் தம் - சிறமிக்க அழகு. வாய்ச்சி- தச்சர்களின் கருவிகளி லொன்று. கன்னசந்தம் - காதுகளின்பக்கம். கவியாப்பு - பாட்டாகிய ஆப்பு, கவியாகிய பாட்டு. கடாவல் - செலுத்தல்.

144-150. காய்ச்சிடல் - தண் டித்தல். பணி - வேலை. திறன்- வகை. தெருண்டிடல் - தெளி தல். என்னை-அடுக்குத்தொடர்: வியப்புப் பொருள். இரு பொருள் - சிலேடை.

151-156. சொல்நயம் - மொழிகளின் நேர்த்தியான அமைப்பு. மாணவர் - மாண் புடையவர். சற்று - கொஞ்சம்.

(கலித்துறை.)

சேல் - ஒருவகை மீன். ஏய் - ஒத்த. மடவார் - பெண்கள். பழனப்பால் - மருதநிலப்பகுதி,

ஏய் - பொருந்தியுள்ள, மணவை- கூத்தராது ஊர். நின் போலியர்- உன்னைப்போன்ற வித்வான்கள், அல்லது, நெசவுத் தொழிலை மேற்கொண்டுள்ள கைக்கோளர். பாப்புனைதல் - செய்யுளியற்றல், பாவோடுதல். நூல் - இலக்கியம், பஞ்சுநூலால் நெய்யப் பட்ட ஆடை. துகள் - குற்றம், அழுக்கு. நோன்மை - மேன்மை. நுவல்தல் - சொல்லுதல். கூத்தர் நெசவுத் தொழிலாளராகிய கைக்கோள மரபினராதலால், பாவோடி நெய்த ஆடையின் அழுக்கினைப் போக்கும் சலவைத் தொழில் தனதென்று வண்ணான் சிலேடையிற் கூறலானான். இக்காலத்தில் புதிய உடைகளை உடனே சலவை செய்து விற்பனைக்குக் கொண்டு வருதல் போன்ற வழக்கம் அக்காலத்துமுளது போலும்.

157-160. கசையடி - சவுக்கடி. பசை - சாரம். கவைத்திடல் - பிளவுண்ணல்: பாவிட்ட நூல்கள் இருபிரிவாக விலகிநிற்றல். கண்டு - நூற்கண்டு.

161-165. மதித்திறம் - அறிவின்வன்மை. பால் ஏய் - பாலினைப் போன்று தூய்மையான. வையகம் - பொக்கிஷம்.

166-167. கைப்பகம் - சிறைச்சாலை. துறை - வழி. இயம்பல் - சொல்லல்.

(கலித்துறை)

திகிரி - சக்கிரத்தைப்போன்ற. அபயன் - சோழன். சிலம்பு - மலை: சிறந்த ராஜ்யம். பகுதி - பங்கில் வாழும். பணை - பட்டடை. மிகுதி - பெரும்பாலும். கையோடு - பொன்னையுருக்கி வார்க்கும் ஓடு. குத்தல் - சிறுக வார்த்தல். புகுதல் - உட்செல்லல். அணுகல் - நெருங்கல்.

168-175. மறுதொழில் - உபதொழில். பிறங்கல் - மலை. நந்திடல் - சிறப்புறல்.

176-180. வால் - தூய்மை அல்லது வால்போற் சேர்க்கப் பட்ட. வாலுடைப் பெயர்கள் - கூலவாணிகஞ் சாத்தனுர், மருத்துவன் தாமோதரனுர், அறுவை வாணிகன் இளவேட்டனுர் என்பன போன்றவைகளாம்.

181-182. காப்பியம் - காவியம். கவல் - கவலை. பார்ப்பு - குஞ்சு; குழந்தை. அன = அன்ன - உவம வுருபு.

(கலித்துறை)

கோ - பேரரசன். மன்னர் - சிற்றரசர். குரை - ஒலி. கோகனகம் - தாமரை. கொட்டி - ஒருவகையான, நீரிலுண்டாகும் கிழங்குப் பூடுகள். கட்டுரை - எடுத்துச் சொல்லும் வாக்கியம். பா - செய்யுள். பாவலர் - பாட்டுப்பாடுதலில் வல்ல புலவர்.

183-185. கவித்தல் - மூடுதல். கவின் - அழகு. திலகம் - பொட்டு.

186-190. அண்டம் - பூமியும், அதனைச்சார்ந்த மற்றக் கிரகங்களும், அவை தங்கும் ஆகாயப் பரப்பும். பூ - பூமி. தரணி-பூமி. மோடு - பெருமை. இடங்கர் - முதலை. கிடங்கு - அகழ்.

191-196. அயர்த்தல் - மறத்தல். இகழ் - நிந்தை. நேமி - சக்கிரவாளகிரி. பெரும் புறப்புனல் - பெரும் புறக்கடல் திறல் - வன்மை.

(கலிவிருத்தம்)

வாமம் - அழகு. மலை - மேரு மலை. மாளிகை - அரண்மனை.

197-200. ஈரம் - இரக்கம். புகுதல் - நுழைதல்.

201 - 205. விலை-பயன். வில் - வில்லினைப் போன்ற முறையில்.

206 - 211. விழல் - வீண். அமைச்சர் - மந்திரிகள். பன்னாள் - பல நாட்கள். சிறுமை - இழிவு. வல்லை - விரைவு.

மூன்றாங் காட்சி

1 - 5. கலைமகள் - சரசுவதி. அலைமகள் - இலக்குமி. மலைமகள் - பார்வதி. மாற்றம் - சொல். குறுக்கிடல் - தடுத்தல். கொற்றவன் - வெற்றியினையுடைய குலோத்துங்கன்.

6 - 10. குறுநகை - புன்சிரிப்பு. வெண்பாப்புலி - புகழேந்தி. நலிதல் - வருந்தல். அந்தோ - ஐயோ. இணை - ஒப்பு. குவலயம் - பூமி. திரள்தல் - ஒன்றாய்ச் சேரல். "கவிக்கு இணையறு குன்றும்," என மாறுக.

11 - 15. ஈண்டு - இவ்விடம். கொல், ஓ - ஐயப்பொருளன. தீது - மரண துன்பம். மருந்து - அமிர்தம்.

16 - 20. அகத்தியம் - அவசியம். காரிகை - பெண். அமைச்சர் - காரியதரிசி. வேணவா - வேட்கையாகிய அவா; மிகுந்த ஆசை.

21 - 25. கவியவர் - புகழேந்தி. பெண்டுகள் - பெண்கள். நமை - நம்மை. செப்பிய காலை - படிப்பித்தபொழுது.

26 - 30. நயப்பு - ஆசை. பைம்முகம் - குளிர்ந்த முகம். பளிங்கு - கண்ணாடி. பண்பு - நற்குணம். ஒண்டொடி - பிரகாசமான வளையலணிந்த பெண். பிறன் - அன்னியன். மனை - மனைவி.

31 - 35. அறன் - தருமம். கடைப்பிடித்தல் - மேற்கொளல். என்னலில் - என்பதைக் காட்டிலும். பெண்டிர் - பெண்கள். இறுதல் - கெடுதல். அண்ணல் - பெரியோன். மணம் - விவாகம். குரிசில் - பெருமையிற் சிறந்தோன்.

36 - 40. செல்வி - மகள். ஆணை - உத்தரவு. பேணுதல் - விரும்பல். அமைத்தல்-பொருத்திவைத்தல். அயர்ப்பு - மறதி.

41 - 45. இமைத்தல் - நொடிநேரம் வாளாவிருத்தல். மனித்து - மன்னித்து. தெருட்டல் - தெளிவித்தல். நுனித்திடல் - நுட்பமாகக் காரியங்களைக் கவனித்தல். நந்தல் - சிறத்தல். நாவலர் - நாவன்மைமிக்க புலவர். யாண்டு - எவ்விடம்.

46 - 50. எம்மவை - என்முன்: பட்டமகிஷியாகலின், "எம் அவை," என்றாள். செம்மல் - அரசன். மாண்டனர் - இறந்தனர்.

51-55. காய்ச்சல்-பொறாமை. கடிமனை - சிறைக்கூடம். புது + அமுது = புத்தமுது. வித்தகர் - அறிவாளிகள். கொலு - திருவிழா. நண்ணுதல் - பொருந்துதல்.

56-60. ஆடுதல் - விளையாட்டாகக் காரியங்களை ஆலோசியாது செய்தல். ஓடுதல் - தோல்வியாற் புறங்காட்டிச் செல்லுதல். மேயினது - மேவினது: பொருந்

திக் காணப்படுவேது. காய்சினம் - மிக்ககோபம்.

61-65. ஓகை - உவகை: மகிழ்ச்சி. வெறி - பைத்தியம். உணர்வு - அறிவு. தொலித்தல் - தோல்வியுறச் செய்தல்.

66-70. செய்வான் - செய்வதற்காக. இறைவன் - குலோத்துங்கன். இரவிபடுதல் - சூரியாஸ்தமனம்.

71-75. 'முதற்கண் கூத்தனை அழைக்கக் கூறு'; என மாற்றுக. செவி - காது. சூழ்ச்சிசால் புலவர் - புகழேந்தி.

76-80. கரவு - வஞ்சகம். கவிழ்த்தல் - குனியச் செய்தல். இம்மி - மிகச் சிறிய வோரளவு. உருக்குலைத்தல் - ஒழித்தல். பணி - வேலை.

81-85. அரசு - துங்கன். நன்றி - விசுவாசம். ஈண்டு - இவ்விடம். நாடுதல் - தேடுதல். கற்பகமாகிய திரு என விரிக்க.

86-90. அழிம்பு - அழிவான காரியம். இமிழ் - ஒலி. திரை - அலை.

91-95. குறைகுடம் - நீர் குறைந்த குடம். ஏமம் - இரட்சிப்பு. கலைமூடன் - கற்றறி மோழை.

96-100. வலம்புரி - வலப்புறமாக முறுக்குண்ட சங்கு. மணி - அழகு. மிடறு - கழுத்து.

101-107. நிகழ்த்துதல் - எதிரே எடுத்துச் சொல்லல். நேரிழை - நல்ல ஆபரணங்களையணிந்த பெண். புழுக்கம் - காற்றின்மையா லுண்டா முணர்ச்சி. இருங்கதை - பெரியகதை. கிளிமொழி-கிளியினது மொழிகளைப் போன்றுபேசும் பெண். "கோடையாம் நாட்கள்", எனப் பிரித்துக் கூட்டுக. 'புலவர் பால் கொண்டிடு மன்பு அகங் கொண்டிடலால் வியர்ப்பினை அயர்த்தனன்", என முடிக்க. அகங் கொண்டிடல் - மனத்தே நிறைந்து நிற்றல்.

நான்காங் காட்சி

1-5. அணி நகை - அழகிய பல்வரிசை. பாவை - பொம்மை போன்ற அழகிய பெண். இகல் - மாறுபாடு: போர்.

6-10. மதோன்மத்தன் - குடியன். வளர்தல் - தூங்கல். மூவர் - திரிமூர்த்திகள். ஒள்ளிழை - பெண். வார்குழல் - கற்பகவல்லி. "கதவம் மூடிக் கொண்டதென் கூறாய்?" எனக் கூட்டுக.

11-15. கிளவி - சொல். வாள் தடம் - வாள் போன்று கொடிய விசாலமான. உலை - துருத்தி. உயிர்ப்பு - பெருமூச்சு.

16-20. மலைப்போக்கு - மலை பெயர்தல். மார்பு - முலைகள். கா-சோலை. கடி-சிறப்பு. தேவு - தெய்வம். சேடி - தோழி.

21-25. உந்துதல் - செலுத்தல். கழங்கு - கழற்காயாட்டம். எறிட்டு நோக்கல் - கவனித்துப் பார்த்தல். மம்மர் - மையல். படுத்தல் - சார்த்தல்.

26-32. தோன்றல் - அரசன். ஊடல் - பிணக்கு. பைந்தொடி - செங்கமலம். துணர் - பூங்கொத்து.

(குறள் வெண் செந்துறை)

க. அபயன் - நிர்ப்பயமுள்ளவனை குலோத்துங்கன். அண்

முதல் - நெருங்கல். அடுக்கு மகிழ்வுபற்றி வந்தது. அபயம் - அடைக்கலம். அணங்கு - அழகு. அகற்றல் - விலக்கல்.

உ. அகல் - விளக்கேற்று தகழி. அணைதல் - சேர்தல். அகலிலே விடுநெய் உருகுதல் போல மனவுருக்கத்துடன் வளவன் வந்துள்ளான் என்பதாம்.

33-35. துடியிடை - உடுக்குப் போன்ற இடுப்பினையுடைய கற்பகவல்லி. துனி - புலவி நீட்டம். ஆற்றவும் - மிகுதியும். அரியேறு - ஆண்சிங்கம்.

36-40. ஆய்மொழி - ஆராய்ச்சியினையுடைய வார்த்தைகள். வாமம் - நேர்த்தி.

41-45. துவர்வாய் பவழம் போன்ற வாயினையுடைய. தோகையர் - பெண்கள். துணிதல் - தீர்மானித்துக் கூறல். வனம் - விதம், இடம்.

46-50. நொடி - நொடிக்கு நேரம். அணி - அலங்காரம். கொலு - சபை.

51-55. பற்றுக்கோடு - ஆதரவு. கலாம் - போர். நிலை - ஸ்திதி. கிளை - பந்துக்கள்.

56-60. கலை - படிப்பு. செவி - காது. புவி - பூலோகம். புலோமிசை - இந்திராணி. குறுமுனி - அகத்தியர். மாசுணம் - மலைப்பாம்பு. பிறங்கல் - விளங்கல். நகுடஅரசன் - சந்திரகுலத்து அரசர்களிலொருவன்.

61-65. நடை - ஒழுக்கம். வாகு - ஒழுங்கு. பிழைத்தல் - தவறுதல். தமிழ் முனி - அகத்தியர்.

66-70. அனைய - போன்ற. கடிவினை - விரைந்து செய்ய வேண்டிய காரியம், மணவினை. புலவி - ஊடல்.

71-75. விலையிலா - இவ்வளவென்று மதிப்பிட முடியாத, மதிப்பில்லாத. மொய்குழல் - கற்பகவல்லி.

76-77. பாகு - கரும்புப் பாகு. இட்டம் - இஷ்டம். எந்திழை - பெண்.

(கலித்துறை)

கரம் - துதிக்கை. சிரம் - மத்தகம். களித்தல் - அசைத்து விளையாடல். இரத்துதல் - ஒலித்தல். கபாடம் - கதவு, அடைப்பு. பண்டு - முன். உரம் - மார்பு. சிரம் - சிரசு. இலங்காபுரம் - ஈழ நாட்டின் தலைநகர். கபாடபுரம் - பாண்டி நாட்டின் தலைநகர். கல்யாணபுரம்-சாளுக்கிய ராண்ட இரட்டபாடி நாட்டின் தலைநகர். "அணங்கே, கண்டன் வந்தான். இவன் பண்டு இலங்காபுரத்தும், கல்யாண புரத்தும், கபாட புரத்தும், பகைவரின் உரத்தும், சிரத்தும் கபாடந் திறந்திட்டதுண்டு. இனி, நீ இரத்துங் கபாடந் திறப்பாய்," எனக்கூட்டி முடிக்க. முன்னோர்களின் செயல் இவன் பேரில் ஏற்றிக் கூறப்பட்டன.

78-80. கவி - பாட்டு. தாழ்க்கோல் - தாழ்ப்பாள்.

81-85. நுண்ணிடை - "கற்பகவல்லி, அகமிக நொந்துமே தாழினை யிட்டாள்," என முடிக்க. கலவி - கூட்டம். கானல் நீர் - பொய்த்தோற்றமாகிய நீர். அவாவல் - விரும்பல். கவான் - துடை.

86-90. தவாச்சினம் - மாறாத கோபம். தனி - ஒப்பற்ற.

91-95. ஏத்தரும் - ஏத்துதல் அரும் - புகழ்தற்கரிய. செல்வி - கற்பகவல்லி. கெண்

டை - ஒரு வகை மீன். தென்னவன் - பாண்டியன். மருகன் - மருமகன்.

96-100. செய்தி - சமாச்சாரம். பெயர்த்திடல் - சேர்த்திடல். சீர்த்தி - கீர்த்தி. ஒழித்தல் . தீர்த்தல்.

101-105. நேடல் - ஆராய்தல். மனுமுறை - நீதி; மனு தர்ம சாஸ்திரம். தனியறை - ஏகாந்த இருப்பிடம்.

106-110. அரச அடையாளக்கணையாழி - முத்திரை மோதிரம். "நீ இது பிடி," எனக் கூட்டுக. கடுநடை - ஓட்டம். சாற்றுதல் - சொல்லுதல். ஆழி - மோதிரம். நயம்-உயர்வு.

111-115. கற்பனை - உத்தரவு. கலைவலார் - புகழேந்தி. நெருங்கல்-சேர்தல். கொண்ட- சம்மானமாகப்பெற்ற.

116-120. நாத்திகழ் - புகழ் மிகுந்த. நயம் - ஒழுங்கு. கோட்டம் - கூடம். நறுக்கப்படல் - மறுக்கப்படல். கன்மொழி - கடினவார்த்தை. கடிதல் - விலக்கல்.

121-125. வளவர் - சோணாட்டார். ஒள்ளிழை - கற்பகவல்லி.

126-130. "மன்னவர் மன்ன, மறவ, சிறிதும் வருந்திலேன்," என முடிக்க. மன்னவர் மன்னன் - பேரரசன். திருந்தலர் - பகைவர். கடத்தல் - போரில் வெல்லல். செருப்புகலல் - வஞ்சினங்கூறல். நாவலர் - நாவன்மை மிக்க புலவர். இன்னே - இப்பொழுதே.

131-135. அற்பு - அன்பு. அகம் - மனம். செறிதல் - சிறைதல். எம்மையும் - உம்மை உயர்வு சிறப்பு. பள்ளி-படுக்கை. இறுத்தல் - தங்கல். சின்மொழி- சிலவாகிய அறிவுரை. கன்னல்மொழி - கரும்புபோன் றினிய வார்த்தைகளைப் பேசும் பெண். நயம் - இதவசனம்.

(கலித்துறை)

தூபம் - வாசனைப்புகை. கோதை - மாலை. சோழ மன்னர் தீபன் - சோழவரசர்கட்கு விளக்குப் போல்பவன். சாபம் - வில். குனிதல் - வளைதல். அன்னம் - அன்னம் போன்ற பெண்.

136-140. இரட்டைத்தாழும்- உம்மை இறந்தது தழுவியது: அதற்கு முன் போட்ட ஒற்றைத் தாழும் என வரவழைத்துக் கொள்க. அரட்டையர் - குறும்பர்.

141-145. ஆணவம் - அகம்பாவம். களித்திடல் - மகிழ்தல். கழகம் - பேரவை. தொடக்குறல் - பீடிக்கப்படல்.

146-150. அரும் பெறல் - பெறுதற்கரிய. சிறுமை - இழிவு.

151-155. வணம் = வண்ணம் - விதம். கை வண்ணம் - வேலைத்திறம். கழிந்தது - நடந்து போனது. கழிபேர் - மிகவும் பெரிய. ஊசல் - ஊஞ்சல்.

156 - 160. தண்தார் - குளிர்ந்த மலர்மாலை. கால் - காற்று. பாட்டுடைப் புகழார் - பாடுதலில் வல்ல புகழேந்தியார். ஊசல் - ஊஞ்சற்பாட்டு.

161-165. மதவேள் - மன்மதன். இதம் - நன்மை. வியாழன் - பிரகஸ்பதி. வயா - கருப்பம். மனப்புண் - புகழேந்தியைச் சிறையிலிட்டதா லுண்டான மனஸ்தாபம்.

166-168. மானுதல் - ஒப்பாதல். ஊசல்நிலை - ஊஞ்சலின் உற்சாக ஆட்டப்போக்கு. கலை - நூல்.

(ஊசல்வரி)

க. வயிரம் - உள்ளீடு. மணிக்கயிறு - அழகியகயிறு. பற்றுதல் - சேர்தல். உயிராய - உயிர்போன்ற. உம்பர் - தேவர். அருமருந்து - அருமையான தேவாமிர்தம்.

உ. மணிவண்ணம் - வெண்மணியின் நிறம். அணைதல் - பக்கத்திற் சேர்தல்.

௩. முச்சங்கம் - முதல், இடை, கடைச்சங்கங்கள். மூன்று தொகைநூல் - பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு. தொகுப்பித்த மரபு - பாண்டியவம்சம். அத்தன் - சிறந்தோன். அமரர் - தேவர். அமரர்துயர் தீர்த்தது - தூங்கெயி லெறிந்த வரலாறு.

ஐந்தாங் காட்சி

1-5. "கமலா இச் சோலையின் நேர்மையைக்காண், என் என நிகழ்த்துவன்?" எனக் கூட்டுக. நேர்மை - அழகு. புள் இனம் - பறவைக் கூட்டம். கதிர் - கிரணம்.

6-10 கிஞ்சுகம் - கிளி. வையகத்துறக்கம் - பூலோக சுவர்க்கம். "பாடலும், ஓடலும், நிற்றலும், ஆடலும் மயங்குவிக்கும்," என முடிக்க. பொன்றுதல் - குறைதல். ஆடகம் - பொன். பூண் - ஆபரணம்.

11-15. கலவி - புணர்ச்சி. ஏமம் - பாதுகாப்பு: அநுகூலங்கள். விளைத்தல் - நடத்தல். வல்லான் - இறைவன். அஃறிணை - மக்கள், தேவர், நரகரொழிந்த உயிர்ப்பொருள்களும், மற்றைய உயிரில் பொருள்களும்.

16-20. கடையர் - அதமர். உவப்பு - மனவமைதியான மகிழ்ச்சி. எதிருறு - எதிர்காலத்திலே வரக்கூடிய. நலிதல் - வருந்தல். மேதினி - பூமி.

21-25. மண்தலம் - பூமி. செறித்திடல் - திணித்து வைத்தல். பொறி - அகப்படச் செய்யுங் கருவி. "உரைத்தன உண்மை", என மாற்றுக. இருவேம் - இருவராகிய நமது. இணைதல் - சேர்தல்.

26-30. மருவுதல் - புணர்தல். மன்னிடல் - நிலைத்துத் தங்கல். சோழமண்டல வள்ளல்-குலோத்துங்கன். கோது - குற்றம். களிப்பு - மகிழ்ச்சி.

31-35. பண்பு - தன்மை. இழுக்கு - தவறு. ஓடுஅரி - பரவுகின்ற ரேகை. பகலவன் - சூரியன். பள்ளி - படுக்கை, கோயில். பாங்கு - பாங்கியர்.

36-40. சேயிழை - பெண். முகை - மொட்டு. வள்ளம் - கிண்ணம் தவளம் - வெண்மை. வாணி - சரசுவதி. வெண்டாமரைத்திரு - வெண்டாமரைச் செல்வம்.

41-45. விண்டிடல் - வெளியிடல். "வழியினைக் கண்டிடலின்றி; ஊமையன் கண்ட நற்

கனவாய் இங்கெடுங்காலங் கொண்டனன்'', எனக் கூட்டுக.

46-50. தேன் - தேன்போன் றினிக்கும் பேச்சுடைப் பெண்.

51-55. பரசிடும் - புகழும் படியான. புலமை - அறிவு. நிலவல் - பொருந்தல். சாலுதல் - மிகுதல். காதலில் - அன்பில் லாத, அன்பு செலுத்துகின்ற தன்மையிலே. மதலை - குழந்தை.

56-60. கன்னிகை - மண மாகா இளம்பெண். நண்ணிடல் - நெருங்கல். அரசியார் - கற்பக வல்லி. அணங்கு - தெய்வப் பெண். நாயகி - தலைவி.

61-65. மதனன் - மன்மதன். உறுதி - பக்கபலம். "ஆயினும், உம்மைப் பெரிதும் அறிவேன்'', எனக் கூட்டுக.

66-70. நயன் - தேனுகிய நன்மை. வெறுமொழி - பொரு ளில்லாத வார்த்தை. விலை - மதிப்பு. "யான் அறிவிலாக் கடையேனுகலின்'',எனஎழுவாய் வருவித்துக் கூட்டி, "தொலைத் தேன் (73)'', எனப் பின்னர்க் கொண்டு முடிக்க.

71-75. தோகையர் - பெண் கள். அனைய - போன்ற. "யான், ஆகலின், அறிகிலேன், நம்பி, ஆழ்ந்து, கற்பைத் தொலைத் தேன்'' என முடிக்க.

76-80. அணைதல் - சேர்தல். வான் - ஆகாயம். வெண்புகழ் - நல்ல கீர்த்தி.

81 - 85. தேமொழி - வெண் டாமரை. கலைமகள் - சரசுவதி. மலரவன் - பிரமன். இலவு - இலவ மரம்.

86 - 90. என்பழி - எனக்குச் செய்த தீங்கு. பள்ளி யெழுச்சி - படுக்கைவிட் டெழல். வாச்சியம்- வாத்தியம். அதிர்தல் - சப்தித் தல். தெரிவை - பெண். அரிவை- பெண்.

91 - 95. இவட்கு - செங்க மலத்திற்கு. சூழ்மொழி - சத்தி யம். தேமொழி - வெண்டா மரையாள். பஞ்சை - எளிமைத் தன்மை. விஞ்சுதல் - மேற் போதல். அப்புலவன் - புகழேந்தி.

96 - 100. தையல் - வெண் டாமரையாள்.

101 - 105. வறிது - வீண். தொலை- தூரம். "சூழ்ச்சி வல்லமை பலரும் வழுத்தி யின்புறவே செய் குவன்,'' எனக் கூட்டி முடிக்க

106 - 111. மைந்து-வன்மை. மடக்குதல் - அகப்படுத்தல். நன்று - நன்மை. ஆடவர் - ஆண் மக்கள். உம்பர் - தேவர். வியத் தல் - ஆச்சரியப்படல்.

நான்காவது அங்கம்-முதற் காட்சி

1 - 5. குலவிடல் - வாழ்தல். கடி - காவல், விலக்கல்.

6 - 10. கான் - காடு. அளித் தல் - கொடுத்தல். மற்றையர் - அமைதியை வேண்டுபவர்கள்.

11 - 15. வீழ்தல் - சாதல். சரதம் - சகஜம். சாலி - நெற் பயிர். சார் - பக்கம். துளக்கம் - ஒளி.

16 - 20 கைப்பாவை-கையின் கணுள்ள பொம்மை. கமர் - நில வெடிப்பு.

21 - 25. இயக்கல் - நடத்தல். தெளியார் - அறிவிலார். தியங் கல் - மயங்கல். வியப்பு - ஆச்சரி யம். நெருநல் - நேற்று. நேர்மை- சமாதானம். குறுநகை - புன் சிரிப்பு.

26 - 30. மொழித் திறம்- வாக்கு வன்மை. பலவாங் காட்சி- நரக முதலிய காட்சிகள்.

31 - 35. மணிவணன் - நீல மணிபோன்றநிறத்தையுடைய மகாவிஷ்ணு. பெருந்தகை-மேன் மைக் குணம்.

36 - 40. பாங்கி - தலைவனு டன் போக்குக்குத் தலைவியைச் சம்மதிக்கச்செய்து, வெளி யேற்றியனுப்புவித்ததோழி. பரு வரல் - துன்பம். மா - மிருகம்.

41 - 45. மயங்கல் - கலத்தல். எக்காளம் - ஒருவகை ஊதுகுழல். வேட்டம் - வேட்டை. நாட்டினி லுள்ள கொடுங்குண விலங்கு - துஷ்டர். குமைத்தல்-அழித்தல்.

46-50. அடுங்குணம் - தீக் குணம். போக்கு - நடை. மற வர் - வீரர். படை - ஆயுதம். மதோன்மத்தர் - முரடர்.

51-55. சீயம் - சிங்கம். வெப்பு - உஷ்ணம். அகலுதல் - விலகுதல்.

56-60. இரும் - பெரிய. வள் ளுவர் நாடு - திருவள்ளுவரின் அரசியல் போக்கிற் பட்டுத் திருந் திய நாடு. தெள்ளு - தெளி வாக்கிய. தெவிட்டுதல் - உண்டு வெறுத்தல்.

61-65. 'சந்திரன் சுவர்க்கி,' என்ற பெயர்க்குப் பொருத்த மீண்டு கூறப்படுகிறது.

66-70. ஓதாதார் - கல்வியறி வில்லார். மான - போல. வேங்கை - பெரும் புலி.

71-75. நுண்ணிதின் - கூர் மையாக. புலியேறு - ஆண் புலி. கிலி - பயம். இல் - ஆற்றலிடை நிலை.

76-80. இதண் - பரண். மாலை - சாயங்காலம். ஈண்டல் - நெருங்கல். குறுகல்-குறைதல்.

81-85. கால்நடை - ஆடு மாடு கள். காண் - முன்னிலை யசை. "வேங்கையைச் சூழ்மின், தன் புறக் குத்துமின்," எனக்கூட்டுக.

86-90. வெற்றி நன்மாது - விஜய லட்சுமி. அசைத்தல் - சேர்த்து வைத்தல். தோமரம் - வில். கணை - அம்பு. அச்சோ - இரக்கக் குறிப்பு.

91-95. திறள் - வலிமை. அலகை - பேய். இலகுறல் - விளக்கமாயிருத்தல். பாய்புலிப் பேறு - புலியினால் எதிர்க்கப் பெறுதல்.

96-100. மின்னேர் - மின் போல் தோன்றி மறையும்படி யான. மகிழ் மொழி - விகடம்.

101-105. கதுமெனல் - விரைவுக் குறிப்பு. தகி - வேளை. கோட்டான் - பேராந்தை. நாட் டம் - காட்சி.

106-110. தாழ்ப்பையேல் - தாமதிப்பாயாயின். முகிழ்தல் - மலர்தல். மோகினி - பேய் வகை களிலொன்று: 'பெண் பித்துக் கொண்டவர்களை நெருங்கி மயக்கித் துன்புறுத்துவது. காதல் - அன்பு.

111-115. விழல் - பயனின் மை. அழல் - நெருப்பு. போற் றுதல் - கொண்டாடல்.

116-120. அலவன் - நண்டு. அதனை முன்பே அறைந்துளேன்- அழு மொழியலவனுக்குஞ் செய் தியை வேட்டைக்குப் புறப்படு தற்கு முன்பே சொல்லியுளேன். முன்பர் - வலியோர். இடாகினி- ஒருவகைப் பேய்.

121-125. வலவர் - திறமை யுள்ள விதூஷகர்: மகிழ் மொழி வலவன்.

126-130. வகுந்து - வழி. மயக்கு - வருத்தம். இழிதல் -

செலவினின்றும் தவிர்ந்து தங்கல். பொன்னன் - மள்ளுவ நாட்டு உழவன். வரம்பு அளே- வரப்பிலுள்ளவளே. அல= அல்ல.

131-135. சங்கத்தொனி- சங்கின் சப்தம், சங்கத்தாரின் சப்தம். சேவகன் - வீரன். குப்புற்று ஒடுங்கல் - குப்புற்று வீழ்தல்.

136-140. இக்கதை - இந் நிகழ்ச்சி. விதை - வித்து.

141-145. சங்கை - ஐயம். தடுமாறல் - திகைத்தல். நனி - மிகுதி. பாக்கள் - பாட்டுகள். அவைக்களம் - அரச சபை.

146-150. தராதலம் - பூமி. மாறன் - பாண்டியன். மட்டந் தட்டல் - கேவலப்படுத்தல்.

151-155. துதித்தல் - போற்றல். இலங்கை - கொழும்பு. தூதாய்ச் சென்றது, தாயாதிப் போரினுலுண்டாகிய உண்ணுட்டுக் குழப்பத்தினே மாற்றவேண்டிப் படைத்துணே யனுப்புமாறு ஆரிய சேகரனுகிய கொழும்பு நாட்டுப் படைத்தலேவன்பாற் சென்று திரும்பிய செய்தியாம். கொற்கை - பாண்டி நாட்டுத்தலே நகர். செழியன் - பாண்டியன்.

156-160. சிறுகுடி மக்கள் - வண்ணுன், அம்பட்டன் முதலோர். முதற்குடிமக்கள் - அரசனுற் சிறப்புற்ற பிரஜைகள். பூளே - ஒருவகைப்பூ: பஞ்சுபோல் இலேசாக வுள்ளதாகும். தமிழ் முனி - அகத்தியர்.

161-165. குறுமுனி - அகத்தியர். குறு நகை - புன் சிரிப்பு. குறுமுனிக்கும், குறு நகைக்கும் குறுமை பொதுவாக வருதலே ஐயத்திற் காதரவாகக் கூறியது மகிழ்மொழியாம்.

166-170. விண்ணவன் - தேவேந்திரன். இன் - எல்லேப் பொருள். சுற்றம் - உறவினர். உழலல் - வருந்தியலேதல். அனம் = அன்னம்.

171-175. ஊழ் - தலேவிதி. பாவலன் - பாடுதலில் வல்லான். படி - பூமி. புரிவான் - செய்யும் பொருட்டு.

176-180. அவம் - வீண். "அழித்தல்" பெரிதாம் எனக் கூட்டுக. வலோத்துங்க - வலிந்து உயர்ந்த.

181-185. வறிது - வீண். காட்டுமலர் சூடுவாரின்றிக் கழிதல் இங்கு உவமானம். மயங்கிடல் - வருந்தல். எம்மனோர் - எம்போன்ற சிறியர்.

186-190. மம்மர் - அறியாமை. தெள்ளு - தெளித்தெடுத்த. சினம் - கோபம். மறைந்துறைதல் - பிறரறியாது வசித்தல். அன்னவன் - சோழன்.

191-195. இன்னல் - துன்பம். மறு - குற்றம். களவு - வஞ்சகம், குற்றம்.

196-200. திட்டம் - நிச்சயம். எண்ணம் - கவலே. சிறுமொழி - கோட்சொல். செவி - காது.

201-205. கலே - சாஸ்திரம், ஒளி. குடகடல் - மேலச்சமுத்திரம். அருணன் - சூரியன் தேர்ச்சாரதி. மான் - குதிரை. மாநகர் - சிறந்தமுரணேநகர்.

206-209. விரைதல் - வேகமாகச் செல்லவேண்டித் துடித்தல். மாலே - சாயங்காலம். அமர்தல் - வீற்றிருத்தல். அகநகர் - அரண்மனே.

இரண்டாங் காட்சி

1-5. வாள் - ஒளி. சாதல் - மரணம். பயன் - பலன்.

6-10. கிட்டல் - கிடைத்தல். கிளர்ச்சி - உற்சாகம். அரிது - முடியாமை. கறைதல் - புலம்பல். எந்திழை - பெண்.

11-15. மன்துணை - மந்திரி. மதலை - அறியாக்குழந்தை. கழறல் - வற்புறுத்திக் கூறல். வாழ்விற்குதவிடல் - மணம்புரிதல். ஒண்ணுதல் - பெண்.

16-20. குழந்தை நாட்கள் - சிறுபருவம். பங்கம் - குற்றம். பரகதி - மரணம். உற்றார் உறவினர் - நெருங்கியவர்களாகிய பந்துக்கள். பற்று - அன்பு. நீள்நிலம் - பாண்டிநாடு. புரத்தல் - பாதுகாத்தல். காதலன் - அன்பன்.

21-25. ஆயின் - ஆயினும்: உம்மை தொகுத்தல். மனக்கோள் - அபிப்பிராயம். அளத்தல் - தெரிதல்.

26-30. பரசுதல் - போற்றல். நாணம் - வெட்கம். நா - நாக்கு. செறித்தல் - ஒருபுறஞ் சேர்த்து நிறுத்தல், நைகுதல் - உள்ளுக்குள்ளேயே வருந்தல். பொன்றுவித்தல் - போக்கல். புரிதல் - விரும்பல்.

31 - 35. எங்கை - எனது தங்கை. ஓதல் - சொல்லல்.

36 - 40. மேடை - உயரிய ஆசனம். காட்சியில் - பார்வைக்கு. பின்னிடல் - தாழ்ந்து போதல். பெற்றியது - தன்மை யுடையது.

41 - 45. நென்னல் - நேற்று. பொழிவு - பெய்தல். புனல்-நீர். அகத்தது - நடுவிடத்தே யுள்ளது. யாண்டு - எவ்விடம். இவண்-இவ்விடம்.

46 - 50. பரிவு - துன்பம். மாற்றம் - சொல். துணிவு - தைரியம். வெளி - புறம். எங்ஙன் - எவ்விதம்.

51 - 55. மிரட்டல் - பயமுறுத்தல். இவ்விடம் - அரண்மனை. விரட்டல் - துரத்தல். மறை - இரகசியம். நயமொழி- இதவசனம்.

56 - 60. வைப்பு - புதையற் பொருள். ஏகல் - செல்லல்.

61 - 65. அமைச்சு - மந்திரி யுத்தியோகம். மேயிடல் - தங்கல். காண்டி - காண்பாய்.

66 - 70. மேயிடல் -சேர்தல். பொறியிலி - அறிவிலி. கறுத்தல் - கோபித்தல். காணொணு வகை செயல் - கொலை புரிதல் முதலியன. அறிவின்றி - தெரிதவில்லாமல்.

71 - 75. காலை - அதிகாலை. ஆண் உடை - ஆண் மக்கள் அணியும் உடுப்பு. கார்க்குழல்-பெண். கொணர்வல் - கொண்டு வருவேன்.

76 - 80. அரிவை - பெண். புரிதல் - செய்தல். அமைத்தல்- ஏற்பாடுசெய்தல்.

81 - 85. மாகாதிபன் மருகன் - இந்திரனது மருமகன்: முருகன். பொருள் - செல்வம். பொலிதல் - மேம்படல். இறைவி- கற்பகவல்லி. செலவு - செல்கை: பிரயாணம். உசாவல் - வினவியறிதல்.

86 - 92. "தீதுகள் ஒழிய ஓதாய்," எனக் கூட்டுக. மணி- ஒலிக்குங் கருவி. அம்மணி - கற்பகவல்லி. அகத்தியம் - அவசியம். மழைக்கண் - மழைபோல் நீர் சொரியுங்கண்கள்.

மூன்றாங் காட்சி

1 - 5. ஒன்னார் - பகைவர். உட்குதல் - பயந்து பின் வாங்குதல். நடையுறல் - படைஞர்க்கு வேண்டிய வொழுக்கத்தைப் பின்பற்றல்.

6 - 10. திறல் - வலிமை. பார் - பூமி. மேரு - இமயமலை. இணை - சமம். படைக்களம் - படைப் பயிற்சி பெறுமிடம்.

11-15. புகுதல் - போதல். அரசியல் - இராச்சியபாரம். அகழ் - கோட்டையைச் சூழ்ந்து கிடக்கும் ஆழமான நீர் நிலை. ஞாலம் - பூமி. அலகில் - கணக்கிலடங்காத. மதன் - அறியாமை.

16-20. கனவு - சொப்பனம். வாணாள் - ஆயுள். வீணாள் - பிரயோசன மற்ற காலம். நன்று - நன்மை. ஆற்றுதல் - செய்தல்.

21-25. குலவல் - விளங்கல், கலத்தல். வன்றிறல் - மிக்க வலிமை. வாழ்க்கை - சரித்திரம். பழகு - பயின்று தெளிதற்குரிய. அமுதம் - பால். தேக்கிடல் - வெகுட்டல்.

26-30. சங்கம் - சபை, சங்கு: பாலடை. அளி - கிருபை. தொகை - தொகுக்கப்பட்டது. தொகைநூல் - பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு. மருந்து - பிணியினைத்தீர்ப்பது. துகள் - குற்றம். அணி-ஆபரணம். தாழ்வு-குறைவு. நற்றமிழ் - திருக்குறள்.

31-35. வாசகம் - திருவாசகம். குண்டலகேசி, வளையாபதி - பெருங்காப்பிய மைந்தனுள் இரண்டு. குழை - காதணி. வளை - வளையல். அரை-இடுப்பு.

36-40. திருக்கோவை-திருக்கோவையார். குறங்கு - துடை. இடை - ஏழனுருபு. காஞ்சி - எண்கோவை மணி. சிலம்பு - காலணி. சிலம்பல் - ஒலித்தல். சிற்றில் - சிறுவீடு.

41-45. கழங்கு - கழற்சிக்காயாட்டம். "உண்டு, (25) ஏற்று, பூண்டு, அணிந்து, அசைத்து, பிணைத்து, சேர்த்து, சிற்றிலில் ஆடுஞ் செல்வி," என முடிக்க. "திலகமா (31), குழையா, மார்பணியா, வளையா அணிந்து," என முடித்துக் கொள்க. பூணுதல் - அணிதல். பொற்பு - அழகு. இயற்றல் - செய்தல். "பெறல் அரும் அரசே!" என மாற்றிக் கூட்டுக.

46-50. வணம் = வண்ணம். மொழி - தாய்பாஷை.

51-55. தழைத்தல் - விருத்தியாதல். பேச்சு - புகழ் உரை.

56-60. ஏச்சு - இகழுரை. அலகை - அறிவில் பேய்கள். கவர் மொழி - இருபொருள் கொண்ட பழிப்புரை. உறழ் - ஒத்த. இமிழ் - ஒலி.

61-65. புரத்தல் - காப்பாற்றல். வாட்டம் - குறைவு. முதியர் - முன்னோரான பெரியவர். வாழ்க்கை - வரலாறு. சதி - மோசம். வஞ்சகம் - கபடம்.

66-70. எதிர்கால் - வருங்காலம். கவர்தல் - அபகரித்தல். திறமை - வன்மை. வயிரம் - நவரத்தினங்களி லொன்று.

71-75. வகுத்தல் - செய்தல். கதிர்மதி - சூரியசந்திரர். புதுமதி - வளர்பிறை. முரண் - மாறுபாடு. அரண் - பாதுகாப்பு.

76-80. தூசு - வஸ்திரம். திருமகள் - லட்சுமி. திருநோக்கருள் - செல்வம். செறிதல் - நிறைதல். அன்னவள் மருமகள் - இலட்சுமியின் மருமகளாகிய சரசுவதி.

81-85. விலை - மதிப்பு. பதர் - கருக்காய். விளக்கம் - பிரகாசம். தகைமை - மேன்மை. விலக்கரு - விலக்கக்கூடாத.

86-90. மன்பதை - மக்கள். கண்படை - உறக்கம். கவின் - மேன்மை. புகழுமை பெரியார் - புகழேந்தியார்.

91-99. "முன்னூழி நாள்," எனப் பிரித்துக் கூட்டுக. உரிமை - அதிகாரம். விண் - தேவர். நேயம் - அன்பு. அவை மாந்தர் - மந்திரி முதலோர்.

நான்காங் காட்சி

1-5. சிறு பொழுது ஆறு- காலை, நண்பகல், எற்பாடு (= பிற்பகல்), மாலை, யாமம், வைகறை (= அதிகாலை, விடியல்.) உகத்தல் - விரும்பல். வீடு - விடுதலை. கறை - களங்கம்.

6-10. அரவு அரசு - ஆதிசேஷன், "போற்றப் பெற்றுப் பேசிடல் தகவாம்," என முடிக்க. பல் நா - பல நாக்குகள். தகவு - தகுதி. விடியல் - விடியற் காலம்.

11-15. மடியர் - சோம்பேறிகள். மடிதல் - சாதல். வான் - ஆகாயம். ஊக்கம் உள்ளக் கிளர்ச்சி. வானப்பறவை - வானம் பாடி. பூவை-மைனா. விள்ளுதல் - விவரித்துச் சொல்லுதல்.

16-20. சிலம்பல் - ஒலி. செவி- காது. புலம்பல் - துன்பம். வருந்தல். புன்மை - அற்பம். மலர்தல்- மல்லாந்து படுத்தல். உன்மத்தன்- அறிவிழந்தவன். கண் வளர்தல் - உறங்கல்.

21-25. பண்-ஒழுங்கு. பாங்கு- மேன்மை. ஒருங்கு - ஒன்றாக. அமைதல் - பொருந்தல். கதிர்- சூரியன். பொலிவு - தேசசு.

26-30. அரும்பல் - வெளிப்படல். படர் - துன்பம். வதனம் - முகம். உயிர்ப்பு - மூச்சு. முன்னம் - அடையாளம்.

31-35. மூர்ச்சை - மயக்கம். நீர்த்தடம் - குளம்.

36-40. கொணர்தல் - கொண்டு வரல். பொறி - நல் விதி. வரை - மலை காளை - எருது. நனவு - விழிப்பு.

41-45. அருந்தல் - குடித்தல். அவைக்களம் - அரசசபை.

46-52. கேடு - ஆபத்து. துன்பு - வருத்தம். தோற்றம் - வரலாறு.

(குறள்வெண் செந்துறை)

௧. அறைகுதல் - சொல்லுதல். ஏமம் + ஆர்ந்த = ஏமார்ந்த. ஏந்திழை - பெண்.

௨. மகார் - மக்கள். கலை - நூல். தாமரை வெண் நற்பெயர் - வெண்டாமரை என்ற நல்ல பெயர்.

௩. தவழுகின்ற பருவம் - குழந்தைப்பருவம். தயாபரன் -

பரம்பொருள். கழலிணைகள் - இருபாதங்கள்.

௪. பரிதல் - விரும்பல். எமக்கை - தமக்கை. பாங்கு-ஒழுக்கம். பண்பு - மேன்மை. அன்பு - காதல்.

௫. சோணுடு காணல் - சோழநாட்டுக்குப் போய்ச்சேரல். ஆதரவு - அன்பு. மீளல் - திரும்பல். கான் - காடு.

௬. மிக்கான் - மூடன்: குறிப்புமொழி. விடுதி-முடிவு.

௭. எந்திழை - உயர்ந்த ஆபரணங்களை யணிந்த பெண். விழைதல் - விரும்பல். மதுமலர்- தேனிறைந்த தாமரைப்பூ. கதி- ஆதரவு.

53-55. பின்னவன் - தம்பி. அன்பு அகம் - அருள்நிறைந்த மனம். செறிதல் - நிறைதல்.

56-60. பாங்கி - தோழி. சில்கால் - சிலகாலம். கண்டு - கற்கண்டு. ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். மால் - மயக்கம். நாற்குணம் - நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. படைத்தல் - கொண்டிருத்தல்.

61-65. நென்னல் - நேற்று: அண்மை குறித்து நின்றது. நேர்- ஒப்பு. பஞ்சை - எளிமைத்தன்மை. பற்று - காதல். வஞ்சி - வெண்டாமரையாள். ஆறு - வழி.

66-68. நகை - ஒளி. அனைய - உவமவுருபு.

ஐந்தாங் காட்சி

1-5. தடம் - தடாகம். கடி - சிறப்பு. கோணுதல் - அழகுகெடல். அகம் - மனம். பொன்மலர் - பொன்னுற் செய்யப்பட்பட்ட பூ. நாற்றம் - வாசனை.

6-10. பொற்பு - அழகு. கற்பு - கல்வி யறிவாலுண்டாகும் நல்லொழுக்கம். காட்சி - எதிரே தோன்றல். துண்டாதல் - வேறுபடல்.

11-15. வேலை - கடல். அவலம் - துன்பம். செம்மணி - மாணிக்கம். கோமகன் - குலோத்துங்கன். காரிகை - வெண்டாமரையாள்.

16-20. ஓதிடல் - சொல்லல். கேழ் - மேன்மை. கிளர் - விளக்கம். நாள்தேன் மலர் - தேனிறைந்த, அன்று பூத்த மலர். நாற்கவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். இசைத்தல்-பாடுதல். இசை - கீர்த்தி. இசைத்தல் - சொல்லல்.

21-25. நேரார் - பகைவர். நன்னயம் - நாகரீகம். வெதுவெதுப்பு - காதற் காய்ச்சல்.

26-30. பாயல் - படுக்கை. ஆண்டகை - ஆண்களிற் சிறந்தோன்.

31-35. இரா - இராத்திரி. குன்றுதல் - குறைவுறல். சிந்தித்தல்-நினைத்தல். மேயினது - நிகழ்ந்தது. தோகை - மயில்.

36-40. பழுது - குற்றம். அலர்தல் - மலர்தல்.

41-45. பகுத்தறிவு - நன்மை தீமைகளைப் பிரித்துத் தெரியும் பேரறிவு. அறத்து ஆறு - தர்மமார்க்கம்.

46-50. முளையாம்பாலிகை - முளைப்பாலிகை: கல்யாண காலத்திற் செய்யுஞ் சடங்குகளிலொன்று. பேதுறல் - கஷ்டப்படல்.

51-55. நுண்நூல்மதி - ஆராய்ந்தமைந்த நூல் அறிவு.

56-60. தொடி - வளையல். தகைமை - நிலைமை.

61-65. இன்னே - இப்பொழுதே. ஆணை - உத்தரவு. ஓதல் - எடுத்துச் சொல்லல். ஆதல் - மேன்மையுறல். கமலம் - தாமரை. மணத்தல் - கலத்தல். நான்முகன் - பிரமா. வெண்மலரவள் - சரசுவதி. மானுதல் ஒப்பாதல்.

ஐந்தாவதங்கம் - முதற் காட்சி

1-5. உழுவல் அன்பு - இடையூறு பலவற்றையும் எதிர்த்துச் சென்று வெற்றியுறும் விருப்பம். இது ஆண்வடிவங் கொண்ட வெண்டாமரையாள் வைத்துக் கொண்ட பெயர். முழுவல் அன்பு - அன்பின் முதிர்ந்த வன்மை. பெற்றம் - பசு. துயர் - துக்கம்.

6-10. கடு - விஷம். அரசியல் கணக்கு - இராசாங்க காரியம். கொற்றவன் - வெற்றியுடையோன்.

11-15. உறந்தைப்பதி-உறையூர். மணிமாடம் - அரண்மனை. அறம் - நல்லொழுக்கம். வரைதல் - மணம்புரிதல். நலிதல் - வருந்தல்.

16-20. மின்திகழ் - மின்னலைப் போல் தோன்றி மறையும்படியான: உழுவலன் வடிவம் உண்மையல்ல வாதலின், அங்ஙனம் கூறப்பட்டது. அடிகள் - பெரியோர். மிடி - துன்பம். ஆண்டு - வயது.

21-25. களவு - மறைவு. நுணல் - தவளை. நோய் - துன்பம்.

26-30. துங்கன் - குலோத்துங்கன். திரு - பொருட் செல்வத்தைப் பெற்றிருத்தல். தெள்ளியராதல் - அறிவுச் செல்வத்தையடைந்திருத்தல்.

31-35. திருமறை - திருக்குறள். திகழா - அனுபவத்தில் காணமுடியாத. கவி - புலவர். நோக்கினுள் மணி - கண்ணிற் கருவிழி. புரவலன் - அரசன்.

36-40. மாற்றலன் - பகைவன். வித்வக் காய்ச்சல் - புலவர் பொறாமை. பாய்ச்சல் - தாக்கல். கோறல் - கொல்லுதல்.

41-45. தீவகம் - தீவினிடத்தில். ஏகுதல் - போதல். விழல் - வீண்.

46-50. முடங்கல் - நிருபம். முகிழ் - மலர்ச்சியுள்ள. திரு - இலட்சுமி. சேயிழை - பெண். வரைதல் - எழுதல். அரைசி - இராணி: கற்பகவல்லி.

51-55. போங்கால் - போகும் வேளை. நறுக்கு - நிருபம். மாற்றரசர் - வேற்றரசர்.

56-60. மடக்கொடி - பெண். கேழ் - நிறம். போக்குதல் - அனுப்புதல். எளிது - இலகு. புகர் - குற்றம்.

61-65. வாகு - ஒழுங்கு. வளர்மதி - சுக்லபட்சச் சந்திரன். நற்காட்சி - கண்களைக் கவரும் வடிவம்.

66-70. அகநட்பு - மனப்பூர்வமான சிநேகம்.

71-75. நாடிடல் - ஆராய்ந்து நோக்கல். பங்கம் - குற்றம். வாயில் - மூலம். ஒண்டொடி -

வெண்டாமரையாள். கண்ணெழுத்து - மேல் விலாசம்.

76-80. பொறித்தல் - எழுதுதல். குணக்கேடு - தீமை. அகத்தியம் - அவசியம்.

81-85. புகல் - சொல்லும்படியான. வலியள் - சமர்த்துடையள். தேவியா மரசி - பட்டமகிஷியான கற்பகவல்லி.

86-91. ஏமம் - இரட்சிப்பு. அகலல் - விட்டு விலகல். தவளம் - வெண்மை. வாள் நகை - ஒளி மிக்க பற்கள். தையலார் - பெண்கள். மாகாதிபத்யம் - இந்திர பதவி.

இரண்டாங் காட்சி

1-5. நேரிழை - பெண். அலைவார்குழல் - வெண்டாமரையாள். "செய்தி யாதும் காண்கிலன்," எனக்கூட்டுக. ஒற்று - வேவுகாரர். வல் - சூதாடு கருவி. ஏர் - உவம வுருபு. நகில் - முலை. அறியார் - முற்றெச்சம்.

6-10. மடங்கல் - திரும்பல். மடக்கொடி - வெண்டாமரையாள். மடங்கல் - அகப்படல். நலிவு - துன்பம். அணங்கு - பெண். நொய்மை - மென்மைக் குணம். நோய் - துன்பம். எந்தையார் - பராக்கிரம பாண்டியன்.

11-15. வறியன் - ஏழை. செய் - விளைநிலம். புகட்டல் - கொடுத்தல். வழுதி - பாண்டியன். கமர் - நிலப் பிளவு.

16-20- கயற்கணி - மீன் போன்ற கண்ணையுடைய பெண். ஒளித்தல் - மறைந்துபோதல். மயல் - மயக்கம். தொலைத்தல் - போகவிடல்.

21-25. தனித்துயர் - மிக்க துன்பம். நெடுமால் - மகாவிஷ்ணு. பெட்பு - விருப்பம். களிப்பு - மகிழ்ச்சி.

26-30. குலமணி யாழி - வம்ச பரம்பரையாகக் கொண்டாடிப் போற்றி வரும் மாணிக்க மோதிரம். கொடுங்கடல் - ஆழமும் அலையு மிகுந்த சமுத்திரம். அலமரல் - செய்வ தின்னதெனத் தெரியாது திகைத்து வருந்தல். பாழி - வலிமை. பார்த்திபன் - அரசன். மெல்லியல் - பெண்.

31-35. வினை - காரியம். நனையாள் - மலராத மலரினையொத்தவள். பின் - பின்னவளாகிய. ஒண் மொழி - பெண்.

36-40. மண் - முத்திரை: அரக்கிற்குப் பதிலாகக் களிமண் உபயோகப்படுத்து முறையால், அங்ஙனங் கூறப்பட்டது. கண்ணிடைப் படாவிக்காலை - காணப்பெறாத இவ்வேளை. ஏங்கல் - வருந்தல். பொன் செய் - பொன் விளைவிக்கும்படியான. நன்செய் - கழனி. நீர் நாடு - சோணாடு.

41-45. ஊர்கோள் - சந்திரனைச் சுற்றிக்காணும் படியான வெண்மையாகிய கோட்டை. புனல் நாடு - சோணாடு.

46-50. வெண்டாமரையது - வெண்டாமரையாளுடைய கையெழுத்து. உபசரிப்பு - ஒன்றை மற்றொன்றாகக் கூறும் வழக்கு. மேதினி - உலகம்.

51-55. காரிகை - வெண்டாமரையாள். சூழ்ச்சி - உபாயம். விளித்திடல் - கடிதத் தொடக்கத்தில் கூப்பிட்டுக் கொள்ளல்.

கையொப்பு - கையெழுத்து. அவள்-வெண்டாமரையாள்.

56-60. நன்னர் - நன்மை. புகழினை ஏந்திய புலவர் - புகழேந்தியார். முரணைப்பூபன் - சந்திரன் சுவர்க்கி. வாயிற் புலவர் - சமஸ்தான கவி. வதிதல் - தங்கல். அன்னாள் - வெண்டாமரையாள்.

61-65. மாண்உடை - பெருமையினைக் கொண்ட. சோதரன் - சகோதரன். வெண்டாமரையாளின் தம்பி. உரிமை - பந்தத்துவம். பணிவிடை - குற்றேவல். ஆற்றல் - செய்தல். மற்றவர் - மற்று அசைநிலை; அவர்: புகழேந்தியார்.

66-70. வெருவரல் - பயம். சதி - மோசம். காதற்கனி - புகழேந்தியார்.

71-75. வானவர் - தேவர். வடமொழி - சமஸ்கிருதம். நளன் வரலாறு - நைடதம். பா - செய்யுள்.

76-80. காப்பியம் - காவியம். அரங்கேற்றல் - பல பெரியோர் முன் வாசித்து நன்மதிப்புப் பெறல். கிலி - வீண்பயம்.

81-85. உஞற்றல் - செய்தல். காண்டி - காண்பாய். திண்திறல் - மிக்க வலிமை. செய்தி - காரியம்.

86-90. அவதரித்தல் - தோன்றல்.

91-95. பொம்மல் - பொருள்வளம், சொல்வளம் பொதுளிய நிலைமை. புலம் - அறிவு.

96-100. கணி - சோதிடர். கழறல் - வற்புறுத்திக் கூறல். பூங்கா - பூஞ்சோலை. ஒறுத்தல் தண்டித்தல். ஆடிடம் - விளையாட்டுக்கூடம்.

101-105. பணிப்பு - உத்தரவு. மாற்சரியம் - பொறாமை. மடையன் - அறிவிலி. நொடி - நொடிக்குங்குங் காலவளவு.

106-110. பாத்திபர் - அரசர். பணித்தல் - உத்திரவிடல். கூர்த்திடல் - நுட்பமாதல். மும்மதி-மூன்று மாதங்கள். முகமதி-முகமாகிய சந்திரன். கன்றுதல்· கோணுதல்.

111-115. சிதைத்தல் - மாற்றல். உய்ந்திடல் - மேன்மையுறல். பேதையாள் - வெண்டாமரையாள். உணர்வு - ஞாபகம். அயர்த்தல் - அலட்சியமாக விடல்.

116-120. பாடு - துன்பம், பெருமை. இளமரக்கா - செழிப்புள்ள சோலை. எதிர்கூ - எதிராகக் கூப்பிடுங்குரல்.

121-125. தென்றல் - தெற்குப் புறத்திலிருந்து வீசும் மெல்லிய காற்று. மன்றல் - வாசனை. மணத்தல் - நுகர்தல்: அனுபவித்தல். தோகை - மயில். ஓகை-மகிழ்ச்சி. அகன் - மனம். வளர்மதி- சுக்லபட்சச் சந்திரன்.

மூன்றாங் காட்சி

1-5. புணை - தெப்பம். உலவிடல் - உலாவுதல். உம்பர் - தேவர். பாத்தல் - பகிர்ந்து கொடுத்தல். மாற்கடவுள் - மகாவிஷ்ணு.

6-10. களி - மகிழ்ச்சி. கூட்டுண்ணல் - கூடிப்புசித்தல். புத்தமுது - புதிய அமிர்தம்.

11-15. வானவர் - தேவர். மானவர் - பெரியோர். சொற்

பெருக்கு - பிரசங்கம்: விரிவுரை. களங்கம் - குற்றம். விழுமிய - சிறந்த. கருப்பங்கட்டி - சர்க்கரை.

16-20. ஒன்பான் சுவை - நவரசம்: நகை, கருணை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை. அகம்-மனம். போற்றல் - கொண்டாடப்படல்.

21-25. சமய மாறுபாடு - பிற சமயத்திற் கொள்ளும் வெறுப்பு. வழுத்தல் - துதித்தல். விசிட்டாத்வைதக் கொள்கை - வைணவ சமயம். எங்கட்கு இறை - என் போன்ற மக்கட்குத் தலைவன். விள்ளுதல் - விளங்கல்.

26-30. முன்னுரை - நூலின் தொடக்கம். கிளைத்திடல் - விருத்தியாதல்.

31-35. வெண்சீர் - காய்ச்சீர். வெள்ளாற்றொழுக்கு நல்ல ஆற்றின் செலவு போன்ற நடை. நுட்பம் - பொருள் ஆழ்ந்தகன்ற தன்மை. செவியகம் - காதினுட்பாகம். "வெண்பாவிற் புகழேந்தி," என்ற பழம்பாட்டடிகளை நோக்குக.

36-40. ஓவியம் - சித்திரம். தீட்டுதல் - எழுதுதல். ஆடி - முகம் பார்க்கும் கண்ணாடி.

41-45. புலன் - அறிவு. திப்பியம் - திவ்யம். முரணையும் - மாறுபாட்டினை யுடையது என்று பொருள்தரும் நகரமும். மன்பதை - மனிதர். குடக்கு எழுவான் பிறை - மேற்கிற் காணப்பெறும் வளர்பிறைச் சந்திரன்.

46-50. சான்றது - மேம்பட்டது. முகமதி - முகமாகிய சந்திரன். குவளை - நீலோற்பலம். முகிழ்த்தல் - மலர்தல். நகர்நிறைகாடு - நகரின் மத்தியில் அமைந்த சிங்காரத் தோட்டம் (Park). நயம் - சிங்காரத் தோட்டத்தினை நாடிச் சென்ற நளனுக்குத் தெருக்களே சிங்காரத் தோட்ட மாயினமை.

51-55. தலைவனின் நயம்பு குவித்தல் - தலைமகனின் நல்ல தன்மைகளைத் தலைவியின் மனத்திலே இலகுவாகச் செல்லச் செய்தல். நெஞ்சகம் - மனம். சார்த்தல் - சேர்த்தல். கலை - நூல். இளவல் - நளன்.

56-60. ஓதிமம் - அன்னம். புகட்டல் - போதித்தல். குலமுனி - நாரதர். யாழ் - வீணை. பகர்தல் - வர்ணித்தல்.

61-65. நெற்றித் தனிக்கண் - சிவபெருமான் நெற்றியிலுள்ள சிறந்த கண். நெருப்பு - திரிபுரத்தை எரித்த அக்கினி. பெற்றியது - தன்மையது. மூவுலகு - சுவர்க்கம், மத்தியம், பாதாளம்.

66-70. செங்கோல் - நல்ல அரசாங்க வமைப்பு.

71-75. குடபால் - மேற்கில். கூத்தன் - நடிகன். இருட்படாம் - இருளாகிய திரைச்சீலை. வாங்குதல் - விலக்குதல். ஆரணம் - வேதம். குடவரை - அஸ்தமன கிரி. ஒருமுக எழினி - ஒருபுறத்தே யிருந்து வெளிப்பட்டு மறுபுறம் வரை சென்று மறைக்குந் திரைச்சீலை.

76-80. மாலை - சாயுங்காலம். புறப்பாடு - வெளிப்படல். மன்மகன் - அரச குமாரன். கருப்பு வில்லி - மன்மதன். அடிப்புறம் - அடிப்பாகம்.

81-85. மேயின - பொருந்தியுள்ள. நுனிப்புறம் - மேற்பாகம். மறுபுறம் - அடிப்புறம். ஒண்திறல் - நல்ல சமர்த்து. மாந்

தர் - மனிதர். உலகியல் - உலக வழக்கம்.

86-90. எல்லியம் போது - இராக்காலம். சிறை - இறகு. அரங்கம் - சீரங்கம். மதில் - கோட்டை.

91-95. பேதமை - அறியாமை. "தம்பிவண்டாதி கண்ணறிவினலறிவுயிர்," என்ற நன்னூல் வாக்கியம் நோக்குக. நாலறிவு - ஸ்பரிசம், ரசம், கந்தம், ரூபம். வான்மை - இளமை.

96-100. உழத்தல் - வருந்தல். ஆராய்வு - ஆராய்ச்சி. நேர்-ஒழுங்கு. கன்னலன் - மன்மதன்.

101-105. சுடர் - கிரணம். கொப்புளம் - புண். வான் - ஆகாயம். சீ - புண்ணிலிருந்து வெளி வரும் (ரத்தங் கெட்டதாலுண்டாம்) வெண்ணீர். நீர் - சிலநீர் :- துர்நீர்.

106-110. மீனினம் - நட்சத்திரக் கூட்டம். விண் - ஆகாயம். மீனின முதிர்தல் - சீவடிதல். பனிவீசல் - சிலநீர் வடிதல். கருத்திலார் பலருங் காணுவர் - சாதாரணமான எல்லோரும் அறிவர். குழு - கூட்டம்.

111-115. நற்றம் - நன்மை. பொற்றொடி - தமயந்தி. சேடியர் - தோழிமார்கள். பொன்னி - காவிரி. அமுதம் - நீர். கொழுந்து - துளி.

116-120. பேரன்பு - இராசபக்தி. வழுதி - பாண்டியன். சேரன் - மலைநாட்டு மன்னன். தமிழகப் பற்று - தாய் நாட்டின் மீது கொண்ட அன்பு.

121-125. அருமை - முடியாமை. தெரித்தல் - கற்பித்தல். ஆரியன் - ஆசிரியன். நோன்பு - தவம். செற்றம் - கோபத்தின் பின் கொள்ளும் மனவயிரம்.

126-130. தீங்கு - தீமை. மாகம் - தேவருலகு. கலைமடந்தை - சுரசுவதி. பொருந்தல் - சமாதானப் படல்.

131-135. ஆணவம் - அகங்காரம். புலமை - அறிவு.

136-140. பெருஞ் சொல் - பிரசங்கம், புனல் - தண்ணீர்.

141-145. கைம்மாறு - பிரதியுபகாரம். பலித்தல் - பலன் தரல். ஊன் - மாமிசம். உகத்தல் - விரும்பியேற்றல். தலைசிறத்தல் - மேன்மையுறல்.

146-150. இருளும் ஒளியும் கலத்தல் - விடிதல். தெருள் - தெளிவு. காய்பசி - மிகுபசி.

151-152. நோய் - துன்பம். பசியால் கல்வி முதலியன கெடலியல்பாகலான் ,"பசிநீங்கி நுண்மதி சிறக்க," என்றார்.

நான்காங் காட்சி

1-5. ஆர்தல் - மிகுதல். திங்கள் நன்முகத்தினள் - வெண்டாமரையாள்.

6-10. தொடர்ச்சி - இடையீடில்லாத. பங்கம் - குற்றம். பாலித்தல் - செலுத்தல். இளைஞர் - உழுவலன், வெண்டாமரையாள்,

11-15. கொண்டல் - மேகம். குமுறல் - ஒலித்தல். அருள் - கிருபை. சுற்றம் - உறவு. தமயன் - மூத்த சகோதரன்.

16-20. மனை - மனைவி. எகுதல் - விட்டு விலகுதல். ஒட்டுதல் - முடிதல். பால் - எழனுருபு.

21-25. நேர் - ஒப்புமை. புலன் - கட்புலனுகிய பார்வை. பிணித்தல் - கட்டல். தமக்கை - மூத்த சகோதரி: வெண்டாமரையாள்.

26-30 கணித்தல் - அளவிடல். ஒண்ணுதல் - கூடுதல். செம்மை - ஒழுங்கு.

31-35 வேண்டுகோள் - கேட்டுக் கொள்ளுதல். கெழுமுதல் - பொருந்துதல்.

36-40. காட்சி - தரிசனம்

41-45. வவ்வுதல் - அபகரித்தல். பண்டு - முன்பு.

46-50. தெரிவை - பெண். வறியன் - தரித்திரன். வான்மை- மேன்மை. வான்மைசால் சுற்றம் - கணவன்: உலக வாழ்க்கையில் பெண்களை முன்னின்று நடத்துவிக்கும் பெருமை கருதி அவ்வண்ணம் கூறப்பட்டது.

51-55. திருவடி - மேன்மை தங்கிய பாதங்கள். செந்தாமரையாள் - இலட்சுமி. வடிவு - உருவ வமைப்பு. அணங்கு-தெய்வப்பெண் போல்பவள். உம்பி- உனது தம்பி. பழுது - குறை. உடற்பிறப்பு - சகோதரன், உடலின் வேட வேறுபாடு.

56-60. இணை - ஒப்புமை. விருப்பம் - காதல். விளம்பல் - சொல்லல்.

61-65. அரசன் - குலோத்துங்கன்; அரசி - கற்பகவல்லி. பரசுதல்-போற்றுதல். புரைதல்- ஒத்தல். பொலிதல் - சிறப்புறல். நீடூழி - நீண்ட ஊழிக்காலம்.

66-70. இம்மை - இவ்வுலக வாழ்க்கை. சகடு - வண்டி. பொன்மொழி - அநுமதி.

71-75. பேணுதல் காப்பாற்றல். அன்னை - தாய். உழுவல்அன்பு - எவ்வித இடையூற்றுக்கும் பின் வாங்காத காதல்.

76-80. ஒரு படித்து - ஒரே விதம். மதி - சந்திரன். ஞாயிறு - சூரியன். சாற்றல் - சொல்லல்.

81-85. நிலவிடல் - தங்கல். நேரிழை - பெண், ஒழுங்கான நூலிழை. ஒள்ளிழை - பெண்.

86-90. களித்தல் - மகிழ்தல். முதல் - காரணம்.

91-95. இன்று - இல்லாமல். இதயம் - நெஞ்சம். புரவலன் - அரசன். பண் - இசை. காவலர் - அரசர்.

96-100. அளப்பு அரும் - இவ்வளவென்று கணக்கிட முடியாத - "அளப்பரும்.............. பொற்களத்தூர்," என்ற தொடரிலுள்ள வரலாற்றினை, "நன்றாய் ......தொண்டை மண்டலமே," என்ற தொண்டைமண்டல சதகம் 68-வது பாடல் கொண்டு தெளிக.

101-105. இழுது - நெய்: உருகும் குணம்பற்றி வந்த பெயர். கடி - சிறப்பு.

106-110. மறை - இரகசியம். தெளிதல் - விளங்கிக் கொள்ளுதல். வெண்டாமரை - வெள்ளைத் தாமரை, வெண்டாமரையாள்.

111-115. கல்வித் தனிப்பொருள் - கல்வித் தெய்வம், புகழேந்தியார். இதம் - நன்மை.

116-120. போதல் - வெளியேறல். மணமகன் - கல்யாணப்பிள்ளை. இன்னு - துன்பம். இனிய - நன்மை.

121-123. பாவை - பெண். நல்கல் - கொடுத்தல். தரணி - பூமி.

முற்றும்.

கையாண்டுள்ள பழமொழிகள்

முதலங்கம்: முதற் காட்சி

49. "அவன்கை கொண்டே அவன் கண் குத்தல்",=அவன் கையை எடுத்து அவன் கண்ணைக் குத்து.

57. "வாழைப் பழமது நழுவிப் பாலில் விழுந்த தன்மை"=பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல்.

மூன்றாங் காட்சி

78. "கார்த்திகைக் கவின்மதிப் பிறையைக் காணுதல் ஒக்கும்"= கார்த்திகைப் பிறை கண்டாற் போல.

104. "வறிய செவ்வாய்க்கு வழங்கிடு மங்களப் பொறியுடை வார மெனவே புகறல் மான,"=செவ்வாய்க் கிழமைக்கு மங்கள வாரம் என்றாற் போல்.

நான்காவது காட்சி: தடாதகை திருமணம்

47. "கோமக்கள் எம்முறையோ வம்முறையே பூமக்கள் போ முறையாம்,"=அரச னெவ்வழி அவ்வழிக் குடிகள்-

இரண்டாமங்கம்: இரண்டாங் காட்சி

92. "பொறியி லகப்படு நரிபோல்,"=பொறியி லகப்பட்ட நரி போல.

114. "இரண்டு கண்ணும் பட்டுக் கட்டினாற் போல,"=கண் ணிரண்டும் பட்டுக் கட்டினாற் போல.

121. "வடதிசை முளைக்குங் கதிரவன் வணங்கத் தென்றிசை நோக்கத் திருப்புவன். கதிரவக்கோன் கண் கொடுப்பான்; கொள்ளலாமென்று போனாய்,"="கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்," என்றதன் கருத்தை விகடமாய்க் கூறி விளக்கு வதாம்.

150. "கம்பர்வீட்டுக் கட்டுத்தறியும் வம்பாய்க் கவியினை மழை போற் கொட்டும்,"=கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்.

நேரிசை வெண்பா.

"ஊசியுடன் மற்றொன்று மூசி யுருத்தெழுந்தால் வாசியுறல் யாதாம்?"=ஊசிக்கு ஊசி எதிரூசி பாயுமோ ?

மூன்றாங் காட்சி

4. "புதிதாய் வந்திடு மணியம் நடந்திடு செருப்பைக் கட்டிக் கொளுத்தினன்,"=புதிதாய் வந்த மணியகாரன் செருப் பைக் கட்டிக் கொளுத்தினன்.
13. "குரங்கின் கையிற் கொடுத்திடு பூந்தார்,"=குரங்கு கையிற் கொடுத்த பூமாலை.
85. "நரிக்குப் பட்டங் கட்டினல் நாட்டில் வரிக்குமேல் கிடைக் கொரு வாருடை வேண்டும்,"=நரிக்கு மணியங் கொடுத்தால் கிடைக்கிரண் டாடு கேட்கும்; தேளுக்கு மணியங் கொடுத் தால் வேளைக்கு வேளை கொட்டும்.

நான்காங் காட்சி

31. "கலக்கம்பிட்டுக் காடையை வளர்க்கினும், கலக்கமு ணெஞ் சங் காட்டினில் வைகும்,"=கலக்கம்பிட்டுக் காடையை வளர்த்தாலும் காடைக்கு மனம் காட்டிலே.

ஐந்தாங் காட்சி

51. "காரிகை கற்றுக் கவிபாடுவதிலும், பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று,"=காரிகை படித்துக் கவிகட்டுவதிலும் பேரிகை கொட்டும் பிழைப்பே நல்லது.

மூன்றாவதங்கம் - ஐந்தாங் காட்சி

45. "கொண்டனன் ஊமையன் கண்டநற் கனவாய்,"=ஊமை யன் கண்ட கனப்போல.
77. "வான் தாமரையைச் சூடிட முயன்ற தொல்லறி வொக் கும்,"=ஆகாயத் தாமரையை அணிய முயன்றாற் போல.
85. "இலவு காத்திட்ட வெழிற்கதை போன்று,"=இலவு காத்த கிளிபோல.

நான்காவதங்கம் - முதற்காட்சி

18. "வேலியே பயிரை மேய்ந்த நல்லாறு போல்,"=வேலியே பயிரை மேய்ந்தது போல.
20. "கமரிற் கவிழ்த்த பசுப்பால் போன்று,"=காட்டிலெரித்த நிலவும், கமரிற் கவிழ்த்த பாலும் போல.
183. "வறிதே காட்டினின் மலர்ந்த நன்மலரென,"=காட்டில் மலர்ந்த பூவும், கானலிற் பெய்த மழையும் போல.

ஐந்தாவதங்கம் - முதற் காட்சி.

24. "மணலின் முழுகி மறைந்து கிடக்கும் நுணல் தன் வாயா ஞேயினைக் கொண்ட கதை,"=நுணலுந் தன் வாயாற் கெடும்; தவளை தன் வாயாற் கெட்டாற் போல.

இரண்டாவது காட்சி.

2. "மணற் கிணற்றிட்ட கல்லே போன்று,"=கிணற்றிற் போட்ட கல்லைப் போல.

கையாண்டுள்ள மேற்கோள்கள்

முதலங்கம் - இரண்டாங் காட்சி

11. "கவிக்களி றுகைக்குக் கவிராட்சத னெனப் புவிக்குயர் கவுடப் புலவர்,"—நாலாயிரக்கோவை.

மூன்றுங் காட்சி

2. "தாவிலாரம் பூண்ட மார்பன் றழைக்க,"="தேவரார மார்பன் வாழ்க,"—சிலப்பதிகாரம் - வாழ்த்துக் காதை - கந்துக வரி.

6. "கற்பகஞ் சார்ந்த காகம்,"="கற்பகத் தருவைச் சார்ந்த காகம்,"—விவேக சிந்தாமணி 11-வது செய்யுள்.

88. "தெய்வந்தன்ன லாகாததுவுஞ் செய்வினை முயற்சியின் கூலியாச் சிறிது பெறுகுவர்,"="தெய்வத்தா னாகா தெனினும், முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்,"—திருக்குறள் 619 - ஆள்வினை யுடைமை.

நான்காங் காட்சி.

5. "கெட்டார் தமக்கு நட்டா ரில்லை,"="கெட்டார்க்கு நட்டா ரில் லென்பதோ நெஞ்சேநீ, பெட்டாங் கவர்பின்செலல்,"—திருக்குறள் - 1293 - நெஞ்சொடு புலத்தல்.

8. வெள்ளிவெண் குடநிறை விழுப்பயன் றன்னைத் துள்ளி யங் கொருவன் றுடுமென வறிதே கவிழ்த்தா லொக்குங் கவின் மதி யொளி,"="மலர்கதிர் மண்டிலம்......ஆசற விளங்கிய வந்தீங் தண்கதிர், வெள்ளிவெண் குடத்துப் பால் சொரிவது போற், கள்ளவிழ் பூம்பொழி லிடையிடைச்சொரிய,"-மணிமேகலை - சக்கரவாளக் கோட்டமுரைத்த காதை - வரி 2—8.

20. "நீரினிலிட்ட வுப்பது நேடில் அளக்கு மளவில் அகப் படா,"="அப்பிலிட்ட வுப்பேபோன்று,"—நச்சினார்க் கினியர் உரை - தொல்காப்பிய எழுத்ததிகாரம்.

31. "வடமீன்......நம்மிடைப் பலமறை நவின்றிட விரும்பி வம் மின்! வம்மின்! என்றழைத் திடுவது,"="அந்தரத்தே கண் சிமிட்டிச் சுந்தர தாரகைகள் அரிய ரகசியங் தமக்குள் அறைந்து நகைபுரிய,"—சிவகாமி சரிதம் - 7-வது செய்யுள்.

75. திசையொடு பிறவாம் மீனெனுங் தென்மொழி இசைந்திட விறுதியுயிர்மெய் கவ்வோடொழிந்திடப் புணர்தல்''= திசையொடு திசையும் பிறவுஞ் சேரின் நிலையீற்றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்,''—நன்னூல் - எழுத்து - புணரியல் - 186-வது சூத்திரம்.

123. "உன் முகம் வாதிடலின்றி மனமொழி யென்னும் இரு பெருந் திரையையும் எளிதா விலக்கி ...... உள்ளபடு பொருள் யாவும் பன்னியே முடித்தது,''="அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங், கடுத்தது காட்டு முகம்,''—திருக்குறள்—706-குறிப்பறிதல்.

142. "மலயப் பொருப்பின்.........திகழ்ந்திட் டாடி,''="பொருப்பிலே.........வளருகின்றாள்,''-வில்லி பாரதம்-சிறப்புப் பாயிரம், 1 வது செய்யுள்.

155. "கன்னட முதலிய கவின்மொழி யீன்று கன்னியாய்த் திகழ்ந்த,''=கன்னடமும் களி தெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும், உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும், ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன், சீரிளமைத் திறம்,''—தமிழ்த் தெய்வ வணக்கம்—மனோன்மணீயம்.

தடாதகை திருமணம்

45. "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை,''—திருக்குறள்—49—இல்வாழ்க்கை.

103. "யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால், தானோக்கி மெல்ல நகும்,''—திருக்குறள்-1094-குறிப்பறிதல்.

இரண்டாவதங்கம் - மூன்றாங் காட்சி

67. "எற்ப திகழ்ச்சி'':—ஆத்திசூடி - 5வது வரி.

நான்காங் காட்சி

1. "வகுத்தான் வகுத்த வகையலாற் கோடி தொகுத்தார் தமக்குந் துய்த்த லரிது,''="வகுத்தான் வகுத்த வகையலாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.'' திருக்குறள் - 377 - ஊழ்.

ஐந்தாங் காட்சி

166. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடுவாழ் வார்,''—திருக்குறள் - 3 - கடவுள் வாழ்த்து.

மூன்ருவதங்கம் - முதற் காட்சி - குறள்வெண் செந்துறை.

5. "சோழவளமா நாடதுவே .சோறுடைத்து,"="வேழ முடைத்து மலைநாடு மேதக்க சோழவள நாடு சோறு டைத்து,"—ஔவையார் தனிப்பாடல்.

இரண்டாங் காட்சி

1. அறனறிந்தான்றமைந்த சொல்லுடையமைச்சே திறனறிந்தர சியல்,"="அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான் றும், திறனறிந்தான் தேர்ச்சித் துணை."—திருக்குறள் - 635 - அமைச்சு.

29. "மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறஞ்சூழுஞ் சூழ்ந் தவன் கேடு,"—திருக்குறள் - 204 - தீவினையச்சம்.

52. மன்னனிற் கற்ருேன் மாபெருஞ் சிறப்பினன்,"="மன்ன னும் மாசறக் கற்ருேனுஞ் சீர்தூக்கின், மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன் - மன்னற்குத் தன்றேசமல்லாற் சிறப்பில்லை கற்ருேர்க்குச், சென்றவிட மெல்லாஞ் சிறப்பு,"—நல்வழி.

80. "கொலையிற் கொடியரை வேந்த ஞெறுத்தல், களையினைப் பைங்கூழ் கண்டு விட்டகற்றல்,"=கொலையிற் கொடியரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட் டதனெடு நேர்,"— திருக்குறள்—550 - செங்கோன்மை.

மூன்ருங் காட்சி

30. "பிறன்மனை நோக்காப்பெரியார் இவர் போல் அறன்கடைப் பிடித்தார் யாரே?"=பிறன்மனை நோக்காத பேராண்மை சான்ருேர்க், கறனென்ருே ஆன்ற வொழுக்கு,"—திருக் குறள்—148-பிறனில் விழையாமை.

ஐந்தாங் காட்சி

66. "நறுமணநுகர்ந்து நயனில்காலை, மறுமலர் நாடும் வண்டி னம்"="நறுந்தா துண்டு நயனில் காலை, வறும்பூத் துறக் கும் வண்டு,"—மணிமேகலை - உதயகுமரன் அம்பலபுக்க காதை - அடி 19-20.

நான்காவதங்கம் - முதற்காட்சி

1. "கொடுங்கோன் மன்னன் குலவிடு நாட்டிற், கடும்புலி வாழுங் காடே நன்ரும்,"=கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டிற் கடும்புலி வாழும் காடு நன்றே,"—வெற்றிவேற்கை.

126. "வருந்துசென்மயக்கு,"="வருந்துசெல் வருத்தம்"—சிலப்பதிகாரம் - 11 காடுகாண்காதை அடி - 167.

நான்காங் காட்சி - குறள்வெண் செந்துறை

6. "இக்கானே தன்னிழலை யளக்கவென வெண்ணி இடுங்குறியொன் றியற்றாதே யெடுத்தடி வைத்தளக்கும் மிக்கானின் செயல்,"="சாரும்வரை குறியாது தன்னிழலை யளக்குந் தன்மை,"—சிவகாமி சரிதம்—செய்யுள்—2.

ஐந்தாவதங்கம் - முதற் காட்சி

29. "உலகியலாகுந் திருவேறு தெள்ளியராதலும் வேறு,"=இருவேறுலகத் தியற்கை திருவேறு தெள்ளிய ராதலும் வேறு,"—திருக்குறள் - 374 - ஊழ்.

இரண்டாங் காட்சி

26. "குலமணி யாழியைக் கொடுங்கடல் வீழ்த்தே யலமருமணங்கு,"="நன்மணி யிழந்த நாகம்"—மணிமேகலை துயிலெழுப்பிய காதை அடி - 131.

நான்காங் காட்சி

120. இன்னா செய்தார்க் கினியவே செய்யும் நன்னயம்,"=இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா, லென்ன பயத்ததோ சால்பு,"—திருக்குறள்—987—சான்றாண்மை.